# கட்டுரை மஞ்சரி

உயர்தர வகுப்புக்களுக்குரியது

வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

12/
A122
10.7. ജി B282
27/7 ക്രി A102
3.8. [illegible] B222
7.10.4 B224

# பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஈழத்துப் புண்ணியதலம் ஒன்று ... | 1 |
| 2. | மக்களாட்சி ... ... | 5 |
| 3. | விளையாட்டுப் போட்டியும் பயனும் ... | 10 |
| 4. | கல்வி சம்பந்தமான சுற்றுப்பிரயாணம் ... | 15 |
| 5. | அறுகம்புல் (சுயசரிதை) ... : | 20 |
| 6. | நான் விரும்பும் நூல் ... ... | 25 |
| 7. | " காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் " ... | 30 |
| 8. | மதுவிலக்கு ... ... | 35 |
| 9. | தமிழ் நாடகக் கலை ... ... | 40 |
| 10. | மலைமீதொருநாள் ... ... | 45 |
| 11. | நான் விரும்புந் தொழில் ... ... | 51 |
| 12. | காடுகளும் அவற்றின் பயன்களும் ... | 56 |
| 13. | விஞ்ஞானமும் வாழ்வும் ... ... | 61 |
| 14. | இலங்கைக் குடியேற்றத் திட்டங்கள் ... | 67 |
| 15. | " நான் யாருமற்ற ஒரு தீவில் விடப்பட்டபோது..." | 72 |
| 16. | கலாயோகி ஆநந்தக் குமாரசுவாமி ... | 77 |
| 17. | நாட்டுப் பாடல்கள் ... ... | 82 |
| 18. | " எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் " | 87 |
| 19. | பெண்களும் சமூகத் தொண்டும் ... | 93 |
| 20. | தெருக்கரைச் சோதிடன் ... .. | 98 |

| | | பக்கம் |
|---|---|---|
| 21. | நான் விரும்பும் ஒரு பொழுதுபோக்கு ... | 103 |
| 22. | இலக்கியத்தின் பயன்கள் ... ... | 108 |
| 23. | அணுவும் ஆக்கமுயற்சிகளும் ... | 113 |
| 24. | மூட நம்பிக்கைகள் ... ... | 118 |
| 25. | எனது மனங்கவர்ந்த ஒரு கிராமம் ... | 123 |
| 26. | ஈழத்துத் தமிழ்ப்புலவர் ஒருவர் .. | 129 |
| 27. | நூல்களின் பெரும் பயன்கள் ... ... | 134 |
| 28. | வேலை நிறுத்தங்களும் அவற்றின் விளைவுகளும் | 139 |
| 29. | கூட்டுறவு இயக்கம் ... ... | 144 |
| 30. | ஒரு திருமண ஊர்வலம் ... ... | 149 |
| 31. | நோபல் பரிசு ... ... | 154 |
| 32. | தொழில் நுட்பக் கல்வி .. ... | 159 |
| 33. | "உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" | 164 |
| 34. | சரித்திரக் கல்வியும் அதன் பயன்களும் ... | 169 |
| 35. | கடதாசியின் வரலாறு ... ... | 174 |
| 36. | நான் விரும்பிக் கொண்டாடும் சில விழாக்கள் | 179 |
| 37. | உண்மையான பெரியார் யார்? ... | 184 |
| 38. | பாடசாலைகளிலே தேசிய சேவை ... | 189 |
| 39. | ஒரு சங்கத்தின் ஆண்டறிக்கை ... | 194 |
| 40. | சிறைத்தண்டனை பெற்று விடுதலையடைந்த ஒருவன் தன் நண்பனுக்கு எழுதியதாகக் கற்பனைசெய்து எழுதப்பட்ட ஒரு கடிதம் ... | 199 |

# முன்னுரை

கல்வி என்னும் பெருங்கோவிலின் பொற்கலசமாகத் திகழ்வது உண்மையறிவு; அக்கோவிலின் அழகார்ந்த விதானங்களாகவும் விமானங்களாகவும் மண்டபங்களாகவும் விளங்குவன பலவகைக் கலைகள்; அவையனைத்தினையும் தாங்கிக் காத்து, அசைவின்றிநிற்கும் அடித்தளமாய் அமைவது மொழியறிவு.

மொழியறிவின் துணைகொண்டே கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. அவ் வெளிப்பாட்டுக்கு வாயில்களாக அமைவன பல. அவற்றுள் தலையாயதும் சிறந்ததும் கட்டுரை எனலாம். அதனால், கல்விமான்கள் கட்டுரையினை மொழியறிவின் செழுமையை மதிப்பிடும் உரைகல்லாகக் கருதுவர்.

நல்ல கட்டுரைகள் எழுதுமாற்றலை மாணவர்களிடம் தூண்டி வளர்த்துவிடுதலே, மொழியறிவு பயிற்றும் நல்லாசிரியன் செய்யத்தக்க பெரும் பணியாகும். ஆசிரியனது அப்பெரும் பணியினைக் குறிப்பிடத்தக்க அளவு இலகுவாக்குதற்கும் மாணவர்களிடையே கட்டுரை எழுதும் ஆற்றலை விருத்திசெய்து வளர்த்தற்கும் மாதிரிக் கட்டுரைகள் பெருந்துணை புரிகின்றன

தமிழ் மாணவர்களுக்குரிய மாதிரிக்கட்டுரை நூல்வரிசையிலே, புதியதொன்றாக இக் 'கட்டுரை மஞ்சரி' வெளிவருகிறது.

இச்சிறு நூலிலே உயர்தரவகுப்பு மாணவர்களின் தகுதிக்கேற்ற நாற்பது பொருள்கள் பற்றிய நாற்பது கட்டுரைகள் அடங்கியுள்ளன. அவை எட்டுத் தொகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொகுதியிலும் ஐவகைப்பட்ட பொருள்களை விளக்கும் ஐந்து கட்டுரைகள் உள்ளன. ஒவ்வொரு தொகுதியிலுமுள்ள ஐவைந்து கட்டுரைகளும் முறையே வரலாறு, கல்வி, அரசியல், பொதுவிடயங்கள், வருணனையும் கற்பனையும் என்ற பொருள்கள்பற்றிக் கூறுகின்றன. இப் பகுப்புமுறையோடு கூடிய இக் கட்டுரைகள், கல்விப் பொதுத் தராதரப்பத்திரத் தேர்வுக்கும் பிறதேர்வுகளுக்கும் பெரிதும் உதவவல்லன.

மாணவன் பொருளை மனத்திலே நிறுத்திச் சிந்தித்தற்கேற்றவகையிலே, பொருள்பற்றிய குறிப்புக்கள் கட்டுரையின் ஆரம்பத்திலே தரப்பட்டுள்ளன.

இந் நாற்பது கட்டுரைகளும் கல்விப் பொதுத் தராதர வகுப்புக்களிலே ஈராண்டுப் பயிற்சிக்கேற்றனவாய் அமைந் துள்ளன.

நிகழ்கால மாற்றங்களை அனுசரித்தும் மாணவர்கள் தேவைகளை மனத்திலிருத்தியும் பாடநூல்களை வெளியிட்டுத் தமிழ்த்தொண்டு புரிந்த பதிப்பக அதிபர்கள் வெகு சிலரே. அவர்களுள் தலையாய சிறப்புக்குரியவர் வட-இலங்கைத் தமிழ் நூற் பதிப்பக அதிபராக விளங்கி, அண்மையில் அமரரான திரு. கோ. அப்பாக்குட்டி அவர்களாவர். அவர்கள் ஒவ்வொரு துறையிலும் வல்லவர்களைக்கொண்டு, அவ்வத்துறைப் பாட நூல்களை இயற்றுவித்து வெளிக்கொணர்ந்தார்கள். இக் கட்டுரைகள் நூல் வடிவெடுத்துப் பிறப்பதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர்கள் அவர்களேயாவர். அன்னாரை நினைவுகூர்ந்து நன்றி செலுத்துவது எனது முதற் கடனாகும்.

இந் நூலிலுள்ள கட்டுரைகளனைத்தையும் முதலிலிருந்து முடிபுவரை பார்வையிட்டு, ஏற்ற திருத்தங்கள் செய்துதவிய வர்கள், என்னாலே பெரிதும் மதிக்கப்படுபவரும் சுன்னாகம், ஸ்கந்தவரோதயக் கல்லூரித் தமிழாசானும் தமிழறிஞரு மாகிய பண்டித வ. நடராஜா அவர்களாவர். அவர்கள் செய்த பேருதவி என்னால் என்றும் மறக்கக்கூடியதன்று. கட்டுரைகளை வாசித்து அபிப்பிராயங் கூறிய பிரபல எழுத் தாளரும் ஆசிரியருமான திரு. கனக. செந்திநாதனுக்கு நான் பெரிதும் கடப்பாடுடையேன். சில கட்டுரைகளுக்குரிய நல்ல குறிப்புக்களை வழங்கியுதவிய மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர்களான திரு. க. மகேசன் B. A. அவர்களுக்கும், வித்துவான் க. ந. வேலன் அவர்களுக்கும், திரு. சி. சிற்றம்பலம் B. Sc. அவர்களுக்கும் என் நன்றியுரியது. இந்நூலை அழகுறப் பதிப்பித்து வெளிக்கொணர்ந்த வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகத்தாருக்கு யானும் தமிழ்மாணவர்களும் நன்றிகூறல் பெருங் கடனாகும்.

இச்சிறு நூலை ஆசிரியர்களும் மாணவர்களும் உவந் தேற்றுப் பயன் கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடு, தமி ழன்னையின் திருவடிகளிலே சமர்ப்பித்து வணங்குகிறேன்.

நாவற்குழி
12-9-63

சு. வே.

# பதிப்புரை

'தான் கற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு' என்பதனால், கட்டுரைகள் ஒவ்வொருவருக்கும் அவரவர் தாம் பெற்றுள்ள அறிவை அடிப்படையாய்க் கொண்டு தோன்றுகின்றன. ஆயினும், மாணவர் விடய அறிவைப் பெறுவதற்குப் பல நூல்களையும் பயிலும் சந்தர்ப்பம் கிடைப்பது அரிது. ஆகலின், விடய அறிவை ஓரிடத்திற் பெருமளவு பெறுதற்கு உதவியாகவும் ஒன்றை விளக்கி நயம்பட உரைக்கும் ஆற்றலும் கட்டுரைகளில் முக்கிய இடம் பெறுவதால் அவ்வாற்றலை விருத்தி செய்ய வழிகாட்டவும் கட்டுரைத் தொகுதிகள் அவசியமாகின்றன. அத்தகையதொரு தொகுதியாக 'கட்டுரை மஞ்சரி' என்னும் 40 கட்டுரைகள் கொண்ட இந்நூலை ஆசிரியரும், எழுத்தாளர் உலகிலே தனக்கென ஓரிடத்தைப் பெற்றுள்ளவருமாகிய பிரபல தமிழ் எழுத்தாளர் பண்டிதர் சு. வேலுப்பிள்ளை (சு. வே.) அவர்கள் யாத்துள்ளார்கள். இந்நூல் மேல்வகுப்புக்களிற் பயிலும் மாணவர்க்கும் ஆசிரியர்க்கும் பயன்தர வல்லதென்பது எமது அபிப்பிராயம். இதனை அறிஞர்கள் ஏற்பார்களென எண்ணுகிறோம்.

வட - இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகத்தார்

சுன்னாகம்,
30-9-63

# 1

## ஈழத்துப் புண்ணியதலம் ஒன்று

### திருக்கேதீச்சரம்

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்.
2. திருக்கேதீச்சரத்தின் தொன்மை.
3. அதன் புராண வரலாறு.
4. அதன் அழிவுநிலை.
5. அதனைப் புதுப்பிக்க மேற்கொண்ட முயற்சிகள்.
6. முடிபு.

ஈழத்துச் சைவ நன்மக்களாற் பெரிதும் போற்றித் துதிக்கப்படும் புண்ணிய தலங்கள் பலவுள. அவற்றுள், திருக்கேதீஸ்வரமும் திருக்கோணேஸ்வரமும் அவர்களின் இரு கண்மணிகள்போல் விளங்குவன. அவை மிகப் புராதனமானவை; சிவநெறிச் செல்வர்களான நாயன்மார்கள் தேவாரப்பதிகங்களாலே துதித்தமையாற் "பாடல்பெற்ற தலங்கள்" எனப் போற்றப்படுவன. அவற்றுள் திருக்கேதீச்சரம் மன்னார் மாவட்டத்திலே, மன்னார்ப் பட்டினத்திலிருந்து ஆறரைமைல் தொலைவிலுள்ளது.

திருக்கேதீச்சரத்தின் தொன்மையையும் பழம் பெருமையையும், புராண இதிகாசங்களும் தேவாரப் பதிகங்களும் பலபடப் பேசுகின்றன. வரலாற்றுச் செய்திகளிற் சிற்சில வேறுபாடுகள் அவற்றிடையே காணப்படுகின்றனவேனும், அவை அத்திருத்தலம் மாதோட்டத்திலே

பாலாவியின் கரையிலே இருந்தது என்பதை ஒருமுக மாகக் கூறுகின்றன. திருஞானசம்பந்த சுவாமிகள்,

"வாழை யம்பொழின் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்தநீண் மார்பர்கே தீச்சரம் பிரியாரே"

எனக் கூறுவதாலும், சுந்தரமூர்த்திசுவாமிகள்,

"அங்கம்மொழி யன்னாரவ ரமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடன் மாதோட்டநன் னகரில்
பங்கம்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்அர வசைத்தான்திருக் கேதீச்சரத் தானே"

எனக் கூறுவதனாலும் இவ்வுண்மை புலனாகும். இம் மாதோட்டத்தின் பெயர்க்காரணம் பற்றியும் சிறப்புப்பற்றி யும் வரலாற்றாசிரியர்கள் பலபல கூறுவர். 'மாதோட்ட' என்னும் சிங்களச் சொல் மருவி மாதோட்டமாயிற் றென் பர் சிலர்; இது, பெருந்துறையென்ற தமிழ்ச்சொல் என்பர் சிலர்; சிலர் தக்கண கைலாச புராணத்து மேற்கோள் காட்டி, 'மகாதுவட்டா' என்னும் மாமன்னன் பூசித்த தலமாதலின், மாதோட்டமாயிற் றென்பர். மாதோட்டம் அக்காலந் தொட்டு மாந்தை எனவும் அழைக்கப்பட்டது. அங்கு ஒரு காந்தக்கோட்டை இருந்ததென ஹ்யூங்தி சாங் என்ற சீனத்து அறிஞன் கூறியுள்ளான். இக் கோட்டையைச் 'சோப்பட்டினம்' எனக் குறிப்பிடு கிறான், பெரிப்புளூஸ் என்னும் வரலாற்றாசிரியன். விசய னின் இரண்டாம் மனையாளான பாண்டியன் மகள் வந்திறங்கிய துறை இதுவெனவும் விசயபாகு காலத்திலே தமிழர் பெரும்படை யொன்று வந்திறங்கிய இடம் இது வெனவும் மகாவம்சம் என்னும் இதிகாச நூல் கூறுகிறது. இவற்றால் மாதோட்டம் ஒருகாலத்தில் இலங்கையின் மிகச் சிறந்த துறைமுகமாக விளங்கியதென அறியலாம். இத்துறையில் தங்கள் பெருங் கப்பல்களுடன் கிரேக்கர், உரோமர், அராபியர் ஆகிய பிறசாதியினர் வந்திறங்கி, பல பொருள்களைக் கொண்டும் கொடுத்தும் வணிகஞ் செய்தனர். இதற்கு, அங்கு மண்ணிற் புதைந்து காலத் துக்குக் காலம் கண்டெடுக்கப்பட்ட நாணயங்களே சான்று பகர்கின்றன. பிளினி, தொலமி ஆகிய வரலாற்றாசிரியர்கள்

குறிப்பிடும் 'பாலாவிமண்டிலம்' என்பது திருக்கேதீச்சரத்தைக் குறிப்பிடுகிறது என்பர், இக்கால ஆராய்ச்சியாளர்.

இங்ஙனம் புராதனப் பெருமை வாய்ந்த வங்கம் மலிகின்ற கடன் மாதோட்டத்தில், பாலாவியின் கரைமேலுள்ள திருக்கேதீச்சர தலம்பற்றிப் பல புராண வரலாறுகள் உள்ளன. திருப்பாற்கடலிலே பிறந்த அமிர்தத்தைத் திருமால், தேவர்க்குப் பகிர்ந்தளித்தபோது, மாறுவேடம் பூண்டுவந்த ஓரவுணனும் அதனைப் பெற்றான். அவனது போலி வேடத்தைச் சூரியனும் சந்திரனும் வெளிப்படுத்த, அவன் சாபம்பெற்று, இரு கூறுகளாகி இராகு, கேது என்னும் அரவுகளானான். அவையிரண்டுஞ் சிவனைத் துதித்து இடையிடையே சூரிய, சந்திரரை விழுங்கும் வரம் பெற்றன. கேது பூசித்த இடமாதலின் கேதீச்சரமென வழங்கப்படலாயிற்று. இப் புராண வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு,

> "செய்ய கேது தலையற்ற அந்நாள்
> திருந்து பூசைகள் செய்து முடிப்போன்"

எனக் கதிரமலைப்பள்ளுடையார் கூறுவர். தக்கண கைலாச புராணத்தில், ஆதிசேடனுக்கும் வாயுபகவானுக்கும் பலப் பரீட்சை ஏற்பட்டதாகவும், அதனால் ஆதிசேடன் தன் னுயிரம் படங்களால் மேருமலையின் முச்சிகரங்களையும் காத்தான் எனவும், வாயுபகவான் அசுர வேகத்துடன் தாக்கிப் பெயர்த்து, அவற்றிலொன்றைத் திருக்கேதீச் சரத்தி லிட்டான் எனவும் கூறப்படுகிறது. இவையனைத்தும் திருக்கேதீச்சரத்தின் தெய்வீகத்தன்மையைக் காட்டுவன. இக்கால ஆராய்ச்சியாளர், கேது நாகராசனாதலின், நாகவிலச்சினையையுடைய நாகரால் பூசிக்கப்பட்ட இடம் திருக்கேதீச்சரம் என்பர்.

இவ்விதம் வரலாறு காணக் காலந்தொட்டு புண்ணிய தலமாகப் போற்றப்பட்ட திருகேதீச்சரம், போத்துக்கீசர் ஈழமண்ணிற் காலூன்றித் தம்மதம் பரப்ப முனைந்தபோது அழிக்கப்பட்டதெனக் கொள்ள இடமுண்டு. சைவ நாயன் மார்களான சம்பந்தர், சுந்தரர் ஆகியோர் காலத்திலே இத்தலம் பெருஞ் சிறப்புற்று விளங்கியதென்பதற்கு

அவர்கள் ஒவ்வொருவராலும் பாடப்பட்ட திருக்கேதீச்சரப் பதிகங்கள் சான்று பகருகின்றன. சம்பந்தர் பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் வாழ்ந்த மாமல்லபல்லவன் காலத்தவர் என வரலாற்று வல்லுநர் கூறுவர். சுந்தரர் நாயன்மார்களனைவரினும் காலத்தாற் பிற்பட்டவர் என்பதனைப் பெரியபுராணங் கூறுகின்றது. இச்சான்றுகள் கொண்டாராயும்போது, இத்தலம் பதினாறும் நூற்றாண்டில் வந்த போர்த்துக்கீசர் காலத்தில் அழிக்கப்பட்டதெனக் கொள்ள இடமுண்டு. மாந்தைப்பகுதி அரசாங்க அதிபராயிருந்த துவைனம்துரை அவர்கள் கூற்றும் இம்முடிபிற்கு உறுதியளிக்கின்றது.

இங்ஙனம் அழிவுற்ற திருக்கேதீச்சரத்தைப் புதுப்பிக்க விரும்பி, 1872ஆம் ஆண்டு நாவலர் பெருமான் எடுத்த முயற்சி அக்காலத்திருந்த மாகாண அதிபதியின் அங்கிகாரம் பெறாது போயிற்று. எனினும் அவரிட்ட வித்து சைவநன்மக்கள் மனத்து முளைத்து வளர்ந்து செயலாக விளைந்தது. 1893ஆம் ஆண்டு திருக்கேதீச்சரப் பகுதியைச் சைவர்கள் வாங்கியதோடமையாது சிறியதொரு கோவிலையும் உருவாக்கினர்.

இத்தலம் புராதனப் பெருமையுடனும் பொலிவுடனும் விளங்குதலையே குறிக்கோளாகக்கொண்டு, அதன் திருப்பணி வேலைகளை இனிது நிறைவேற்ற, சைவப்பெருமக்களால் 1948ஆம் ஆண்டு “திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை” அமைக்கப்பட்டது. பத்திச் செல்வர்களின் குன்றாத ஆதரவினாலும் சேர் கந்தையா வைத்தியநாதன் போன்ற பெரியார்களின் இடையறா முயற்சியினாலும் திருக்கேதீச்சரத் திருப்பணி வேலைகள் முன்னேறி வருகின்றன. சைவப் பெருமக்களின் ஆதரவு, வெள்ளம் போற் பெருகுமானால், திருக்கேதீச்சரம் வெகு விரைவிலே பண்டைப் பெருமையை யெய்தும் என்பதற்கு ஐயமின்று.

Sri N. Sritharan
Sritharan

St Johns College
Jaffna.

# 2

## மக்களாட்சி

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்.
2. மக்களாட்சி உதயமான வரலாறு.
3. மக்களாட்சி இன்னதென்பது.
4. நடைமுறையிலுள்ள மக்களாட்சியமைப்பு.
5. மக்களாட்சியின் சில தன்மைகள்.
6. மக்களாட்சியின் சில குறைபாடுகளும் நீக்கும் முறையும்.
7. முடிபு.

சுயமாகச் சிந்தனை செய்யும் பேராற்றல் பெற்றமையாலேயே, மனிதன் மற்றைய உயிரினங்களிலும் பார்க்க மேம்பட்டு விளங்குகிறான். அவன் சிந்தனா சத்தியோடு தன் வாழ்வு வளமுறுவதற்காகச் சமூகத்தோடு கலந்து வாழும் பண்பும் உடையவன். அப் பண்பை ‘உலகத்தோடு ஒட்ட ஒழுகல்’ என்பர் திருவள்ளுவர். அதனால் அவனைச் ‘சமூகமிருகம்’ என்பர் மேனாட்டறிஞர். சமூகத்தோடு கலந்து வாழும்பொழுது, சமூகம் நலனுற்று வாழவும் அச் சமூகத்தின் அங்கமான அவன், தன் பிறப்புரிமைகளைப் பிறர்க்குத் தீங்கு விளையாவண்ணம் அனுபவித்து நல் வாழ்வு வாழவும் சில விதிகளுடன் கூடிய ஓரமைப்பு அவசியமாயிற்று. அவ்வமைப்பே அரசியலெனப்பட்டது. அன்று சமூகத் தலைவனாகத் தோன்றியவன், நாளடைவில் மன்னனாக மாறி, பல பல அதிகாரங்கள் பெற்று உன்னத புருடனாக, தெய்வமாகக் கருதப்பட்டான்.

'மன்னனெவ்வழி, குடிகள் அவ்வழி'; என்றாங்கு அம் மன்னனுட்சியும் அமைவதாயிற்று. காலகதியில் மன்னர்கள் அதிகார மமதைகொண்டு, மக்களை மாக்களாகக் கருதி, கோல்கோடிக் கொடுமை விளைக்கவே ஆட்சிமுறையிலே மக்கள் சில மாற்றங்களை விரும்பினர். இந்நிலையில் மன்ன னுக்கெதிராக மக்கள் புரட்சிசெய்ய, மக்களுள் வல்லா னெருவன் சிலர் துணையுடன் ஆட்சிப்பீடம் ஏறி, நாளடை வில் சருவாதிகாரங்கள் பெற்றுச் சருவாதிகாரியாக விளங் கத் தொடங்கினன். அவன் விருப்பு வெறுப்புக் கிணங்க நாட்டின் தலைவிதி நிருணயிக்கப்பட்டது. இவ்வாட்சி முறையும் மக்கள் நலனைக் காக்கவில்லை.

மக்களின் நல் வாழ்வுக்காக ஆட்சிமுறை ஏற்பட்டதே யன்றி, ஆட்சிமுறைக்காக மக்கள் தம் தனித்தன்மைகளை விடுதல், அவர்களுக்கோ நாட்டுக்கோ எவ்வளவு பயனை யும் விளைக்காது. இந்த உண்மை படிப்படியாக மக்கள் மனத்திலரும்பியது. ஆட்சிமுறை என்றென்றும் மனித உரிமைகளுக்குத் தக்க மதிப்பளித்தல் வேண்டும். மனித உரிமைகள் மதிக்கப்படுதலால் மக்கள் ஒவ்வொருவரும் தன்மானங் காத்து வாழ முடிகிறது; வாழ்விலே ஆர்வ மும் பொறுப்புணர்ச்சியும் உடையவர்களாக விளங்க முடிகிறது; ஆட்சிமுறையிற் பங்குகொண்டு, அரசியற் சுதந்திரமும் பொருளாதார சுதந்திரமும் உடையவர்க ளாகச் சிறக்க முடிகிறது. இவ்விதமாக மனிதத்தன்மைக் குப் பெருங் கௌரவமளித்து, மனிதனின் சகல பிறப் புரிமைகளையும் மதித்து அமைக்கப்பட்ட அரசியல்முறையே மக்களாட்சி. அதனைக் குடியாட்சி என்றும் சனநாயக மென்றும் பலவாறு அழைக்கலாம்.

அமெரிக்க ஜனதிபதியாக விளங்கிய ஆபிரகாம் லிங்கன் என்னும் பெருந்தகை, "மக்கள் நடத்தும் ஆட்சி, மக்கள் நலனைக் கருதும் ஆட்சி, மக்கள் தம்மை ஆளும் ஆட்சி, மக்களாட்சி என்னுஞ் சிறப்புக்குரியது" என மக்களாட் சிக்கு இலக்கணம் வகுத்துக் காட்டினர். இங்ஙனம் மக்கள் நேரடியாக அரசியலிற் பங்குகொள்வதனல் அவர்கள் தமது பல உரிமைகளையும் சுதந்திரமாக அனுபவிக்க முடி கிறது. சுயசிந்தனைத் திறமுள்ள, நீதிமன்றக் குற்றங்களுக்

குட்படாத, வயது வந்த மக்கள், பாராளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதியாகி நாட்டை ஆள்வதற்கு உரிமையுண்டு. எனினும், எல்லா மக்களும் பிரதிநிதிகளாகி நாட்டையாளுதல் இயலாததொன்று. அதனால் தகுதி வாய்ந்த பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்குதவியாகத் தான் விரும்பியதொரு அபேட்சகருக்கு வாக்களிக்கும் வாக்குரிமை, பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட நாட்டு மக்கள் ஒவ்வொருவருக்கும் உண்டு; தனது எண்ணங்களையுங் கொள்கைகளையும் பேச்சுமூலமும் எழுத்துமூலமும் நாட்டிற் பரப்ப உரிமையுண்டு; ஆட்சியாளரின் அடாச் செயல்களையுங் கட்சிகளின் கொள்கைகளையுங் கண்டித்துப் பேசவும் எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் செய்யவும் உரிமையுண்டு; நாட்டிலுள்ள ஒவ்வொரு இன மக்களுக்கும் தம் மொழி, மதம், பண்பாடு ஆகியவற்றைப் பேணவும் வளர்க்கவும் உரிமையுண்டு; ஒவ்வொருவரும் உழைப்புக்கேற்ற கூலி பெறுவதற்குங் கூலி கிடையாவிடத்து அதனைப்பெற முயல்வதற்கும் உரிமையுண்டு. இவ்விதம் அரசியற் சுதந்திரமும் பொருளாதார சுதந்திரமும் இணைந்து விளங்கும் நாட்டிலேயே உண்மையான மக்களாட்சி காணப்படுகிறது. இவற்றிலொன்று குறைவுறினும் அந்நாட்டில் மக்களாட்சி பூரணத்துவ வளர்ச்சி பெறவில்லையென்றே கொள்ளல் வேண்டும். இவ்வுண்மைகளைக் கருத்திற்கொண்டு இன்றைய அரசியலறிஞர், மக்களாட்சி என்பது எல்லாருக்கும் சமத்துவமான பொருளாதார, அரசியல் உரிமைகளும் சுதந்திரமும் உள்ள ஆட்சி என்பர்.

மக்களாட்சி நாட்டு மக்களால் அமைக்கப்படுவதாயினும் அவர்கள் ஒவ்வொருவரும் ஆட்சியில் நேரடியாகத் தொடர்பு பூணுதல் இயலாததொன்று. அதனால், ஒரு நாட்டை ஏறக்குறையச் சமதொகையுள்ள மக்கள் வசிக்கும் பலபல தொகுதிகளாகப் பிரிப்பர். அத்தொகுதிகளிலே பெரும்பாலும் கட்சிச்சார்புள்ள பல அபேட்சகர்கள் தத்தம் கட்சிக் கொள்கைகளையும் தம் கட்சி ஆட்சியுரிமை பெற்றால் சாதிக்கும் வேலைத்திட்டங்களையும் முன்வைத்துப் போட்டியிடுவர். அத்தொகுதி மக்கள் தமது

வாக்குக்களைத் தாம் விரும்புங் கட்சி அபேட்சகருக்குக் கொடுத்து அவரைத் தமது தொகுதிப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்வர். தேர்தலில் பெருந் தொகைப் பிரதிநிதி களைப் பெற்ற கட்சியின் தலைவர் நாட்டின் பிரதம மந்திரி யாகி நாட்டைப் பரிபாலிப்பதற்கேற்ற தொரு மந்திரி சபையை யமைப்பர். நாட்டின் பிரதிநிதிகள் அனைவரும் கூடும் பிரதிநிதிகள் சபையில் ஆளுங் கட்சியினரால் நாட்டு நலன் கருதிச் சட்டங்களுந் தீர்மானங்களும் நிறை வேற்றப்படும். அவை நிறைவேற்றப்படுவதற்கு முன் அவற்றின் சாதக பாதக நிலைகளை அலசி ஆராய்வர். அப்போது எதிர்க்கட்சியினர் மசோதாவிலுள்ள குறை பாடுகளையுந் திருத்தங்களையுஞ் சுட்டிக் காட்டுவர். ஆளுங் கட்சி யென்னும் மதயானை பெரும்பான்மை வெறிபிடித்து நெறிகெட்டு ஓடும்போது எதிர்க்கட்சியினர் அங்குசமாகி அடக்கி நன்னெறி காட்டுவர். இதனால் மக்களாட்சியில் ஆளுங்கட்சி எத்துணை முக்கியத்துவமுடையதோ அத் துணை முக்கியத்துவமுடையது பலம் வாய்ந்த எதிர்க்கட்சி. நாட்டு நலன் கருதி நிறைவேறும் சட்டங்களையுந் தீர்மா னங்களையும் மந்திரி சபையே பூரண பொறுப்புடன் வழி நடத்தும். மந்திரிசபையின் செயல்களுக்குப் பிரதம மந்திரி பொறுப்புடையர். இதனால் லாஸ்கி என்னும் அரசிய லறிஞன் கூறுவதுபோல, மக்களாட்சி என்பது உண்மை யில் ஒருசிறு குழுவிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்ப தாகிறது. இன்னொருவகையில் மக்களாட்சியைப் பெரும் பான்மையாட்சி என்றுங் கட்சி ஆட்சியென்றுங் கூறலாம்.

மக்களாட்சிமுறையிற் பெரும்பான்மைப் பலம் பெற்ற கட்சி அல்லது கட்சிகளின் கூட்டாட்சி தவிர்க்கமுடியாத தாயினும் அது சில நற்பண்புகளுடையதாய் விளங்குதல் வேண்டும். மக்களாட்சியில் தனிமனித சுதந்திரமும் சமுதாய சுதந்திரமும் பொன்னேபோற் போற்றப்படுதல் மிகமிக முக்கியமாகும். ஆளுங் கட்சியினர் பதவி மோகங் கொண்டு தான்தோன்றித்தனமாகவுங் கட்சி நலன் கருதியுங் கருமமாற்ருது, பொறுப்புடனுந் தீர்க்கதரிசனத் துடனும் உலக நல்லெண்ணத்தைப் பெறும் முறையிலும் நடத்தல் வேண்டும். எல்லா நாடுகளிலும் மொழி, மத,

நிற சம்பந்தமாகச் சிறுபான்மைச் சமூகமும் பெரும்பான்மைச் சமூகமுங் காணப்படுகின்றன. இவ் வேறுபாடுகள் தவிர்க்கமுடியாதவை மாத்திரமன்றி, நிச்சயமாகப் போற்றப்படவும் வேண்டியவை. பெரும்பான்மைச் சமூகத்தவர் தம்மொழியையும் மதத்தையும் சிறுபான்மையினரிடம் திணித்தல் மக்களாட்சிப் பண்பாகாது. பெரும்பான்மையினர் சிறுபான்மையினரின் உரிமைகளை மதித்து, சகிப்புத் தன்மை காட்டி; அவர்களும் அரசியல் பொருளாதாரச் சுதந்திரத்தை அனுபவிக்க அனுமதித்தல் வேண்டும். மக்களாட்சி வளர்ச்சியடைந்த உலக நாடுகளில் இந் நற்பண்புகளனைத்துங் காணப்படுகின்றன.

மக்களாட்சி பூரணத்துவம் பெற்ற ஆட்சிமுறையன்று எனவும், அதிற் சில குறைபாடுகள் உளவேனும் வரலாறு கண்ட ஆட்சிமுறைகளுட் சிறப்புடையது எனவும், குறைபாடுகள் சில திருத்தங்கள்மூலம் நிவிர்த்திசெய்யப்படக் கூடியவை எனவும் அரசியல் வல்லார் கூறுவர். அன்றியும் மக்களாட்சியை ஆட்சிமுறையெனக் கூறுவதிலும் பார்க்கச் சிறந்ததொரு வாழ்க்கைமுறையெனக் கூறுதல் சாலச் சிறந்தது என்றுங் கருதுவர். சிந்தனைச் செல்வர்களின் அயரா உழைப்பால் எதிர்காலத்தில் மக்களாட்சி பூரண வளர்ச்சியடைந்து உலகை ஒரு குடும்பமாக்கும் என எதிர்பார்ப்போமாக.

Srithanan

SRITHARAN
Form V D
St John's College
Jaffna

# 3

## விளையாட்டுப் போட்டியும் பயனும்

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்.
2. விளையாட்டு வகைகள் ; விளையாட்டுப் போட்டிகள்.
3. விளையாட்டுப் போட்டிகளால் விளையும் பயன்கள்.
4. வாழ்க்கை ஒரு விளையாட்டு.
5. முடிபு.

நவீன கல்வித்திட்ட அமைப்பில் விளையாட்டுக்கள் தனிச் சிறப்புடைய ஓரங்கமாக விளங்குகின்றன. ஏட்டுக் கல்வி, செயல்முறைக் கல்வி என்பனவற்றிற்கு எத் துணைச் சிறப்புண்டோ, அத்துணைச் சிறப்பு விளையாட்டுக்கும் உண்டு என்று அது வலியுறுத்துகிறது. கல்வித் திட்ட அமைப்பில் முக்கிய இடம்பெற்று விளங்குவது மாத்திரமன்றி, கல்விச்சாலைகளிலே மாணாக்கர் மனத்தைப் பெரிதும் கவர்ந்துள்ள துறையும் அதுவேயாகும். ஓடி விளையாடுவதில் நாட்டங்கொள்ளாத குழந்தைகளிடஞ் சில குறைபாடுகளுள்ளன என்பது கல்விநூல் வல்லார் கண்ட முடிபாகும். கல்விச்சாலைகளிலே விளையாட்டு நேரமே மற்றெல்லா நேரங்களையும்விட, மனமகிழ்ச்சியுஞ் சுறுசுறுப்பும் வாய்ந்ததோர் இன்பப் பொழுதாகக் காட்சியளிக்கிறது. எனவேதான் மனமகிழ்வோடு தன்னிச்சை கொண்டு, வெகு இலகுவாகச் செய்யப்படுவது விளையாட்டென்றும் பரிபூரண விருப்பின்றி ஓரளவு சிரமத்தோடு செய்யப்படுவது வேலையென்றும் எண்ணப்படுகிறது. அதனுல் எந்த வேலையும் மனமகிழ்வோடு சிரம

N Srithanan Sri Thangan Sri [illegible]



மின்றிச் செய்யப்படுமானல் அது விளையாட்டென்றும், எந்த விளையாட்டுந் தன்னிச்சையின்றிச் சிரமத்தோடு செய்யப்படுமானல் வேலையென்றுங் கணிக்கப்படுகிறது. இக்காரணத்தினலேதான் உலக இயக்கத்துக்குக் காரணமான படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மாபெருந் தொழில்கள் இறைவனுக்கு விளையாட்டாகி விடுகின்றன்.

"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலை நிறுத்தலும் நீக்கலும் நீக்கலா
அலகி லாவிளை யாட்டுடையார்"

என, இறைவனது திருத்தொழில்களை விளையாட்டாக்கிக் காட்டுகிருர் கம்பர்.

விளையாட்டென்று கூறும்போது அதற்குரிய சில சிறப்புப் பண்புகளை நாம் அவதானித்தல் வேண்டும். மன மலர்ச்சியோடு இலகுவாகச் செய்யப்படுவது மாத்திரமன்றி, அது உடலுறுப்புக்களுக்கு உரமளிப்பதாயும் அமைதல் வேண்டும்; குழுமுறையிலோ தனிமுறையிலோ போட்டி யுணர்வு நிலவுதல் வேண்டும். இத் தன்மைகள் நிறைந்து, விதிகளினலே நெறிமுறையாக அமைக்கப்பட்ட விளையாட்டுக்கள் எல்லா நாடுகளிலும் காணப்படுகின்றன. கிளித்தட்டு மறித்தல், கெந்தியடித்தல், கிட்டியடித்தல், சடுகுடு முதலிய சுதேச விளையாட்டுக்கள் நம் நாட்டிற் பெருமையுடன் விளையாடப்படுகின்றன. 'கிரிக்கெட்' பந்தாட்டம், உதைபந்தாட்டம், மென் பந்தாட்டம், வலைப் பந்தாட்டம், காற்பந்தாட்டம், கர பந்தாட்டம் முதலிய பல்வகைப் பந்தாட்டங்க ளெல்லாம் மேலைத்தேச விளையாட்டுக்க ளெனப்பட்டு மக்கள் மனதைப் பெரிதுங் கவர்ந்துள்ளன. இவ் விளையாட்டுக்கள் யாவும், திறம்பட அமைக்கப்பட்ட இரு வேறு குழுக்கள் ஒன்றையொன் றெதிர்த்து வெல்ல முயலும்போதே பெரிதுஞ் சிறப்படைகின்றன. இம் முயற்சி விளையாட்டுப் போட்டி எனப்படும். போட்டி விளையாட்டுக்களில், ஒரு குழு தன் எதிர்க் குழுவை எதிர்ப்பதிற் காட்டும்

வேகமும் திறமையும் ஈட்டும் வெற்றியும் மாத்திரமன்றி எதிர்க்குழு, எதிர்ப்பைத் தாங்கிப் போராடும் பண்பும் கணிக்கப்படுகின்றன. போட்டியிடும்போது ஒவ்வொரு குழுவுக்கும் வெற்றியே குறிக்கோள். அக் குறிக்கோளை யடைதற்குத் தப்புவழிகளைப் பின்பற்றுதலும் மற்றக் குழு வினரை வெறுத்துப் பொருமைகொண்டு கோபங்கொள் ளுதலும் இழுக்காகும். இவ்வித சீரான போட்டி விளை யாட்டுக்கள் ஒவ்வொரு நாட்டிலும் பலவகை அமைப்பு முறைகளுக் கேற்ப விளையாடப்படுகின்றன. அன்றியும் ஒருநாடு இன்னொரு நாட்டை எதிர்த்துப் போட்டி யிடுதலு முண்டு. இலங்கை, பாகிஸ்தான், இந்தியா, பர்மா ஆகிய நாடுகளுக்கிடையே நடைபெறும் உதை பந்தாட்டப் போட்டியும், இங்கிலாந்து-அவுஸ்திரேலியா, இங்கிலாந்து – இந்தியா, அவுஸ்திரேலியா – மேற்கிந்திய தீவுகள் என்பனவற்றுக் கிடையே நடைபெறும் 'கிரிக்கட்' போட்டியும் உலகப் பிரசித்தமானவை. பன்னூறு ஆண்டு களுக்கு முன்னே, கிரேக்க நாட்டிலே கிரேக்க வீர ரிடையே தோன்றி வளர்ந்த 'ஒலிம்பிக்' பந்தயம், உலக நாடுகளாற் போற்றப்பட்டு, காலத்துக்குக் காலம் பல பல நகரங்களில் விளையாடப்பட்டுவருகிறது. இவ் விளை யாட்டுக்களிலே உலக நாடுகள் தாபிக்குஞ் சாதனைகள் அகில உலக சாதனைகளாகி, அந்நாடுகளுக்கு அழியாப் புகழைக் கொடுக்கின்றன.

விளையாட்டுப் போட்டிகளிலே பங்குகொள்ளும் வீரர் ஓடியாடி விளையாடுவதனல் இரத்தம் தூய்மை பெற்று அதன் ஓட்டமுஞ் சுறுசுறுப்படைகிறது. அதனல் செம்மை யான சீரணசக்தி சித்திக்கிறது. உடலெங்குமுள்ள தசை நார்கள் தொழிற்பட்டு வலுவடைகின்றன. நிமிர்ந்த முதுகும் அகன்ற மார்புந் திண்ணிய தோள்களும் அள வளவான பிற அங்க அமைப்பும் வாய்க்கப்பெற்றுக் கட் டுறுதியும் வனப்பும் நிறைந்த தேகத்தோடு நோயற்ற வாழ்வு வாழ முடிகிறது. இவையனைத்தும் விளையாட்டுப் போட்டிகள், விளையாட்டு வீரர்களுக்கு உடல் சம்பந்த மாக அளித்த உயரிய பரிசுகள்.

இவ்வகையான உடற்பயன்கள் மாத்திரமன்றி உளப்பயன்கள் பலவும் விளையாட்டுப் போட்டிகளால் விளைகின்றன. தன் திறமை வெளிப்படவேண்டும்; தானே பலராற் புகழப்படவேண்டும் என்று மனிதன் ஒவ்வொருவனும் எண்ணுவது இயல்பே. தன்னலம் மறந்து கருமமாற்றுவது மிக அரிது. தேவையான வேளைகளிற் காணப்படுந் தன்னலமறுப்புந் தியாக மனப்பான்மையும் வாழ்க்கையிற் பெறக்கூடிய இரு பெரும் பேறுகளாம். போட்டி விளையாட்டுக்களிலே தான் குழுவின் ஓர் அங்கத்தவனென்றுந் தன் குழுவின் வெற்றியே தன் வெற்றியென்றும் ஒவ்வொருவனுங் கருதுதல் வேண்டும். இவ்வுணர்வில், தான் என்ற சுயநல எண்ணம் மறைந்துவிட, தமது குழு என்ற பொதுநலமே மேம்பட்டு நிற்கிறது. தமது குழுவின் உயர்வுக்காக ஒவ்வொருவனுந் தனது கொள்கைகள், எண்ணப்பாங்குகள் ஆகியனவற்றைக் கூடத் தியாகஞ் செய்யவேண்டி ஏற்படுகிறது. இப்பண்பே வாழ்க்கையில் அவனை நல்லதொரு குடிபதியாக்கி மேன்மை தருகிறது. 'குறிக்கோளின் சிறப்பு, குறிக்கோளை அடையும் வழிகளின் சிறப்பிலேயே பெரிதும் தங்கியிருக்கிறது' என்ற மேற்கோள் விளையாட்டுப் போட்டிகளுக்கும் பொருந்தும். வெற்றியே விளையாட்டின் குறிக்கோளாயினும் அது நேர்மையான வழியிற் பெறப்பட்டதா யிருத்தல் வேண்டும்; அழுக்காறினுற் கோபங் கொண்டு, எதிரியை மதியாமல் வஞ்சனை வழிகளைக் கையாண்டு, ஈட்டப்படாததா யிருத்தல்வேண்டும். அப்போதுதான் வெற்றி உண்மையான விலைமதிப்பரிய வெற்றியாக மதிக்கப்படும். எனவே வெற்றியிலும்பார்க்க விளையாட்டுக்குரிய இந் நற்பண்புகளைப் போற்றுதல் வேண்டும். இவ் விளையாட்டுப் பண்புகளே வாழ்க்கையிலுங் கலந்து வாழ்க்கை வழியாகின்றன. வெற்றியைக் கண்டு மனம் மிகக் களித்து ஆரவாரித்தலும் தோல்வியைக் கண்டு துக்கத்தாற் சோம்புதலும் மனத்தின் சமநிலையற்ற தன்மையையே காட்டும். வெற்றியையுந் தோல்வியையுஞ் சமமாக நோக்கி, இரண்டிடத்துஞ் சிரித்து மகிழ்பவனே உண்மையான வீரன். இவ்வித பண்பே

வாழ்க்கையிற் சகிப்புத்தன்மையாய், 'இடுக்கண் வருங்கால் நகும்' பண்பாய் வளர்கிறது. எனவே உள்ளத்தைத் திருத்தி, நற்பண்புகளை விதைத்து வளர்க்கும் நல்லேருழவனாகவும் விளையாட்டுப்போட்டி விளங்குகிறது.

"வாழ்க்கை மலர்ச்சோலையன்று; மேடு பள்ளம் நிரம்பிய மலைவழி" என்று சான்றோர் கூறுவர். வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் தினந்தினம் பல பல போட்டிகளும் இன்னல்களும் எதிர்ப்படுகின்றன. அவற்றையும் விளையாட்டுப் போட்டிகள்போலக் கருதி வெல்ல முயலல் வேண்டும். அவற்றை வெல்ல முடியாது தோற்றாலுங்கூட, மனந் தளராது மனமலர்ச்சியோடு மேலும் முயலுதல் வேண்டும். குழந்தைகள் விளையாடும்போது, எதிர்பாராதவிதமாக ஒருவரையொருவர் தாக்கிச் சண்டையிடுவர்; அடுத்தகணம் சமாதானம் அடைந்து சேர்ந்து விளையாடுவர். அவர்களிடையே 'சண்டை உண்டு; ஆனாற் கோபம் இல்லை'. இதுவே குழந்தைப் பண்பு. இக்குழந்தை மனநிலையை வளர்த்து வாழ்க்கையை வளம்படுத்துவது விளையாட்டுப் போட்டியே. இச்சீரிய பண்பு வாழ்க்கையிற் கைகூடிவிட்டால், வாழ்வு சுவர்க்கமாகிவிடும்.

விளையாட்டு, சமுதாயத்திலே பிரிக்கமுடியாத ஒரு அங்கமாக அமைந்திருக்கிறது. அது மனிதப் பண்புகளையுஞ் சமுதாயப் பண்புகளையும் வளர்ப்பதோடு உறுதி பெற்ற உடலையுந் தந்து ஒவ்வொருவனையும் முழுமனிதனாக்குகிறது; வளமான சீரிய வாழ்வுக்கு வேண்டிய நற்பண்புகளைப் பயிற்றிப் பண்படுத்திவிடும் நல்லதோராசானாக விளங்குகிறது.

# 4

## கல்வி சம்பந்தமான சுற்றுப்பிரயாணம்

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்.
2. கல்வி சம்பந்தமான சுற்றுப்பிரயாணம் சிறந்தமைக் குரிய காரணங்கள்.
3. பயன்கள் :
   (அ) பாட சம்பந்தமான அறிவை மனதிற் பதித்தல்.
   (ஆ) சமூகத்தோடு உறவாடல்.
   (இ) இலக்கியப் பயன்.
   (ஈ) மாணவர்களிடையே பொறுப்புணர்வு ஏற்படல்.
   (உ) ஆசிரியர்கள் மாணவர்களின் உளப்போக்குகளை அறிதல்.
4. பிரயாணத்துக்குமுன் அறியவேண்டியவை.
5. முடிபு (தொகுத்தல்).

குன்றுதொறுடிய குமரன் கோயில்கொண்ட கதிர்காமத்திற்கு, எளிமைக்கோலம் பூண்டு, ஆனந்தபரவசமடைந்து செல்கின்றனர் பக்தர்கள்; மடு மாதாவைப் பணிந்து போற்றிசெய்யவும், பாதபங்கய மலையின் அடிச்சுவட்டைத் தரிசிக்கவுஞ் செல்கின்றனர் பல்லாயிர மக்கள். அவர்கள் பக்தியை இலட்சியமாகக் கருதிப் பிரயாணஞ் செய்கின்றனர். செல்வப் பெருமக்கள் ஓய்வுகாலங்களிற் பல பல இடங்களைப் பார்க்கச் செல்கின்றனர். அவர்கள் புதுமை விழைவு குறித்துப் பிரயாணஞ் செய்கின்றனர்.

இவ்விதம் அவரவர்கள் கொண்ட குறிக்கோளினுற் பிரயாணங்களையும் பலவகையாகப் பிரிக்கலாம். இவ்வகைகளு ளொன்றே மாணவர்களின் கல்வி சம்பந்தமான சுற்றுப்பிரயாணம்.

பிரயாணங்களின் உயர்வைப்பற்றி, பேக்மன் என்ற மேதை "இளமையிற் கல்வியும் முதுமையில் அனுபவமும் பிரயாணத்தாற் கிடைக்கின்றன" என்று கூறியுள்ளார். இளமையிற் கல்விபெற அமைந்த உயரிய சாதனங்களு ளொன்று கல்வி சம்பந்தமான சுற்றுப் பிரயாணமாகும். நாலு சுவர்களுக்குள்ளே, சித்திரப் பாவையின் அத்தக அடங்கிக் கல்வி பயில்வதனுல் ஒரு மாணவன் பூரண அறிவைப் பெற முடியாது; புத்தகப் பூச்சிகளாய், கிணற்றுத் தவளைகளாய், நாட்டு வளப்பமறியாது கல்லூரியே கதி மோட்சமென எண்ணுவதனுலும் அறிவு வளராது. இந்த நூற்ருண்டிலே விஞ்ஞானம் அறிவு வளர்ச்சிக்கான பல அரிய சாதனங்களை அளித்துள்ளது. வானெலி, தொலைக் காட்சி (டெலிவிஷன்), பேசும் படம் என்பன அவற்றுட் சிறந்தன. இவை எல்லாவற்றிலுஞ் சிறந்ததாய், உண்மைகளை உள்ளபடியே காட்டி, அவற்றை அனுபவமாக மாற்றி, அறிவாக மலரச் செய்வது கல்வி சம்பந்தமான சுற்றுப்பிரயாணம். அதனுற்ருன், காட்சிமூலமே உண்மையான அறிவின் பெரும்பகுதி சித்திக்கிறது எனக் கூறுகின்றனர், உளநூற் புலவர்.

பெருமளவிற் காட்சி தொழிற்படும் பாடங்கள் புவியியல், வரலாறு, தாவரவிய லென்பன. புவியியலும் வரலாறும் மிகுந்த தொடர்புடையவை. புவியியலைத் தாயெனில், வரலாற்றை அதன் குழந்தை யெனலாம். பூமியின் இயற்கை யமைவுந் தட்ப வெப்ப நிலைமாற்றங்களும் மனித சமுதாயத்தைத் தாக்குகின்றன. அந்தத் தாக்கத்துக்கியைய அவன் வாழ்கிருன். அந்த வாழ்க்கை வரலாறே சரித்திரம் எனப்படுகிறது. வகுப்பறையிலே தேசப் படங்களின் துணைகொண்டு, புவியியலைக் கற்க முயலும் மாணவன் எவ்வித திறமையோடு கற்ருலும் உண்மை யறிவைப் பெறமாட்டான். ஏனெனில் அவனறிவு அனுபவத்தோடொட்டி மலரவில்லை. 'லக்சபாண'

நீர்வீழ்ச்சி மின்சாரத்திட்டத்தை நேரிற் கண்டுணராத மாணவன், அதன் அமைப்பைப்பற்றி எத்தனை விளக்கப் படங்கள் வரைந்து கற்றாலும் உணரமாட்டான். அவ்விதமே பண்டாரவளை, தியத்தலாவை போன்ற இடங்கள் சுகத்தானங்களாக விளங்குவதற்குரிய காரணங்களை அவ்விடங்களைத் தரிசியாதவன் உணர்ந்துகொள்ளல்முடியாது. பொல்லநறுவை, சிகிரியா, தம்பதேனியா, கோட்டை என்பன, ஏன் காலத்துக்குக் காலம் தலைநகரங்களாக்கப் பட்டன; கண்டியரசை அந்நியர் தம்மாதிக்கத்துக்குட் படுத்துவது ஏன் கடினமாயிருந்தது; என்பன போன்ற வினாக்களுக்கு விடைகாண வேண்டுமானால் அந்தந்த இடங்களைக் கண்டு அவற்றின் நிலையத்தை யறியவேண்டும். சோழ மன்னர்களின் தொடர்பினால் இலங்கையின் கலைவளர்ச்சியி லேற்பட்ட மாற்றங்களை அறிய வேண்டுமானால், பொல்லநறுவைச் சிவன் கோவிலைக் காணல்வேண்டும். தாவரவியல் கற்கும் மாணவர்களுக்கு, கல்லூரி ஆய்கூடங்கள் உதவிபுரிவதிலும் பார்க்க, பேராதனை, கக்கலை என்னுமிடங்களிலுள்ள தோட்டங்கள் மிகப் பெரிய ஆய்கூடங்களாய் விளங்கி உதவிபுரிகின்றன. நேரிலே இடங்களையும் பொருள்களையுங் கண்டறிவதனாலே, அவை பசுமரத்தாணிபோல் ஆழமாகவுஞ் சுலபமாகவும் மனத்திற் பதிகின்றன.

சுற்றுப்பிரயாணங்கள் செய்யும்போது பல சமுதாய மக்களுடன் தொடர்புகொள்ளவேண்டிய நிலை ஏற்படுகிறது. அவர்களுடன் பழகுவதனால் அவர்களது பழக்க வழக்கங்கள், பண்புகள், மொழி, கலை, கலாச்சாரம் என்பனவற்றை அறிய முடிகிறது; அவர்களுடன் எம்மையொப்பிட்டு, எம்மைத் திருத்திக்கொள்ளும் வாய்ப்புக் கிட்டுகிறது; அன்றியுஞ் சமுதாயத்தைப்பற்றிய அறிவு வளர, பரந்த மனப்பான்மை அரும்புகிறது. இலங்கையின் இன்றைய பொருளாதாரநிலை என்ன, அதன் அடிப்படை யாது, எதிர்காலத்தில் எவ்விதம் இலங்கையின் இயற்கைச் செல்வங்களைப் பயன்படுத்திப் பொருளாதார விருத்தியை உண்டுபண்ணலாம் என்பன

போன்ற நுட்பங்களை உணர்வதற்குச் சுற்றுப்பிரயாணம் போன்ற நல்லாசிரியுன் இல்லை.

“ மஞ்ச ளாவிய மாடங்கள் தோறும்
மயில்கள் போல்மட வார்கணம் சூழும்
அஞ்ச ரோருகப் பள்ளியின் மீமிசை
அன்ன வன்னக் குழாம்விளை யாடும்
துஞ்சு மேதி சுறுக்களைச் சீறச்
சுறுக்க ளோடிப் பலாக்கனி கீறி
இஞ்சி வேலியின் மஞ்சளிற் போய்விழும்
ஈழ மண்டல நாடெங்கள் நாடே ”

எனக் கவிஞர் ஈழவளத்தை அழகொழுகு தமிழிற் பேசுகிருர். ஈழவளத்தின் இயல்பைக் காணல்வேண்டும்; கண்டு சுவைத்தல்வேண்டும்; அதன்மூலம் கவித்துவ உணர்வு பிறத்தல் வேண்டும். இவைகளுக்கு நல்லதொரு கருவியாய் அமைவது சுற்றுப்பிரயாணம்.

மாணவர்களிடையே தன்னம்பிக்கையையும் பொறுப் புணர்ச்சியையுஞ் சகிப்புத்தன்மையையும் வளர்ப்பதற்குச் சுற்றுப்பிரயாணங்கள் பேருதவிபுரிகின்றன. மாணவர்கள் தாங்களாகவே பிரயாணத்துக்கு வேண்டிய பலவேறு ஒழுங்குகளைச் செய்யும்போதும், தங்கள் தேவைகளைத் தாங்களே யுணர்ந்து அவற்றை நிறைவேற்ற முயலும் போதும் இவ்வித பண்புகள் வளர்ச்சியடைகின்றன. இவ்வித சுற்றுப்பிரயாணங்களில் ஆசிரியர் வழிகாட்டி யாக அமையவேண்டுமேயன்றி அதிகாரியாக விளங்கக் கூடாது.

வகுப்பறையிலே மாணவர்கள் தமது சுயகுணங்களை யும் ஆற்றலையும் வெளிப்படுத்துவது மிகக் குறைவு. இவ்வித பிரயாணங்களின்போது, மாணவர்கள் கட்டுப் பாடு நீங்கி, சுதந்திர வுணர்வுடையோராய்த் தம் இயற்கையாற்றல்களை வெளிப்படுத்துவர். இத் தன்மைகளை உற்றுணரும் ஆசிரியன், வகுப்பறையில் மாணவர்கள் பெரும்பயன் பெறும் வரையிலே கல்வி பயிற்றல் முடியும்.

கல்வி சம்பந்தமான சுற்றுப்பிரயாணஞ் செய்பவர்கள், முன்கூட்டியே அதற்கான திட்டங்களை அமைத்துக் கொள்ளல் வேண்டும்; பார்க்கவேண்டிய இடங்களையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் ஓரளவில் அறிந்திருத்தல் வேண்டும்; வேண்டிய முன்னறிவைத் திரட்டி, தம்மை முன்கூட்டியே ஆயத்தப்படுத்திக்கொள்ளல் வேண்டும். சுற்றுப்பிரயாணஞ் செய்யும்போது ஆசிரியர் துணையுடன் வேண்டிய குறிப்புக்களையும் விளக்கப் படங்களையுந் தயாரித்துக்கொள்ளல் வேண்டும். இவ்வித குறிப்புக்கள் சுற்றுப்பிரயாணத்தின்பின் விரிவான, மிகப் பயனுள்ள கட்டுரை எழுதுவதற்கு உறுதுணையாயிருக்கும்.

எனவே, கல்வி சம்பந்தமான சுற்றுப்பிரயாணம் 'இணற்றுத் தவளையை நாட்டுவளப்பம் அறியச்செய்கிறது'; உண்மைகளைக் காணச்செய்து, அறிவிலே நிறைவையுண்டாக்குகிறது. இவ்விதம் பெரும்பயன் விளைக்கக்கூடியன, திட்டமிட்டு மிக அவதானத்தோடு ஒழுங்கு செய்யப்பட்ட சுற்றுப்பிரயாணங்களே. இன்றைய கல்வித்திட்டத்திலே இவ்வித பிரயாணங்கள் குறிப்பிடத்தக்க இடம்பெற்றுள்ளன வென்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

# 5

## அறுகம்புல் (சுயசரிதை)

குறிப்புக்கள்:

1. ஆரம்பம்.
2. தோற்றமும் வளர்ச்சியும்.
3. அது அடைந்த, அனுபவித்த சுய அனுபவங்கள்.
4. இப்போதுள்ள நிலை.
5. பெருமையுஞ் சிறப்பும் (முடிபுரை).

என் பெயர் அறுகம்புல். நான் இவ் வீட்டு முன்றிலின் வாயிற்படி யோரமாகத் தழைத்துச் செழித்து வளர்ந்திருக்கிறேன்; பெற்றுப் பெருகிப் பெருவாழ்வு வாழ்கிறேன். என்னை இலகுவில் அழித்துவிட முடியாதபடி நிலமென்னும் நல்லாள் எனக்குப் புகலிடமளித்துள்ளாள். எனது பூர்வீகம்பற்றிய விபரங்களெதுவும் எனக்குத் தெரியாது. எந்த நல்லநாளில் என் குலமுதல்வன் இங்கு வேரூன்றினனோ, அன்று தொட்டு வாழையடி வாழையாக என் குலத்தவர்கள் இங்கு வாழ்ந்துவருகிறார்கள். அநாதி தெரியாத அந்தக் குலக்கொடியில் வந்த நான், இந்தத் தலைமுறையைக் காப்பாற்றி வளர்த்துவிடும் பொறுப்புக்குரியவன் என்பதைப் பூரணமாக உணர்கிறேன். சொல்லொணாத் துன்பங்கள் சூழ்ந்தபோதினும், விண்ணும் மண்ணும் காட்டும் பேரருளினாலும் எல்லாம் வல்ல இறைவனின் பெருங் கருணையினாலும் என்குலம் தழைத்துச் செழித்து வளம்பெற்று வாழ்வதை எண்ணி மகிழ்கிறேன்; பெருமைப்படுகிறேன்.

இந்த வீட்டு வாசற்படியருகே, மண்ணுட் புதைந்து கிடந்த என் குலக்கொடியின் ஒரு கணுவிலிருந்து நான் தோன்றினேன். நிலமென்னும் நித்திய கன்னி தந்த அமிர்தமயமான உணவை உண்டு, வெண்பச்சை இலைகளை நாற்புறமும் பரப்பி, நீண்டு நிமிர்ந்து வளர்ந்தேன். எனக்கு விதித்த விதியை உணராமல், அயலிலுள்ள பெருந் தருக்களைக் கண்டு, அவைகளைப்போல வளர்ந்து விட வேண்டுமென்று துடித்தேன். இந்நிலையிலே தென்றல் என்னும் தேவன் எனக்குச் சுகஞ் செய்வதுபோல மெல்ல மெல்ல வருடி, என் அகந்தையைப் போக்கி, தலைசாயச் செய்துவிட்டான். நான் மண்ணோடு மண்ணாகச் சாய்ந்த போது, என்னுள்ளே பருவத்துடிப்பு ஏற்பட்டு, விவரிக்க முடியாத இன்பவேதனையடைந்தேன். என்ன அதிசயம்! அப்போது எனது அடிக்கணுவிலிருந்து என் முதற் குழந்தை பிறந்தது! இவ்வண்ணம் ஒவ்வொரு கணுவுக்கும் ஒவ்வொரு குழந்தை பிறந்தது. என் பிள்ளைகளின் எண்ணிக்கையே எனக்குத் தெரியாதென்றால், பேரன் பேத்திகளின் எண்ணிக்கையோ, கொள்ளுப் பேரன் பேத்திகளின் எண்ணிக்கையோ எனக் கெப்படித் தெரியும்! என்னைத் தலைவனாகக் கொண்ட மகாபெரியதொரு குடும்பம் இவ் வாயிற்படியருகே வாழ்ந்து வந்தது.

என் குடும்பத்தின் சிறப்புஞ் செழிப்புமே எனக்குத் தீவினை விளைத்தனவென்றால், நீங்கள் ஆச்சரியப்படக் கூடும்! எனது வளமான வாழ்க்கையைக் கண்ட இந்த வீட்டு மனிதருக்குப் பொறுக்கவில்லை. மற்றவர்களின் நல்வாழ்வைக்கண்டு அழுக்காறு கொள்ளும் குணம் இந்த மனிதரை விட்டு என்றுதான் அகலுமோ! என்மீது பொறாமைகொண்ட இவ் வீட்டார் எனக்கிழைத்த துன்பங்கள் சொல்லிலடங்கா. என்னை அழித்து விடுவதற்காகச் செய்த கொடுமைகளை எண்ணும்போது என்மனம் வேதனையால் வருந்துகிறது. பச்சைப்பசேலெனத் தழைத்து நின்ற என் தலையில் சிறிதேனும் ஈவிரக்கமின்றி மிதித்தனர். அவர்கள் காலுக் ககப்படாது தப்பித் தவறிநின்ற என் தலையை அரிவாள்கொண்டு அரிந்தெறிந்தனர், அந்தப் பாவிகள். தலையறுபட்ட நிலையில் துடிதுடித்துக் கவந்தக்

கூத்தாடிய என் துன்ப நிலையை என்னையன்றி வேறுயார் உணர வல்லார். என் தலை எத்தனையாயிரம் முறை அறுக்கப்பட்டாலும் நான் மீண்டும் மீண்டும் உயிர்த்தெழக் கூடிய வரபலம் பெற்றுள்ளேன், என்பதை அவர்கள் அறியவில்லை. இரண்டொருநாளிற் சிறிது பச்சை பிடித்துத் தலைநிமிர்ந்தேன். அதனைக் கண்ட அக் கொடியவர்கள் மகா கோபங்கொண்டு, என்மீது ஆட்டையும் மாட்டையும் விரட்டிவிட்டு மேய்த்தனர். அவை என் தலையைப் பற்றி இழுத்த இழுப்பிலே, என் உடலின் சில பகுதியும் அவற்றின் வாயிலகப்பட்டன. அவை தம் வலிய குளம்பினால் என்னை மிதித்தன. அதனால் என்னுடலின் பல விடங்களில் முறிவேற்பட்டது. கற்பனையிலும் அனுபவித்திராத பெருந் துன்பத்தை அனுபவித்தேன். என்னை எது செய்தும் இலகுவில் அழித்துவிடல் முடியாது என்ற நம்பிக்கைதான், அத்தனை துன்பங்களையும் பொறுக்குஞ் சக்தியை எனக்கீந்தது. பகுத்தறிவற்ற வாயில்லாப் பிராணிகளான ஆட்டையும் மாட்டையுங் குறைகூறி என்ன பயன்! பகுத்தறிவுபெற்று, படைப்பின் சிகரமாக விளங்கும் மனிதர்களே இத் தீவினைகளுக்குக் காரணர்களென்றால் யாரிடம் முறையிடுவது! அவர்கள் இத்தனை துன்பங்களைச் செய்தபோதிலும், அவுணர்கோனான சூரபதுமனின் தலை வெட்ட வெட்டத் தழைத்ததுபோல நானும் பசுமையோடும் பொலிவோடும் மீண்டும் மீண்டுந் தழைக்கத் தொடங்கினேன். இத்தன்மையைக்கண்ட வீட்டுக்காரர் பெருஞ் சினங்கொண்டனர்; தங்களது பலவகைப்பட்ட அழித்தற் றொழிலாலும் இவ்வெளிய புல்லை நாசமாக்க முடியவில்லையே எனக் கொதித்தெழுந்தனர். மறுநாள் மண்வெட்டி யென்னுங் கொடிய படைக்கலமொன்றைக் கையிலேந்திக்கொண்டு, காலனைப் போலத் தோற்றமளிக்கும் ஒருவன் வந்தான். பாவம்! அவன் என்ன செய்வான்! அவர்கள் ஏவிய எந்த வேலையையும் பாவ புண்ணியம் பாராது செய்தாற்றான் அவன் கூலி பெறல் முடியும்; அவன் குடும்பம் அரைவயிற்றுக் கஞ்சியாவது குடித்தலியலும். அவன் நான் ஆக்கிரமித்திருந்த இடம் முழுவதையுங் கொத்தத் தொடங்கினான்.

ஒவ்வொரு கொத்தும் என்னையும் என் குடும்பத்தினரை யுந் தறித்துப் பிரித்துவிடும் காலபாசமாய்த் தோன்றியது. சிறிது நேரத்தில் அவனது முயற்சியால் ஒரு பெருங் குடும்பமாய் வாழ்ந்த நானும் என்னைச் சார்ந்தவர்களும் சின்னபின்னப்பட்டோம். அவன் கொத்திப் புரட்டியதோ டமையாது, நிலத்துள் அஞ்ஞாதவாசஞ் செய்த எமது முறிந்த உறுப்புக்களையுந் தேடித் தேடி எடுக்கத் தொடங் கினான். அப்போதுதான் நான் என்றுங் கண்டிராத துக்க சாகரத்துள் ஆழ்ந்தேன். காலாகாலமாய் இங்கு வேரூன்றி வளர்ந்த என் குலக்கொடியை அடியோடு அழிக்கப் போகிறானே இவன், என்று ஏங்கிப் பெருமூச்சு விட்டேன்; கண்ணீர் பெருக்கினேன். என் துன்பத்தைக் காண அவனுக்குக் கண்ணில்லை. அவன் தன் முயற்சியைத் தொடர்ந்து செய்து முடித்துவிட்டுப் போய்விட்டான்.

கடவுள் கருணாகரன் என்பதை அன்றுதான் நான் பூரணமாக உணரமுடிந்தது. வேலையாளின் முயற்சிக்குங் கண்பார்வைக்குந் தப்பி, நான் ஒரு சிறு கணுவாய் மண் ணுள் மறைந்து கிடந்தேன். இவ்விதமாவது என்னை உயிர் வாழச்செய்த இறைவனின் பெருங் கருணைத் திறத்தை வியந்து போற்றினேன். கொத்தித் தூசியாக்கிவிட்ட மண் ணுள் வெயில் வெம்மை தாங்கமாட்டாது சுருண்டு தவித்து, உயிர் போகும் நிலையில் ‘தண்ணீர் தண்ணீர்’ என்று தவித்தேன். எனது அபயக் குரலைக் கேட்ட வான் மழைத் தோழன் என்னிடம் வந்து ‘மனிதர்களின் கொடுஞ்செயலாலே துன்புற்றனையோ; நானிருக்கப் பய மேன்?’ என்று கூறி, அமுத நீர்த்தாரையை என்மீது சொரிந்தான். ஆசைதீர அந்நீரையுண்டு சோர்வு நீங்கி நிமிர்ந்தேன். இந்நிலையில் இந்த வீட்டுக்காரர் வேறூர் ஊருக்கு உத்தியோக மாற்றம் பெற்றுக் குடும்பத்தோடு போய்விட்டனர். போனவர்கள் பல மாதங்களாகியும் திரும்பவில்லை. ‘காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்’ என்ற உண்மையை யுணர்ந்து சொகுசாகக் கிடந்த அம் மண்ணிற் பல்கிப் பெருகிப் பல கிளைவிட்டு வளரத் தொடங்கினேன். என்னை மிதிப்பதற்கோ அழிப்பதற்கோ எவருமில்லை. முன்னிருந்ததிலும் பார்க்க வளப்பமுடைய

வனய் இப்போது வளர்ந்து நிற்கின்றேன். துன்பங்களின் முடிவிலே இன்பமுண்டு; அதுவே பேரின்பம் என்ற உணர்வு என்னைப் பூரிக்கச் செய்கிறது. எனக்குக் கொடுமை சூழ்ந்தவர்களுடைய இந்த வீட்டை இடித்துத் தள்ளக்கூடியவலிமை என்னிட முண்டு. ஆனல் மனிதரைப் போல, பழிக்குப்பழி வாங்குங் குணம் என்னிடமில்லை; புல்லேயாயினும் புல்லிய குணமில்லை.

நான் தாவர வகையில் வலிமையற்ற மிகவெளிய புல்லினத்தைச் சேர்ந்தவனுயினும் எனக்குரிய பெருமை யுஞ் சிறப்பும் வேறெந்தப் புல்லுக்குமில்லை. சைவசமயச் சடங்குகளிலே எனக்குரிய இடம் மிக உயர்ந்தது. எந்த மங்கல காரியங்களும் விநாயகப் பெருமானை முன்னிட்டே தொடங்குவது சைவசமய மரபு. அக்காலங்களிலே பிள்ளையார்பிடிக்க நான் மிக இன்றியமையாத பொருளாவேன். விரதகாலங்களில் என்னில் ஒரு பிடி பறித்து, ஆவுக்கு உணவாக ஊட்டிவிடுவது சிறந்த புண்ணியமாக மதிக்கப்படுகிறது. அப்புண்ணியத்துக்காக நான் என்னைத் தியாகஞ் செய்வதிற் பெருமை யடைகிறேன். என்னைப் பறித்து இறைவனின் பாதாரவிந்தங்களிலிட்டும் முடியிற் சாத்தியும் பூசைசெய்யும் வழக்கமுண்டு. அக்காலங்களில் நான் 'நின்மாலியம்' எனப் பெயர் பெற்றுத் தூய பொருளாக விளங்குவேன். அளவற்ற வலிமையும் பெறற் கரும் பெருமையுங் கொண்ட என்னைவிட உலகில் உயர்ந்தவர்கள் யாருளர்?

# 6

## நான் விரும்பும் நூல்

### திருக்குறள்

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்.
2. ஆசிரியர் வரலாறு.
3. அதன் பொதுச் சிறப்புக்கள்.
4. அதன் அமைப்பு.
5. அதன் அகச் சிறப்புக்கள்.
6. முடிபு.

இறவாத புகழுடையனவும் மக்கள் வாழ்வை உயர்த்துவனவுமான பெரு நூல்களை உலகிற்கு ஆக்கித் தந்து, அதன் மூலம் என்றும் வாழுந் திறம்பெற்றுவிட்ட புலவர் பெருமக்கள் ஒரு சிலரேயாவர்; அவர்களே உலக மகாகவிஞர்கள் என்னுஞ் சிறப்புப் பெறத்தக்கவர்கள். அவர்களுள் ஒருவர் திருவள்ளுவர் என்பது உலகனைத்தும் ஒப்புக்கொண்டதோருண்மை. அவர் தமிழர்; தமிழ் நாட்டிற் பிறந்தவர்; அவரியற்றிய நூல் திருக்குறள். அது உலகிலே வளம்பெற்ற மொழிகளனைத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அதனால், உலகனைத்தும் குறளொலி கேட்கிறது. உலக மக்கள் குறள் கூறும் அறங்களைப்பற்றிச் சிந்தனை செய்கின்றனர். இந்த உண்மையை அமரகவி பாரதியார் "வள்ளுவன் தன்னை யுலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" எனக் கருத்துச் செறிவோடு பாடியிருக்கிறார். இந்த வுண்மையைக் கொண்டே திருக்குறள் தமிழிலக்கியத்திற் பெற்றுள்ள தகுதியையும் நிருணயிக்க முடியும். ஒரு மொழியின்

வளத்தை அம்மொழியிலுள்ள இலக்கியச் செல்வத்தைக் கொண்டே மதிப்பிடல் முடியும்; தமிழ் ஒப்பற்ற இலக்கியச் செல்வம் நிறைந்திருப்பதால் ஒரு வளமார்ந்த மொழியென மொழியியல் வல்லார் கூறுகின்றனர். தமிழன்னையை அழகுபடுத்தும் எல்லா இலக்கிய அணிகளிலும் தலை சிறந்த சூளாமணியாய் விளங்குவது திருக்குறள்.

திருக்குறளாசிரியரான திருவள்ளுவர் பற்றிய கருண பரம்பரைக் கதைகள் பலவுள்வேனும் அவை வரலாற்று நெறிக்குட்பட்டனவாகத் தோன்றவில்லை. அவை பகுத்தறிவுக்குப் பொருந்தாதனவாய் மனம்போன போக்கிற் புனையப்பட்டு உலவுகின்றன. அவரது பிறப்பு வளர்ப்புப் பற்றியும் குலம்பற்றியும் சமயநெறிபற்றியும் பலபல வாதங்களும் ஆராய்ச்சிகளும் இன்றும் நடைபெறுகின்றன. இவைகள் மூலம் உண்மைத் திருவள்ளுவரின் வரலாற்றை அறியமுடியவில்லை. அவர் பிறப்பு, வளர்ப்பு, குலம், மதம் என்பன எவையாயினுமாக; அவர் தமிழ்நாட்டவரென்பதும் அவர் தமிழரென்பதும் அவராக்கித் தந்த அரும் பெரும் நூல், திருக்குறள் என்பதும் மறுக்கமுடியாத உண்மைகள். உண்மை வரலாறுகளைப் போற்றிப் பாதுகாக்குந் திறனற்ற தமிழ்நாடு, கற்பனைக் கதைகளைச் சோடிப்பதிலும் பார்க்க, இவ் வுண்மைகளை மனத்துக் கொள்ளலே அமைவுடைத்தாகும். எனவே, இன்று உண்மைத் திருவள்ளுவரை உணரக்கூடிய ஒரேயொரு கருவி, அவரியற்றிய திருக்குறளாகும். அதனாலேதான் திருக்குறளுக்குத் திருவள்ளுவர் என்ற பெயர் வழங்குவதாயிற்று.

உலகிலே தோன்றும் நூல்களனைத்தையும் முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். தோன்றியபோதே மனத்தை மயக்கி, பின்னால் தேடுவாரற்று அழிந்துவிடுவன ஒரு வகையின. நூலெழக் காரணமான சந்தர்ப்பமுந் தேவையும் உள்ளவரையும் உயிர்வாழுந் தகையன இன்னோர் வகையின. மூன்ராம் வகையின காலத்தை வெல்லுந் தகுதியுடைய சிரஞ்சீவி நூல்கள். அவை எக்காலத்தில் இயற்றப்பட்டனவாயினும் அக்காலத்துக்கு மாத்திரமன்றி முக்காலத்துக்கும் வந்துதவிப் பயன் தருவன. இவ்வகை நூல்கள் மிகச் சிலவே. அவற்றுளொன்று திருக்குறள்.

ஒரு நூற் கருத்துக்கள், பொய்யில் புலவர்களான சான்றோர்களது நாவிலும் நூலிலும் மேற்கோள்களாகப் பயின்றுவருமானால், அந்நூலே உயர்வுடைய தென்றே கருதல் வேண்டும். உதாரணமாக "தெய்வந் தொழாஅள்" என்ற குறளை, மணிமேகலை ஆசிரியரான சீத்தலைச் சாத்தனார், சதுக்கப் பூதத்தின் கூற்றாக, "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும் மழை யென்னும்; பொய்யில் புலவன் பொருளுரை தேராய்" என்று எடுத்தாண்டுள்ளார். எனவே, புலவர், பெருமக்களின் உள்ளங் கவர்ந்த உயர்ந்த நூல் திருக்குறள். சங்க நூல்களும் பிற்காலத்தெழுந்த காவியங்களும் பெரும்பாலும் தெய்வங்களையும் அரசர்களையும் அவர்கள் நடத்திய போர்களையும் பெருங்குடி மக்களையும் பற்றியே பேசிச் செல்கின்றன. ஆயின், திருக்குறள் நன்றுந் தீதுங் காட்டுதல் மூலம் கொள்ளவேண்டியனவற்றை வலியுறுத்தி, மக்கள் அறநெறியில் வாழ வழிகாட்டியது. அதனால், அது மக்கள் நூல்; உலகப் பொது நூல்; உலகனைத்துக்கும் பொருந்தும் அற நூல். அதன்கண் மிளிரும் பலவகைப் பண்புகள் காரணமாக, அதற்குப் பத்துச் சிறப்புப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. உண்மைகளேயன்றி வேறெதனையுங் கூறுவியல்பினாற் பொய்யாமொழி யென்றும், அறம், பொருள், இன்பம் என்னும் முத்திறப் பகுப்புடைமையால் முப்பாலென்றும் மனிதனுக்கு நற்கதி காட்டித் தெய்வீக நிலைக்குயர்த்தும் பண்புடைமையாலே தெய்வநூல் என்றும் அது அழைக்கப்படுகிறது.

உலக இலக்கியச் சோலையிலே, மணம் மிக்க மலராக விளங்குந் திருக்குறள் முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை: அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்பன. இம் மூன்று பிரிவுகளிலும் உயிரோட்டமாக ஒளிருங் கொள்கை, உலகம் ஒருகுலமாதல் வேண்டு மென்பது. அக்கொள்கை உதயமாகுமிடம் காமத்துப்பால். உலக வாழ்க்கை ஆண், பெண் கூட்டுறவிலே முகிழ்த்துப் பின் விரிவடைந்து செல்கிறது; காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு படுதலிலே அரும்பித் தழைக்கிறது. அங்கே அன்பு — தெய்வீகமான காதல்— பிறக்கிறது. அதுவே உலகம் ஒரு குலமாதல் வேண்டும்

என்னுங் கொள்கை முளைகொள்ளுமிடம். இந்தக் காதல் நெறியை, அகவாழ்வை, தமிழ் என்னும் அன்பு நெறியைக் காமத்துப்பால் பேசிச் செல்கிறது. அன்பிலே மலர்ந்த காதல்வாழ்வு, தன்னை மறந்து மற்றவருக்காகவே வாழும் தியாக வாழ்வாகிறது; நுண்ணிய உணர்ச்சித் துடிப்புக்களைப் படம் பிடித்துக் காட்டுகிறது. அந்த ஒருவனும் ஒருத்தியும் கணவனும் மனைவியுமாகி இல்லறம் நடத்துகின்றனர். அங்கே மக்கள், சுற்றம் எனத் தொடர்பு பெருகி, அவர்களது உலகம் விரிவடைகிறது; கடமைகள் பெருகுகின்றன; செயல்கள் பரிணமிக்கின்றன. அவைகளுக்கடிப்படையிலே அன்பு இருக்கிறது; "மனத்துக்கண் மாசிலனாதல்" ஆகிய பண்பிருக்கிறது; அதுவே அறங்களனைத்தினதுந் தாயாகத் தோற்றமளிக்கிறது.

"மனத்துக்கண் மாசில னாத லனைத்தறன்
ஆகுல நீர பிற."

"அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா வியன்ற தறம்."

என, அறம் இன்னதென்பதையும் அதன் பண்புகளையுந் திருவள்ளுவர் தெளிவாக விளக்குகிறார். மனமாசின்மையாகிய பண்பிலிருந்து ஏனைய அறங்கள் வளரல்வேண்டும்; அன்றேல், அவையெல்லாம் மறமாகிவிடும். மனமாசின்மையினின்றும் விரிவடைந்த அறங்களுள் இல்லறத்தார்க்கு வேண்டியன இல்லறவியலிலுந் துறவறத்தார்க்கு வேண்டியன துறவறவியலிலும் விளக்கப்படுகின்றன. இவையிரண்டுஞ் சேர்ந்து அறத்துப்பாலாகிறது. இல்லறத்தார் இன்பவாழ்வு வாழத் தக்க பாதுகாப்பு வேண்டும்; பொருளீட்டும் வழிகள் வேண்டும்; ஈட்டிய பொருளை நெறியோடு துய்க்கத் தெரிதல் வேண்டும். இம் மூன்றும் பொருட்பாலிற் பேசப்படுகின்றன. நாட்டை வளமாக்கிக் குடிகளைப் போற்றிக் காக்க நல்லாட்சி வேண்டும். அந்த ஆட்சி முறை அரசியல், அமைச்சியல் என்னும் இருபகுதிகளிலும் ஏனையன ஒழிபியலிலுங் கூறப்படுகின்றன.

திருக்குறளிலுள்ள ஒவ்வோர் அதிகாரமும் ஒவ்வொரு பொருளைப் பற்றிப் பேசுகிறது. விளக்கப்படும் பொருள் பல் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மனத்திற் பதியும்வண்ணம் உடன்பாட்டாலும் எதிர்மறையாலுங் கூறப்படுகிறது.

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

எனக் கற்றார், கல்லாரியல்புகளை இருவகை வாய்பாட்டாலும் விளக்குகிறார். சொற்செட்டுடன் கருத்தாழமும் தெளிவும் நிறைந்து ஒவ்வொரு குறளும் பொலிகிறது. கல்வியின் பயனைப்பற்றி அறிஞர்பலர் தத்தம் நூல்களில் விரித்து விளக்குவதை,

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்"

என இரத்தினச்சுருக்கமாக விளங்கவைக்கிறார். உலகறிந்த உவமைகளைக்கொண்டு கருத்தை விளக்குமாற்றல் பெற்ற கவிஞர் மிகச் சிலரே. அச்சிலரில் வள்ளுவர் தலையாயவர்.

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு."

"தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை."

இக்குறள்களிலே பொருளை விளக்க, வழக்கிலுள்ள உவமைகளைப் புலவர் கையாண்டுள்ளார்.

திருவள்ளுவர் உலகுக்கு விலைமதிப்பரிய மாணிக்கங்கள் நிறைந்தபேழை யொன்றைத் தந்துள்ளார்; அதுவே திருக்குறள். அப்பேழை நூற்றுமுப்பத்துமூன்று அறைகளாக வகுக்கப்பட்டுள்ளது. அவையே, திருக்குறளிலுள்ள அதிகாரங்கள். ஒவ்வோர் அறையிலும் ஒன்றற்கொன்று தரத்திற் குறைவுபடாத பப்பத்து மாணிக்கங்களுள்ளன. அவையே ஒவ்வோர் அதிகாரத்துமுள்ள பப்பத்துக் குறள்கள். அவற்றைக் கற்றுணர்ந்து பயன்கொள்வது உலகின் தலையாய கடமையாம்.

# 7

## "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்"

குறிப்புக்கள் :

1. பழமொழிகள் பிறிதுநவிற்சி என்பதும் அதன் கருத்தும்.
2. காற்று என்றது, காலம், இடம், துணை, வலி என்பன வற்றை யறிதலுஞ் சோர்வின்மையுமாம்.
3. காலங்கருதிக் கருமமாற்றும் பண்பு.
4. இடம், துணை, வலி என்பன அறியும் பண்பு.
5. முடிபு.

இஃது ஒரு பழமொழி. பழமொழிக ளனைத்தும் பிறிதுநவிற்சி என்னும் இலக்கிய அழகு வாய்ந்தவை. ஒரு கருத்தை வெளிப்படையாகக் கூருது, அதன் ஆழமும் பரப்பும் புலப்படும் வகையில், அதை வேருெரு வாய்பாட்டாற் கூறுவதே அவ்வழகு. உதாரணமாக, ஓரரசன் தனக்குத் துன்பந்தரக்கூடிய பகையை, வலி குறைந்த அதன் ஆரம்ப நிலையிலேயே அழித்துவிடல் வேண்டும் என்ற கருத்தையும் அதனேடொப்புமையுடைய பிற கருத்துக்களையும் வெளிப்படையாகக் கூருமல், வள்ளுவப் பெருந்தகை,

> "இளைதாக முண்மரம் கொல்க களையுநர்
> கைகொல்லும் காழ்த்த விடத்து"

என வேருெரு வாய்பாட்டாற் கூறுவர். முள்மரம் இளையதாக விருக்கும்போதே அதனை அழித்துவிடுக; அது வளர்ந்து முதிர்ந்தால் அதனை அழிக்க விரும்புபவருக்கு

மிக்க துன்பஞ்செய்யும் என்பது இதன் வெளிப்படைக் கருத்து. இந்த உத்திமுறை இலக்கியங்களில் மாத்திர மன்றி, நாளாந்த வாழ்க்கையிலும் பெரும்பான்மையாக வழங்கிவருகின்றது. இம்முறையினுல் மனக்கவர்ச்சி பிறந்து, சிந்தனை தூண்டப்பட்டு, உள்ளீடான கருத்துக்க ளனைத்தும் மனதிலே ஆழமாகப் பதிகின்றன. உழவன் போரடித்து நெல்லைக் குவிக்கிருன்; அங்கே வேண்டப் படும் பயனுன நெல்லோடு, பதரும் தூசும் கலந்திருக் கின்றன. பதரையுந் தூசையும் நீக்கி, நெல்லை வேருக் குதற்குத் தூற்றுதல் வேண்டும். ஆனுல் உழவன், தான் விரும்பிய வேளைகளிலே தூற்றுதல் முடியாது. தூற்றும் முயற்சிக்குக் காற்றின் உதவி இன்றியமையாதது. எனவேதான் "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்று கூறப்படுகிறது. வெளிப்படையாகக் கூறப்பட்ட இக் கருத்திலும் பார்க்க, உள்ளீடாகக் காணப்படும் கருத்துச் செறிவே சிறந்தது; போற்றப்படவேண்டியது. எவனும் எக்கருமத்தையும் நலன் விளையக்கூடியவகையில் இயற்றவே விரும்புவான். அவனது முயற்சி நிறை வெய்துவதற்குப் பொருத்தமான சந்தர்ப்பம் மிக மிக வேண்டப்படும். அச் சந்தர்ப்பத்தைத் தக்கவாறு பயன் படுத்தும்போதே, முயற்சி இடையூறின்றி முடிவடைகிறது. சந்தர்ப்பம் அலட்சியம் செய்யப்படும்போது, பயன் விளைவதில்லை. இக்கருத்தை உள்ளீடாகக்கொண்டு விளங்குகிறது, "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்னும் பழமொழி.

காற்று, தூற்றும் முயற்சிக்குத் துணைபுரிந்து, பதருந் தூசியுமாகிய வேண்டாப் பொருள்களை நீக்கி, வேண்டும் பொருளான நெல்லைப் பிரித்தல் போல, தக்க சந்தர்ப்ப மும் ஒருவனது முயற்சியின்போது துணையாய்நின்று, முயற்சியின் முடிபாய் விளங்கும் பயனுக்குத் தூய்மையும் முழுமையும் அளிக்கிறது. முயற்சிக்கேற்ற பக்குவமான காலமும் இடமுந் துணைகளும் அம்முயற்சியைச் செய்பவ னது தகுதிப்பாடும் ஆகிய இவைகளே, சந்தர்ப்பம் என்னும் ஒரு சொல்லாற் குறிக்கப்படுவன. இவற்ருேடு

சோர்வின்மையும் பொறுமையுஞ் சேர்ந்துவிட்டாற் சந்தர்ப்பம் நிறைவுடைத்தாகி, முயற்சி பயன்தரத்தக்க நிலை உருவாகிவிடுகிறது.

காலங்கருதிக் கருமமாற்றும் பண்பு, எம்முயற்சிக்கும் உயிரோட்டமாக விளங்குவது. "பருவத்தே பயிர்செய்" என்பது காலங்கருதிக் கருமமாற்றும் பண்பை விளக்கும் இன்னொரு பழமொழி. அஃது உழவனுக்கு மாத்திரம் பொருந்துவதொன்றன்று; எல்லாக் கருமங்களிலும் காலமறிந்து செயல் புரியும் பண்பைக் குறிப்பிடுகிறது. உழவன் சந்தர்ப்பத்தின் ஓர் அம்சமான காலத்தைப் பயன்படுத்திப் பயன்பெறுவதிற் பெருந் திறமையுடையவன். மண்ணைப் பொன்னாக்குவதற்காக அவன் காலமறிந்து நிலத்தைப் பண்படுத்துகிறான்; பயிர்களுக்கேற்ற காலமறிந்து அவற்றைப் பயிரிடுகிறான்; பூரணமான பயனைப் பெறுகிறான். "இளமையிற் கல்" என்ற ஔவை வாக்கு, கல்வித்துறையிலே அகநூற் கொள்கையைத் தழுவியதொன்று. மனத்திலே அழுக்கேறாத இளமைப்பருவமே, கற்ற கல்வி பதிவதற்கேற்ற காலம். வாழ்க்கைப் பெருங் கடலிலே சுழித்தடிக்கும் துன்பச் சூறவளிகளை உணர முடியாத இளமைப் பருவத்திலே, சிந்தனை ஒருமுகப்பட்டு ஞாபகசக்தி மிகுகிறது. எனவேதான், இளமைப்பருவம் கல்விக்கேற்ற காலமாகிறது; இளமையிற் கல்வி சிலையிலெழுத்தாகிறது. தொழிலதிபர்களும் வணிகர்களும் காலத்துக்கேற்ப, மக்கள் தேவைகளையுணர்ந்து பொருளை உற்பத்திசெய்தும் வணிகஞ்செய்தும் பெரும் பொருளீட்டுகின்றனர். கருங்கடலிற் கலமூர்ந்து செல்லும் மாலுமிக்குப் பருவகாலம்பற்றிய உணர்வு மிக இன்றியமையாததாகிறது. அரசியற்றுறையிலே காலமறிந்து பகைமேற் சேறல் ஆட்சி நுணுக்கங்களுள் ஒன்றாகக் கருதப்பட்டது. அரசியல் கூறவந்த வள்ளுவர், காலமறிதலின் சிறப்பை ஓரதிகாரத்தில் விரித்துரைக்கிறார்.

"பகல்வெல்லுங் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது"

என்று காலத்தின் சிறப்பை உவமானமூலம் விளக்குகிறார்.

“ கோக்கோக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தோக்க சீர்த்த விடத்து ”

எனக் காலங்கருதி அடங்கியிருத்தலையும் போர்மேற் சேறலையும் உவமை முகத்தாலே தெளிவாக்குகிறார். மாவீரனான நெப்போலியன் காலமல்லாக்காலத்தே ருஷியா மீது படையெடுத்து வீழ்ச்சியுற்ற சம்பவம் சரித்திரப் பிரசித்தி பெற்றது.

காலமறிந்து செயல் புரிதலோடு, செயலுக்கேற்ற இடப்பண்புகளுணர்தலும் அவசியமானதாம். தானிருக்கும் இடவிசேடத்தினாலே முதலை நெடும்புனலிற் பெரிய யானையை வென்றுவிடுகிறது; தனக்கேற்ற இடமல்லாத நிலத்திலே சிறுநரியாற் கொல்லப்படுகிறது. நிலத்திலோடும் நெடிய தேர் நீரிலோடுதலும் நீரிலோடுங் கப்பல் நிலத்திலோடுதலுங் கனவிலுங் கருதமுடியாதன. இவை யாவும் முயற்சிக்கேற்ற இடத்தின் இன்றியமையாமையை விளக்குகின்றன. “ இணக்கமறிந்திணங்கு ”, “ பாத்திரமறிந்து பிச்சையிடு ” என்ற முதுமொழிகளும் நட்புச் செய்யக்கூடிய இடத்தையுந் தானஞ் செய்யக்கூடிய இடத்தையும் வலியுறுத்துகின்றன. காலமும் இடமும் மாத்திரமன்றி, செயலுக்கேற்ற துணைகளும் வேண்டும். காலமும் இடமுமறிந்து ஏற்றதொழிலைத் தொடங்குபவனுக்கு அத்தொழிலுக்கேற்ற பொருளது துணையும் மக்களது துணையும் பெரிதும் வேண்டப்படுகின்றன. போதிய கைம்முதலின்றி வாணிகஞ் செய்யத்தொடங்கி இடைமுறிந்தவர்கள் பலர்; தொழில் நுணுக்கந் தெரியாத தொழிலாளர்களோடு தொழிற்சாலைகள் தொடங்கித் துன்பப்படும் தொழிலதிபர்கள் பலர். மக்கள் ஆதரவால் அரசாங்கங்கள் நிறுவப்படுவதும் நாடுகளின் ஆதரவால் உலகவரங்கிலே அறம் நிலைநிறுத்தப்படுவதுங் கண்கூடாகக் காணப்படுவன. இவையெல்லாம் இருந்தும் தான் செய்யுங் கருமத்தின் வலிமையையுந் தன்னுடைய தகுதிப்பாட்டையும் உணராதுபோனால் நற்பயன் கிடைப்பதற்குப் பதிலாகப் பெருந்தீங்கே ஏற்படும். காலம், இடம், வலி என்பனவும் முயற்சிக்குச் சாதகமான துணையுஞ் சோர்

வின்மையோடு பொறுத்திருத்தலும் காரிய சித்திக்குப் பெரிதுந் துணை புரியும். அவசரக்காரன் எதையும் எண்ணான்; அவனது புத்தி மயக்கத்தால் எடுத்த கருமஞ் சிதறிவிடும். எண்ணித் துணிதலும் துணிந்ததனைச் சோர்வின்றிச் செய்தலுமே காரியசித்தியின் இரகசியங்கள். உலக அரங்கிலே புகழ்பரப்பிய விஞ்ஞானிகளிடம் இப் பண்புகள் அமைந்திருந்தமையாலேதான் அவர்கள் மனித குலத்துக்கு அளப்பருஞ் சேவைசெய்து பொன்றுப்புகழ் பெற்றனர்.

ஒரு சிறு கருமத்தை முடிக்கும்போதும் மாபெருஞ் சாதனைகளைச் சாதிக்கும்போதும் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலுந் தூற்றுவதற்கு அவசியமான காற்றுப் போலச் சந்தர்ப்பங்களை எதிர்நோக்கியிருக்கும் இயல்பு சிறப்புடைய அம்சமாக விளங்குகிறது. 'ஓடுமீனோட உறுமீன் வருமளவும் வாடியிருக்குங் கொக்கும்', கோடை காலத்திலே, சிறிதும் அயர்வின்றிப் புல்லுணவைத் தேடி வைத்துக்கொள்ளுஞ் சிற்றெறும்பும் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்கின்றன. எனவே, சந்தர்ப்பம் என்னுங் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளும் இயல்பு படைத்த சீவராசிகளே வளமான வாழ்வு வாழத் தகுந்தனவாகின்றன.

# 8

## மது விலக்கு

குறிப்புக்கள் :

1. ஆரம்பம் : மது இன்னதென்பதும் வகையும்.
2. மதுவருந்துபவர்கூறும் வேடிக்கையான காரணங்கள்.
3. மது விலக்கப்படவேண்டிய காரணங்கள்.
   (அ) அறிவைக் கெடுக்கிறது.
   (ஆ) பஞ்சமாபாதகங்களின் தாய்.
   (இ) குடும்ப வாழ்வைக் கெடுக்கிறது.
   (ஈ) தனிமனித வாழ்வைக் கெடுக்கிறது.
4. மதுவை விலக்கும் வழிகள்.
5. முடிபு.

நமது நாடான இலங்கையில் கொலை, களவு, கொள்ளை முதலிய பாதகச் செயல்கள் அதிகரித்து வருகின்றன. இவ்விழி நிலையை நாளிதழ்களில் வெளியாகுஞ் செய்திகளைக்கொண்டும் ஆண்டுதோறும் 'பொலீஸ்' பகுதியினர் வெளியிடும் அறிக்கைகளைக் கொண்டுந் தெளிவாக உணரலாம். நாட்டின் நற்பெயருக்கு மாசேற் படுத்தும் இந் நிலைக்குக் காரணங்கள் பலவுளவேனும், அவற்றுட் சிறப்புடைக் காரணமாய் அமைவது மதுபானம். போதையூட்டி, மதியை மயக்கி, மக்களை மாக்களாக்கும் எப்பொருளும் மதுவின் பாற்படும். கள், சாராயம், கஞ்சா, அபின், விறண்டி, விஸ்கி முதலியன பல்வேறு உருவங்கொண்ட மதுவகைகளே.

அறிவை மயக்குவது, கொடிதினுங் கொடிது என்று உணர்ந்தும், மக்கள் மதுவை அருந்துகிருர்களே. ஏன் ?

அதற்குக் கூறப்படுங் காரணங்கள் வெகு விசித்திர மானவை. துன்ப, துயரங்களினாலும் வாழ்வில் ஏற்படும் பலவகை இன்னல்களினாலும் மனம் அமைதி யிழந்து தவிக்கும்போது, அவற்றையெல்லாம் மறந்து, சிறு பொழு தாயினும் மனம் சாந்தியடைவதற்காகச் சிலர் மதுவை யருந்துகிறார்களாம்! வாழ்க்கைப் போராட்டத்திலே சிக்கி இன்பமெங்கே, இன்பமெங்கே யென்று ஏங்கித் தவித்து, அதைக் காணும் வழியறியாத சிலர், மயக்க நிலையில், ஒருவகை இன்பம் அனுபவிப்பதற்காகக் குடிக் கிறார்களாம்! முயற்சியின் பின் ஏற்படும் களைப்பையும், சோர்வையும் போக்கும் சமயசஞ்சீவி மதுவெனக் கருதிச் சிலர் அருந்துகிறார்களாம்! மேலைத்தேச நாகரிகத்தில் மூழ்கிய சிலர், மதுவருந்துவதை உயர்வெனக் கருதிப் பருகுகிறார்களாம்! அறிவுக்குப் பொருந்தாத இவ் விந்தைக் காரணங்களைச் சொல்லிக்கொண்டு, மது அருந்துபவர்கள், நாளடைவிலே பழக்கங் காரணமாக, மதுவுக்கு மீளா அடிமைகளாகி, வாழ்நாளை வீணா ளாக்குகின்றனர்.

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்றார் ஔவை யார். அத்துணைச் சிறப்புடையது மனிதப்பிறவி. தக்கது இது, தகாதது இதுவென உணரத் துணைபுரிவதான பகுத்தறிவு உடைமையினாலேயே மனிதப் பிறவி சிறப்புப் பெறுகிறது. அதனால், பகுத்துணரும் பண்பே மனிதப் பண்பு; மனிதனிடத்துள்ள மதிப்பரிய பெருநிதியம். இப் பெருநிதியம் எவ்விதத்திலாயினும் இழக்கப்படு மானால், மக்கள் இழிநிலை யடைந்து மாக்களாகிவிடுவர். எனவே, மனிதனை மனிதனாக்கிச் சிறப்புத் தரும் அறிவை மயக்கும் எப்பொருளாயினும்—அது விண்ணோரமிழ்தா யினும்—விலக்கப்படவேண்டியதே. மதுவும் மனிதனது சீரிய வறிவை மயக்கி, அவனை விலங்கு நிலைக்குத் தாழ்த்தி விடுவதனால், கண்டிப்பாக ஒதுக்கப்படவேண்டிய தொன்றாகிறது.

பொய், கொலை, களவு, கள், காமம் என்பனவற் றைப் பஞ்சமாபாதகங்களென அறிஞர் கருதுவர்;

"காதல், கவருடல், கள்ளுண்டல், பொய்ம்மொழிதல், ஈதல் மறுத்தல்" என்னும் இவை விலக்கப்பட வேண்டிய பாதகங்களென நளவெண்பா கூறுகிறது. இங்ஙனம் பாதகங்களுள் ஒன்றாக மது விளங்குவதோடு, பாதகங்களனைத்திற்கும் பெற்ற தாயாகவும் அது காட்சியளிக்கிறது. மதுவுண்டோனின் அறிவு மயங்குவதனால், அவன் நன்மை தீமை யுணராமலும், குருதியோட்ட வேகங் கூடுவதனாற் காமுகனாக மாறியும் பாதகஞ் செய்யத் துணிகிறான்; அதனால், உத்தமர்களால் எண்ணப்படாத இழிந்தவனாகிறான். கைப்பொருளனைத்தையும் மதுவிலே கரைத்து, பின்னர் மதுவுக்குந் தனக்குங் குடும்பத்துக்குமாகப் பொருளீட்டக் குறுக்கு வழிகளி லீடுபடுகிறான்; அதனாலே சூதாடத் துணிந்து, கையிலுள்ள சிறிது பொருளையு மிழந்து, நடைப்பிணமாகிறான். பொருளற்ற நிலையிற் பொய் பேசுதலுங் கடன்படுதலும் பிறரை இரந்து பின்னிற்றலுமாகிய இழிகுணங்கள் அவனைத் தொடருகின்றன. குடிபோதையினால் அறிவு மயங்கிய நிலையில், பிறரது சொற்களையுஞ் செயல்களையும் பகுத்துணர முடியாது, பெருங் கலகக்காரனாகவுஞ் சிலவேளை கொலைகாரனாகவும் மாறுகிறான். இவ்வித இழிநிலைகளா லேற்படும் பயனை வள்ளுவப் பெருந்தகை இரத்தினச் சுருக்கமாக,

> "உண்ணற்க கள்ளை; உணிலுண்க; சான்றோரால்
> எண்ணப் படவேண்டா தார்"

என்று கூறுகின்றார். எனவே, மது விலக்கப்பட வேண்டியதொன்று.

மனிதனின் குடும்பவாழ்வைச் சீர்குலைத்துவிடும் இழிகுணம் மதுவுக்குண்டு. மதுவருந்தும் பழக்கமுடையோன், பாடுபட்டுச் சம்பாதித்த பொருளை மதுவுக்காகச் செலவிடுகிறான். அதனால், அவனுழைப்பை நம்பியிருக்கும் மனைவி, மக்கள் பசி, பசியென்று துடித்துப் புலம்பவேண்டிய நிலை ஏற்படுகிறது. தனது வருவாயை மதுவரக்கனுக்குப் பலியிட்டும் போதாமற் போகவே, முன்னோர் தேடிவைத்த ஆபரணங்களையும் நிலத்தையும் விற்றுவிடுகிறான். இந் நிலையில் இன்பமும் அமைதியும் குலவ

வேண்டிய குடும்ப வாழ்வு, சகிக்க முடியாத நரகத் துன்பமாய் மாறிவிடுகிறது. ஆகவே வாழ்க்கையைக் கெடுத்து அதனை நாசமாக்குங் குடி, விலக்கப்படவேண்டியதாகிறது.

மதுவருந்தியவனது குடும்பம் அழிவது மாத்திரமன்று, அவனது வாழ்வும் அழிகிறது. மதுவருந்தியவன், மதுவின் ஆதிக்கத்துக் குட்பட்டிருக்கும் வேளையிலே சோர்வு நீங்கிச் சுறுசுறுப்புடையவன்போலத் தோன்றுவது உண்மையேயாயினும், அதனாதிக்கந் தீர்ந்தபின், நீங்கிய சோர்வினும் பார்க்கப் பன்மடங்கு கூடிய சோர்வுடையவனாகிறான். இச்சோர்வு காலகதியில் எத்தொழிலுஞ் செய்ய இயலாத நரம்புத் தளர்ச்சியை யுண்டாக்குகிறது. மது அவனது உடல் உள்ளுறுப்புக்களின் செம்மையான இயக்கத்தைப் பாதிக்கிறது; ஈரலைக் கருக்குகிறது. அதனால், அவன் நோயாளியாகிறான். எனவே, மது மனிதனை மாய்க்கும் நஞ்செனக் கருதப்படுகிறது.

"துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்."

என்பர் திருவள்ளுவர். எனவே, மது மனிதனால் தீண்டப்படாத இழிபொருள். இவ்விதம் தனிமனிதனும், குடும்பமும் மதுவினால் அழிக்கப்படவே நாட்டின் நல்வாழ்வுங் கேடடைகிறது. அதனாலன்றோ நாட்டின் நல்வாழ்வுக்கு மதுவிலக்கு மிக அவசியமெனக் கண்டார் காந்தியண்ணல்.

நம் ஈழத் திருநாட்டிலே மதுவிலக்குச் சித்திபெற வேண்டுமானால், மதுவருந்தும் மக்களிடையே மனமாற்றம் ஏற்பட வேண்டியது மிக அவசியம். மதுவரக்கன் நாட்டில் நிகழ்த்தும் கோர நர்த்தனங்களை மக்கள் புத்தி பூர்வமாக உணர்தல் வேண்டும். தனிமனித வாழ்வையுங் குடும்ப வாழ்வையுஞ் சீர்குலைத்து அழிவு செய்வதனால், தீமைகளிற் பெருந்தீமை மதுவென மக்கள் சந்தேக விபரீதமற உணர்தல் வேண்டும். மக்களிடையே மன மாற்றம் ஏற்படாதபோது, ஆட்சியாளர் மதுவிலக்குச்

சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதாற் பெரும் பயன் விளையாது. சட்டத்தின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு, மக்கள் கள்ள வழிகளில் மதுவை உற்பத்தி செய்து அருந்துவர். எனவே, மக்களிடையே நல்லுணர்வு வளர்ந்து வரும்போது மதுவிலக்குச் சட்டத்தினுற் பெரும் பயன் விளையலாம். பாமரமக்களிடையே மதுவின் தீமைகளைப்பற்றிப் பலபல வழிகள்மூலம் பிரசாரஞ் செய்தல் வேண்டும். இம் முயற்சிக்கு எந்நாளுங் குடும்பப் பெண்கள் பெரும் பலமாக நின்று உதவிபுரிவார்கள். ஏனெனில் தாய்க்குலந்தான் மதுவரக்கனின் கொடுமையினுலே பெரிதும் நலிவடைகின்றது.

மது அறிவை மயக்கி மனிதனை விலங்கு நிலைக்குத் தாழ்த்துகிறது; பஞ்சமா பாதகங்களனைத்தினுக்கும் காரணமாகிறது; குடும்ப வாழ்வையுந் தனிமனிதவாழ்வையுங் கெடுத்து, நாட்டைச் சீரழிக்கிறது. இக் காரணங்களால் அது விலக்கப்படவேண்டிய பொருள்களிலே மிக முக்கிய இடம் வகிக்கிறது. மதுவிலக்குச் சித்திபெறுதற்கு மக்களின் மனப்பூர்வமான ஒத்துழைப்போடு, மதுவிலக்குச் சட்டமும் நடைமுறைக்கு வருதல்வேண்டும். அவ்விதம் மதுவிலக்கப்படுமாயின், தனிமனிதன் நோயற்ற சிறப்பான வாழ்வு வாழ்வான்; குடும்பங்கள் அமைதியும் பொருள் வளமும் பெற்றுச் சீர்பெறும்; அதனுல் நாடு நலமுறும்.

# 9

## தமிழ் நாடகக் கலை

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்.
2. நாடகத் தமிழின் முற்கால உயர்நிலையும் அது வீழ்ச்சியடைந்த காரணமும்.
3. இக்கால நாடகங்களின் இயல்பும் நாடகச் சிறப்புக்கு உபகாரப்படுவனவும்.
4. நாடகக்கலை இப்போது முன்னேறும் விதம்.
5. நாடகக்கலை முன்னேறச் செய்யவேண்டியன.
6. முடிபு (தொகுத்தல்).

உயர் தனிச் செம்மொழிகளில் ஒன்றான தமிழின் பொதுப் பண்பை உணர்ந்த சான்றோர், அதனை இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என முத்திறப்படுத்தினர். அவற்றுள் இயற்றமிழ் எடுத்துக்கொண்ட பொருளைச் செய்யுள் வடிவிலோ வசன வடிவிலோ கூறும் பண்பு பொருந்தியது. இசைத் தமிழ், பண்ணுந் தாளமும் ஒருங்கியையப் பாட்டுக்களால் ஒரு பொருளை வெளியிடுந் தன்மையது. இயல், இசை என்னும் இரண்டோடும் மனவுணர்வுகளைப் பிரதிபலிக்கும் அபிநயங்களோடுங் கூடியது நாடகத் தமிழ். இயலும் இசையுங் கேள்வியின்பம் மாத்திரம் பயக்க, நாடகம் கேள்வியின்பத்தோடு காட்சியின்பமும் பயப்பது. அன்றியும் படிப்பு வாசனையற்ற பாமர மக்களுக்கு, நல்லறிவு புகட்டி, உலகவியலினை உள்ளது உள்ளவாறே காட்டிச் செல்லுஞ் சிறப்புப்

பொருந்தியது. இவ்வித தன்மைகளால் நாடகம் மற்றைய இரண்டினைக்காட்டிலும், பொதுமக்களது அபிமானம் பெற்ற சிறந்த கலையாக விளங்குகின்றது.

இந் நாடகக் கலை பண்டைத் தமிழ் நாட்டிற் பெருஞ் சிறப்புப் பெற்றிருந்ததோடு, அக்கால மக்களின் பேராதரவு பெற்ற ஒரு நுண்ணிய கலையாகவும் விளங்கியது. தமிழிலக்கண முதனூலும் பெருநூலுமாய தொல்காப்பியம், "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கம்" என, நாடக வழக்கினை உலகியல் வழக்கினோடு வைத்தெண்ணிச் சிறப்புச் செய்துளது. முதலில் மக்கள் தம் மனத்தெழுந்த எண்ணங்களை மெய்ப்பாடுகள் மூலமாகவும் அபிநயங்கள் மூலமாகவும் வெளிப்படுத்தினர். அது கூத்தென வழங்கப்பட்டது. "வாடா வயவர் ஏத்தும் வள்ளி" என அதனைத் தொல்காப்பியம் கூறுகிறது.

அக் கூத்துக்கள் காலப்போக்கிலே விலாசம், அண்ணாவிமரபு நாடகம் என்னும் உருவங்கள் பெற்று ஆடப்பட்டன. பின்னர் இடையிடையே பொருத்தமான பாடல்களும் வசனங்களும் விரவிக் கதை தழுவி, இன்றைய மேடை நாடகமாக மாற்றமடைந்தன. இன்றுள்ள நிலையினைப் போலன்றி, அன்று நாடகக் கலை மகோன்னத வளர்ச்சி பெற்றிருந்தது. நாடகப் பண்புகளை வரையறுத்து இலக்கணங் கூறுமளவுக்கு அது சிறப்புப் பெற்றிருந்தது. அதனால், பரதம், அகத்தியம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், மதிவாணர் நாடகத் தமிழ்நூல் போன்ற நாடகக் கலை சம்பந்தமான பல தமிழ் நூல்கள் தோன்றலாயின. இங்ஙனம் பெருமையுஞ் சிறப்பும் பொருந்திய தமிழ் நாடகக் கலை இடைக்காலத்தில் வீழ்ச்சியடைந்தது பெரிதும் வருந்தத்தக்கது. இடைக்காலத்திலே, தமிழ் நாட்டிற் பரவிவந்த சமணம், பௌத்தம் போன்ற மதங்களும் ஆரியர் கொள்கைகளுந் தொன்றுதொட்டுப் பயின்றுவந்த தமிழரின் ஒழுக்க நெறிக்கு மாசு கற்பிக்கப் புகுந்தன. நாடகக் கலையால் ஒழுக்க நிலை வீழ்ச்சியடையு

மென்ற போலிக்கொள்கை கொண்ட அவர்கள், தாமியற்றிய நூல்களில் நாடகக் கலையை இழித்துரைத்தனர். அன்றியும் அரசர்களின் ஆதரவைப்பெற்று நாடகக் கலையை அழித்தொழிக்க முற்பட்டனர். அதனால் நடிகர்கள் கூத்தாடிகள் என இழித்துரைக்கப்படும் நிலை வந்தது: இவ்வாறு பல்லாண்டுக்காலமாக உயர்நிலை யடைந்திருந்த நாடகக்கலை வீழ்ச்சியடைந்தது; நாடகக்கலை நூல்களும் வழங்குவாரற்று மறைந்தொழிந்தன. இந்த அழிநிலையினின்றுந் தப்பி, முத்தமிழ்ச் சுரப்பியான சிலப்பதிகாரம் மாத்திரமே இன்றும் வழங்கி வருகிறது. இதன் மூலமே, பழந்தமிழ் நாட்டின் நாடகக்கலை பற்றிய செய்திகளை ஓரளவு உணர முடிகிறது.

ஒரு நாடகம் சிறப்புற அமையவேண்டுமானல், சில பொதுப்பண்புகள் இன்றியமையாதனவாய் அமைந்திருத்தல்வேண்டும். சிலப்பதிகாரம் நாடகவரங்கின் நீள, அகல, உயரம்பற்றியும் எழினிகளெனப்பட்ட திரைச்சீலை யமைப்புப்பற்றியும் அரங்கிலே நிழல் விழாவகை ஒளியமைத்தல் பற்றியும் பின்னணியிசையாக வமையும் வாத்தியங்கள் பற்றியும் விரிவாகக் கூறுகிறது. இப் பண்புகளனைத்தும் இக்காலத்திற்கும் பொருந்துவனவாகவே யுள்ளன. இவைகளோடு, இன்றைய நிலையில் நாடகக் கதையும் நாடகத்தின் சிறப்புக்கு இன்றியமையாததொன்ருகிறது. இவை யெல்லாவற்றையும் விட, நாடகத்தின் உயிராக, நாடகத்தின் முழுமையாக விளங்குவோர், கதாபாத்திரங்களை ஏற்று நடிக்கும் நடிகர்களேயாவர். ஏனைய அமைப்புக்கள் யாவுமே சிறப்புடன் அமைந்தபோதிலும், கதாபாத்திரங்களாக மாறி, உணர்ச்சி வெளிப்பாடான மெய்ப்பாட்டோடும் அவிநயங்களோடும் நடிக்கும் ஆற்றல் வாய்ந்த நடிகர்கள் இல்லையேல் நாடகம் சிறப்படையாது. நடிகன் எண்வகை மெய்ப்பாடுகளைத் தோற்றுவித்து, காண்போரும் நவரசங்களையும் அனுபவிக்கச் செய்தல் வேண்டும். ஒருவன் பெரு வீரனாக நடிக்க வேடம் பூண்டு விட்டானுனல், அவன் சம்பவங்களுக்கேற்றவாறு புருவத்தை வளைத்து உதட்டைப் பிதுக்கிப் பல்லைக் கடித்தல்

வேண்டும்; கண்கள் சிவக்க, அவனது மீசை துடித்தல் வேண்டும்; திண்ணென்ற கெம்பீரத் தோற்றத்தோடு, எதிரிகளை மதியாத குறிப்புத் தோன்றல்வேண்டும்; பேசுஞ் சொற்கள் தெளிவாக, நெஞ்சைத் தொடும்வகையி லிருத்தல்வேண்டும். இங்ஙனம் மெய்ப்பாடு தோன்ற அவன் நடிக்கும்போது காண்போரிடத்தும் இயல்பாகவே வீரச் சுவை தோன்றும். பேசும் படங்கள் மக்கள் மனத்தைக் கவர்ந்துள்ள இக்காலத்தில், நாடகங்கள் அவற்றுடன் போட்டியிட்டு முன்னேறவேண்டிய நிலை ஏற்பட்டுளது. பேசும் படங்களிலுள்ள சில நுணுக்க முறைகளையும் நாடகங்களிலே கையாளுதல் நல்லது. உண்மையிற் பேசும் படங்களின் தாக்கம், இன்றைய நாடகக்கலையை வளர்த்து, அதன் தரத்தை உயர்த்தியுள்ளதென்றே கருதல் வேண்டும். தமிழ்நாட்டு அறிஞர்களான வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், கி. இலக்குமணப்பிள்ளை, சம்பந்த முதலியார், சங்கரதாஸ் சுவாமிகள் போன்றோர் நாடகக் கலை வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்தவர்களாவர். அன்றியும் தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் இயங்கிவரும் நாடக மன்றங்களும் பல நல்ல நாடகங்களை யளித்துப் பொதுமக்களின் பாராட்டுதலைப் பெற்று வருகின்றன.

இன்று நாடகக்கலை வளர்ச்சியுறுவதற்குப் பலவகையான முயற்சிகள் வேண்டப்படுகின்றன. சனத்தொகை கூடிய நகரங்களிலும் ஊர்களிலும் நிரந்தரமான நாடக வரங்குகள் நிறுவப்படுத லவசியம். இம்முயற்சிக்கு அரசினரின் கலை கலாச்சாரத்துறை மானியம் வழங்கி உதவி புரிதல் வேண்டும். திறமையும் ஆர்வமும் நிறைந்த இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து, சிறந்த நாடகவியக்குநர்களைக் கொண்டு, பயிற்சியளித்தல் இன்றியமையாதது. இதற்காக நாடகக் கல்லூரியொன்று தலைநகர்களில் உருவாதல் வரவேற்கத்தக்கது. நம் நாட்டுப் பண்புக்கேற்றமுறையிற் சமூக, சரித்திர, புராண நாடகங்கள் புதியன புதியனவாகத் தோன்றுதல் வேண்டும். இம்முயற்சியில் நாடக எழுத்தாளரிடையே போட்டியும் ஆர்வமும் உண்டாகக் கூடியதான ஓரமைப்புமுறை உருவாகுதல் நன்று. அன்றி

யும் நல்ல கதையமைப்புக் கொண்ட பிறமொழி நாடகங்களையுந் தமிழில் மொழிபெயர்த்தல் சாலச்சிறந்தது. நம் நாட்டு நடிகர்கள் கிணற்றுத் தவளைகளாய், பிறநாட்டு வளப்பந் தெரியாது வாழும்நிலை மாறல் வேண்டும். பிற நாட்டுக் கலைஞர்களின் பரிவர்த்தனையால் நம் நாட்டுக் கலைஞர்க்கு அனுபவமும் ஞானமுங் கைகூடும். இந்நிலை நாடகக் கலை வளர்ச்சிக்கு மிக இன்றியமையாதது. இவ்வித முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால், நாடகக் கலைக்கு நல்லதொரு எதிர்காலமுண்டென நிச்சயமாக நம்பலாம்.

நாடகக்கலை முத்தமிழ்களுள் ஒன்ருய், அக்காலத் தமிழகத்தில் உயர்நிலை பெற்றிருந்தது. இடைக்காலத்தில் முளைத்த போலிக் கொள்கைகளால் அது வீழ்ச்சியடைந்த போதினும் கிராமங்களிலே அது நாட்டுக்கூத்து என்ற உருவில் உயிர்வாழ்ந்திருந்தது. நாடகத்தின் உயிர்நாடியான நடிகர் உணர்ச்சிகளை வெளிப்படுத்தி நவரசங்களையும் காண்போர் சுவைக்கத்தக்க வகையில் நடித்தலிலேயே நாடகத்தின் வெற்றி தங்கியுளது. இன்று நாடகம், பேசும் படக் கலையின் உதவியினலும் நாடகக் குழுக்களின் உழைப்பினலும் வளர்ச்சியடைகிறது. இவ்வளர்ச்சி மிகச் சிறந்த நிலையடையக் கலையன்பர்கள் ஆவன செய்தல் பெரிதும் விரும்பத்தக்கது.

# 10

## மலைமீதொருநாள்

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்.
2. மலைமீதேறும்போது கண்ட காட்சிகள்.
3. சூரியோதயமும் காலைக் காட்சியும்.
4. நண்பகற்போதில் மலையகக் காட்சிகள்.
5. மாலையிற் கண்ட காட்சிகள்.
6. மலையினின்றிறங்கும்போது கண்டவை [முடிபு].

இலங்கையின் மத்திய பகுதியான மலைநாட்டிலே, பல மலைச் சிகரங்கள் விண்ணை முட்டி, வியப்பூட்டி நிமிர்ந்து நிற்கின்றன; 'அளக்க லாகா அளவும் பொருளும், துளக்க லாகா நிலையுந் தோற்றமும், வறப்பினும் வளந்தரும் வண்மையும்' பெற்று விளங்குகின்றன. அவற்றுளொன்று சிவனொளிபாதமலை. அது ஈழத் திருநாட்டிலுள்ள புண்ணியத் தலங்கள் பலவற்றினுஞ் சிறந்தது. அதன் உச்சிமீதுள்ள அடிச்சுவட்டை ஒவ்வொரு சமயத்தினருந் தத்தம் கடவுளரின் பாதகமலமெனக் கருதிப் பணிந்து போற்றுகின்றனர். அதனால், ஆண்டுதோறும் பல வேறுவகைப்பட்ட சமயக் கொள்கைகளுடைய பலவின மக்கள், பத்திப் பெருக்கோடு அம் மலையை நோக்கி யாத்திரை செய்கின்றனர். எனவே, அது சமய ஒருமைப்பாட்டுக்கும் இனவொருமைப்பாட்டுக்குமுரிய உயர்ந்ததோர் சின்னமாக விளங்குகிறது.

சென்ற மாசிமாதம் பெருஞ் சிறப்புவாய்ந்த அம்மலைச் சிகரத்தைத் தரிசிப்பதற்கேற்ற அருந்தருணம் எனக்குக்

கிடைத்தது. இரவு ஒன்பது மணியளவில் நான் மலைமீ தேறத் தொடங்கினேன். வழியெங்கும் யாத்திரீகர்கள் கூட்டம். எங்கெங்கும் பத்திப் பாடல்களின் இன்னிசை; உள்ளத்தைத் தொடும் 'வழிநடைச் சிந்து'களின் கீத வொலி; இடையிடையே மெய்சிலிர்க்கச் செய்யும் 'சாது, சாது' என்னும் பேரோசை. இவையெல்லாம் விண் முகட்டைத் தொட, வயசு நிரம்பாத சின்னஞ்சிறு சிசுக்கள் தொடக்கம் குடுகுடு கிழம் வரை ஒவ்வொரு கூட்டத்திலும் தோன்றுங் காட்சி கண்ணுக்கு நல்லதோர் விருந்து. தமிழ் வாலிபன் ஒருவன் நடக்கவியலாத சிங்களக் கிழவரைத் தூக்கிக்கொண்டு பீடுநடை போடு கிருன்; சிங்கள வாலிபன், நடந்து நடந்து கால் வீங்கிப் போன தமிழ்க் குழந்தைகளிரண்டை இரு தோள்களிலும் சுமந்து செல்கிருன்; முஸ்லீம் பெண்ணொருத்தி படிகளிற் சறுக்கி விழுந்த வயோதிபமாதைக் கைத்தாங்கலாக நடத்திப் போகிருள். சாதி, சமய, இன பேதமற்ற மனிதத் தன்மையும் 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்ற சமரச நெறியும் அங்கே தெளிவாகத் தெரிந்தது. மலை போலக் கம்பீரமாக உயர்ந்து நிற்கும் மக்களது மனப் பண்பு உள்ளத்தை உருக்கும். நாட்டின் எப்பாகத் திலுங் காணற்கரிய இக் காட்சியை அனுபவித்துக் கொண்டு, அதிகாலை நாலரை மணியளவில் மலையுச்சியை யடைந்தேன். அங்கே, உடலிலுள்ள ஒவ்வோரணுவை யும் ஊசியாற் குத்தித் துளைப்பதுபோலக் குளிர் துன் புறுத்தியது. அதனுல், எப்போது சூரியன் உதயமாவான்; எப்போது இப் பனிக்கொடுமை நீங்கும், என எண்ணி னேன். அம் மலையுச்சியிற் காணப்பட்ட பிரமாண்டமான திருவடியை மலர்தூவி, காணிக்கை செலுத்திப் பணிந்த பின்னர், சூரியோதயத்தைக் காணுமாசையுடன் தக்க தோர் இடத்தில் நின்றேன்.

கீழ்த்திசை மெல்ல மெல்ல வெளுக்கத் தொடங் கிற்று; அந்த மங்கலொளியிலே தூரத்தே காணப்பட்ட மலைகள், பெரியனவுஞ் சிறியனவுமான கரும்பூதங்கள் போற் காணப்பட, சூரியதேவனை எதிர்த்து, அவன் வரவைத் தடுத்துவிடும் தீர்மானத்தோடு நிமிர்ந்து

நிற்பனபோற் காட்சியளித்தன. கணத்துக்குக் கணம் காட்சிமாறும் நாடக வரங்காகக் கீழ்வானங் கோலங் காட்டிற்று. அப்பொழுது, சோதிவெள்ளம் வானப் பெருவெளி யெங்கும் பெருக்கெடுத்துப் பாய, கீழ்வான விளிம்பிலே கண்ணைப்பறிக்குஞ் செந்நிறந் தகதகக்கின்றது; அதனைச் சூழவர மஞ்சளுஞ் சிவப்புங் குழம்பித் தோன்றுகின்றன; அங்கே ஒட்டிக்கிடந்த பஞ்சனைய மேகத் திரள்களெல்லாஞ் சரிகை விளிம்பு கட்டப்பட்டன போன்று காட்சியளிக்கின்றன; செவ்வண்ணமான அந்தக் கீழ்வானத்து எல்லையிலே, உருக்கிவிட்ட தங்கக் குழம்பு, ஏழு நிறங்களின் ஒளி கலந்து துடிதுடிப்பது போல, கண்கவர் எழிலுடன் பால சூரியன் உதயமாகிறான்; அவன் அசைவது போலவும் எமது ஊனக் கண்ணுக்குத் தென்படுகிறான்; வண்ணக் கலவை சேர்ந்த வானப் பின்னணியில் உதிக்கும் பால சூரியனைப் பார்க்கும்போது, நீல மயில்வாகனனை முருகக்கடவுளைக் கண்ணுற் காண்பதுபோன்ற எண்ணம் எழுகிறது; பால சூரியனின் அமுதமயமான ஒளிவெள்ளம் மலை மங்கையை அணைக்கிறது; அதனால் இரவு முழுவதும் மலை மங்கையை மறைத்திருந்த இருள், பயந்து மேற்றிசை நோக்கி ஓட்டமெடுக்க, மலைமங்கை பனிப்படலமென்னும் மிக மெல்லிய பட்டுடுத்தி, கணவனைக் கண்ட காரிகைபோல நாணிக் கோணிச் சிரிக்கிறாள்; இயற்கையன்னை உருட்டி எறிந்துவிட்ட தங்கத் தட்டம்போல ஆதவன் மேலே மேலே வருகிறான்; மலைமங்கை நீலப் பட்டைக் களைந்துவிட்டுத் தன்னெழில் முழுவதையுங் காட்டும் மரகதப் பட்டுடுத்திப் புதிய கோலங் கொள்ளுகிறாள்; எங்கெங்கு நோக்கினும் ஒப்புயர்வற்ற பசுமை விரிந்து கிடக்கிறது. பனித்துளிதூங்கும் புல்வெளிகள், எல்லையறியாப் பெருங் கடல்போன்ற தேயிலைத் தோட்டங்கள், அவற்றிற்கு வரம்பிட்டதுபோல நிமிர்ந்து நிற்கும் மலைக்காடுகள் எல்லாம் பசுமை பொதிந்த அழகுக் கொள்ளையாக மனத்தை மயக்குகின்றன; தேயிலைத் தோட்டங்களில் ஆங்காங்கு சிதறிக் கிடக்குந் தொழிற்

சாலைகளும் குடியிருப்புக்களும் அந்தப் பசுமையிலே தூவி விட்ட செந்நிற மலர்கள்போல மிளிர்கின்றன; காலையின் மலர்ச்சியோடு தோட்டங்களும் உயிர்பெற்றுத் துடிக்கத் தொடங்கி விடுகின்றன; முதுகிலே கூடையுங் கையிலே சுருசுறுப்புங்கொண்ட பெண்களும் தோளிலே முள்ளும் கையிலே கத்தியும் நெஞ்சிலே உரமுங் கொண்ட ஆண்களும் சிற்றெறும்பு வரிசைபோல மலைச்சரிவிற் செல்கின்றனர்; அவர்களே நம் நாட்டின் உயிரைக் காப்பவர்கள் என்று எண்ணும்போது உள்ளம் விம்மிதமடைந்தது. ஆதவனது வெம்மைக் கதிர்கள் பாய்வதனால் இதுவரை நேரமும் பள்ளத்தாக்கில் மிதந்த பனித்திரை மாயமாய் மறைந்துவிடுகிறது; மலையினின்றிழிந்து செல்லும் அருவிகளுஞ் சிற்றாறுகளும் நீண்டு நெளிந்து செல்லும் மலைப் பாம்பைப் போலவும் மலைமங்கை யணிந்துள்ள முத்தாரம்போலவும் விளங்குகின்றன; வெள்ளியை யுருக்கி விட்டதுபோன்ற ஆறுகள், மலைச்சரிவுகளில் வேகமாக ஓடியும் பாறைகளினின்று குதித்தும் சமதரையில் மெல்ல ஊர்ந்தும் நடந்துஞ் செல்கின்றன; ஆறுகளின் இருமருங்கும் மூங்கிற் புதர்கள் வணங்குவபோலத் தலைதாழ்த்தி அணியணியாய் நிற்கின்றன; அதனையடுத்து வாழைத் தோட்டங்கள் குலை சுமந்து காட்சியளிக்கின்றன; இவ்வாறு கணந்தோறும் புதிதுபுதிதாகத் தோன்றும் அழகுக் கொள்ளையை அணுவணுவாய்ச் சுவைப்பதற்கிடையில் பகலவன் உச்சிவானை யடைந்துவிட்டான்.

அப்பொழுது எங்கிருந்தோ வந்த முகிற் குழந்தைகள், தென்றலிலே மிதந்து, பள்ளத்தாக்குகளில் ஒன்றையொன்று துரத்திப் பிடித்து விளையாடத் தொடங்குகின்றன; அவை மலையில் மோதுகின்றன; தடைப்பட்டு நிற்கின்றன; மேலே மேலே ஊர்ந்து செல்லுகின்றன; அம்முகிற் கூட்டங்கள் மலைமங்கையின் இடுப்பைச் சுற்றி யணியப்பட்ட மேகலைபோல விளங்குகின்றன; முகில் சூழ்ந்த மலைப்பிரதேசம் ஆகாய வெளியில் மிதப்பது போல நம்மை மயக்குகின்றது; முகிற்கூட்டங்கள் மலை மீது தவழ்ந்தேறும்போதே கருமுகில்களாக மாறுகின்றன; காட்டு யானைகள் போன்ற அக் கருமுகில்கள் ஒன்றோ

டொன்று முட்டி மோதுகின்றன; காரெருமைகள்போல அலைவ நெளிந்து புரள்கின்றன. பகற்போதிலும் கண்ணைப் பறிக்கத்தக்க மின்னல் வெட்டுகிறது; அதைத் தொடர்ந்து இடிமுழக்கங் காதைச் செவிடுபடுத்துகிறது; மலைமீது பெரும்போரொன்று நிகழச் சிறிது நேரத்தில் 'சோ' வெனப் பெருமழை பெய்கிறது; வானப் பெருந் தேவன், மலைமுகடுகளெனும் பன்னூறு சிவலிங்கங்களுக்குத் திருமஞ்சனமாட்டிப் பூசைசெய்கிருனே! அல்லது, மலைமங்கை நீராடும் நேரம் இதுவோ! என்று எண்ணுமாறு மலையும் மழையும் இணைந்த அந்தக் காட்சியில் எத்தனையோ கற்பனைகள் விரிந்தன. மழை அடைமழையாக மாறுமற் சிறிது நேரத்தில் நின்றுவிட, மீண்டும் வண்ண வண்ணக் காட்சிகள் மலர்ந்தன.

மாலையாயிற்று. கதிரவன் மேல்வான விளிம்பையடைந்து விடுகிருன்; மலைகளின் நிழல்கள் கீழ்த்திசை நோக்கி நீளுகின்றன; சூரிய கோளம் அடிவானத்தில் மறைகிறது; அது அளப்பரிய வேகத்தோடு சுழல்கிறது; பத்துக்கோடி மின்னல்களை உருக்கி ஒரு வட்டஞ் செய்து இயற்கைத்தேவி சுழல விட்டதுபோல அது காணப்பட்டது; ஒளி மயமான இரு தட்டங்களை ஒன்றினுள் ஒன்ருக அடுக்கிச் சுழலவிட்டதுபோலச் சுழலும் இக் காட்சியையே பாரதியார், அருச்சுனன் பாஞ்சாலிக்குக் கூறுவதுபோலக் காட்டினர்:

"அமைதியோடு பார்த்திடுவாய் மின்னே, பின்னே
அசைவுறுமோர் மின்செய்த வட்டு முன்னே
சமையுமோரு ப்ச்சைநிற வட்டங் காண்பாய்
தரணியிலிங் கிதுபோலோர் பசுமை யுண்டோ
இமைகுவிய மின்வட்டின் வயிரக் கால்கள்
எண்ணில்லா திடையிடையே எழுதல் காண்பாய்
உமைகவிதை செய்கின்ருள் எழுந்து நின்றே
உரைத்திடுவோம் பல்லாண்டு வாழ்க என்றே."

ஆதவன் மறைய, இருள் படர்கிறது; வானத்து நட்சத்திரமணிகள்போல, மலைச்சரிவெங்கும் மின்

விளக்குகள் இருளை ஊடுருவி மின்னுகின்றன ; சிறிது நேரத்தில் முழுமதி கீழ்வானில் உதயமாயிற்று. தன் அழகு முழுவதையுங் காட்டினால், உலகம் அழகு மயக்கத்தாற் செத்துவிடுமென்றெண்ணிப்போலும் அது, நில்லென்று சொல்லித் தன் முகத்தை மாத்திரங் காட்டுகிறது ; வெள்ளிய பாற்குடத்திலிருந்து பால் சொரிவதுபோல, மலையக மெங்கும் நிலவு பரந்து மரங்களுக்கூடாக வந்து கோல மிட்டு விளையாடுகிறது ; வழியெங்கும் பஞ்சுத்திரள் தூவி விட்டதுபோல, நிலவொளி தோற்றமளிக்கிறது. அந்த வழியின் மோகனக் காட்சிகளை அனுபவித்துக்கொண்டு கீழிறங்கினேன். மலையேறும்போது வழியிற் கண்ட அதே காட்சிகள் மீண்டும் தொடர்ந்தன. ஒருநாளை மலைமீது கழித்த பெருங்களிப்புடன், அம் மலையைப் பிரிய மன மின்றிப் பிரிந்துவந்தேன்.

# 11

## நான் விரும்புந் தொழில்

### (மருத்துவம்)

குறிப்புக்கள் :

1. ஆரம்பம் : தொழில் மகத்துவமும் விரும்புந் தொழிலிதுவென்பதும்.
2. நான் மருத்துவத் தொழிலை விரும்புங் காரணங்கள்.
   (அ) பணவருவாய்.
   (ஆ) தொண்டு.
   (இ) புகழ்.
3. மருத்துவத் தொழிலை விரும்புதற்கு என்னிடமுள்ள தகுதிகள்.
4. முடிபு [தொகுப்புரை].

இன்று தொழில் மகத்துவம்பற்றி உணராத உள்ளமில்லை ; பேசாத நாவில்லை ; எழுதாத பேனுவில்லை. இதனைச் சங்கப் புலவன் ஒருவன், 'வினையே ஆடவர்க்குயிரே' என்று கூறிப்போந்தான். ஆடவர் மேலேற்றித் தொழிற்சிறப்புக் கூறப்பட்டதாயினும், ஆண், பெண் பேதமற்று மக்களனைவருக்குமே அது உயிராக விளங்குகிறது ; ஒரு நியதிக்குட்பட்ட உலக இயக்கத்துக்குக் காரணமாகிறது. நாகரிகவளர்ச்சி காரணமாக இன்றுள்ள மக்களது நாளாந்த வாழ்க்கைத் தேவைகள் அளவற்றுப் பெருகிவிட்டன. தேவைப் பொருள்களின் பெருக்கம் பல பல தொழிற்றுறைகளை வளர்த்துவிட்டது. அத் தொழிற்றுறைகளில் ஏதாவதொன்றை ஒவ்வொருவனும் மேற்கொள்வதன் மூலமே தன் வாழ்க்கையைச் செழுமைப் படுத்த முடிகிறது ; அத்தொழில் நடைபெறுவதன்

மூலமே சமுதாயத்துக்கும் உதவமுடிகிறது. எனவே எல்லாத் தொழில்களும் அவைகளைச் செய்பவனுக்கும் சமுதாயத்துக்கும் பயன் தருந் தகையன. அன்றியும் எல்லாத் தொழில்களுஞ் சிலசில தனித்தன்மைகளுந் தொழில் நுணுக்கங்களுங் கொண்டவை. எவனொருவன் இத் தன்மைகளையும் நுணுக்கங்களையும் அறிந்து தகுதிப்பாடுடையவனாகிருனோ, அவனே அத் தொழிலைத் திறம்படச் செய்து, பூரணமான பயன் பெறக்கூடியவனாகிருன். தொழில்கள் பற்றிய உண்மைகளனைத்தையும் உணர்ந்த பின்னர், நான் மேற்கொள்ள விரும்புந் தொழில் மருத்துவமாகும்.

“தனக்குக் கண்டு தானம் வழங்கு” என்பது ஒரு நாடோடிப் பழமொழி. மனிதன் தானுந் தன் குடும்பமும் நல்வாழ்வு வாழ்வதையே குறிக்கோளாகக் கொண்டு விளங்குவான்; அது நிறைவெய்திய பின்னரே, பிறரைப் பற்றி எண்ணுவான். இவ்விருவகை மனப்பான்மையையும் அது விளக்குகிறது. மனிதனது நல்வாழ்வு என்னும் பெருமாளிகையின் அடித்தளமாய் விளங்குவது பணம். ‘பணம் பத்துவிதஞ் செய்யு’மல்லவா? பணவருவாய் மிக்கவன் செல்வனாய் நல்வாழ்வு வாழ்வதையும், அது குறைந்தவன் வறியனாய் வருந்துவதையும் நாம் காண முடிகிறது. இங்கிலையில் அதிக பணவருவாய் தரக்கூடிய தொரு தொழிலையே என் மனம் அவாவுகிறது. இன்று நம் நாட்டில் நல்ல வருமானந் தரக்கூடிய தொழில்களுளொன்ருக விளங்குவது மருத்துவம். இந்நாட்டில் மருத்துவர்களிற் பலர் வாழ்க்கை வசதிகள் பல படைத்தவர்களாய், மகிழ்வுடன் வாழ்வதை நான் காண்கிறேன். அதனுல், நானும் மருத்துவப் பணியை விரும்பியேற்று, எதிர்காலத்தில் மருத்துவனாகி, பரம்பரை பரம்பரையாக வறுமைப் படுகுழியில் வீழ்ந்து வருந்தும் என் குடும்பத்தினரையும் என்னையும் உயர்த்துவதற்குப் பெரிதும் ஆசைப்படுகிறேன்.

அடுத்ததாக, மருத்துவத்தொழில் மற்றெல்லாத் தொழில்களிலும் பார்க்க, மக்களுக்குத் தொண்டுகள் பல புரிவதற்கு வாய்ப்புடைய தொன்ருக விளங்குகிறது.

உலகிலே பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப, நோயாளரின் எண்ணிக்கையும் பெருகிவருதல் கண்கூடு. அன்றியும், தீராத தொழுநோய்களான புற்றுநோய், தொய்வு, கசம் போன்றன மக்கள் குலத்தைப் பெருமளவு வருத்தித் துன்புறுத்துகின்றன; நம் முன்னோர் கண்டறியாத பல புதுவகை நோய்கள் முளைத்தெழுந்து மக்களைப் பயமுறுத்துகின்றன. மக்கள் துன்பத்தை ஓரளவுக்காவது குறைத்தல் போன்ற தேசியப்பணி எதுவும் இருத்தல் முடியாதென்பது எனது எண்ணம். எனவே, சாதாரண நோய்களாலுந் தொழுநோய்களாலும் புதுவகை நோய்களாலும் மக்கள் அனுபவிக்குந் துன்பத்தைத் துடைப்பதையே உயர்ந்த தேசியப் பணியாக நான் கருதுகிறேன். இவ்வித தொண்டு செய்யத் தகுதியுள்ளவன் மருத்துவனே யாவான். இன்று பொதுமக்களின் ஏச்சுக்கும், பேச்சுக்கும் ஆளாகும் மருத்துவர்கள் பலர் உளர். அவர்கள் தாம் பெறும் சம்பளத்தினும் மேலாகப் பொதுமக்களிடம் பணம் பெற்று, உயர்வடைய விரும்பும் பேராசையே இதற்குக் காரணமாகிறது. இப் பேராசை அநீதியானது. அன்றியும் மருத்துவரிற் சிலர், சுற்றத்தினர், அறிமுகமானவர், பணக்காரர் என்போரிடத்து அன்போடு இன்மொழி கூறியும் ஏழைகளிடத்து வேண்டா வெறுப்புடன் நடந்துந் தொழில்செய்கின்றனர். இவ்வித குறைபாடுகள் கொண்ட மருத்துவத்தொழிலை மக்கள் பணியெனக் கூறுதல் இயலாது. மருத்துவனுக்கு நோயாளர் அனைவருஞ் சமம், என்ற பொதுநோக்கு மிகமிக வேண்டப்படுவதாகும். இவ்விரு குறைபாடுகளும் நீங்கிவிட்டால் மருத்துவன்போலச் சமூகத்துக்குப் பெருந்தொண்டு செய்யக்கூடிய சமூக சேவையாளனை எங்குங் காணுதலியலாது. எண்ணற்ற மக்களின் நோய்த் துன்பத்தைத் துடைத்துச் சமூகப்பணி செய்யமுடியும் என்ற காரணத்தினாலும் நான் மருத்துவத் தொழிலை மேற்கொள்ள விழைகிறேன்.

அன்றியும் மருத்துவத்துறையிற் பெருமளவு திறமை காட்டியோர், அத்துறையில் முன்னேறிய மேனாடுகளுக்குச் சென்று, ஆய்வுநடாத்தும் வாய்ப்புக்களைப் பெறுவர்.

அதனால், மருத்துவத்துறையில் மிகவுயர்ந்த திறமையையும் பலராற் போற்றப்படும் நிலைமையையும் பெறல் முடிகிறது. புகழை விரும்பாத மனிதன் எவனுமேயில்லை. அப்புகழ், திறமை, தொண்டு என்னும் இரு காரணங்களாலும் ஏற்படுமாயின் அதுவே நிலைபேறுடையது. எனவே நிலைபேறுடைய புகழைப் பெறுதற்காகவும் நான் மருத்துவத் தொழிலை விரும்புகிறேன்.

மருத்துவத் துறையை மேற்கொள்வோன், அத்துறையிற் பாண்டித்தியம் பெறுவதற்குத் தகுந்த திறமையுடையோனயிருத்தல் வேண்டும். எல்லோரும் மருத்துவர்களாகிவிட எண்ணுவது முடவன் கொப்புத் தேனுக்கு ஆசைப்படுவது போன்றதாகும். விவேகத்தினளவைப் பொறுத்தே ஒவ்வொருவனும் ஒவ்வொரு தொழிலுக்குத் தகுதியுடையவனுகின்ருன் என்பது, மனவியல் வல்லார் கண்ட உண்மை. மருத்துவத் துறையை விரும்புபவன், மிகக் கூடிய விவேக அளவுடையோனுகை விருத்தல் வேண்டும், எனத் தொழிற்றுறையையும் மனவியலையுஞ் சேர்த்து ஆராய்ந்த அறிஞர்கள் கருதுகின்றனர். இந்த அளவுகோல் கொண்டு என்னை அளவிடும்போது, நான் மருத்துவனுதற்கேற்ற தகுதியுடையேனு என்ற வினுவெழுகிறது. அவ்வினுவுக்கு 'ஆம்; தகுதியுண்டு' என்ற விடையுங் கிடைக்கிறது. இது ஆசை காரணமாக வரும் எனது விடையன்று; எங்கள் கல்லூரித் தொழில் வழிகாட்டியாசிரியர் விவேகப் பரீட்சைமூலங் காட்டிய விடையர்கும். விவேகத்தைப் பொறுத்தவரையில் நான் மருத்துவனுதற்குத் தகுதியுடையேன். விவேகத்தினளவு மாத்திரம் ஒருவனை மருத்துவனுக்கிவிடாது. அவன் மருத்துவத்துறைக்குரிய பாடங்களிலும் வல்லவனு யிருத்தல்வேண்டும்; இன்று இலங்கை மருத்துவக் கல்லூரிப் போதனுமொழியாகிய ஆங்கிலத்திலும் இரசாயனம், பௌதிகம், விலங்கியல், தாவரவியல் போன்ற விஞ்ஞானப் பாடங்களிலும் திறமை மிக்கோனு யிருத்தல்வேண்டும். இப்பாடங்களி லெல்லாவற்றிலும் எல்லாப் பருவத் தேர்வுகளின் போதும் எழுபதுக்கு மேற்பட்ட புள்ளிகள் பெற்றுள்ளேன். எனவே, இறுதித் தேர்விலும் நிச்சயமாக அப்

பாடங்களில் விசேட சித்திபெற்று, மருத்துவக் கல்லூரிப் புகுமுகத் தேர்வு எழுதுதற்குத் தகுதியுடையேனுவேன். இத்தகுதி பெறுதலே அருமை. இத் தகுதியை ஒரேமுறையிற் பெற்று, அவதானத்தோடு கற்ற மாணவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு வீதமானேர் மருத்துவக் கல்லூரியிற் சேர்ந்துள்ளதை நான் அறிந்திருக்கின்றேன். எனவே, எவ்வகையிற் பார்த்தாலும் என்னிடம் மருத்துவனுதற்குரிய தகுதிகள் பலவும் இருக்கின்றன. "எண்ணித் துணிக கருமம்" என்று கூறிய வள்ளுவன் வாய்மொழி என்றும் பொய்த்ததில்லை. நானும் மருத்துவனுதற்குரிய தகுதிகளனைத்தையும் எண்ணித் துணிந்தே இம்முடிபுக்கு வந்துள்ளேன். எனவே, என் எண்ணம் இழுக்கடையாது. ஒரு தொழில் புரிவதற்குத் திறமையோடு ஊக்கமும் அதனடியாகப் பிறந்த விடாமுயற்சியும் மிக அவசியமானவை.

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணுயி னுர்"

என்று அவ்விரண்டுமுடையாரது பண்புகள் பேசப்படுகின்றன. பாலப்பருவ முதல் ஊக்கமும் விடாமுயற்சியுமாகிய இரண்டையும் நான் போற்றிவருவதால் என் முயற்சியில் வெற்றியடைவேனெனத் திண்ணமாக நம்புகிறேன். என்னை நான் அளந்த அளவுப்படியும் என் ஆசிரியர்கள் அளந்த அளவுப்படியும் நான் மருத்துவத் தொழிலை விரும்பியதில் எவ்வித தவறுமில்லை.

மருத்துவம் வளமான வாழ்வு வாழ்வதற்கேற்ற ஊதியம் பெறக்கூடிய தொழிலாக விளங்குகிறது; மக்களது நோய்த் துன்பத்தைப் போக்கித் தொண்டு செய்யத் தகுந்ததாய் அமைந்திருக்கிறது. வாழ்க்கையிற் பெரும் புகழ் பெறக்கூடிய நல்ல பண்புகள் அதிற் காணப்படுகின்றன. அன்றியும் மருத்துவத்தொழிலை மேற்கொள்வதற்குரிய பலவகைத் தகுதிகளும் என்னிடம் உள்ளன. இக் காரணங்களால் நான் மருத்துவத் தொழிலைப் பெரிதும் விரும்புகிறேன்.

# 12

## காடுகளும் அவற்றின் பயன்களும்

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்.
2. காடுகளின் பொதுப் பயன்கள்.
3. காடுகளின் பிரதான வகைகளும் பயன்களும்.
4. இலங்கைக் காடுகளின் வகைகளும் பயன்களும்.
5. முடிபு.

இயற்கையன்னை பேரருள் மிக்கவள். அவள் ஒவ்வொரு நாட்டிற்கும் தன்னாலியன்றளவு இயற்கைச் செல்வங்களை அளித்துள்ளாள். காடு, மலை, ஆறு, கடல் எனவும் மண்ணால் மூடப்பட்டுக் கிடக்கும் கனிப்பொருள்கள், எண்ணெய் வகைகள் எனவும் அவளளித்த செல்வங்கள் பலபல பெயர்கள் பெறுகின்றன. வெறும் மணல் வெளியாய், தாங்கொணா வெம்மையுற்றுக் கிடக்கும் சகாரா பாலைவனத்தின் அடியிலே, விலைமதிப்பரிய எண்ணெயூற்றுக்கள் ஓடுகின்றன, என்ற செய்தி அவள் பேரருட்டிறத்தைக் காட்டுவதாகும். அவள் அளித்த இயற்கைச் செல்வத்தைப் போற்றிக் காத்துப் பயன்படுத்தும் வகையிலேயே, நாட்டின் செல்வவளந் தங்கியுள்ளது. இவ்வியற்கைச் செல்வங்களுள் மிக்க அவதானத்தோடு காக்கப்பட்டுப் பயன்கொள்ளப்படவேண்டியது காட்டுச் செல்வம். இவ்வுண்மையினை யுணர்ந்த ஆட்சியாளர், முடிக்குரிய காடுகளைக் காத்துப் பயன்கொள்வதற்காக வனபரிபாலனப் பகுதியென ஒரு திணைக்களம் அமைத்துள்ளனர்.

மேலெழுந்தவாரியாகச் சிந்திக்கும்போதே, காடுகளின் பயன்களை உணர்தல் இயலும். நாளாந்த வாழ்க்கையில் மிக இன்றியமையாத தொன்முன விறகு காடுகளிலிருந்தே பெறப்படுகிறது. உணவுப் பொருள்களுக்கு எத்துணை முக்கியத்துவமுண்டோ, அத்துணை முக்கியத்துவம் அவற்றைப் பக்குவப்படுத்தும் விறகுக்குமுண்டு. மண்ணெய் அடுப்புக்களும் மின்னடுப்புக்களும் நாளாந்த உபயோகத்தில் வந்தபோதினும் விறகுத்தேவை சிறிதும் குறைந்துவிடவில்லை. உணவைப் பக்குவப்படுத்தக் காட்டு மரங்கள் விறகாக உபயோகப்படுவதுமன்றி, மக்களின் உறையுளை உருவாக்கவும் அவை பயன்படுகின்றன. அசுர வேகத்திற் பெருகிவரும் மக்கட் பெருக்கத்தின் வீட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதிற் காடுகள் சிறந்ததோர் இடம் வகிக்கின்றன. வீட்டுத் தீராந்திகளாகவும் கை மரங்களாகவும் கதவு யன்னல்களாகவும் காட்டுமரங்கள் பயன்படுகின்றன. அன்றியும் நாளாந்த உபயோகத்துக்குரிய அழகான வீட்டுத் தளபாடங்களாகவும் அவை உருப்பெறுகின்றன. அத் தளபாடங்கள் வீடுகளுக்கு அழகையும், கவர்ச்சியையும், வசதியையும் உண்டாக்குகின்றன. காட்டு மரங்கள் பலவகை வாகனங்களாகப் பிறவியெடுத்து உலவிவருவதை நாம் காணல்முடிகிறது. புகைவண்டிப் பாதையிலே, குறுக்கே யிடப்படும் மரத்துண்டங்கள், அப் பாதையமைப்புக்கு மிக இன்றியமையாதன. இவை சமீபகாலம்வரை அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதியாகி உபயோகிக்கப்பட்டன. நமது நாட்டுச் செல்வத்தைத் தக்கபடி பயன்படுத்தினுல், நாமே அத் தேவையைப் பூர்த்திசெய்துகொள்ளல் முடியும். காட்டு மிருகங்களும் பறவைகளும் தேசியச் செல்வங்களாகப் போற்றப்பட வேண்டியவை. இன்றுள்ள தேவைக்கேற்ப, இலங்கைக் காடுகள் வேகமாக அழிக்கப்படுமானுல், வன விலங்குகளும் பறவைகளும் வாழ்வதற்கு இடமின்றி அழிந்தொழியும் நிலையுண்டாகலாம். கடந்த சில ஆண்டுகளாக, இலங்கை யானைகளின் பெருக்கம் பெருமளவு குறைந்து வந்துள்ளதாக, வனபரிபாலனப் பகுதியாரின் புள்ளி விபரங்கள் கூறுகின்றன. எனவே, ஈழத் திருநாட்

டிற்கே யுரிய தனித்தன்மை வாய்ந்த விலங்குகளும் பறவையினங்களும் அழிந்தொழியாமற் பாதுகாக்கப்பட வேண்டுமானல், காடுகளும் போற்றிப் பாதுகாக்கப்படல் வேண்டும். இவ்வுண்மையை யுணர்ந்த ஆட்சியாளர், இலங்கையிலுள்ள 'வில்பத்து', 'யாலா' போன்ற காட்டுப் பகுதிகளைத் தேசீய வனங்களாக்கி, விலங்குகளையும் பறவைகளையும் பாதுகாக்கின்றனர். காடுகளிலே எத்தனை எத்தனையோ மருத்து மூலிகைகள் யதேச்சையாக வளர் கின்றன; தீந்தேனைத் தேனீக்கள் காடுகளிலே சேமித்து வைக்கின்றன; அபூர்வ சுவைதரும் பழங்களும், கிழங்கு களும் காடுகளிலே ஏராளமாகக் கிடைக்கின்றன. வனத் திலே வாழும் வேடர்க்கும் காடுகள் சூழ்ந்த குடியிருப் புக்களிலே வசிப்போர்க்கும் இவை உணவாகவும் வியா பாரப் பொருள்களாகவும் பயன்படுகின்றன. இவையெல் லாவற்றையும்விட, நாட்டின் தட்ப வெப்ப நிலைகளை வரை யறுப்பதிலே காடுகள் பெரும் பங்கு பெறுகின்றன. சம தரைப் பிரதேசங்களிலே, முகிற் குலங்களைத் தடுத்து மழைபொழியச் செய்வன வானுறவோங்கிய காடுகளே யாம். காடுகளின் இலைக்கட்டிலுள்ள நீர் ஆவியாகி, மழைக்குக் காரணமாகிறதென்ருல் அது வியப்புக்கிட மானதே. ஆயினும், அது அறிவியலார் கண்ட மறுக்க முடியாததோருண்மை. அமெரிக்கா, ருஷியா, சுவீடன் போன்ற நாடுகளின் சில பகுதிகளிலே, காடுகள் மக்க ளுக்குத் தொழில்துறைகாட்டி உயிரூட்டும் பெருஞ் சாத னங்களாக விளங்குகின்றன. ஆங்குள்ள ஊசியிலைக் காடுகளிலே மரம்வெட்டல், மரமரிதல், காகிதஞ் செய்தல் போன்ற பல தொழில்களிலே பல்லாயிரக்கணக்கானேர் ஈடுபட்டு வாழ்கின்றனர். அந்நாடுகளும் இத்தொழில் களாலே கணிக்கத்தக்க அளவு பொருள்வருவாய் பெறு கின்றன. இங்ஙனங் காடுகளால் மனிதகுலம் அடையும் பயன்கள் அளப்பில.

காடுகளைப் பூவியலார் அவற்றின் தன்மை நோக்கிப் பெரும்பாலும் மூவகையாகப் பகுத்துள்ளனர். அவை: வெப்பவலயக் காடுகள், மத்திமவலயக் காடுகள், குளிர்

பிரதேசக் காடுகள் என்பன. வெப்பவலயக் காடுகளில் வயிரம் பொருந்தியனவாகிய கருங்காலி, முதிரை, பாலை, வேம்பு, மலைவேம்பு, சமண்டலை, தேக்கு போன்ற பெறுமதி வாய்ந்த பெருந்தருக்கள் காணப்படும். அவை பெரும் பாலும் கட்டிடத் தேவைகளுக்குந் தளபாடங்கள் செய்தற் கும் உபயோகப்படுகின்றன. மத்திமவலயக் காட்டுமரங் களிற் சில, கப்பல் கட்டுதற்கும் வீட்டுத் தேவைகளுக்கும் உபயோகப்படுகின்றன. குளிர்பிரதேசக் காட்டுமரங்கள் பிரதேச இயல்புக்கேற்ப ஊசிபோன்ற இலைகளுடையன வாய், பாரிய கிளைகள் எதுவுமின்றி நீண்டுவளரும் இயல் பின. அக்காடுகள் ஊசியிலைக் காடுகள் என்னும் பெயர் பெறுகின்றன. இக் காட்டுமரங்கள் நார்த்தன்மை பெற்று விரைவில் முறியாதனவாகையால், கப்பற் பாய்மரங்களுக் கும், கனமற்ற பெட்டிகள் செய்தற்கும் பயன்படுகின் றன. நெருப்புப்பெட்டித் தொழிற்சாலைகளும், கடதாசித் தொழிற்சாலைகளும் இக் காட்டுமரங்களை மூலப்பொருள்க ளாகக் கொண்டு, அவ்வப் பிரதேசங்களிலே காணப் படுகின்றன.

ஈழநாட்டிலுள்ள காடுகளை எடுத்துக்கொண்டால், அவை: வரண்டபிரதேசக் காடுகள், தென்மேற்பகுதிக் காடுகள், மலைப்பிரதேசக் காடுகள் என முத்திறப்படுகின் றன. வரண்ட பிரதேசக் காடுகளிலுள்ள மரங்கள் பெரும் பாலும் விறகுத் தேவையைப் பூர்த்திசெய்கின்றன. அங் குள்ள பாலை, முதிரை, வேம்பு போன்றன வீடு கட்ட வும் தளபாடஞ் செய்யவும் பயன்படுகின்றன. தென் மேற்பகுதிக் காட்டுமரங்களிற் சில, ஓட்டுப்பலகை செய் வதற்கு ஏற்றன. ஓட்டுப்பலகைகள் பெரும்பாலும் தேயி லைப் பெட்டிகள் செய்வதற்கு உபயோகப்பட்டுப் பொருள் வளஞ் சுரக்கின்றன. அங்குள்ள தேக்கு, பலா போன்ற மரங்கள் கண்கவர் வனப்புடைய வீட்டுத் தளபாடங்க ளாக உருப்பெறுகின்றன. மலைநாட்டுக் காட்டுமரங்க ளிலே, 'ஓரேலியன்கம்' போன்றன, வெகு விரைவாக வளர்வன. இவைகளும் ஏறக்குறைய ஊசியிலைக் காட்டு மரங்களைப்போல, பாரிய கொம்பரற்று நீண்டுயர்ந்து

வளர்வன. அதனால் இங்குள்ள மரங்கள் கப்பல், தோணி களுக்கேற்ற பாய்மரங்களாகப் பயன்படுகின்றன.

மக்களின் தேவை பெருகப் பெருகக் காடுகள் அழிக் கப்படுதல் தவிர்க்க முடியாததொரு செயலாகிறது. புதிய புதிய காடுகளை யுண்டாக்காமல், காடுகளை அழிக்கும் முயற்சி, நாட்டை அழிக்கும் முயற்சிக்கு ஒப்பானது. எனவேதான் பலநாடுகள் புதுக்காடுகளை உண்டாக்கும் முயற்சிக்கு ஊக்கமளிப்பதற்காக, வனமகோற்சவம் என் னும் பெயருடன் தேசீய விழா எடுக்கின்றன. புதுக் காடுகளை யுண்டாக்கும்போது, பெரும்பயன் தரும் வேம்பு, பனை, முதிரை, கருங்காலி, தேக்கு, சவுக்கு போன்ற மரங்களைப் பயிரிடுதல் புத்திசாலித்தனமான காரிய மாகும். இல்லாவிட்டாற் காலப்போக்கில் விறகுப் பஞ்சம் மாத்திரமன்றி, கட்டிடத் தேவைக்குரியனவும், தளபாடத் தேவைக்குரியனவும் அருகிவிடுதல் கூடும். எனவே, காட்டுச் செல்வத்தைக் கண்ணுங் கருத்துமாகப் போற்றிக் காத்தல் நாட்டு நலனிற் பற்றுக்கொண்ட மக்களது முக்கிய கடனாகும்.

# 13

## விஞ்ஞானமும் வாழ்வும்

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்.
2. விஞ்ஞானம் இன்னதென்பது.
3. விஞ்ஞானமும் விவசாயத்துறையும்.
4. விஞ்ஞானமும் போக்குவரவுத்துறையும்
5. விஞ்ஞானமும் வீட்டுவசதிகளும்.
6. விஞ்ஞானமும் கைத்தொழிலும்.
7. விஞ்ஞானமும் மருத்துவமும்.
8. விஞ்ஞானமும் அகவளர்ச்சியும்.
9. விஞ்ஞானமும் சமயத்துறையும்.
10. முடிபு.

"ஆத்துமஞானம், விஞ்ஞானம், இலக்கியம் என்னும் முத்துறைகளின் கூட்டுறவால் மனிதவாழ்வு முழுமை பெறுகிறது" என்று கூறுகிறார் பெரும் பேரறிஞரான விநோபாவே. இந்த அணு யுகத்தில் ஒவ்வொரு மனிதனும் சிந்தித்துணர வேண்டிய உண்மை இது. இவற்றுள் ஒன்றை நீக்கி, ஒன்றைப் போற்றுவதால் மனிதவாழ்வு வளம்பெறல் முடியாது. இலக்கியம் போன்ற அழகுக் கலைகள், உள்ளத்தை விரிவுபடுத்தி நற்பண்புகளை வளர்க்கின்றன. அறிவுக்கலையின் சார்பான விஞ்ஞானம் வாழ்க்கை வசதிகளையளித்து மனிதனின் உலகியல் முன்னேற்றத்திற்கு உறுதுணை புரிகிறது. ஆத்மஞானம், அழகுக் கலைப் பண்புகளும் விஞ்ஞானப் பண்புகளும் இணைந்து, அவையிரண்டுக்கும் அப்பாலாய்த் தன்னையும்

தன்னையுடையானையும் உணர வழிவகுக்கிறது. இன்றைய
நிலையில் மனித நாகரிகத்தின் வியத்தகு வளர்ச்சிக்குச்
சிறந்த தோழனாகவும் அதே வேளையில் அதனை யழித்
தொழிக்கும் பயங்கர காலனாகவும் விஞ்ஞானம் விளங்கு
கிறது. காட்டிலே விலங்கு நிலையில் வாழ்ந்த மனிதனை,
விண்வெளியைக் கடந்து, கோள்களுக்குப் பிரயாணஞ்
செய்யுமளவுக்கு வளர்த்ததும் விஞ்ஞானம்; இவ்வளர்ச்சி
யத்தனையையுங் கணப்பொழுதிலழித்து, உலகைச் சுடு
காடாக்கிவிடப் பயமுறுத்துவதும் விஞ்ஞானம். எனவே,
எவ்வகையில் நோக்கினும் வாழ்வோடு பிரிக்க முடியா
வகையிலே, விஞ்ஞானம் பின்னிப் பிணைந்து கிடக்கிறது.

விஞ்ஞானம் கடலைப்போல அகலமும் ஆழமுமுடைய
அறிவுத் தொகுதி. மனிதகுலம் உலகில் முளைவிடத்
தொடங்கிய நாள்முதல் இன்றுவரை, அது இன்னல்கள்
பலவற்றைக் கடந்து, பலபல துறைகளிலே பலபல வசதி
களைப் படைத்துக்கொண்ட கதையை விஞ்ஞானத்தின்
கதையென்று கூறலாம். இந்த உண்மைக் கதையின் ஒவ்
வொரு திருப்பத்திலும் மனித சிந்தனை தூண்டப்பட்டிருக்
கிறது; அதனால் அறிவு பிரகாசித்திருக்கிறது. இவ்வாறு
திரட்டப்பட்ட அறிவுத் தொகுதியே விஞ்ஞானம். அது
சிந்தனைச் செல்வர்களான விஞ்ஞானிகளின் ஆய்வுகள்
மூலம் விளைவுகளாகக் காட்டப்படுகிறது. அவ்விளைவுகள்
விவசாயம், கைத்தொழில், மருத்துவம், போர் முதலிய
துறைகளுக்கு ஆதாரமான புதிய பல உண்மைகளையும்
கண்டுபிடிப்புக்களையும் காண உதவிபுரிந்தன. இவ்வு
யர்வற்றையுந் திரட்டிப் பார்க்கும்போது, மனித சிந்தனை
யிற் காணப்படும் திட்பமும் நுட்பமும் சந்தேக விபரீத
மற்ற தெளிவும் முழுமையான பயனும் விஞ்ஞானப்
பண்புகளாக விளங்குவதைக் காணலாம்.

இன்றைய மனித வாழ்வோடு விஞ்ஞானம் உயிரும்
உடலும் போலப் பிணைந்து காணப்படுகிறது. மிகமிகப்
பிற்போக்கான கிராமங்களிற்கூட, விஞ்ஞானத்தின் ஒளி
பரவியிருப்பதைக் காணமுடியும். ஏரும் எருதுங் கொண்டு
நெற்றி வியர்வை நிலத்திற் சிந்த உழைத்துப் பயன்கண்ட

உழவன், இயந்திரக் கலப்பையால் ஆழ உழுது, இரசாயன வுரமிட்டுப் பெரும்பயன் பெறுகிறான். ஆழக் கிணற்றிலிருந்து ஆவி கலங்கிச் சோர, நீரிறைத்துப் பயிர் விளைவித்த தோட்டக்காரன், எந்திரத்தால் நீரிறைத்துப் பயிர் செய்து பெரும்பயன் காண்கிறான். பெரும் பண்ணைமுறை விவசாயத்தில் உழுதல், மட்டப்படுத்தல், விதைத்தல், களைகட்டல், எருவிடல், அறுத்தல், அடித்தல் ஆகிய எல்லாத் தொழில்களையும் எந்திரங்களே செய்கின்றன. இம்மாற்றங்கள் கமக்காரரின் உழைப்புச் சக்தியையும் கூலியையுங் குறைத்து, விளைவை மிகுவிக்கின்றன. அன்று பயிர்களுக்கு நோயேற்பட்டுவிட்டால் அதனை மாற்ற வகையறியாது, அது தெய்வத்தின் சினமென நம்பி, அதற்குப் பிரீதி செய்த மக்கள், இன்று மருந்து வகைகளாலே தம் பயிர்களை அழிவினின்றுங் காக்கின்றனர். விஞ்ஞான ரீதியான அணைக்கட்டுக்கள், நீர்த்தேக்கங்கள் மூலம் வரண்ட நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சி விவசாயஞ் செய்கின்றனர். பயிர்வளரத் தகுதியற்ற பாழ்நிலங்கூட, இன்று விஞ்ஞானமுறைகளாற் பசுஞ்சோலைகளாக மாற்றப்படுகின்றன. இவை விவசாயத்துறையில் விஞ்ஞானம் புரிந்துவிட்ட மாற்றங்களுட் சிலவாம்.

அன்று பயணஞ் செய்வற்குக் கால்நடை தவிர்ந்தால் கட்டை வண்டி என்றிருந்த நிலைமாறி, மனிதன் மண் மீதும், மாக்கடல்மீதும், விண்மீதும் விரைந்து செல்கின்றான். பலநாட் பிரயாணஞ் சிலநாளாய்ச் சில மணியாய்ச் சுருங்கிவிட்டது. மண்மீது செல்ல, மனிதனின் பொருள்வளத்திற் கேற்ற வகைவகையான வாகனங்களை விஞ்ஞானந் தந்திருக்கிறது. மாளிகைபோலச் சகல சௌகரியங்களுமமைந்து, கடல்வயிற்றைக் கிழித்துக் கொண்டு விரைந்து செல்லும் கப்பல்கள் தேச தேசாந்திரங்களை இணைக்கின்றன. வான்மீது விரைந்துசெல்லும் பலவகை விமானங்கள், சிலமணி நேரத்தில் நெடுந்தூரத்தைக் கடந்துவிடுகின்றன. இவை யாவும் விஞ்ஞானம் மனிதகுலத்துக்களித்த பெரும் பரிசுகளாம். இவ்வித போக்குவரத்துச் சாதனங்களால் இடமகன்ற இப்பூமி

மிகமிகச் சுருங்கிவிட்டது. பலவின மக்கள் ஒன்றுகூடிப் பழகும் வாய்ப்பினுல், உலகம் ஒருகுலமாகும் நிலை ஏற்பட்டுவிட்டது. இவை யாவற்றையும் விஞ்சி, கோள்களுக்குப் பிரயாணஞ் செய்யும் நிலை உதயமாகி விட்டதென்ருல், விஞ்ஞானத்தின் அற்புத சாதனைகளை வியக்காமலிருத்தல் முடியாது.

இல்வாழ்க்கையில், மின்சாரம் என்ற உருவில், விஞ்ஞானம் படைத்துவிட்ட புதுமைகள் அளப்பில. அது இல்லத்துக்கு ஒளியூட்டி விளக்கஞ் செய்கிறது; கூட்டித் துடைத்துக் கழுவிச் சுத்தஞ் செய்கிறது; இன்பமூட்ட வாஞெலியாய், பேசும்படமாய் விளங்குகிறது; சுருங்கக் கூறின் நல்லதோரில்லாளாய், வேலை மிகச் செய்தும் அதிக கூலி கேளாச் சேவகனுய்க் காணப்படுகிறது. இவையன்றி நாளாந்த வாழ்க்கையிலே செய்திகளை விரைவிலறிவித்தற் கேற்ற தந்தியாகவும் தொலைபேசியாகவும் மிளிர்கிறது.

கைத்தொழிற்றுறையில் விஞ்ஞானஞ் செய்த மாற்றம் சரித்திரப் பிரசித்தி பெற்றது. நீராவியின் சக்தியும் எரி பொருட் சக்தியுங் கண்டுபிடிக்கப்பட்டபோது, கைத் தொழிலிலேற்பட்ட வியத்தகு மாற்றம் சரித்திரத்தில் ஒரு திருப்பத்தை யுண்டாக்கித் தொழில்யுகத்தைத் தோன்றச் செய்தது. சக்திகளை இலகுவிற் பெறக்கூடிய இடங்களிலே பெரிய பெரிய தொழிற்சாலைகள் நிருமாணிக்கப்பட்டன; பிரமாண்டமான எந்திரங்கள் பல நூற்றுக்கணக்கான தொழிலாளரின் வேலையைச் சிலமணி நேரத்திற் செய்தன. அதனுல் உற்பத்தி பெருகியது; பொருள்களின் தரம் உயர்ந்தது; விலை குறைந்தது. இந்தக் கைத்தொழிற் புரட்சி, சமுதாயத்திலே பலம்வாய்ந்ததொரு தொழிலாளர் வர்க்கத்தையும் உருவாக்கிவிட்டது.

இவை யெல்லாவற்றினும் மேலாக, மருத்துவத்துறையில் விஞ்ஞானஞ் செய்த புதுமைகள் அநந்தம். அவை யாவற்றுக்கும் மனிதகுலம் நன்றிக்கடன்பட்டிருக்கிறது. விஞ்ஞானந் தந்துதவிய மருந்துகள், மனிதகுலக் கொடும் பிணிகளை மாற்றும் அமிர்த சஞ்சிவிகளாய் விளங்கு

N. Rangatharan
fum '89



கின்றன. சமுதாயத்தை அழிக்கும் தொற்றுநோய்கள் மாற்று மருந்துகள்மூலம் தடுக்கப்படுகின்றன. மனிதனின் உள்ளுறுப்புக்கள் படமாக்கப்பட்டு, பழுதுள்ள இடங்கள் அறுவை வைத்தியத்தாற் குணமாக்கப்படுகின்றன. இதயத்தின் பழுதே, அறுவை வைத்தியத்தாற் குணமாக்கப்படுகிறதென்றால், பிறவுஞ் சொல்லல்வேண்டுமோ! புத்தியபாகங் காத்து, பலநாள் நோயின் கொடும்பிடியிற் சிக்கித் தவித்து மீளுதலும் மாளுதலும் அக்காலத்திற் பெருவழக்கு. இறப்பைத் தடுக்கமுடியாவிடினும், இன்று ஊசி மருந்துகளாலும் உயிர்ச்சத்துக் குளிகைகளாலும் நோய்த் துன்பத்தைப் பெருமளவு குறைத்தல் முடிகிறது.

இவையன்றி, வாழ்வின் அகத்துறையிலும் விஞ்ஞானத்தின் தாக்கம் உள்ளத்துக்கு உயர்வளித்துள்ளது. உண்மைகளைத் தீவிரமாகவும் ஆவலோடும் அறிய முயலும் மனநிலை, வாழ்வுக்கு இன்றியமையாதது. அன்றியும் கற்பனைக் கலப்பின்றி, அறிவோடு பொருந்தக் கருமமாற்றும் இயல்பு புதுமை வாழ்வுக்குப் பொருந்துவதொன்று. எண்ணுங் கருத்தையுஞ் சொல்லுஞ் சொல்லையுஞ் செய்யுஞ் செயலையுந் திட்பநுட்பத்தோடும் நிதானத்தோடுந் தெளிவோடும் எண்ணுதலுஞ் சொல்லுதலுஞ் செய்தலும் அறிவுக்கு அடையாளமாக விளங்குவன. இத்தன்மைகளனைத்தும் விஞ்ஞானப் பண்புகளாகி, உள்ளத்தை வளர்த்து வாழ்வுக்கு உரமூட்டுகின்றன.

வாழ்வின் அகத்துறை புறத்துறையன்றி, சமயத்துறையிலும் விஞ்ஞானத்தின் பங்கைச் சிந்தித்தல் நன்று. இயற்கை மனிதனைப் பார்த்து, "சிந்தி; முயல்; அனுபவி" என்று குரல் கொடுக்கிறது. மனிதன் அந்தக் குரலைக் கேட்டுச் செயலாற்றும்போது, முதலும் முடிவுந் தெரியாது கலங்குகிறான். இந்நிலையிலே தெய்வமென்பதோர் சித்தம் உண்டாகிறது; சமய வுணர்வு அரும்புகிறது. அச் சமயவுணர்வு, மூடபத்தியையும் மூட நம்பிக்கையையும் புறங்கண்டு அறிவோடொட்டி மலர்கிறது. இச் சமயவுணர்வே சிறந்தது; அதுவே உண்மைச் சமயம் ஆகும்.

இவ் விஞ்ஞானம் இன்று அரசியல் ஆதிக்கத்துக்குட் பட்டுத் தவிக்கும் நிலையை உலகெங்குங் காணமுடிகிறது. ஆட்சியாளரின் கொள்கைக்கேற்ப விஞ்ஞானிகளும் நடக்கவேண்டிய நிலை ஏற்பட்டால், சிலவேளை நன்மையும் விளையும்; தீமையும் விளையும். நல்லாட்சி நிலவும் நாட்டி லுள்ள விஞ்ஞானிகள் சமுதாயத்திற்கு நலன் பயக்கும் நல்விளைவுகளைக் கண்டுபிடிப்பர். கொடுங்கோல் நிலவும் நாட்டில் விஞ்ஞான விளைவுகளனைத்தும் மனித சமுதா யத்தை யழிக்கும் அணுக்குண்டாகவும் சலவாயுக் குண் டாகவும் உருவெடுக்கும். எனவே, விஞ்ஞானிகள் ஆட்சிப்பீடத்தின் கெடுபிடிக்குள் அகப்படாத சுதந்திர புருடர்களாகத் திகழ்தல் வேண்டும். அவர்களாலேதான் உலகந் தழைத்தல் முடியும். பெருகிவருஞ் சனத்தொகை, விஞ்ஞான ஆய்வுகளை விரைவுபடுத்துகிறது. சமுதாயத் துக்கு வேண்டிய உணவு, உடை, உறையுள் ஆகியன வற்றை ஈந்து வளமான வாழ்வு அளித்தல், விஞ்ஞானத் தின் தலையிற் சுமந்துகிடக்கும் பெரும் பொறுப்பாகும். எனவே, உலக நாடுகளனைத்தும் விஞ்ஞானத்தை அழிவுத்துறைக்குப் பயன்படுத்தாமல், வாழ்க்கை வசதிகளைப் பெருக்கும் ஆக்கத்துக்குப் பயன்படுத்தல் இன்றியமையாத்தாகிறது.

# 14

## இலங்கைக் குடியேற்றத் திட்டங்கள்

குறிப்புக்கள் :

1. ஆரம்பம். பூவியற்பண்பும் சனச் செறிவும்; குடியேற்றத் திட்டம் உருவானமை.
2. குடியேற்றத் திட்டத்தின் பிரதான இருவகைகள்.
3. குடியேற்ற வாசிகளுக்கு அர்சாங்கம் ஆதரவளித்தல்.
4. குடியேற்றத் திட்டத்தால் விளையும் நன்மைகள்.
5. முடிபு.

ஒரு நாட்டின் நிலவமைப்புஞ் சுவாத்தியப் பண்பும் அந்நாட்டின் சனச் செறிவுக்கோ சனக் குறைவுக்கோ காரணமா யமைகின்றன. இப்புவியியலுண்மைக்கு நமது இலங்கையும் விதிவிலக்கானதன்று. நமது நாடு ஒரு சிறு தீவாயினும் அதன் புவியியற் பண்புகள் பலதரப் பட்டிருக்கின்றன. இலங்கையில் வடக்குப் பிரதேசமும் கிழக்குப் பிரதேசமும் செழிப்பான மண்வள முடையவேனும் நீர்வளமின்மையால் வரண்டு காணப்படுகின்றன; காடடர்ந்து கவனிப்பாரற்ற இடமாகக் கிடக்கின்றன; அதனாற் சனச் செறிவு குறைந்த பிரதேசங்களாக விளங்குகின்றன. தென்மேல் பிரதேசம் பருவமழை வளத்தாலும் ஆற்றுச் செல்வத்தாலும் பொலிந்து விளங்குகிறது; தொழிற்பெருக்க முடைமையால், மக்கட் பெருக்கம் மிகுந்த பிரதேசமாக மதிக்கப்படுகிறது. மத்திய மலைநாடு, இலங்கைப் பொருளாதாரத்தின் உயிர்நாடிகளான, தேயிலை, றப்பர்த் தோட்டங்களை உடையதாய்க் காணப்

படுகிறது. அதி வடக்கிலுள்ள யாழ்ப்பாணக் குடாநாடு, மண்வளங் குறைந்ததாயினும் மக்களின் அயராவுழைப் பாற் செழிப்புற்று, அபூர்வமான புவியியற் பண்பு பெற்று, சனப்பெருக்க முடையதாய் விளங்குகிறது. சனச்செறிவு கூடிய இடங்களிலே, குடியிருப்பதற்கும் பயிரிடுவ தற்கும் நிலமின்மை காணப்படுகிறது. இந்நிலை வேலை யில்லாத் திண்டாட்டத்திற்கு ஒரு காரணமெனலாம். நிலமின்மை, வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை ஆகிய இப்பெரும் பிரச்சினைகளுக்கு விடிவுதேடி, நல் லாட்சி காண்பது ஆட்சியாளரின் தலையாய கடமை யாகி விடுகிறது. சனச்செறிவு மிக்க இடங்களிலுள்ள மக்களை, வெற்று நிலம் மிகுந்துள்ள பிரதேசங்களிற் குடியேற்றுவதன் மூலமே, இப் பிரச்சினைகளுக்கு விடிவு காணல் முடியும். இவ்விதம் ஆட்சியாளர் வரை யறை வாய்ந்த திட்டம் அமைத்து, மக்கள் குடியேறுவ தற்கான வாய்ப்புக்களை அளிப்பதனையே குடியேற்றத் திட்டம் என அழைப்பர். இலங்கையிலே இவ்வித குடி யேற்றத் திட்டங்களை முதன்முத லுருவாக்கி, நல்லதொரு வழியமைத்துத் தந்தவர், சுதந்திர இலங்கையின் முதற் பிரதமராக விளங்கிய கௌரவ டி. எஸ். சேனநாயக அவர்களேயாவர்.

இலங்கையிற் காணப்படுகின்ற குடியேற்றத் திட்டங் கள் இருவகையின: ஒருவகை தேசியக் குடியேற்றத் திட்டங்கள்; மற்ற வகை பிரதேச குடியேற்றத் திட் டங்கள். தேசிய குடியேற்றத் திட்டங்கள் பரந்த அடிப் படையிலே, தேசமக்கள் அனைவருக்கும் பொதுவாக விளங்குவன. நாட்டின் எப்பாகத்திலும் அந் நாட்டு மக்கள் வாழ உரிமையுண்டு என்ற அடிப்படையின்மீது எழுவன. அதற்காகத் தேசிய வருமானத்திலே, குறிப் பிடத்தக்க அளவு செலவிடப்படுகிறது. இவ்வகையில் முதன்முத லுருவான தேசியக் குடியேற்றத் திட்டம் கல் லோயாத் திட்டமாகும். அது பட்டிப்பளை என்னும் ஆற்றி னுக்கு அணையிடுவதன்மூலம், பெரியதொரு நீர்த்தேக் கத்தை யுண்டாக்கி, அதனைச் சூழவுள்ள பரந்த நிலப்

N. Kangatharan [Form]



பிரதேசத்துக்கு நீர்ப்பாய்ச்சி, வளங் காண்பதற்காக அமைக்கப்பட்டது. முப்பது ஏக்கர் பரப்புள்ள அந் நீர்த் தேக்கம், அத்திட்டத்தை உருவாக்கியவரின் பெயரால், "சேனநாயக சமுத்திரம்" என அழைக்கப்படுகிறது. அது ஊவாமாகாண, கிழக்கு மாகாண எல்லையில் அமைந்துள்ளது. அதனுல், ஏறக்குறைய இருபத்தாயிரம் ஏக்கர் நிலம் நீர்ப்பாசனத்துக்குத் தகுதியுடையதாகிறது; ஏறக்குறைய ஐம்பதினுயிரம் மக்கள் அங்கு குடியேறி நெல்லுங் கரும்புந் தென்னையும் பயிரிட்டு நல்வாழ்வு வாழ முடிகிறது. இரண்டாவதாக உருவான தேசிய குடியேற்றத் திட்டம் அல்லைத் திட்டமாகும். அத்திட்டம் திருகோணமலைப் பகுதியையுங் கந்தளாய்ப் பகுதியையும் உள்ளடக்கியது. அதன் மூலம் இலங்கையின் பலபாகங்களிலுமுள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் பயனடைகிருர்கள். அங்கு நெல்லுங் கரும்பும் பிரதான விளைபொருள்களாய் விளங்குகின்றன. இலங்கையின் சீனித் தொழிற்சாலை அக் குடியேற்றத் திட்டப் பிரதேசத்திலமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையின் தென் பிரதேசத்திலே பிரவகிக்கும் வளவகங்கைக்கு அணையிடுவதன்மூலம் நீர்ப்பாசன வசதியளிக்குந் திட்டம் எதிர்காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டியது. வளவக்ங்கைத் திட்டமெனப் பெயர்பெறும் அதன் பூர்வாங்க வேலைகள் முடிவடைந்தநிலையி லிருக்கின்றன. அதன் மூலம் இலங்கையின் தென்பிரதேசத்திற் பல்லாயிரம் ஏக்கர் நிலம் பொன்கொழிக்கும் பூமியாக மாறுமென எதிர்பார்க்கலாம். இவை தவிர, பிரதேச குடியேற்றத் திட்டங்கள், அந்தந்த மாவட்டங்களுக்காக உருவாக்கப்பட்டவை. உதாரணமாக வடபகுதி மக்களுக்காக, வவுனிக்குளத் திட்டமும் வன்னேரிக்குளத் திட்டமும் அமைந்துள்ளன. அங்கு குடியேறுதற்கு அவ்வப் பிரதேச மக்களுக்கே அதிக உரிமையுண்டு.

இவ்விருவகைத் திட்டங்களிலும் குடியேற விரும்பும் மக்கள் சொந்த நிலமற்றவர்களா யிருத்தல் வேண்டும்; அவர்களுக்கே முதலுரிமையுண்டு. அவர்களுக்குக் குடி

யிருத்தற்கேற்ற நிலமும் நெல்விளைவித்தற்கேற்ற வயல் நிலமும் அரசாங்கம் வழங்கும்; காடு கெடுத்தற்கும் வீடுகட்டுதற்கும் மானியம் வழங்கும்; விதை நெல்லும் விவசாயக் கருவிகளும் இலவசமாகக் கொடுத்துதவி புரியும்; நிலம் பயன்கொடுக்கும் வரையும், சில ஆண்டுக் காலத்துக்கு வாழ்க்கை வசதிக்காகப் பணவுதவி புரியும். இத்தனை பேருதவிகளை அரசாங்கம் கொடுத்துக் குடியேற்றவாசிகளிடம் அன்பு காட்டுகிறது.

குடியேற்றத் திட்டங்களினால் நாட்டின் உற்பத்தி பெருகுகிறது; அதனால், உணவுப் பொருள்களுக்காகப் பிறநாடுகளுக்குச் செல்லும் பணத்தின் ஒருபகுதி மீதிப் பட நாட்டின் பொருளாதாரம் வளமடைகிறது. இவ்வித திட்டங்களினால் நாட்டின் ஒவ்வோரங்குலப் பிரதேசமும் பயன்பட்டுப் பொன் கொழிக்கிறது. அவ்வித நிலை நாட்டின் சுபீட்ச வாழ்வுக்கு அனுகூலம் புரிகிறது. குடியேற்றத் திட்டப் பிரதேசங்களிலுள்ள மூலப் பொருள்களைக் கொண்டு, பல பல தொழில்கள் பெருக வாய்ப்புண்டாகிறது. அதனால், வேலை வாய்ப்புக்குரிய வழிவகைகள் கிளைத்துச் செல்லவே, நாட்டின் கொடும் பிணியான வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிகிறது. கொலை, களவு முதலிய பாதகச் செயல்கள் பரவியிருத்தற்கு, வேலை வாய்ப்பற்ற மக்கள் கூட்டத்தினரும் காரணமாவர் என்று சொல்லலாம். இக் குடியேற்றத் திட்டங்களின் பயனாக மக்கள் சுபீட்சநிலை யடைவதனால் கொலை, களவு முதலிய தீங்குகள் இல்லையாகின்றன. அவை யெல்லாவற்றினும் மேலாக, சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள் ஆகிய நாட்டின் பிரதான மூன்றின மக்களுங் கலந்து வாழ்ந்து, ஒருவரை யொருவர் உணர்ந்தறிந்து பழகமுடிகிறது. அதனால் நாட்டில் ஒற்றுமை நிலவுவதோடு, பண்பாட்டுக் கலப்பும் ஏற்படுகிறது. அடிக்கடி இனக் கலவரங்களுக் கிலக்காகும் நம்மிலங்கை வளநாட்டில், இனவொற்றுமை நிலவுவதற்கு இவ்வித திட்டங்கள் அவசியமானவை. ஆயின், அவ்வித உயரிய திட்டங்களிலே அரசியற் கொள்கைகள் புகுத்தப்படுமாயின், அத்திட்டங்கள் அற்ப

ஆயுள் பெற்றுக் குழப்பத்திலேயே முடியும். தேசப் பொது நலனைக் கருத்திற் கொண்டல்லாமல், கட்சிகளின் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு இவ்வித திட்டங்கள் உருவாக்கப்படுதல் நன்றன்று.

நாட்டிலே அசுர வேகத்திற் பெருகிவரும் மக்களின் கொடும்பகையான வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கி, அவர்களுக்கேற்ற வேலை வாய்ப்பளித்து, அவர்களனைவரையும் ஓரளவு நல்வாழ்வு வாழச் செய்வதற்குக் குடியேற்றத்திட்டங்கள் கிடைத்தற்கரிய வரப்பிரசாதங்களாக மிளிர்கின்றன. அத்திட்டங்களிலே அரசியற் கொள்கைகள் தலையிடா திருக்குமாயின் அளப்பரும் நன்மைகள் விளையும். வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்து, நாட்டுமக்கள் ஒவ்வொருவரும் வேலைவாய்ப்புகள் பெற்று நலமுற்று வாழல் முடியும். அதனால், நமது ஈழமணித் திருநாடும் உலக அரங்கிலே, கம்பீரமாகத் தலைநிமிர்ந்து நிற்றல் முடியும்.

# 15

## "நான் யாருமற்ற ஒரு தீவில் விடப்பட்டபோது .........."

குறிப்புக்கள் :

1. ஆரம்பம். பிரயாணமும் பிரிவுத்துயரும்.
2. கப்பல் உடைந்தது.
3. ஆழ்கடலில் எனது நிலை.
4. யாருமற்ற தீவையடைந்த எனது நிலை.
5. அத்தீவில் ஒருநாளைக் கழித்த வகை.
6. முடிபு.

அவுஸ்திரேலியாவுக்குச் செல்லும் கப்பல், துறைமுகத்தினின்றும் புறப்பட்டது. என் தாய்நாட்டை விட்டுப் பிரியும்போது, என்னருமைத் தாயை விட்டுப் பிரிவதுபோலக் கலக்கமடைந்தேன். மீண்டும் என் தாயகத்தைக் காணும் பேறு பெறுவேனோ என்று எண்ணியபோது என் நெஞ்சந் துடித்தது. கப்பலின் மேற்றட்டில் நின்று எனது தாயகம் கண்பார்வையில் மறையும்வரையும் பார்த்துக் கொண்டு நின்றேன். "ஓ! என் மரகதமணித் திருநாடே, நீயே என் உயிர். என் படிப்பு முடிந்த அன்றே, உன் பொன்னடியைத் தொழ ஓடோடி வருவேன்" என்று என் கலங்கிய மனத்துக்கு ஆறுதல் கூறினேன். அதன் பின்னரே, பிரயாணக் கவர்ச்சியும் மனவெழுச்சியும் மலர்ச்சிபெற்றன.

அப்பொழுது காலை பத்துமணியிருக்கும். கப்பல் எல்லையறியாப் பெருங்கடலை மூர்க்கத்தனமாகக் கிழித்துக்

கொண்டு, விரைந்து சென்றது. கரையிலே, தன் பல லாயிர அலைக்கரங்களை மோதி, நுரை கக்கி ஆர்ப்பரித்த கடற்கன்னி, நடுக்கடலிலே அமைதி நிலவ, அன்னை வடி வாய் விளங்கினாள். நீலவானம் கப்பலை மையப் பொரு ளாகக் கொண்டு, பெருங்குடைபோற் கவிந்திருந்தது. ஆதவன் வான அரங்கிலே, வெண்முகிற் கூட்டஞ் சாமரை யிரட்ட, மெல்ல மெல்லப் பவனிவந்தான். அவனது ஒளி வெள்ளம் கடற்பரப்பை யணைத்து, மனமோகனமான எழிற்காட்சியைப் படைத்தது. எங்கெங்கு நோக்கினும் உருக்கிவிட்ட வெள்ளிக்குழம்பு பெருக்கெடுத்துப் பாய் வது போலவுங் கண்ணாடித் தகடுகளை யாரோ அசைத் தசைத்துச் சால வித்தை காட்டுவது போலவுங் காட்சி கள் தோன்றி மறைந்தன. சிறிது நேரஞ் சென்றது. தினகரன் உச்சிவானை யடைந்துவிட்டான். அவன் கதிர் களிலே வெம்மை மிகுதியாயிற்று. இவ்வளவு நேரமும் மெல்லென வருடி இன்ப சுகஞ் செய்த தென்றல் எங்கோ சென்றொளித்துவிட்டது. தாங்க முடியாத புழுக்கம் வாட்டி வதைத்தது. வானத்திலே ஒட்டிக் கிடந்த பஞ்சனைய வெண்முகில்களெல்லாங் கருக்கொண்டு கார்முகில்க ளாயின. போர்வெறிகொண்ட மதயானைகள் போன்று, ஆகாயமெங்கும் அலைந்து திரிந்தன; ஒன்றோடொன்று மோதிப் பிளிறின. இடிமுழக்கம் காதைச் செவிடுபடுத் தியது. பிரயாணிகள் எல்லோருங் கப்பலிலுள்ள பெரிய மண்டபத்திற் கூடினர். பாட்டுங் கூத்தும் களிப்புமாய் விளங்கிய கப்பலில் மயானப் பேரமைதி காணப்பட்டது. அடுத்த கணம் பெருமழை பொழியத் தொடங்கியது; என்றுங் கண்டறியாத பெரும் புயற்காற்று, மிகுந்த வேகத்தோடு கப்பலைத் தாக்கி உறுமியது. கப்பல் நிலை கொள்ளாமல் வெறிகாரனைப் போல ஆடி அலைந்தது; சுழன்றது. மாலுமிகள் பெருமுயற்சி செய்துங் கப்பலைத் திசை நோக்கிச் செலுத்த முடியவில்லை. அடுத்தகணம் 'படீர்' என்ற பேரோசை கேட்டது. அதைத் தொடர்ந்து 'நறநற' வென்ற சிற்றொலிகள் எழுந்தன. கப்பல் உடைந்து, மூழ்கத் தொடங்கியது.

நான் கடலில் மூழ்கியும் மிதந்துந் தத்தளித்து மரணவேதனை யடைந்தேன். 'இறைவா இதுவும் உன் செயலா' என்று ஏங்கினேன். ஆதரவொன்றைத் தேடிக் கைகள் அலைந்திளைத்தன. அந்த வேளையில் இறைவன் செயலால் ஏதோவொன்று கைபிற்பட்டது. அதனைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டேன். அது காற்றடிக்கப் பட்ட ஓர் இறப்பர் வளையம். எல்லையறியாப் பெருங் கடலிலே, பொங்கிப் புரண்டுவரும் அலைகளுக்குஞ் சீறிச் சினந்துவருஞ் சுருக்களுக்குமூடாக, அந்த வளையத்தி னுதவியால் மிதந்தேன்; அது எங்கு செல்லுமோ, எங்கு சேருமோ என்ற எண்ணத்துடனும் பயங்கர அச்சத் துடனும் மிதந்தேன்.

ஈற்றில் நான் ஒரு கரையில் ஒதுக்கப்பட்டேன். இறைவன் பெருங் கருணையுள்ளவன்; என்னைக் காப் பாற்றிவிட்டான் என்றெண்ணி மகிழ்ந்தேன். மறைந் திருந்த பசியுந் தாகமும் என்னைச் சித்திரவதை செய்தன. வெகு தொலைவிலுள்ள காட்டை யடைந்து ஏதாவது பறித்து உண்பதற்குமுன் என் உயிர் போய்விடுமே, என் றெண்ணி வருந்தினேன். பைத்தியகாரனைப்போலக் கடற்கரையிலே புரண்டுருண்டேன்; மண்ணை வாரி வாரிக் குவித்தேன். என்ன அதிசயம்! மணலுட் புதைந்து கிடந்த தேங்கா யொன்று வெளிப்பட்டது. தென்னைமரம் இல்லாத தீவிலே தேங்காய் கிடைப்பது அதிசயமல்லவா? என்னைத் தன்மடியிலேந்தி, இங்கொதுக்கி என் உயிர் காத்த கடலன்னைதான், நான் உண்பதற்காக எங்கிருந்தோ ஒரு தேங்காயையுங் கொண்டுவந்து வைத்தனளோ! அத் தேங்காயைக் கூரியதொரு கல்லிற் குற்றி, இளநீரைப் பருகினேன். அது தேவாமிர்தம்போல இனித்தது. பின் னர், அதனைக் கல்லிலே மோதி யுடைத்துப் பருப்பை யுண் டேன். என்னுடலில் மாண்டுபோன வலிமை மீண்டது. மெல்ல மெல்லக் காட்டையடைந்து, நெடிதுயர்ந்து நின்ற மரமொன்றிலேறி, நாலாதிசையும் நோக்கினேன். அது ஒரு சிறு தீவென்பதும் அங்கு மனித வாழ்க்கைக்கான எந்தச் சின்னமும் இல்லை யென்பதும் தெரிந்தன. நானே அத்தீவிலுள்ள ஒரேயொரு மனிதன் என்பதை யறிந்த

போது, ஏக சக்கரவர்த்திக்குரிய கம்பீரமும் பெருமையும் என்னை வந்தடைந்தன. அடுத்த கணம் குடிமக்களற்ற சக்கரவர்த்தி உலகெங்கினும் இல்லையன்றோ, எனவுணர்ந்தபோது, என்னால் வாய்விட்டுச் சிரியாமலிருக்க முடியவில்லை. அந்தக் கசப்பான உண்மை புலப்பட்ட போதுதான் தனிமை யென்னும் பயங்கரப் பேரிருள் என்னை மூடித் துன்புறுத்தியது. காட்டு விலங்குகளின் அபாயத்தினின்றுந் தப்பும் வகையறியாது தவித்தேன். அப்பொழுதுதான் கற்கால மனிதன் உணவுக்கும் உடைக்கும் உறைவிடத்துக்குமாக எவ்வளவு துயருழந்திருப்பான் என்பதை அனுமானிக்க முடிந்தது. காட்டிலுள்ள பெருந் தருக்களிற் சில, காயுங் கனியுஞ் சுமந்து நின்றன. முன்னர்க் கண்டு கேட்டறியாத அவை, நல்லனவோ நஞ்சுடையனவோ யாரறிவார்! அவற்றிற் பலவற்றைப் பறித்துச் சுவைத்துண்டேன். காட்டாற்று வெள்ளத்தை அள்ளி அமுதமெனப் பருகினேன். அவ்வேளையில், மேற்கு வானைக் குங்குமக் குழம்பால் வண்ணந் தீட்டிக் கோலஞ் செய்துகொண்டு மாலை வந்தது. மனோகரமான அந்த மாலைப் பொழுதைக் கண்டு களிக்க என்னால் இயலவில்லை.

காரிருளிலே காட்டு விலங்குகளிடந் தப்பி எவ்விதம் உயிர் வாழ்வேன் என்ற வினா, விசுவரூபமெடுத்து என்னை அலைக்கழித்தது. இவ்வித கஷ்ட நிலைகளிலேதான், மனிதனின் பகுத்தறிவு புதியன காண முனைகிறது. பட்டுப் போய் வீழ்ந்துகிடந்த நேரிய தடிகளையும், பற்றிப்படர்ந்து கிடந்த காட்டுக் கொடிகளையுஞ் சேகரித்தேன். தனிமையாக நின்ற உயர்ந்த மரமொன்றைத் தேர்ந்தெடுத்து, அதில் ‘அட்டாளை’ சமைத்தேன். அதன் பின்னர்தான் என்மனம் அமைதியடைந்தது. மாலை மறைந்து, இரவின் பேரிருள் சூழ்வதற்கு முன்னரே, எனது புதிய இல்லத்திற் குடிபுகுந்தேன். அஞ்சன மையை அப்பிவிட்டாலொத்த பயங்கரப் பேரிருளிலே திக்குத்திசை எதுவுமே தெரியவில்லை. கீழே, காட்டில் வனவிலங்குகளின் அட்டகாசம் தொடங்கியது. ஒன்றையொன்று தாக்குவதும் ஒன்றையொன்று பார்த்து உறுமுவதும், சீறுவதும், இரைவதுமாகப் பயங்கரப் பேரொலி சூழ்ந்தது. நான் பாதுகாப்

பான இடத்தைத் தேடிக்கொண்டபோதிலும் பேரச்சத்தால் நடுங்கினேன்; திடுக்கிட்டேன்; வியர்த்தேன்; ஈற்றிலே கண்ணயர்ந்தேன். காலை மலர்ந்தபோது கண் விழித்துப் பார்த்தேன். செம்பருதிக் கோளம் கடல் வயிற்றைக் கிழித்துக்கொண்டு, உலகை ஒளி மயமாக்க வெளிவந்தது. 'காலையிளம் பரிதி வீசுங் கதிர்களிலே, நீலக் கடலோர் நெருப்பெதிரே சேர்மணிபோல்' விளங்கியது. மரத்தை விட்டிறங்கித் தீவைச் சுற்றிப்பார்த்துவரப் புறப்பட்டேன். நேரஞ் செல்லச் செல்லப் பசித்துன்பம் மிகுந்தது. உணவு தேடுவதற்காகக் காட்டினுள் நுழைந்தேன். என்கையிலே கல்லும் பொல்லுமே ஆயுதங்களாக விளங்கின. வெகுசீக்கிரத்தில் ஒரு நீர்ச்சுனையை யடைந்து விட்டேன். ஒரு சிறு மிருகத்தையாவது வேட்டையாடிக் கொல்லவேண்டு மென்ற விருப்புடன் மறைந்திருந்தேன். அப்பொழுது தண்ணீர் குடிக்கவந்த முயலொன்று என் கற்களுக்கு இலக்காகி வீழ்ந்தது. எனது ஆனந்தம் சொல்லுந்தரமன்று. கற்களைக் கொண்டு நெருப்புண்டாக்கி அந்த முயலிறைச்சியை வாட்டியுண்டேன். பசிப்பிணி தணிந்தபோது பல்புல நினைவுகள் படர்ந்தன. மேற்படிப்புக்காகப் பிறநாடு செல்லும் எண்ணத்தில் இடி விழுந்த விதமும் என் பெற்றோரைப் பற்றிய எண்ணமும் என் தாய்நாட்டு நினைவுகளும் ஒன்றன்பின் ஒன்றாக என் மனத்திரையிலே தோன்றி மறைந்தன.

இவ்வாறு பதினைந்து நாட்கள் மனித சஞ்சாரமற்ற அத்தீவிற் கற்கால வாழ்வு வாழ்ந்தேன். பதினைந்து நாட்களும் பதினைந்து யுகங்கள் போல எனக்குத் தோன்றின. ஒருநாட் காலையில் அத்தீவின் அருகாக ஒரு கப்பல் செல்வதைக் கண்டேன். போனவுயிர் மீண்டது போன்ற மகிழ்ச்சிப் பிரவாகத்தோடு கூவினேன்; உடுத்திருந்த துணியை உரிந்து அசைத்துச் சைகை காட்டினேன். இறைவனின் மாபெருங் கருணையால் கப்பல் என்னை நோக்கித் திரும்பியது. கப்பல் மாலுமி என் கதையைக் கேட்டுப் பரிதாபப்பட்டான். அவனது பேருதவியால், மேற்படிப்புப் படித்துப் பட்டம் பதவியோடு திரும்ப வேண்டிய நான், அவை எதுவுமின்றி, என் தாயகத்தை யடைந்தேன்.

# 16

## கலாயோகி ஆநந்தக் குமாரசுவாமி

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்.
2. பிறப்பு, வளர்ப்பு, கல்வி.
3. பதவி.
4. கலைத் தொண்டு.
5. சமூகத் தொண்டு.
6. முடிபு.

ஈழத்திருநாட்டிலே தோன்றி, உலகக் கலையறிஞர் வரிசையிலே நிரந்தர இடம் பெற்றுவிட்ட பெருமைக் குரியவர் கலாயோகி ஆநந்தக் குமாரசுவாமி அவர்களாவர். இந்தியக் கலைகள், உயரிய தத்துவக் கருத்துக்களை விளக்கு வதற்கு எழுந்தவை; இந்தியப் பண்பாட்டின் பிரதிபலிப் பாக அமைந்தவை; இலங்கை, பர்மா, ஜாவா, சுமாத்திரா, பாலி, கம்போடியா, இந்தோசீனு, சீயம் முதலிய கிழக் காசிய நாடுகளனைத்தும் வியாபித்திருப்பவை. இவ் வுண்மைகளை உலகறியச் செய்த பெருமை ஆநந்தக் குமாரசுவாமி அவர்களையே சாரும். இலங்கை, இந்தியக் கலைத்துறை பற்றி ஆராய விரும்பும் ஆர்வம் படைத் தோருக்கு அத்துறையில் அவராற்றிய தொண்டுகள் பேருதவிபுரிகின்றன. இலங்கை, இந்தியக் கலைமலர்ச்சிக்கு அவராற்றிய பணி, இந்துசமய மறுமலர்ச்சிக்குச் சுவாமி விவேகாநந்தரும் இந்திய விடுதலைக்குக் காந்தியடிகளும் ஆற்றிய பணியைப் போன்றதாகும்.

யாழ்ப்பாணத்து மானிப்பாயிலே வாழ்ந்து, வாழை யடி வாழையாகக் கல்வி கேள்விகளிலே சிறந்து, தேசத்

தொண்டுஞ் சமூகப் பணியும் ஆற்றி, பெரும்புகழ் படைத்த ஒரு குடும்பத்திலே தோன்றியவர்கள் ஆநந்தக் குமாரசுவாமி அவர்கள். அவர் தந்தையார் பெயர் சேர் முத்துக்குமாரசாமி என்பது. அவர் அக்காலத்திற் பெரும் புகழ் படைத்த அரசியல் வாதி; தமிழர் பிரதிநிதியாகச் சட்ட நிரூபண சபையி லிருந்தவர். அவர் பன்மொழிப் பண்டிதர்; தமிழ், ஆங்கிலம், சிங்களம், பாளி முதலிய மொழிகளிற் புலமை பெற்றவர். அன்றியும் அவர் சிறந்த கலாவிநோதர்; சத்தியவந்தனை அரிச்சந்திரன் கதையை, ஆங்கிலத்தில் நாடகமாகப் புனைந்து, விக்ரோறியா மகா ராணி முன் நயம்பட விளக்கிப் பாராட்டுப் பெற்றவர். இத்தகைய திறமைகள் பெற்ற தந்தைக்கும் அவரது அருந்துணைவியாகிய ஆங்கில மாதொருத்திக்கும் அருந் தவப் புதல்வராக, ஆநந்தக்குமாரசுவாமி அவர்கள் 1877ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ஆம் நாள் கொழும் பில் அவதரித்தார். ஆநந்தர் எட்டுமாதக் குழந்தையா யிருக்கும்போது, அவரது அன்னை உடனலக் குறைவு காரணமாக, அவருடன் தன் தாயகமான இங்கிலாந்துக் குச் சென்றார். அரசியற் றெட்ர்புகொண்ட தந்தையார் அவர்களுடன் செல்ல இயலாதவராய்த் தமது பிரயா ணத்தைப் பின்போட நேர்ந்தது. ஆனால், இரண்டாண்டு களில் எதிர்பாராத விதமாக அவர் இவ்வுலக வாழ்வை நீத்து இறைவனடி சேர்ந்தார். தந்தையை யிழந்த ஆநந் தர், அன்னையின் அரவணைப்பிலே வளர்ந்து, திறமை யுடன் கல்வி கற்று, இலண்டன் பல்கலைக்கழகத்திலே, நிலநூலிலே கலைமாணிப் (B. Sc.) பட்டம் பெற்றார். மாணுக்கனுயிருந்த காலத்திலேயே கலையார்வம் பெற்று விளங்கிய அவர், தாயின் உதவியாலும் கலைவாணர் பல ரின் தொடர்பாலுங் கலையறிவை வளர்த்துக்கொண்டார்.

அவர் சிறந்த நிலநூற் பண்டிதராக விளங்கியமை யால், அவரை இலங்கையரசினர் 1903ஆம் ஆண்டு, தமது உலோக பரிபாலனத்துறைக்குத் தலைவராக நிய மித்தனர். அக்காலத்தில் அத்துறைபற்றி அரிதின் முயன்று ஆராய்ந்து, அவர் வெளியிட்ட அறிக்கைகள், அவர் மேதாவிலாசத்தைக் காட்டின. அக்கட்டுரைகளின் உயர்

வைக் கண்ட இலண்டன் பல்கலைக்கழகம், அவருக்கு விஞ்ஞானமேதை (D. Sc.) என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

கலைப்பற்று நிறைந்த தந்தைக்கு மகனுன ஆநந்தரின் உள்ளம், இயல்பாகவே கலைத்துறையில் ஈடுபாடு கொண்டது. அவ்வீடுபாடு மேன்மேலும் வளர்ச்சியடைந்து முதிர்வதற்கு, ஈழத்திருநாடு நல்லதொரு பயிற்சிக்களமாக அமைந்தது. உத்தியோக முறையில் இலங்கையின் பலபாகங்களுக்கும் பிரயாணஞ்செய்த அவரை, இலங்கையின் புராதன கால நாகரிகச் சின்னங்கள் கவர்ந்தழைத்தன. இலங்கை மக்கள் சுதந்திர வாழ்க்கை நடத்திய அக்காலத்திலே, பரிவோடுஞ் சிரத்தையோடும் படைத்துப் பேணிக்காத்த சிற்பவடிவங்கள், மண்மூடிக் கிடப்பதை அவர் கண்டார்; சிற்ப வனப்புடைய பௌத்த விகாரங்களுந் தாதுகோபங்களுங் கோவில்களும் அரமனைகளுஞ் சிதிலமடைந்து கிடப்பதை உற்றுநோக்கினுர்; குகைகளிலுஞ் சுவர்களிலுங் காணப்பட்ட வண்ண ஓவியங்கள், நிறம் மங்காது திகழ்வதைக் கண்டு மனம்பூரித்தார். அவரது மனத்தகத்து அடங்கிக்கிடந்த கலையார்வம் ஊற்றெடுத்துப் பெருகத் தொடங்கியது. பதவிப்பற்று மனத்தை விட்டகல, கலைப்பற்று அங்கே குடிகொண்டது. பூர்வீக இல்ங்கையின் கலைச் சிறப்புக்களைப் பற்றியும் அக்காலச் சமய, சமூக அமைப்பு முறைகளைப் பற்றியும் ஆராய்ந்தறியத் தொடங்கினுர். கண்டியரசர் காலத்திலும் அதற்கு முன்னும் நாட்டிலே தோன்றிய அபூர்வ கலா சிருட்டிகளின் இயல்புகளையும் இலக்கணங்களையும் பற்றிய விபரங்களைச் சேகரித்தார். அவைகளெல்லாவற்றையும் உலகறியச் செய்யவேண்டுமென்னும் பேரவா அவரிடத்துதித்தது.

1907ஆம் ஆண்டு, பதவி துறந்து, இங்கிலாந்து சென்ற அவர், தாம் சேகரித்த செய்திகளை ஆதாரமாகக் கொண்டு 'இடைக்காலச் சிங்களக் கலைகள்' என்னும் பெயரிய நூலை வெளியிட்டார். இந்நூல் இடைக்கால இலங்கை மக்களின் கலையுணர்வை மாத்திரமன்றி,

ஆநந்தரின் கலைத்திறமையையும் உலகுக்கு அறிமுகப் படுத்தியது. அதன்பின் 'இந்தியச் சிற்பி' என்னும் நூலையும் 'இந்தியக் கலைகளின் நோக்கம்' என்னுங் கட்டுரையையும் எழுதி வெளியிட்டார், இவ்விரண்டும் உலகக் கலையரங்கிலே இந்தியக் கலைகள் சிறப்புஞ் செல்வாக்கும் பெறுதற்குத் துணைபுரிந்தன; அன்றியும் இந்தியாவில் ஒப்பற்ற கலைமலர்ச்சி ஏற்படுதற்கும் உதவியளித்தன. அதனால் 1910ஆம் ஆண்டில் அலகபாத்தில் நடந்த அகிலபாரதக் காட்சியின் கலைப்பிரிவிற்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். அக்காலத்தில் இந்தியா முழுவதுஞ் சுற்றுப்பிரயாணஞ் செய்து, இந்தியக்கலைகளின் பல பிரிவுகள் பற்றியும் ஆராய்ச்சி நடத்தினார். அவரது ஆராய்ச்சி முடிபுகள் கலையுலகிலே பரவியிருந்த இரு தவறான அபிப்பிராயங்களை மாற்றின. புத்தர் சிலை கிரேக்க சிற்ப முறையை யொட்டி எழுந்தது என்ற அபிப்பிராயம் மேலைநாட்டிற் பரவியிருந்தது. அன்றியும் இந்துமதச் சார்புள்ள இராஜபுத்திர ஓவியங்களுக்கு மொகலாய ஓவியங்களே வித்தாயமைந்தன என்ற கருத்தும் அக்காலத்தில் நிலவி வந்தது. இவ்விரண்டினையுந் தக்க சான்று காட்டி மறுத்து அவர் வெளியிட்ட நூல்கள், அவரது புகழை அகிலமெங்கும் பரவச் செய்தன. அதனால், அமெரிக்கர், 1919ஆம் ஆண்டில் போஸ்டன் நகரத்துக் கலைப்பொருட் காட்சி நிலயத்தின் கீழைத்தேயக் கலைப்பொருட்பகுதிக்குத் தலைவராக அவரை நியமித்தனர். 'சிவ நடனம்' என்னும் ஆங்கில நூலின்மூலம் நடராஜ வடிவத்தின் கலைச் சிறப்பையுந் தத்துவ விளக்கத்தையும் உலகறியச் செய்தார். இதுவே அவர் இந்தியக்கலைத் துறைக்குச் செய்த தொண்டுகளனைத்துக்கும் முடிமணியாக விளங்குவது.

ஆநந்தக் குமாரசுவாமி அவர்கள் கலையறிஞராகப் பெரும் புகழ் பெற்றதோடு, சீர்திருத்தப் பணியாளராகவும் விளங்கி, தாம் பிறந்த பொன்னாட்டுக்கு அரிய பல சேவைகள் செய்தார். அவர் இலங்கையிற் பதவி வகித்தகாலத்திலே, 'இலங்கைச் சமூக சீர்திருத்த சபை' என்னும் பெயருடைய கழக மொன்றினை நிறுவினார். இச்சபையின் ஆதரவில் வெளிவந்த 'இலங்கைத் தேசிய

சஞ்சிகை'யின் ஆசிரிய பீடத்திலமர்ந்து அரிய பல சமூக சீர்திருத்தக் கட்டுரைகள் எழுதினர். அக்கட்டுரைகள் இலங்கை மக்கள் தம் பண்டைப் பெருமையை யுணர்ந்து, தமது பண்பாட்டுக்கமைந்த வாழ்க்கையை நடத்தும்படி தூண்டின; தேசியவுணர்வுக்கு வித்திட்டன. அக்காலத்திலே யாழ்ப்பாணத்திலே தமிழ்ச் சான்றோராக விளங்கியவர் இருவர். ஒருவர் மனேஜர் கைலாசபிள்ளை அவர்கள்; மற்றவர் குமாரசுவாமிப்புலவர் அவர்கள். அவ்விருவரது நன் முயற்சியால் யாழ்ப்பாணத்திலே தமிழ்ச் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. சங்க ஆரம்ப விழாவிற்கு ஆநந்தக்குமாரசுவாமி அவர்களும் சமுகமளித்திருந்தார்கள். அவரைக் கௌரவிக்கும் பொருட்டு, மனேஜர் கைலாசபிள்ளை அவர்கள், தமிழ்ச் சங்கச் சார்பாக, அவருக்கு 'வித்தியா விநோதன்' என்னும் பட்டத்தை வழங்கினர்கள்.

சிறந்த 'வித்தியா விநோதனும்' சமூகப் பணியாளனும் உலகக் கலையறிஞனும் ஈழத்திருநாட்டின் தவப் புதல்வனுமாகிய கலாயோகி ஆநந்தக் குமாரசுவாமி அவர்கள், 1947ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார். அச் செய்தியையறிந்த கலையுலகம் கண்ணீருகுத்தது. கலாதேவியும் தன்னரும் புதல்வனை இழந்து சோர்வுற்ருள்.

# 17

## நாட்டுப் பாடல்கள்

குறிப்புக்கள் :

1. ஆரம்பம் : நாட்டுப் பாடல்கள் எளிமை, உணர்ச்சி நிறைந்த கலைப்படைப்புக்கள்.
2. நாட்டுப் பாடல்களின் இயல்புகள்.
3. நாட்டுப் பாடல்களின் வகைகள்.
4. நாட்டுப் பாடல்களின் சில சிறப்புக்களை உதாரணத் துடன் காட்டல்.
5. நாட்டுப் பாடல்களின் அமைப்பு முறை.
6. முடிபு.

கிராமங்கள் இயற்கைத்தேவி எழுந்தருளியிருக்கும் கோயில்களென்றால், கிராம மக்கள் அத் தேவியை வழி படும் கலைஞர்கள். அவர்கள் எளிமை வாழ்வு வாழ்பவர் கள்; உழைப்பொன்றே பெருஞ் செல்வமெனக் கருது பவர்கள்; இயற்கையாகவே கூரியமதியும் சமத்காரமான பேச்சுங் கொண்டவர்கள். இயற்கையறிவுங் கலையுணர் வுங் கொண்ட அவர்களின் உள்ளத்திலே, பலபல காரணங்களினால் உணர்ச்சிகள் தோன்றிக் கரைபுரண் டெழும்போது, அவை பாடல்களாக வெளிவருகின்றன. அவை ஏடும் எழுத்தாணியுங் கொண்டு, எழுதப்படுவன வல்ல; பரம்பரை பரம்பரையாகச் செவிவழியாகக் கேட் கப்பட்டு வாழ்பவை. இலக்கண வரம்புக் குட்பட்டுச் சொற்சாலங்காட்டி மயக்குவனவல்ல; பாமர மக்களின் உள்ளத்துணர்ச்சியை உயிராகக் கொண்டு, கருத்தைத் தெற்றென விளக்கும் எளிமையோடு கூடி நடப்பவை. நாட்டு மக்களின் உள்ளத்திலிருந்து வெளிப்படுவன

வாகையால், அவ்வ நாட்டுப் பாடல்களெனப் பெயர் பெறுகின்றன.

நாகரிகம் மேம்பட்ட சமுதாயத்தினர், இசையிலக்கண அமைவோடு கூடிய சங்கீதத்தினைப் பண்பட்டதொரு கலையாகப் போற்றுவதுபோல, நாட்டுப் பாடல்களையும் போற்றிக் காக்கின்றனர். ஆதிமனிதன் தன் மன வெழுச்சிகளை வெளிப்படுத்தி, இன்பம் பெறுதற்காக ஆடலையும் அதற்கேற்ற பாடலையுங் கருவிகளாகக் கொண்டான். எழுத்தும் ஏடும் தோன்றுவதற்கு முன்னரே உண்டான அப் பாடல்கள், வாய்முறையாக எங்கும் பரவலாயின. நாகரிகம் வளர்ந்தபோது புலவர்களும் இசைவல்லோரும் அவற்றைப் பின்பற்றி, இசையமைப்புந் தாளக்கட்டுங் கற்பனைச் செறிவுஞ் சொல் நயமுங் கொண்ட பாடல்களை இயற்றினர்; வரையறை வாய்ந்த இலக்கண நெறிகண்டு, உயரிய சங்கீதக் கலையை வளர்த்தனர். எனவே, நாட்டுப் பாடல்கள், சமுதாயத்தின் மிக மூத்ததொரு கலையாவதோடு, பண்பட்ட இசை வளர்ச்சிக்கு மூலாதாரமாகவும் விளங்குகின்றன. நாட்டுப் பாடல்கள் யாவும் பொதுமக்களின் இதயப்போக்கு, பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், ஆசைகள் என்பனவற்றை அளவிடக்கூடிய அளவுகோல்களாக விளங்குகின்றன. எனவே, ஒரு நாட்டின் பண்பாட்டை யறிவதற்கு நாட்டுப் பாடல்களைப் போன்ற உயரிய கருவி வேறில்லை. நாட்டுப் பாடல்களின் உன்னதமான ஆன்ம தத்துவம், சிருட்டித் தத்துவம் என்பன, வியக்கத்தக்க கற்பனை வளத்தோடும் உவமைச் சிறப்போடும் வெளிப்படுதலைக் காணல்முடியும். எளிமையோடு கூடிய அவற்றை விளங்கிக்கொள்வதற்கு உரையாசிரியர் எவருந் தேவையில்லை. இவ்வகை இயல்புகள் எல்லாவற்றினும் மேலாக, உலக மக்களனைவரின் உள்ளமும் ஒரேவகையில், இன்பத்திலுந் துன்பத்திலும் இயங்குகின்றன என்பதை நாடோடிப் பாடல்கள் உணர்த்துகின்றன.

நாடோடிப் பாடல்கள், சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு வெளிப்படும் உணர்ச்சிகளைப் பொறுத்துப் பலவகையினவாகப் பிரிக்கப்படுகின்றன. உயரிய கருத்துக்களுந் தத்து

வங்களுங் கொண்டனவாய், பாமரர் அல்லாத சிறிது நாகரிகம் படைத்தோரிடையே வழங்கிவரும் பாடல்கள் ஒருவகையின. விழாக்காலங்களில் ஆனந்தக்களிப்போடு பெண்கள் வாயினின்றுஞ் சமயோசிதமாகப் பிறக்கும் பாடல்கள் பலவுண்டு. கதைகளையுஞ் சரித்திர சம்பந்தமான வீரர்களின் தீரச்செயல்களையும் அடிப்படையாகக் கொண்டு, உணர்ச்சிப் பெருக்கோடு பாடப்படுவன இன்னொருவகையின. தாய்மார் அருமருந்தன்ன தமது பச்சிளங் குழந்தைகளைக் கண்வளரச் செய்வதற்காக, மெல்லிசையோடு பாடுந் தாலாட்டுப் பாடல்கள் பிறிதொருவகையின. காதற்சுவையும் நகைச்சுவையும் உயிரோட்டமாக மிளிர, நெஞ்சையள்ளுந் திறங்கொண்டனவாய் பாடல்களும் வழக்கிலுள. பொழுதுபோக்குக்காகவுந் தெய்வ வழிபாட்டுக்காகவும் பாடப்படும் பாடல்கள் அநேகம். கும்மி, கோலாட்டம், அம்மானை, காவடிச் சிந்து, மாரியம்மன் பாட்டு, வில்லுப்பாட்டு என்பன அவ்வகையைச் சேர்ந்த நாட்டுப் பாடல்கள். இவை தவிர இடையர், குறவர், மீனவர், வண்டிக்காரர் முதலிய தொழிலாளர் தொழில்களைச் செய்யும்போது சோர்வு தோன்றுவகையிற் பாடப்படுவன வேறொருவகையின. இறந்தோரை நினைத்து நெஞ்சில் நிறைந்த துயரத்தை வெளிப்படுத்தும் முறையிலே, கிராமப் பெண்கள் கூட்டமாகச் சேர்ந்து புலம்பும் ஒப்பாரியும் நாட்டுப் பாடல்களில் ஒரு தனிவகையின.

மருத நிலத்தைச் சேர்ந்த கிராமங்களிலே, பரந்த கழனிகளிலே வேலை நடைபெறும்போது உழவர், உழத்தியர் வாயினின்றும் வெளிவரும் பாடல்களிலே காதல் கொஞ்சும்; நகைச்சுவை விஞ்சும். அது ஐப்பசி மாதக் கடைசிப்பகுதி; வயல் வரம்பை மேவி நிற்கும் வெள்ளக் காட்டின்மேலே, பசிய நெற்பயிர்கள் வாடைக்காற்றிலே அசைந்து நிற்கின்றன. அங்கே பெண்கள் பலரும் ஆண்கள் சிலருமாகக் களையெடுக்கின்றனர். அவர்களோடு சேர்ந்துழைக்காது, வயல் வரம்பிலே நின்று, பெண்ணொருத்தியைச் சுட்டி வேடிக்கை செய்கிறான் கட்டிளங் காளை ஒருவன்; அவன் பெயர் பொன்னுச்சாமி. அவன்,

"கண்ணாடி வளையல் போட்டு
களையெடுக்க வந்த புள்ளே;
கண்ணாடி மின்னலிலே—உன்
களையே டேப்புப் பிந்துதடி" என்று பாடுகிறான்.

உடனே அவள்,

"வாய்க்கால் வரம்புச்சாமி, வயற்காட்டுப் பொன்னுச்சாமி,
களையெடுக்கும் பெண்களுக்குக் காவலுக்கு வந்தசாமி"

என்று பதில் சொல்லுகிறாள். அந்தப் பதிலிலே கேலியும் கிண்டலும் இழையோடிக் கிடக்கின்றன. இதனோடு அறுவடைக் காட்சி ஒன்றினையுங் காணல் நன்று. நெற்பயிர் குலைசுமந்து, கல்வியில் வல்ல சான்றோர்போலத் தலை வணங்கிக் கிடக்கிறது. கணபதியையும் முருகனையும் வணங்கி, அரிவாள் எடுத்து அரிவி வெட்டத் தொடங்கி விட்டனர் உழவர். அவர்களில் ஒருவன்,

"மட்டு ருக்காலே அரிவாளைச் செய்து
மாவி லங்கம்பிடி தன்னி லிறுக்கி"

என்று குரல் கொடுக்கிறான். உடனே மற்றவர்கள் எல்லாருஞ் சேர்ந்து அவ்விரு கண்ணிகளையும் பாடுகிறார்கள். தொடர்ந்து "தெந்தன தெந்தன தென்ன" என்ற தாள்க்கட்டு ஒரே குரலில் ஒலிக்கிறது.

தாலாட்டுப் பாடல்கள் கிராமத்துக்குக் கிராமம் வேறுபட்டுப் பல்பல பொருளுடையனவாய்க் காணப் படுகின்றன. தாய் ஒருத்தி, ஊரார் தன்னை மலடியென ஏசாமல், வந்துதித்த தன்மகனைத் தாலாட்டுகிறாள்:

"மலடி மலடியென்று மாநிலத்தோர் ஏசாமல்
மலடிக் கொருகுழந்தை மாயவனார் தந்தபிச்சை
இருளி இருளியென்று இருநிலத்தோ ரேசாமல்
இருளிக் கொருகுழந்தை ஈஸ்வரனார் தந்தபிச்சை"

என்று தன்னுள்ளத் துணர்ச்சிகளை யெல்லாஞ் சேர்த்துப் பாடுகிறாள். கிராமங்களிலே திருமண வைபவங்கள் மிகச் சிறப்பாக நடைபெறுவது வழக்கம். அவ்வைபவங் களில் மணமக்களுக்கு அறுகரிசி இடுவது குறிப்பிடத்தக்க தொன்று. அச் சம்பவத்தை யொட்டி,

"அறுகரிசி தானிடுங்கோ அதற்குரிய பேர்களெல்லாம்
வாரி யிறையுங்கோ கிளிமொழியாள் பைங்கிளிக்கு
ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி
மூங்கில்போல் சுற்றம் மூசியாமல் வாழ்ந்திடுங்கோ"

என்று, மனம் மிக மகிழப் பாடுங்குரல் கேட்கிறது. ஒரு வீட்டில் அவ்வீட்டுத் தலைவன் இறந்துவிட, ஊர்ப் பெண்டிரனைவரும் அங்கு கூடி, ஒப்பாரி சொல்லிப் புலம்புகின்றனர். அவர்களுள் ஒருத்தியின் குரல் எடுப்பாக ஒலிக்கிறது:

"பொழுதாய் இலங்குவாயே—நீயும்
பொழுதுபட்டால் மங்காயே
நிலவாய் இலங்குவாயே—நீயும்
நிலவுபட்டால் மங்காயே."

இவ்வித நாட்டுப்பாடல்கள் இலக்கியத் துறையிற் பெருமளவு ஆதிக்கம் பெற்றுள்ளன. புலவர்களும் இசை வல்லோர்களும் பக்தர்களும் நாட்டுப் பாடல் இசை முறையைத் தழுவிப் பலபல பாடல்களை இயற்றியுள்ளார்கள். சிலப்பதிகாரத்திலே காணப்படும் வரிப்பாடல்களும் புலவுக்குரவைகளும் நாட்டுப் பாடல்களைத் தழுவியனவே; மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகத் தேனில் வரும் அம்மானையும் அத்தகையதே. கோபால கிருஷ்ண பாரதியாரும் சுப்பிரமணிய பாரதியாரும் நாட்டுப்பாடல்களிற் பெரும்பான்மை வழங்கிவரும் சிந்துக்களாற் கவரப்பட்டு, அவ்விசையமைப்பைப் பின்பற்றினர். சுருங்கக்கூறின் வாய்மொழி இலக்கியமாகிய நாட்டுப் பாடல்கள், பாமரமக்களின் உணர்ச்சியிலுதித்து எளிமையோடும் இசையமைப்போடுந் தாளவறுதியோடுங் கூடி உலவுகின்றன; அன்றியும் இலக்கணநுட்பங்கொண்ட இசைக் கலைவளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைந்துள்ளன. எனவே இத்தகைய சிறப்புடைய நாட்டுப் பாடல்களைப் பேணிக் காப்பது கலையார்வங் கொண்டவர்கள் அனைவரதும் பெருங் கடனாகும்.

N. Kengatharam
G.C.E O/L 1977

# 18

## "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்.
2. எண் இன்னதென்பதும் எழுத்து இன்னதென்பதும்.
3. எண்ணும் எழுத்தும் கண்ணோடொப்பிடப்படுங் காரணம்.
4. மனிதன் பூரண வளர்ச்சி யடைதற்கு எண்ணும் எழுத்தும் வேண்டும்.
5. எண் அறிவை வளர்க்கும்; எழுத்து மனத்தை வளர்க்கும்.
6. இவையிரண்டினாலும் உலகம் ஒரு குலமாகும்.
7. முடிபு : இவையிரண்டினதும் இன்றைய நிலை.

சிந்தனையாற்றலே மனிதனிடத்துள்ள மாபெருஞ் சக்தியாகும். அதனால், அவன் விலங்கு நிலையினின்றும் உயர்ந்து நாகரிகமடைந்தான். ஆதிகால விலங்கினத்துக்கும் இன்றுள்ள விலங்கினத்துக்குமிடையில் வாழ்க்கை முறையிலே குறிப்பிடத்தக்க மாற்றமெதுவும் நிகழவில்லை. ஆயின், அன்றுள்ள மனிதனுக்கும் இன்றுள்ள மனிதனுக்குமிடையே, வாழ்க்கைமுறையிலும் மனப்போக்கிலும் தெளிவான பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. பன்னூற்றாண்டு காலமாக நிகழ்ந்துவந்த இம் மாற்றங்களே, மனிதன் வளர்ச்சியடைந்துள்ளான் என்ற உண்மையைக்

காட்டுவன. சிந்தனையாற்றல் இல்லையாயின் மனிதன், இன்று விலங்குகளோடொப்பக் காடுகளிலுங் குகைகளிலும் வாழ்ந்திருப்பான்; அவனுக்கு அகிலமெல்லாம் கட்டியாளும் எண்ணமும் பிறந்திருக்காது.

அன்று குகைகளைத் தனது உறையுளாகக் கொண்ட அவன், சிந்தனைத் திறனால் வீடுகட்டி வாழத் தொடங்கினான். அம்முயற்சியின் விரிவுபட்ட தன்மை கணிதமாகி முளைவிடத் தொடங்கியது. பச்சை யிறைச்சியை யுண்டு வாழ்ந்த அவன், நெருப்பைக் கண்டறிந்து உணவைப் பக்குவப்படுத்தத் தொடங்கினான். அம்முயற்சியில் விஞ்ஞானம் வேர்விடத் தொடங்கியது; காலகதியிலே பல கிளைவிட்டு வளர்ந்தது. இவையிரண்டும் இன்று அறிவியலெனும் பெருந்தருக்களாய் வளர்ந்து காட்சியளிக்கின்றன. அறிவியலை எண் எனக் குறிப்பிடுவர் பண்டைச் சான்றோர். உண்வுண்டு பசிக்கொடுமை மாய்ந்தபின்னர், ஆதிமனிதர் கூட்டங்கூட்டமாகச் சேர்ந்து ஆடியும் பாடியும் களித்தனர். அவர்கள் பாடலிலே இசை, இலக்கியம் முதலிய கலைகள் அரும்பத் தொடங்கின. அவர்களது ஆடலிலே நாட்டியமென்னுங் கலை மலரத் தொடங்கியது. காலப்போக்கிலே சிந்தனையாற்றலின் தொழிற்பாட்டால் கலைகள் ஒன்று பலவாய்க் கிளைத்து வளரலாயின. இக்கலைகளனைத்தையுந் தமிழறிஞர் எழுத்து எனக் குறிப்பிடுவர். அறிவியலாகிய எண்ணுங் கலையியலாகிய எழுத்துஞ் சேர்ந்ததே கல்வி.

பொறிகளனைத்தினுங் கண்போற் சிறந்தது பிறிதில்லை. கண்ணின் பண்பு காட்சியாகும். காட்சியினாலேயே அறிவின் ஒருபகுதி பெறப்படுகிறது. அறிவே மனவிருள் மாய்த்து, மனிதனை உயர்வடையச் செய்ய வல்லது. எனவே, அறிவைப் பெறுதற்குக் காரணமான கண் உறுப்பனைத்தினுஞ் சிறந்ததாகப் போற்றப்படுகிறது. ஆயின் கண்ணினால் மாத்திரங் கண்டறியமுடியாத அறிவுத்திரள் உலகனைத்தும் வியாபித்துக்கிடக்கிறது. அதனையறிதற்குக் கல்வியாகிய கண் வேண்டும்; அஃதாவது

எண்ணும் எழுத்துமாகிய இருகண்கள் வேண்டும். எனவே எண்ணையும் எழுத்தையுஞ் சிறப்புடைய கண்ணே டொப்பிட்டு, "எண்ணும் எழுத்துங் கண்ணெனத் தகும்" என்று கூறினர், அறிஞர். இது,

> "எண்ணென்ப வேனை எழுத்தென்ப இவ்விரண்டும்
> கண்ணென்ப வாழு முயிர்க்கு"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் குறள்மணியினின்றும் பிறந்த முதுமொழியாகும். இவையிரண்டிலுமுள்ள உவமைகளிலிருந்து, எண்ணும் எழுத்துமே உலக அறிவுத் திரளினை அறிதற்கேற்ற கருவிகளென்பதை உணரலாம். இவையிரண்டினது கூட்டுறவே கல்வியென்னும் பெரு நிதியமாகக் கருதப்படுகிறது.

கல்வி, மனிதன் பூரண வளர்ச்சியடைவதற்குப் பெருந்துணையாக விளங்குவது. அதனாலேயே அது தேடற்கரிய செல்வமெனவும் ஒப்புயர்வற்ற நண்பனென வும் போற்றப்படுகிறது. மனிதன் உலகியலை அறிதற்கும் இயற்கை யாற்றலை அடக்கியாண்டு, தனக்கும் பிறர்க்கும் பயனளிக்கும் வகையை அறிதற்கும் அறிவு வளர்ச்சி பெற்றவனாதல் வேண்டும்; அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற நற்குணங்கள் குடியிருக் கும் மனம்பெற்று, உலகத்தோ டொட்ட ஒழுகுதற்கும் ஆன்ம ஏற்றம் பெறுதற்கும் மன வளர்ச்சியுடைய னாதல் வேண்டும். அறிவு, மனம் என்னும் இரண்டினதும் ஒருமித்த வளர்ச்சியே மனிதனது பூரண வளர்ச்சியெனக் கொள்ளத்தக்கது. ஒன்றைப் புறக்கணித்து ஒன்றைப் போற்றுவதால் உண்மையான வளர்ச்சி ஏற்படாது. உடலியல்புக்கேற்ற பயிற்சிகள்மூலம் உடல் வலுவும் வனப்பும் வாய்ந்து விளங்கினும், அறிவும் மனமுந் தக்க படி வளராதுவிடின் பயனேதுமில்லை. மனிதனது அறிவு வளர்ச்சிக்கு அறிவியல் சம்பந்தமான கல்வி துணை புரிகிறது. பலதிறப்பட்ட கணிதமுறைகளும் இரசாயனம், பௌதிகம், உயிரினவியல், பொறியியல் போன்றவையும் அறிவியலுள் அடங்குகின்றன. இவை எண்ணென்னுஞ்

சொல்லாற் குறிக்கப்பட்டு, மனிதனது புறவாழ்வு சிறப் புறுதற்குப் பெருந் துணைபுரிகின்றன. அறிவு வளர்ந்து மனம் வளராவிடில், பண்பாடு சிறிதுமற்ற, வல்லவனான மனிதனே காணப்படுவான்; மன வளர்ச்சியின் பயன்க ளான அறிவுணர்ச்சியும் அருளுணர்ச்சியும் இல்லாத வனாய், மிருகப் பண்புள்ளவனாக, பயங்கரமான பிராணி யாய் விளங்குவான். எனவே, மன வளர்ச்சியே மனி தனை மனிதனாக்குகிறது என்று கூறினும் மிகையாகாது. தத்துவம், இலக்கியம், இசை, நாடகம், ஓவியம், சிற்பம் போன்ற கலைகள் மன வளர்ச்சிக்குரியன. இவைகள் கலைகள் எனவும் கவின்கலைகள் எனவும் அழைக்கப்படு வன. இவைகள் எழுத்து என்னுஞ் சொல்லாற் குறிக் கப்பட்டு, மனிதனது அகவாழ்வு சிறப்படைதற்குத் துணை புரிகின்றன. எனவே, எண்ணினாலும் எழுத்தினாலும் மனிதன் பூரண வளர்ச்சிபெறல் முடிகிறது.

அறிவியல் வளர்ச்சியினால், இன்று உலகில் நிகழ்ந் துள்ள விந்தைகள் எண்ணிலடங்கா. மனிதன் மண்ணை யும் மாக்கடலையும் வெற்றிகொண்டு பயணஞ் செய்வ தோடமையாது, விண்வெளியையும் புறங்கண்டு, பிற கோள்களுக்குச் செல்வதற்கும் முயன்றுவிட்டான். நோய்த் துன்பத்தைத் தெய்வத்தின் சீற்றமென நம்பிய மனிதன், இன்று அதனை வெற்றிகாணும் அளவுக்கு மருத்துவத் துறையை வளர்த்துவிட்டான். அவன் ஒன்றினும் ஒன்று ஆற்றல் மிக்கதான பல சக்திகளைக் கண்டறிந்தான்; அதனால் வாழ்க்கைப் பொருள்களை வெகு வேகமாக உற்பத்தி செய்யக்கூடிய பல இயந்திரங்களைப் பெருக்கி விட்டான். இவ்வாறு மனித வாழ்க்கையின் புறத்துறை யனைத்தினும் அறிவியல்—எண்—நல்லதொரு சேவகனாய், நண்பனாய்த் துணைபுரிகிறது. கோவில்களை மையப்பொரு ளாகக் கொண்டே, பண்டுதொட்டுத் தமிழ்நாட்டிற் கலைகள் பலவும் வளர்ந்துள்ளன. வானுற நிமிர்ந்துநிற்கும் கோயிற் கோபுரங்கள் சிற்பக்கலையின் உயர்ச்சிக்குச் சான்று பகர்கின்றன. கோயிலும் பிரகாரங்களும் உயிர்த் துடிப்புள்ள சிற்ப கூடங்களாகக் காட்சி தருகின்றன.

கோயிற் சுவர்களும் விதானங்களும் வண்ண வண்ண ஓவியங்கள் நிறைந்த சித்திரசாலையாக விளங்குகின்றன. இசையும் நாட்டியமும் இணைபிரியாது கோயிலிலே வளர்ந்தன. இங்ஙனம் கவின்கலைகள் யாவுஞ் சங்கமிக்கும் இடமாகக் கோயில்கள் விளங்கியதனால் அக் கலைகளுந் தெய்வீகக் கலைகளாக மதிக்கப்பட்டன. அக் கவின் கலைகளினூடாகவும் பத்திப் பேரொளி சுடர்விட்டுப் பிரகாசித்தது. இப் பேரொளி ஆன்ம ஞானமாக மலர்ந்தது. அன்றியும் காலத்தால் நலிவடையாத உலக இலக்கியங்களும் அறநூல்களுந் தத்துவக் கோட்பாடுகளும் மன வளர்ச்சிக்காக எழுந்தனவே. இவையனைத்துங் கலையென்னும் பிரிவிலடங்குவன. இவ்வாறு கலைகள்—எழுத்து—மனிதனது அகவளர்ச்சிக்குப் பெருந் துணை புரிகின்றன.

உலகம் ஒரு குலமாதல் வேண்டும் என்னுங் குறிக்கோளே, எண்ணென்னும் அறிவியலாலும் எழுத்தென்னுங் கலைகளாலுஞ் சாதிக்கப்பட வேண்டியது. ஒரூரார் மற்றோர் ஊராரையும் ஒரு நாட்டார் மற்றொரு நாட்டாரையும் எதிர்த்துப் போராடி வாழ்ந்த கதையைச் சரித்திரம் பேசுகிறது. ஆயின், இன்று அறிவியல், கலை என்பனவற்றின் வளர்ச்சியாலே தேசத்தலைவர்கள் பேதங்களை மறந்து ஓர் அரங்கிற் சந்தித்துப் பேசும் நிலை உருவாகியுள்ளது. இது ஒருலகக் கொள்கையின் வித்தெனவே கருதத்தக்கது. எண்ணும் எழுத்தும் பேரறிஞர் பலர்கண்ட ஒருலகக் கனவை நனவாக்க வழியமைத்திருக்கின்றன.

> "யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
> சாந்துணையுங் கல்லாத வாறு"

என்ற வள்ளுவர் கருத்தை, எண்ணும் எழுத்தும் பிணைந்த கல்வி தெளிவாகக் காட்டுகிறது.

கல்வி, எண், எழுத்து என இருவகைப்படுமென்றும் இரண்டும், இரண்டு கண்களெனப் போற்றப்படவேண்டியதென்றுங் கண்டோம். ஆயின், இன்று எண்ணுக்

குரிய பெருமதிப்பு எழுத்திற்கில்லை; அறிவியலைக் கற்றலி லுள்ள ஆர்வம் கலைகளைக் கற்றலிலில்லை. கல்லூரிகளி லும் பல்கலைக்கழகங்களிலும் அறிவியற் பாடங்களைக் கற்க விரும்புவோர் தொகை பெரிதாகவுங் கலைப்பாடங் களைக் கற்க விரும்புவோர் தொகை சிறிதாகவுங் காணப் படுகிறது. இந்நிலை தொழிலும் வருவாயுந் தேடும் ஆர் வத்தால் எழுந்ததாகும்; வாழ்க்கையின் புறத்துறையி லேற்பட்ட அபிமானத்தால் விளைந்ததாகும். இந்நிலை விரும்பத்தக்கதன்று. இது ஒரு கண்ணைக் குருடாக்கி, மற் றொரு கண்ணுக்கு ஒளியேற்றலோ டொக்கும். இரு கண் களையும் பேணிக் காத்தலே அறிவுடைமை. எனவே, அறிவியல் கற்போர் கலைத்துறையினும், கலைத்துறை கற் போர் அறிவியலிலும் ஓரளவு தேர்ச்சிபெறல் வேண்டும். அப்போதுதான் அவர்கள் எண்ணையும் எழுத்தையுங் கற்றுப் பூரண வாழ்வு வாழ்பவர்களாவார்கள்.

N. Suriyakumari

Suriyakumari

# 19

## பெண்களும் சமூகத்தொண்டும்

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்: பெண்கள் அன்றும் இடைக்காலத்தும் இன்றும்.
2. கிராமங்களின் இயல்பு; கிராமச் சீர்திருத்தத்துக்குப் பெண்களே தக்கவர்கள் என்பது.
3. கல்வித்துறையிற் பெண்கள் தொண்டு.
4. பொருளாதாரத்துறையிற் பெண்கள் தொண்டு.
5. சுகாதாரத்துறையிற் பெண்கள் தொண்டு.
6. முடிபு.

பண்டைநாளிலே சமூகம் பெண்களுக்குப் பெரு மதிப்பளித்தது. ஔவையார், காக்கைபாடினியார், நச் செள்ளையார், ஆதிமந்தியார் போன்ற பெண்மணிகள் கல்வி, அறிவு, ஒழுக்கங்களிற் சிறந்த சான்றோராக மதிக்கப்பட்டு வந்தனர். இதனை இலக்கியச் சான்றுகள் கொண்டுணரலாம். ஆயின், பெண்களின் பெருமையைப் போற்றிய அங்கிலை, இடைக்காலத்தில் மாறுதலடைந்தது. "பெண்புத்தி பின்புத்தி" என்றும், "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு" என்றுங் கூறுமளவுக்குத் தாய்க்குலம் ஒதுக்கப்பட்டு அடிமைகள்போல ஆளப்பட்டது. ஆனல் இந்த நவயுகத்திலே,

"பட்டங்கள் ஆள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்தவந்தோம்
எட்டு மறிவினில் ஆணுக்கிங் கேபெண்
இளைப்பில்லைக் காணென்று கும்மியடி"

என்று பாரதியார் பாடியாங்கு, பெண்கள் அறிவுத் துறையிலுங் கலைத்துறையிலுஞ் சமூகத்துறையிலும் ஆண்களோடு சரிநிகர் சமமாக உழைக்கத் தொடங்கி விட்டனர். அன்றியும், கிராம மக்களின் முன்னேற்றத்திற்கும் அதனால் நாடுகள் மேனிலையடைதற்கும் உறுதுணையாக விளங்கக்கூடியவர்கள் பெண்களே என்ற உண்மையும் எல்லோர்க்குந் தெளிவாக விளங்கிவிட்டது.

கிராமங்களே நாட்டின் உயிர்நாடியாகத் திகழ்பவை; உணவு, உடை, உறையுள் ஆகிய அத்தியாவசிய மனிதத் தேவைகளைப் பூர்த்திசெய்பவை. அதனால், அவற்றினை ஆக்கித்தருங் கிராம மக்களின் முன்னேற்றமே நாட்டு முன்னேற்றமாக அமைகிறது. கிராமமக்கள் இயல்பாகவே எளிமையை விரும்புபவர்கள்; கடின உழைப்பாளிகள்; பண்டைமையிற் பெருவிருப்புக் கொண்டவர்கள்; மூட நம்பிக்கைகள் பலவுடையவர்கள்; உண்மையான சிக்கன வாழ்வு எதுவென அறியாதவர்கள்; அதனாலே, சீரிய வாழ்வு வாழத் தெரியாதவர்கள். இத்தகைய கிராம மக்களைச் சீர்திருத்தத்திற்குச் சட்டங்களும் பலாத்கார முறைகளும் பயன்படா; அன்பும் பொறுமையுந் தியாக மனப்பான்மையுங் கொண்ட உழைப்பே பயன்படும். இம் மூவகைக் குணங்களின் உறைவிடமாக விளங்குபவர்கள் பெண்களே. அதனால், ஆண்களிலும் பார்க்கப் பண்பும் பண்பும் நிறைந்த பெண்களே, கிராம சேவைக்குப் பெருந் தகுதியுடையவர்களாகிறார்கள்; அவர்களாலேயே அறம் பல வளர்க்கப்படுகின்றன. இவ் வுண்மையைக் கவிமணியவர்கள்,

"மங்கைய ராகப் பிறப்பதற்கே—நல்ல
மாதவஞ் செய்திட வேண்டுமம்மா
பங்கயக் கைந்நலம் பார்த்தலவோ—இந்தப்
பாரி லறங்கள் வளருமம்மா"

என்று பாடியுள்ளார்.

இத்தகைய பேரியல்பு படைத்த பெண்கள், கிராமங்களிலே, கல்வி வளர்ச்சி, பொருளாதார உயர்ச்சி,

சுகாதார மேம்பாடு என்னும் முத்துறைகளிலே அருந் தொண்டாற்றலாம். கிராமச் சீர்கேடுக ளனைத்தினுக்குங் கல்வியறிவின்மையே மூலகாரணமாய் விளங்குவது.

" கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர் "

என்ற பேருண்மை கிராம மக்களின் உள்ளத்திலே பசு மரத்தாணிபோலப் பதிக்கப்படுமாயின், அவர்கள் பீடு நடையுடன் முன்னேற்றப் பாதையில் விரைந்து செல்வர். கிராம மக்கள், தக்க கல்விப் பயிற்சி பெறுதற்கு வசதியு மில்லை; வாய்ப்புமில்லை; அதனால், கல்விப் பயனை உண ருந் தன்மையுமில்லை. எனவே, அவர்களிடையே அறிவு மலர்ச்சியை யுண்டாக்குதல் இன்றியமையாததாகிறது. இன்றுள்ள நிலையில், நம் நாட்டிலுள்ள எல்லாக் கிராமங் களிலுங் கல்விக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எனி னும் அவையனைத்துஞ் சீரியமுறையில் இயங்குகின்றன வெனக் கூறல் முடியாது. கிராமப் பள்ளிக்கூடங்களே, கிராம மலர்ச்சியின் நிலைக்களமாக அமைவதால், அவற்றை வழிநடத்துவோர் படிப்பும் பண்பும் பொறுமை யும் தியாக மனப்பான்மையுங் கொண்டவர்களா யிருத் தல் அவசியம். இவையனைத்தும் ஒருங்கமைந்த ஆசிரியை கள், கோவணதாரிகளாய்ப் புழுதியளைந்து திரியுங் கிரா மத்து இளஞ் சிறார்களுக்கு எண்ணும் எழுத்தும் மாத்திர மன்றி, நல்லொழுக்க நெறியுங் காட்டுதல் வேண்டும். அன்றியும், கிராமங்கள் தோறும் முதியோர் கல்விக்கூடங் களை யமைத்து மாலைநேர வகுப்புக்கள் நடாத்தி, கல்வி யென்னுஞ் செழுஞ்சோதியைப் பரப்புதலும் இன்றியமை யாததாகிறது. இத்துறையினுக்கும் பயிற்சிபெற்ற பெண் களே ஏற்றவர்கள்.

கல்வித்துறைக்கு மாத்திரமன்றி, கிராமப் பொருளா தார விருத்திக்கும் பெண்களே பெரும் பணியாற்ற வல்ல வர்கள். கிராமங்கள் ஒரு காலத்தில் தத்தம் தேவைகளில் முழு நிறைவுபெற்று விளங்கின. அந்நிலை நவீன நாகரிக வேகத்தா லழிந்துவிட்டது. அன்று பலபல குடிசைக் கைத் தொழில்கள் கிராமங்களிலே ஆழமாக வேர்விட்டு

வளர்ந்திருந்தன. அவை ஆண்களாலன்றிப் பெண்களாலுஞ் செய்யப்பட்டு வந்தன. அதனால், எந்தக் குடும்பமுந் தேவைக்கேற்ற பொருளீட்டி 'இல்லை' என்னும் இழி நிலைக்குட்படாமல் வளமான வாழ்வு வாழ முடிந்தது. இன்று கோழி வளர்த்தல், மாடாடு வளர்த்தல், பன்ன வேலை, எண்ணெய் வடித்தல், தச்சுவேலை, கொல்வேலை, நெசவுவேலை போன்ற பலபல குடிசைத் தொழில்கள் சிறப்பிழந்துவிட்டன; ஒரு குடும்பம் முழுவதும் அக் குடும்பத் தலைவனின் உழைப்பையே நம்பியிருக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது; குடும்பப் பெண்களனைவரும் வேலையற்றவர்களாய் ஊர் வம்பு பேசிச் சீரழிகின்றனர். இந்நிலை மாறுதற்குக் குடிசைக் கைத்தொழில்களனைத்தும் மறுமலர்ச்சியடைதல் வேண்டும். அன்றியும், காலப்போக்கிற்கேற்ப, புதுப்புது வழிகளைச் சிந்தித்துக் கிராம மக்களிடையே அறிமுகஞ் செய்தலும் அவசியமாகும். கனிவகைகள் மிகுந்துள்ள பருவ காலத்திலே அவற்றினைப் பதப்படுத்திப் பழப்பாகு செய்தலும் தக்க காய்கறிகளில் வற்றல், ஊறுகாய் என்பன ஆக்கிப் பாதுகாத்தலும் பயன் தரத் தக்கவை. காந்தியடிகளாலே கிராமச் சீர்திருத்தத்திற்கு உயிரெனக் கருதப்பட்ட நெசவுத் தொழிலிற் பயிற்சியளித்தலும் நன்மை பயப்பதாகும். பெண்கள் இத்துறைகளிலே கருத்துக்கொண்டு பணிபுரிவார்களாயின் கிராமங்களிற் கவிந்துள்ள சோர்வு என்னும் பேரிருள் நீங்கிப் புத்தொளி பரவும்; அவர்களின் வருவாய் பெருக, வளமான வாழ்வு மலரும்.

பெண்கள் கிராமங்களிலே பொருளாதார மேம்பாட்டுக்கு உழைத்தலோடு, சுகாதாரத்துறையிலுஞ் சீர்திருத்தம் ஏற்பட வழிகாணல் அவசியம். நகரங்களிலும் பார்க்கக் கிராமங்களிலே, இயற்கையாகவே நற்காற்றும் நன்னீரும் நல்லுணவுந் தேங்கிக் கிடக்கின்றன. ஆயினும், அடிப்படைச் சுகாதார விதிகளைப் பேணி நடவாமையாலே கிராம மக்கள் பலபல பிணிகளுக்காளாகித் துன்புறுகின்றனர். மூடத்தனமான மதபக்தி காரணமாக, தமக்கேற்படும் நோய்களனைத்துக்குந் தெய்வமே காரணமென்று எண்ணுகின்றனர்; நோய்களுக்குக் காரணமான

சுகாதாரக் கேடுகளை ஆராயாது, தெய்வப்பிரீதி செய்யக் கருதுகின்றனர். இந்நிலை காரண காரிய விளக்கத்தோடு மெல்லமெல்ல அகற்றப்பட வேண்டியது. அன்றியும் பிரசவ காலத்திலே, தாய்மார் கடைப்பிடிக்க வேண்டிய எளிய சில விதிமுறைகளையுங் கிராமப்பெண்கள் அறியார்; குழந்தைகளைத் தக்கமுறையில் வளர்த்து அவர்களை நற் குடிபதிகளாக்க வேண்டிய அவசியத்தையும் உணரார். இவ்வனைத்திலும் பெண்கள் தொண்டாற்றுவார்க ளானாற் கிராமங்கள் புது விழிப்படையும்.

இன்று கணத்துக்குக் கணம் பெருகிவரும் போலி நாகரிக மோகம், கிராம மக்களின் மனத்திலும் பரபரப்பை ஏற்படுத்துகிறது. இப் போலி நாகரிகத்தாற் கிராம மக் கள் பொருளிழந்து, சுகமிழந்து ஆடம்பரப் பிரியர்களாக வுஞ் சுகவாழ்வு காணுஞ் சோம்பேறிகளாகவும் மாறும் நிலை காணப்படுகிறது. இந்த மோகம் சீரழிந்த கிராமங் களை மேலுஞ் சீரழிக்க முயல்கின்றது. எனவே, கிராமத் தொண்டாற்றும் பெண்கள் இந்நிலையை யுணர்ந்து, தாமே முன்மாதிரி காட்டி, கிராம மக்களின் மயக்கவுணர்வினை மாற்றல் வேண்டும். மங்கி மறைந்துவருங் கிராமக் கலை களுக்குப் புத்துயிரளித்தல்மூலம் அவர்களிடையே கலைப் பற்றையும் பண்பாட் டுணர்ச்சியையும் வளர்த்தல் வேண்டும். இவ்வாறு பெண்களின் தொண்டு கிராமங் களுக்குக் கிடைக்குமாயின், அவை ஒவ்வொன்றும் ஒவ் வொரு போக பூமியாக மாறிவிடும்; அங்கு வாழ்பவர்கள் தன்னிறைவு பெற்ற தேவர்களாக மாறிவிடுவர்; அக் கிராமங்களைத் தன்னகத்தே கொண்ட நாடும் இந்திர லோகமாக மாறிவிடும்.

# 20

## தெருக்கரைச் சோதிடன்

குறிப்புக்கள் ;

1. ஆரம்பம்.
2. சோதிடனின் தோற்றம்.
3. அவனைச் சூழ்ந்திருந்த சோதிட உபகரணங்கள்.
4. அவனது தொழில்முறை.
5. முடிபு.

ஒருநாட் காலை எட்டு மணியளவில், யாழ்ப்பாணத்துப் பிரதான மருத்துவ நிலையத்தின் முன்னேயுள்ள பெருவீதி, வாகனப் போக்குவரத்தினலும் மக்கள் நடமாட்டத்தினலும் உயிர்பெற்றுத் துடிக்கத் தொடங்கியது. வீதியின் நடுப்பகுதியிலே வண்ண வண்ணமான பலசாதி மோட்டார் வண்டிகள் அணியணியாக நிறுத்தப்பட்டிருந்தன. உச்சிவேளையில் மலைவேப்ப மரங்கள் வள்ளல்களைப் போன்று தண்ணிழல் தந்து, வீதி முழுவதற்குங் குளிர்மையூட்டிக்கொண்டிருந்தன. அந்நிழலிலே, தோடம்பழ வியாபாரிகளும் வெற்றுப்போத்தல் விற்போரும் தங் கடைகளைப் பரப்பியிருந்தனர். இவர்களின் வாழ்வு பெரும்பாலும் மருத்துவ நிலையத்துக்கு வருவோர் போவோரின் தேவையையே ஆதாரமாகக் கொண்டது. அவர்கள் மாத்திரமன்றி, மக்களின் எதிர்கால நம்பிக்கையொன்றினையே மூலதனமாகக் கொண்டு வியாபாரஞ் செய்யும் ஒருவனும் ஒரு மரத்தடியிற் காத்திருந்தான். அவனே தெருக்கரைச் சோதிடன்.

அந்தச் சோதிடனின் சாத்திர கூடமாக, அம்மரநிழல் விளங்கியது. அது அவனது ஏகபோக வுரிமையாகவுங் கலைக்கூடமாகவுந் தொழில் நிலையமாகவுங் காட்சியளித்தது. அவன் உயரமானதொரு பலகையின் மீது, சலன மற்ற முகத்தினனாய், ஓடுமீனோட உறுமீன் வருமளவும் வாடியிருக்குங் கொக்கைப் போல, அமைதியோடிருந்தான். அவனது தலைமயிர் பன்னெடுநாட்களாக எண்ணெய்ப் பசுமை காணாமற் பரட்டை பற்றியிருந்தது. சிலசில இடங்களிலே தலைமயிர் திரண்டுருண்டு புளியங்காய் போலத் தோற்றமளித்தது. அவன் அதை உச்சியிலே சேர்த்துக்கட்டிக் குடுமியாக்கியிருந்தான். அதைச் சில மலர்கள் அலங்கரித்துக்கொண்டிருந்தன. நெற்றியிலே பளிச்சென்று தெரியுந் திரிபுண்டரமான திருநீற்றுப்பூச்சு; அதன் நடுவே பெரியதொரு சந்தனப் பொட்டு; அதன் நடுவே குங்குமத்திலகம் ஆகிய இவையெல்லாம் அவனது தொழிலுக்குப் பெருந்துணை புரிந்தன. அவனது காதுகளிலே இரண்டு கடுக்கன்கள் ஊசலாடின. மார்பிலுந் தோள்களிலும் முன்கைகளிலும் வெண்ணீறு பூசப்பட்டு, சந்தனமுங் குங்குமமும் ஒன்றன்மேலொன்றாக இடப் பட்டுப் பொலிந்தன. தோய்த்துத் தோய்த்து நீர்க்காவி யேறியதொரு ஆடையை அவன் உடுத்திருந்தான். கள்ள மற்ற உள்ளத்தோடு பார்ப்பவர்களுக்கு அவன் ' சிவப் பழ 'மாகத் தோற்றமளித்தான்; அவனையும் அவன் தொழிலையுந் தேர்ந்த முறையையும் இணைத்து ஆராய் வோருக்கு அவன் கைதேர்ந்த வேடதாரியாகக் காணப் பட்டான்.

அவனது தொழிலுக்கேற்ற சாதனங்களனைத்தும் அவனைச் சூழ்ந்து காணப்பட்டன. அவன் சாய்ந்திருந்த மலைவேம்பிலே; மூன்றடி உயரத்தில் அறையப்பட்ட ஆணி யொன்றிலே கடதாசிஅட்டையில் எழுதப்பட்ட விளம்பரம் ஒன்று தொங்கியது. அதில், " இவ்விடம் கைரேகை, ஆரூடம், குருவிச்சாத்திரம் என்பன சொல்லப்படும். கைரேகை: சதம் ஐம்பது; ஆரூடம்: சதம் இருபத்தைந்து; குருவிச் சாத்திரம்: சதம் இருபத்தைந்து " என்று எழுதப்பட்டிருந் தது. அதன் கீழே இரேகைகள் தெளிவாகத் தெரியும்

முறையில் வரையப்பட்ட வலக்கையின் படம் தொங்கியது. அந்தச் சோதிடனின் இடப்புறத்தில் ஒரு குருவிக் கூடிருந்தது. அதனுள்ளே மூன்று குருவிகள் இருந்தன. ஒன்று வெண்ணிறம்; மற்றது பச்சை; மற்றது மேக வண்ணம். அவை மூன்றுங் கூண்டுக்குள்ளே அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்தன. அக் கூண்டுக்கு முன்னே கடதாசி மட்டைகள் பல அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவற்றினுள், படங்களோடு எதிர்காலப் பலன்களைக் கூறும் பாடல்களும் ஒட்டிவைக்கப்பட்டிருந்தன. அவனுக்கு முன்னே, மூன்று வரிசைகளிலே புத்தகங்கள் அடுக்கடுக்காய்க் கிடந்தன. ஒவ்வொரு அடுக்கின்மேலும் கிடந்த மூன்று புத்தகங்களிலொன்று, "சோதிட ஆசான்"; மற்றொன்று, "கைரேகைச் சாத்திரம்"; மற்றொன்று, "ஆரூட சாஸ்திர போதினி". அவற்றினடியில் இருந்தவை சோதிட நூல்களோ, பிற நூல்களோ என்பதை யாரறிவார். அவனது வலப்புறத்தில் ஏழு சோகிகள் வீசி விடப்பட்டுக் கிடந்தன. அவைகளினயலிலே ஒரு ரூபாய்க்குட்பட்ட சில்லறைக் காசும் இருந்தது. அவன் மருத்துவ நிலையத்துக்கு வருவோரையும் போவோரையுங் கூர்ந்து அவதானித்தான். மக்களது அகத்தின் அழகை முகத்திலே காணக் கூடிய கலைஞன் அவன். மனக்கலக்கத்தோடு செல்வோர் யாரென்பது அவனுக்குத் தெரியும்; 'வாழ்வாவது மாயம்' என்று, வெறுப்புணர்ச்சியுடன் செல்வோரை அவன் இனங் கண்டுகொள்வான்; எதிர்காலத்தில் நம்பிக்கை வைத்து முன்னேறத் துடிப்போரையும் அவன் அறிந்துவிடுவான். இப்பெருஞ் சக்தி அவனுக்கில்லையானல் அவன் தொழிலாற்றல் முடியாது.

அவனது கூரிய பார்வை என்னும் வலையிலே ஒரு வாலிபன் சிக்கிவிட்டான். அவன் முகம் வாடி வதங்கிக் காணப்பட்டது. என்ன நிகழுமோ ஏதாகுமோ என்ற மனக்கலக்கமே அந்த வாட்டத்துக்குக் காரணம் என்பதை அச் சோதிடன் கண்டுகொண்டு, அவனை அழைத்தான். அவன் அந்தச் சோதிடன் முன்னிலையில் இருந்து, ஐம்பதுசத நாணயம் ஒன்றை எடுத்து வைத்துவிட்டு, தன் கையை நீட்டினன். சோதிடன் புன்சிரிப்போடு அவன்

கையைப் பற்றிக்கொண்டான். அவன் கடந்த சிலநாட்களாக அந்த வாலிபன் மருத்துவ நிலையத்துக்குப் போவதும் வருவதுமாகத் திரிந்ததையுங் கலக்கமடைந்து காணப்பட்டதையும் அவதானித்திருந்தான். சிறிதுநேரங் கூர்ந்து அவதானித்துச் சிந்திப்பதுபோல் நடித்துக்கொண்டு சொல்லத் தொடங்கினன்; "தம்பி, நீ கலங்குவதற்குக் காரண மெதுவுமில்லை. இது வெகு அபூர்வமான கை. ஆனல் இப்போது புத்திர இரேகையிலேதான்........." அவன் வாக்கியத்தை முடிக்காமல் நிறுத்தினன். உடனே வாலிபன் துடிதுடித்து, "ஐயா, என் மகனுக்கு ஏதாவது நேர்ந்துவிடுமோ? அதற்கு ஏதாவது சாந்திசெய்ய முடியாதோ!" என்று புலம்பினன். வாலிபனின் மனக்கலக்கத்தைப் பூரணமாக அறிந்துவிட்ட சோதிடன், தன் மகிழ்ச்சியை வெளிக்காட்டிக்கொள்ளாமல், "சீச்சீ, அப்படி ஒன்றும் நேர்ந்துவிடாது. இப்போது உம்முடைய மகனுக்கு வியாழ சுகமில்லை; அதனலேதான் அலைச்சல். நவக்கிரக பூசை செய்துவிட்டால், பதினைந்து நாளில் எல்லாம் சரியாகிவிடும்" என்று கூறினன். தன்னைச் சுற்றிவர ஒரு சிறு கூட்டஞ் சேர்ந்துவிட்டதை அவதானித்த சோதிடன், வாலிபனேடு அதிகநேரஞ் செலவிட விரும்பவில்லை; அவனது கையைவிட்டான். அப்பொழுது, நடுத்தர வயதுடைய பெண்ணெருத்தி குந்தியிருந்து கொண்டு, இருபத்தைந்து சதத்தைக் குருவிக்கூட்டினருகில் வைத்தாள். புன்சிரிப்போடு அதனைப் பத்திரப்படுத்திக்கொண்ட சோதிடன், குருவிக்கூட்டின் கதவை மேலே உயர்த்தினன். பச்சைநிறக் குருவி வாயிலில் நின்று எட்டிப்பார்த்தது. "வாடா, இராசா வா; இந்த அம்மாளுக்காக நல்ல சேதியை எடுத்துத் தா" என்று கூறினன். அடுத்தகணம் பழக்கப்பட்டிருந்த அந்தக் குருவி வெளியே வந்து, முன்னும் பின்னும் நடந்து, ஒரு கடதாசி மட்டையைச் சொண்டால் இழுத்துவிட்டது. அதனை அவனது ஒருகை எடுக்க, மற்றக்கை அந்தக் குருவிக்குத் தானியமூட்டி, கூட்டினுள் விட்டு, கதவை மூடியது. அவன் அந்தக் கடதாசி மட்டையை எடுத்து விரித்து, இராகத்தோடு படித்தான்.

"கேளப்பா இந்திரனுர் போகமெல்லாம் கிட்டு தப்பா
நாளைந்திற் பாழென்ற நிலத்தோடு பணமும் பொன்னும்
வாழவைக்க வுன்னிடத்தில் வந்துவிடும் கலக்கம் வேண்டாம்
தாழ்வில்லாப் பூசனைகள் முருகனுக்குப் புரிதல் வேண்டும்."

பின்னர் தான்படித்த பாட்லின் கருத்தை, வேறொரு இராகத்தோடு சொல்லி விளக்கினன்: "அதாவது எண்ணி ஐந்தேயைந்து நாளில், தேவர்களுக்கரசனுன, ஆயிரங்கண்ணனுன தேவேந்திரனது சுகபோக வாழ்வு உனக்குக் கிட்டப் போகிறது. நீ தொலைந்துவிட்டதென் றெண்ணி, அழுதழுது கலங்குகிற நிலம்மாத்திரமல்லாமல், நீ கொடுத்த பணமும் நகைநட்டுக்களும் மீண்டும் உன் கைக்கே வரப்போகின்றன. இந்த ஐந்து நாளும் தவருமல் கலியுகவரதனுன முருகப் பெருமானுக்கு அருச்சனைகள் செய்வாய்; விரதமிருந்து அவனை வழிபடுவாய்". அவன் கூறியதைக் கேட்ட அந்தப் பெண்மணியின் ஆனந்தத் துக்கு எல்லையில்லை. அவள் நகைமுகத்தோடு அங்கிருந்து சென்றுள்.

இவ்வாறு அங்கு கூடிநின்றவர்கள் அத்தனை பேருக் கும் அவரவர் மனப் போக்கையும் முகக் குறிப்பையுந் துணைக்கொண்டு, அவர்கள் மனங் குளிரும்படி சோதிடஞ் சொன்னுன். அவர்கள் எல்லோரும் அவனது தோற்றப் பொலிவிலும் வாய்ச்சாதுரியத்திலும் மயங்கி அவனை வாழ்த்திக்கொண்டு போயினர். சோதிடன் கையிலும் பணஞ் சேர்ந்துகொண் டிருந்தது. மாலைப் பொழுது வந்தடைந்ததும், மக்கள் நடமாட்டங் குறையத் தொடங்கி யது. மக்கட் கூட்டமற்ற இடத்திலே அவனுக்கு வியா பாரம் ஏது? எனவே, அன்று சேர்ந்த பணத்தை எண்ணிக் கணக்கிட்டான். முதலில்லாத வியாபாரமாகை யாலே கையிற் கிடைத்தது முழுவதும் நிகர லாபமாகி விட்டன. பணத்தைப் பத்திரப்படுத்திய பின்னர், தனது தொழிலுபகரணங்களை மூட்டை கட்டினுன். அந்த மூட் டையை ஒருகையிலுங் குருவிக் கூட்டை மற்றக்கையிலும் எடுத்துக்கொண்டு பஸ் நிலையத்தை நோக்கி நடந்தான். அப்பொழுது அவனுக்குத் தன் மனைவி மக்களைப் பற்றிய எண்ணமே மேலோங்கி நின்றது.

# 21

## நான் விரும்பும் ஒரு பொழுதுபோக்கு

### [கோழிப்பண்ணை அமைத்தல்]

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்.
2. அதனை விரும்புதற்குக் காரணங்கள்.
3. கோழிக் கூடும் நடமாடும் இடமும்.
4. வளர்ப்புக் கேற்ற கோழியினம்.
5. உணவு விடயத்திற் கவனிக்கவேண்டியன.
6. கோழி நோய்கள் வருமுன்னர்க் காத்தல்.
7. முடிபு.

"முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்" என்ற வள்ளுவர் வாய்மொழி, முயற்சியின் பெருஞ் சிறப்பை உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெளிவுறக் காட்டுகிறது; உழைப்பொன்றே உயரிய செல்வம் என்ற உண்மையை உணர்த்துகிறது. எனினும் நாள் முழுவதும் தொழில் புரிதற்கு மனிதனின் உடல், உள இயற்கை என்றுமே அனுமதித்தில்லை. அதனல் எட்டுமணி நேர வேலை என்ற தத்துவந் தொழிலுலகிலே தோன்றி, நாளடைவிலே சட்டமாகிவிட்டது. இதனைமீறி நாள் முழுவதுந் தொழிலாற்றுவதால், மனிதன் நோயாளியாகி, அற்ப ஆயுள் உள்ளவனுகிருன். அதனல், வேலை நேரத்தின் பின், அவனது உடலும் உள்ளமும் ஆறுதல் கொள்ளத்தக்க வகையிலே அவன் மாற்று முயற்சிகளில் ஈடுபடுதல் அவசியமாகிறது. அவைகள் அவனுற் பெரிதும் விரும்பப்

படுவனவாயிருத்தல் வேண்டும். அவ்வித முயற்சிகளே பொழுது போக்குக்கள் என்னும் பெயர்பெறுந் தகையன. ஒவ்வொரு மனிதனின் பண்புக்கேற்பப் பொழுது போக்குக்களும் பலபல வகையின. பேசும் படம் பார்த்தல், சீட்டாடுதல் போன்றன ஒருவகையின; உலாச்செல்லல், விளையாடுதல் போன்றன வேறொருவகையின; புத்தகம் படித்தல், கோழிவளர்த்தல், தேனீ வளர்த்தல், தையல் வேலை, பின்னல் வேலை போன்றன இன்னொருவகையின. இவ்வகையின மனம் விரும்பும் பொழுதுபோக்குக்களாவதோடு, பயன்தரத்தக்கன. இவ்வகையானவற்றில் என்னுள்ளம் பெரிதும் விரும்புவது கோழிப் பண்ணை அமைத்தலாம்.

வண்ண வண்ணப் பறவைகளைக் கண்டு களிப்பதிலும் வளர்த்து மகிழ்வதிலும் எனக்கு இயல்பாகவே நாட்டமுண்டு. ஆயின், அவற்றினைப் பிடிப்பதுந் தக்க முறையில் வளர்ப்பதும் எளியதொன்றன்று. அதனால், என்மனம் எளிதிற் பெறக்கூடியனவும், இலகுவிற் காக்கப்படத்தக்கனவுமான கோழிகளை வளர்ப்பதில் ஈடுபாடுகொண்டது. காலை, மாலை வேளைகளிலே, உயிர்த் துடிப்புள்ள கோழிகளையுங் குஞ்சுகளையும் அவதானித்து உணவளித்தலும் தக்க பாதுகாப்புச் செய்தலும் அவப் பொழுதைத் தவப்பொழுதாக்கும் முயற்சிகள் என்பது என் கருத்து. அன்றியும் அவை என்னுடலுக்கு ஊறுதியளிக்கும் பயிற்சிகளாகவும் அமைந்தன. அரசனைப்போலக் கம்பீர நடை நடந்து, நிமிர்ந்து நின்று, கூவியுங் கொக்கரித்தும் பண்ணையை ஆட்சிசெய்யுஞ் சேவல்கள், கண்ணுக்கும் மனத்துக்கும் விருந்து செய்தன. மாலையிலே முட்டைகளைப் பொறுக்கிச் சேர்த்தலும் அவற்றைத் தரப்படுத்தித் திகதியிடுதலும் இன்பப் பொழுது போக்குக்களாய் விளங்கின. பெற்றோர் கையை எதிர்பாராமல், அந்த முட்டைகளை விற்று, எனது கல்லூரிச் செலவுக்கான பணத்தைப் பெறும்போது, என்னுள்ளம் பெருவகையாற் பூரித்தது. இவ்வாறு எனது உடலுக்கும் உள்ளத்துக்கும் நலனளித்து, சிறியதொரு வருவாயையுந் தந்தமையாலே

கோழிப்பண்ணை நடத்தல் எனது பொழுதுபோக்காய் அமைந்தது.

நோயின்றி மகிழ்வோடு நாம் வாழ்வதற்கு காற்றோட்டம், வெளிச்சம் முதலிய வசதிகளோடு கூடிய வீடு வேண்டும். அவ்வாறே கோழிகளும் சௌகரியத்தோடு குடும்பமாக வாழ்வதற்கு வெயில், மழை, காற்று என்பன தாக்காதவாறு அமைக்கப்பட்ட கொட்டில் வேண்டும். அப்பொழுதுதான் அவை நோய் நொடியின்றி வளர்ந்து, இனம் பெருக்கிப் பயன் தரல் கூடும். நமது சூழலிலுள்ள பொருள்களைக்கொண்டு, நாமே கொட்டில் அமைத்துக் கொள்ளலே பொழுதுபோக்குக்குரியதுஞ் சிக்கனமானதுமான செயலாகும். அக்கொட்டில், ஒரு கோழிக்கு நான்கு சதுர அடிவீதம் இடவசதியுள்ளதாகவும் ஆறடி உயரமுள்ளதாகவும் அமைக்கப்பட்டு, கிடுகினுல் வேயப்படலாம். அதனைச் சுற்றி மூன்றடி உயரத்துக்குக் களிமண்ணுற் சுவரெழுப்பி, மேலுள்ள இடைவெளியை மூங்கிற் சலாகை அல்லது மட்டை கொண்டு வரிந்து விடுதல் வேண்டும். அடித்தளத்தை வன்மையுடையதாக்கி, அதன் மேல் ஆறங்குல உயரத்துக்கு உமியோ மரத்தூளோ இடுதல் அவசியம். கோழிகளை எப்போதுங் கூட்டில் அடைத்து வைப்பது, அவைகளைச் சிறை செய்வது போலாகும். கோழிகள் காலாறுதற்காக ஓடியாடித் திரிவதனுல் உடல் வலுவும் முட்டையிடுஞ் சக்தியும் பெறுகின்றன. அதனுல், கோழிகளுக்கு நடமாடுமிடம் அவசியமாகும். கோழிகள் சிதறுண்டு அயலவர் வீட்டுக் கோழிகளுடன் கலந்து நோயையுங் கருப்பத்தையும் பெருமலிருப்பதற்கு, நடமாடுமிடம் வேலியடைப்புடையதாயிருத்தல் வேண்டும். இவ்வகையான இடவசதி சிறியதொரு கோழிப் பண்ணைக்குப் போதியதாகும்.

அடுத்ததாக, நமது நாட்டுச் சுவாத்திய நிலைக்கேற்ற கோழியினங்களைத் தெரிந்தெடுத்தலவசியம். நம் நாட்டில் மேலைத்தேயக் கோழியினங்களும் உள்நாட்டுக் கோழியினங்களும் அதிகமாக வளர்க்கப்படுகின்றன. இவைக

ளில் இறைச்சியினக் கோழிகளைப் பார்க்கிலும் முட்டையினக் கோழிகளையே அதிகமாக வளர்க்கின்றனர். மேலைத் தேய இனமான 'வெள்ளை லெக்ஹோன்' கோழிகளே முட்டையினத்திற் சிறந்தன. அவை முட்டையிடத் தொடங்கிய முதலாண்டில் இருநூற்றெண்பது முட்டையளவில் இடக்கூடியன. ஆயின், அவை வெகு அவதானத்தோடு பாதுகாக்கப்பட்டாலன்றி, நம் நாட்டுப் பருவநிலைக்கு ஏற்புடையனவாகா. எனவே முட்டையினச் சேவல்களையும் உள்நாட்டுக் கோழியினங்களையுங் கொண்டு உற்பத்தி செய்த கலப்பினமே நம் நாட்டுக்கேற்றது. அதுவே நமது நாட்டுப் பருவநிலையைத் தாங்கி, நோய்நொடியின்றி நெடிதுநாள் நின்று, நல்ல பயன் தரக்கூடியது. பெரும் பணஞ் செலவழித்து, மேனாட்டுக் கோழியினங்களைக் கொண்டு பண்ணையமைத்தலால், பெருஞ் சிரமம் ஏற்படுவது மாத்திரமன்றி, சிலசமயம் பேரிழப்பும் அடைய நேரிடும். உள்நாட்டுக் கோழிகளைக் கொண்டு பண்ணை அமைப்பதாலும் நற்பயன் பெறல் முடியாது. எனவே, நம் நாட்டுக் கோழிப் பண்ணைக்குக் கலப்பினங்களே ஏற்றனவாகின்றன.

கோழிப்பண்ணை சிறிதாயிருந்தாலும் பெரிதாயிருந்தாலும், அதனை நடத்துவோர் கோழிகளின் உணவு விடயத்தில் அவதானம் எடுத்தல் வேண்டும். நாம் சத்துள்ள உணவைப் பக்குவப்படுத்தி, அளவறிந்து, காலவரையறையோடு உண்கிறோம். அதுவே நமது சுகத்துக்குரியதாக மதிக்கப்படுகிறது. அவ்வாறே கோழிகளின் உணவைப் பொறுத்தும் சத்து, பக்குவம், அளவு, காலவரையறை என்னும் நான்கு அம்சங்களையும் மனத்திற் கொள்ளல் இன்றியமையாதது. பலவகைத் தானியங்கள், அவற்றின் தவிடுகள், பச்சைக் காய்கறிகள், கீரைவகைகள், வெங்காயம், உப்பு, சுத்தநீர் என்பன கோழிகளுக்கேற்ற சத்துணவுகளாம். கோழிகளின் வயதுக்கும் பருவகாலத்துக்கு மேற்ப, உணவு வகைகளைத் தனித்தனியாகவோ பலவற்றை ஒன்றுசேர்த்து நனைத்த ஈரவுணவாகவோ கொடுப்பது பக்குவமான உணவு எனப்படும்.

மிதமிஞ்சிய உணவுங் காலவரையற்றயற்ற உணவும் அசீரணத்தோடு வேறுவகை நோய்களேயும் உண்டாக்கக் கூடியதாகையாற் காலவரையறையும் அளவும் பிரதான மானவை.

கோழிகளுக்குத் தொற்றுநோய் வந்துவிட்டால் அதனை மருந்துகளால் மாற்றலாமென்பது வீண்முயற்சி. அதனுற் பண்ணேயே சிலசமயம் அழிந்துவிடும். மிருக வைத்தியர் களே சில நோய்களுக்குக் காரணந் தெரியாமல், பரிகாரந் தேடுஞ் சக்தியற்று மயங்குகிருர்கள். எனவே, கோழி நோய்கள் வருமுன்னர்க் காக்கும் முறைகளைக் கைக் கொள்ளல் வேண்டும். காலத்துக்கேற்ற கல்ப்புணவு கொடுத்தலுங் கோழிக் கூட்டையும் நடமாடுமிடத்தையுந் தூய்மையாக வைத்திருத்தலும், அவைகளை மாதம் ஒரு முறை பட்டினியிருக்கச் செய்தலும் நோய்வராமற் காக்கும் எளிய விதிகளாம்.

இவ்வாறு இடவசதி செய்து, கல்ப்பினங்களைப் பெருக்கி, நல்லுணவளித்து, நோய் வருமுன்னர்க் காத்துக் கோழிகளை வளர்ப்பதால் நற்பயன் பெறலாம்; அதனுல், பிறர் கையை எதிர்பாராது, மாணவர்கள் தத்தம் தேவை களைப் பூர்த்தி செய்துகொள்ளலாம்.

# 22

## இலக்கியத்தின் பயன்கள்

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்.
2. இலக்கியத்தின் பயன்கள் :
   (அ) வரலாற்றினை மாற்றியமைக்குந் தன்மை.
   (ஆ) மக்கள் மனவளர்ச்சியும் உலகியலறிவும் பெறுதல்.
   (இ) போட்டி பூசல்களைப் புறங்காணும் ஆற்றல்பெறல்.
   (ஈ) தனி மனித சீர்திருத்தத்துக்கு உதவுதல்.
   (உ) நாடுகளின் உண்மை வரலாறாய் விளங்குதல்.
3. முடிபு : இலக்கியங்களால் ஒருலகக் கொள்கை மலரும்.

இயற்கை யன்னை மனிதனை அறிவு வளத்துக்குரிய மூளையோடும், உணர்ச்சியுங் கற்பனையும் ஊற்றெடுக்கும் உள்ளத்தோடும் படைத்துள்ளாள். ஆகவே, மனிதனின் முழுமையான வாழ்வினுக்கு அறிவும் வேண்டும்; உணர்வும் வேண்டும். ஒன்றை மட்டும் போற்றி, மற்றொன்றைப் புறக்கணிப்பதால் மனிதவாழ்வு ஊனமடைகிறது. அறிவை மாத்திரம் வளர்த்து, உணர்ச்சியைப் புறக்கணிப்பதால் மனிதன் இயந்திரம் போன்றவனாகின்றான்; உணர்ச்சிகளை அடக்கியாளும் வன்மையற்றவனாகின்றான். உணர்ச்சியை மாத்திரம் வளர்த்து, அறிவினைப் புறக்கணிக்கும்போது, மனிதன் நல்லன தீயனவற்றைப் பகுத்துணரும் பண்பை யிழக்கின்றான்; நடுவுநிலையி னின்று எத்தனையும் ஆயும் ஆற்றலை யிழக்கின்றான். இந்நிலையில், அறிவியலை விஞ்ஞானமென்றும் உணர்ச்சியுங் கற்பனையுங் கொண்ட படைப்புக்களைக் கலையென்றும் பாகுபாடுசெய்வர் அறிஞர்.

கலையை நுண்கலையென்றுங் கவின்கலையென்றும் அழகுக் கலையென்றுங் கூறுவர். அது, ஓவியம், சிற்பம், நாடகம், நாட்டியம், இசை, இலக்கியம் எனப் பல பகுப்புடையன. இவை யனைத்தினுக்கும் உணர்ச்சி வெளிப்பாடே உயிராய் விளங்கும். இக் கலைகளனைத்தினும் இலக்கியஞ் சிறப் புடையது. மொழியினைக் கருவியாகக் கொண்டு பிறப்பது இலக்கியம். அது காலத்தினால் அழிவின்றி நிலைப் பதனையே அளவு கருவியாகக் கொண்டு வாழ்வது; உணர்ச்சியுங் கற்பனையுங் கூடிய அனுபவவெளிப்பாட்டின் பிரதிபலிப்பாக அமைவது. இக்காரணங்களால் அது ஏனைய கவின்கலைகளிலுஞ் சிறப்புடையதாகிறது.

இத்தகைய இலக்கியத்தின் பயன்கள் மிகப்பல. அவற்றுட் பிரதானமானது உலக வரலாற்றையே மாற்றி யமைக்குந் தன்மை. அறிவியல் வளர்ச்சியினால் ஏற்படும் மாற்றங்களிலும் பார்க்க, மனவளர்ச்சியினால் ஏற்படும் மாற்றங்களே வரலாற்றை மாற்றும் ஆற்றலுடையன. அஃதாவது, மனிதசமுதாயத்தின் மனவளர்ச்சிக் கூறுக ளான விருப்பு, வெறுப்பு, நம்பிக்கை போன்றனவற்றைப் பண்படுத்துவதினாலேயே வரலாறு பெருமளவு மாற்ற மடைகிறது. கொடுமையும் வற்புறுத்தலுங் கொண்ட அரசியலமைப்பினாலுஞ் சட்ட திட்டங்களினாலும் நிலையான சீர்திருத்தம் உண்டாகாது. உள்ளத்தின் ஆழத்திலே முளைவிட்டு வளர்ந்து செழிக்கும் இயற்கைச் சீர்திருத்தமே நிலையானதும் பயனுள்ளதுமாகும். எனவே உயரிய சமு தாய மலர்ச்சியை யுண்டாக்க வல்லது இலக்கியம். வர லாற்றுக் கண்கொண்டு நோக்குவார்க்கு இவ்வுண்மை புலனாகும். அதனாலேதான், 'சட்டம், அறிவியல், தத்துவத் துறை முதலியனவற்றை யாக்குவோரினும் பார்க்க, இலக்கியம்படைக்கும் புலவர்கள், ஆற்றலுஞ் செல்வாக்கும் உடையவர்களாய், மனித உள்ளங்களை ஆள்கின்றார்கள்' என ஆங்கில இலக்கிய விமர்சகர்கள் கூறுகின்றனர்.

வாழ்க்கையென்னும் நறுங்கனியின் தீஞ்சுவைச்சாறே இலக்கியமெனில், அது முற்றும் பொருத்தமுடைத்து. உலக மாந்தர் இயல்புகள் பெருங்கடல் போல ஆழமும்,

அகலமும் உடையன. அவைகளனைத்தையும் அளவிட்டுக் காணுதல் சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவுடைய மாந்தர்க்கு இயலாததொன்று. எனினும், மக்கள் தம் இயல்புப்படி, சூழலிலுள்ளவர்களது குணத்தையுங் குறையையும் அளந்தறிய முயல்கின்றனர். அவர்கள் தமக்கு வேண்டியவரைப் போற்றியும் வேண்டாதவரைத் தூற்றியுமே அளவிடுவர். விருப்பு, வெறுப்பு என்னும் அளவு கருவிகள் என்றுமே செம்மையுடையனவல்ல. ஆனால், பொய்யில்புலமைச் சான்றோர்கள் ஆக்கித்தந்த இலக்கியங்கள் மாந்தரியல்பின் ஆழ அகலத்தையும் நன்மை தீமைகளையும் விருப்பு வெறுப்பின்றி ஆராய்ந்து கூறவல்லன ; அன்றியும் பலபல கோணங்களிற் கிளைத்துச் செல்லும் மனவெண்ணங்களையும் ஆசாபாசங்களையும் நம்பிக்கைகளையும் வாழ்க்கைமுறைகளையுந் தெளிவாகப் படம்பிடித்துக்காட்ட வல்லன. அதனால் இலக்கியங் கற்போர், மனவளர்ச்சியுடையவர்களாய், ஒழுக்க நெறி போற்றிச் சீரிய உலகியலறிவைப் பெற முடிகிறது.

வரலாற்று முறையில் ஆராயும்போது, உலகில் மனிதன் தோன்றிய நாட்டொடக்கம் இன்றுவரை பல வகைப்பட்ட புதிய புதிய சிக்கல்கள் கிளைத்தெழுந் துள்ளமையை அறிதல் இயலும். தேசங்களோடு தேசங்களும் நாடுகளோடு நாடுகளும் பகைத்தெழுந்து சீர்குலைந் துள்ளன. மக்கள் ஒருவரோடொருவர் பழகும்போதும் குடும்பமாக வாழும்போதும் பிணக்குகள் பல தோன்றி யுள்ளன. இத்தகைய சீர்கேடுகளுக்கும் பிணக்குகளுக்குங் காரணமாயமைவது மக்கள் மனத்திலே கலையுணர்வுஞ் சால்புணர்வும் வேர்கொள்ளாமையே. இவ்விருவகை யுணர்வுகளையும் மக்கள் மனத்தில் ஆழப் பதித்துவிடுந் தகையன இலக்கியங்கள். அதனால் இலக்கியங் கற்றவர்கள் பூசல்களையும் பிணக்குகளையுந் தக்கவகையிற் புறங்கண்டு தோல்வியுந் துன்பமுமற்ற நல்வாழ்வு வாழ முடிகிறது.

மக்களெல்லாரிடத்துங் குறைவும் நிறைவுங் கலந்தே காணப்படும். குற்றங் குறைகளின்றி முழுநிறைவு பெற்ற

மனிதன் எவனுமே இவ்வுலகில் இருத்தல் இயலாது. அங்ஙனம் இருப்பானேயாயின் அவன் மனித நிலையைக் கடந்து, உயரிய அமரநிலை எய்தியவனாகக் கருதப்படுவான். அந்நிலையை யடைதலே வாழ்க்கையின் உயரிய குறிக்கோள் என்பதைப் பலதுறைச் சான்றோர்களும் ஒப்புக்கொள்ளுகின்றனர். அந்நிலையடைதற்கு, முதலில் ஒவ்வொரு மனிதனும் தன்னிடத்துள்ள குற்றங்கள் எவை யென உணர்ந்தறியுந் திறமையுந் துணிவும் வேண்டும். அப்போதுதான் அவற்றை நீக்கும் வழிவகைகள் யாவை என ஆராய்தலியலும். பின்னரே அவற்றைக் களைந் தெறியும் முயற்சி நிகழும். குற்றங்குறைகளை யுணர்தற்கும் நீக்கும் வழிவகைகளை யறிதற்கும் அவற்றை நீக்கற்கும் பெருங்கருவிகளாயமைவன இலக்கியங்களாம். இலக்கியங்கள் புலவனது உணர்ச்சியையுங் கற்பனையையும் மாத்திரமன்றி, அவனது அனுபவங்களையும் புலப்படுத்தும் இயல்புகொண்டன. அவ்வனுபவங்கள் அவன் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றுணர்ந்தவை. அவைகளைக் கொண்டு மக்கள் தம் மனத்துள்ள மனமாசுகளைப் போக்கிக்கொள்ளவியலும். அதனால் அனுபவக் களஞ்சியங்களான இலக்கியங்கள் ஒவ்வொரு மனிதனையுஞ் சீர்திருத்த வல்லனவாகின்றன. அதனாலே தான் கவலையடைந்தோரும் உலகவாழ்வில் வெறுப்படைந்தோரும் எவற்றை வெறுத்தொதுக்கத் துணியினும் உயர்ந்த இலக்கியங்களை வெறுத்தொதுக்கத்துணிவதில்லை.

பண்டைத் தமிழரின் பெருமை, சிறுமைகளையும் பிறவற்றையும் அறிதற்குக் காலவரையறையோடொட்டிய வரலாறில்லையெனப் பலர் கவலையுறுவர். வரலாறென்பது ஆண்டுந் தேதியும் அரசர் பெயர்களும் வரிசைப்பட வமைந்த அட்டவணையன்று. மக்களது சிந்தையில் வளர்ந்த எண்ணங்களையும் வாழ்க்கை முறையையுங் காட்டுவதே உண்மை வரலாறு. இந்நிலையிலே தமிழிலக்கியங்கள் உண்மைச் சரித்திரங்களாகத் தமிழினத்தின் எண்ணப் போக்கையும் வாழ்க்கை முறையையும் எடுத்துக் காட்டுகின்றன. இவ்வாறே வெவ்வேறின மக்களின் உண்மை

வரலாற்றை அவர்களது இலக்கியங்கள் மூலமாகக் காணுதல் வேண்டும்.

உலக மக்களிடையே ஒருமை யுணர்வை வளர்ப்பதற்குப் புலவர் பலர் படைத்தளித்த இலக்கியங்கள் பேருதவி செய்கின்றன. உலக நாடுகளிடையே பலவேறு வகைப்பட்ட அரசியற் கொள்கைகளும் அவற்றினுக்கேற்ற ஆட்சியமைப்புக்களும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளுங் காணப்படலாம். போட்டியும் பொருமையுந் தலைவிரித்தாடலாம். அதனாலே, காலத்துக்குக்காலம் பகைமை மூண்டு போரொலி கேட்கலாம். ஆனால், எவரும் இலக்கியங்களையோ, அவற்றினை ஆக்கித்தந்த புலவர் பெருமக்களையோ புகைப்பதுமில்லை; வெறுப்பதுமில்லை. வேற்று மொழியிலக்கியங்கள் சொந்த மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு மக்களிடையே பரப்பப்படுகின்றன. இவ்வாறு உலக இலக்கியங்கள் எங்கும் பரப்பப்படுமானால், உலகமக்களின் பொதுமனப்போக்கை உணரல்முடியும். இதனால் உலகப் பொது மனிதவுணர்வு வளரும்; 'ஒரே உலகம்' என்ற சீரிய பொதுநோக்கு மலரும்.

# 23

## அணுவும் ஆக்கமுயற்சிகளும்

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்: அணுக்குண்டின் அழிவு.
2. அணுவாற்றல் இன்னதென்பது.
3. தொழிற்றுறையில் அணுவாற்றல்.
4. மருத்துவத்துறையில் அணுவாற்றல்.
5. விவசாயத்துறையில் அணுவாற்றல்.
6. உணவைப் பாதுகாக்குந்துறையில் அணுவாற்றல்.
7. முடிபு (தொகுப்புரை).

இரண்டாவது உலகப் பெரும்போரை முடிபுக்குக் கொண்டுவந்த பெருமை, அணுக்குண்டு என்னும் பயங்கரப் படைக்கலத்துக்கே உரியது. அதனால், ஹிரோஷிமா தீவில் விளைந்த மாபெரும் அழிவுகளின் நினைவுகள் இன்றும் மக்கள் மனத்தில் நிழலாடுகின்றன. உலக மக்கள் என்றுமே கேட்டுணராத அளவுக்கு, அறிவியலார் இதுவரை படைத்த எந்த ஒரு படைக்கலமும் நாசம் செய்யாத அளவுக்கு, அது அந்நாட்டைப் பாழாக்கியது. பல்லாண்டுகள் கழிந்த பின்னரும் புல் பூண்டு தாமும் முளைக்கத் தகுதியற்றதொரு பாழ்நிலமாக அதனை யாக்கி விட்டது. கற்பனை வடிவில் ஊழித்தீயின் கோரத் தாண்டவம் பற்றிப் பல பல இலக்கியங்கள் வருணித் துள்ளன. அந்த வருணனைகளை வெளிப்படையாகக் காட்டிவிட்டது அது. அதனால், அறிவியற் கண்டுபிடிப்புக் களை மக்கள் சந்தேகக் கண்கொண்டு நோக்குஞ் சூழ் நிலை உருவாயது. அணுவாற்றல் பெற்றெடுத்த அதி

பயங்கர மகவாகிய் அணுக்குண்டு பல்கிப் பெருகுமானல், மனிதகுலம் பல்லாயிரவாண்டுகளாகக் கட்டி யெழுப்பிய மனித நாகரிகம், நொடிப்பொழுதில் நாசமடைந்துவிடும். எனவே, அணுவிற் பிறக்கும் அணுவாற்றலை ஆக்க முயற்சிகளுக்குப் பயன்படுத்த வேண்டியது தவிர்க்க முடியாததொன்ருகிவிட்டது.

அண்ட சராசரங்களனைத்தும் அணுவின் பிணைப்பாலாயன. அணுச் சேர்க்கையின் வேறுபாட்டுக் கேற்பப் பொருள்களின் தன்மையும் வேறுபடுகின்றது. அந்த அணு, ஊனக் கண்ணல் மாத்திரமன்றி, சிறந்த உருப்பெருக்காடியாலுங் காணமுடியாத அளவு மிகமிகச் சிறியது; பிளக்க முடியாதது. இவ்வித கொள்கைகள் அறிவியற்றுறையிலே பல்லாண்டுகளாக நிலவி வந்தன. பிற்காலத்தில் அணுவினது நுண்ணிய் அமைப்புமுறையைக் கண்டறிந்தனர். சூரியனை நடுநாயகமாகக் கொண்டு கோள்களனைத்துஞ் சுற்றி வருதல் போல, அணுவின் மையப் பொருளான அணுக் கருவை நடுநாயகமாகக் கொண்டு, பல மின்னணுக்கள் சுற்றிவருகின்றன. அணுக்கரு, ஓர் அணுவைப் பல கூறிட்ட ஒரு கூற்றின் அளவினது. இவ்வித அமைப்புடைய அணுவைப் பிளந்தாற் கிடைக்கும் ஆற்றல் மனிதனின் கற்பனைக்கும் அறிவுக்கும் எட்டமுடியாத அத்துணைப் பெருமையுடையது. இன்று அறிவியலார், உலோக வகையைச் சேர்ந்த யூரேனியத்தின் அணுவைப் பிளந்து, ஆற்றல் பெறும் விந்தையைக் கண்டுள்ளனர். ஒரு சிறு துண்டு யூரேனியம் பல்லாயிரக் கணக்கான அணுக்களாலானது. அவ்வணுக்களில் ஓரணு பிளக்கப்படும்போது, அது சிறியனவும் பெரியனவுமான நுண்ணிய துகள்களாக வீசப்படுகிறது. அவற்றுள் ஒரு துகள் மற்ருேரணுவைத் தாக்கும்போது, அதுவும் பிளக்கப்பட்டு, அங்கு தொடர்ச்சியான இயக்கம் நிகழ்கின்றது. இதனல், அளவிடற்கரிய வெம்மையுண்டாகிச் சத்தியாக — ஆற்றலாக — வெளிப்படுகின்றது. இதுவே அணுவாற்றல் எனப்படும். இவ்வாற்றல் கட்டுப் படுத்தப்படாத நிலையில் அணுக்குண்டாக வெடித்து அழிவுண்டாக்குகிறது; கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் மனித குலத்தின் மாபெருஞ் சேவகனுகத் தொண்டுபுரிகிறது.

இன்று நாம் காணும் உலக நாகரிகம், பெருகிவரும் பல்வேறு தொழிற்சாலைகளையும் அவை உற்பத்தி செய்த பல வாழ்க்கைச்சாதனங்களையும் அடித்தளமாகக்கொண்டு கட்டப்பட்டது. மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் மாத்திரமன்றி, ஏனைய உல்லாச சாதனங்களனைத்தும் அத் தொழிற்கூடங்கள் தந்த பெருங் கொடைகளாகும். இத் தொழிற் கூடங்களின் இயக்கத் திற்கு நிலக்கரி, 'பெற்ரேல்' போன்ற பல எரிபொருள்கள் ஆற்றல் அளிக்கின்றன. நிலமகள் உளங்கனிந்து தரும் நிலக்கரியும் பெற்ரேலும் என்றுமே வற்ருத செல்வங்க ளல்ல. உலகின் மக்கட் பெருக்கத்தையும் அப்பெருக் கத்திற்கேற்ற தேவைப் பொருள்களையும் அவற்றை யுற்பத்தி செய்யும் எந்திர சாதனங்களின் வளர்ச்சியையும் எண்ணுங்கால், அவ் வெரிபொருள்கள் தரும் ஆற்றலை ஈடுசெய்ய அணுவாற்றலை மனிதகுலம் பயன்படுத்துவது மிக இன்றியமையாத தொன்ருகிறது. அதனுல், அணுவாற்றலைக் கட்டுப்படுத்தக் கூடிய அணுவுலைகளை யமைத்து, அவற்றைக் கொண்டு பெருமளவில் மின் சக்தியை யுண்டாக்கலாம் என அறிவியலார் கண் டுள்ளனர். ஓரிருத்தல் யூரேனியத்தினின்றும் பெறக் கூடிய அணுவாற்றல் பதின்மூவாயிரந் தொன் நிலக்கரியி னின்றும் பெறக்கூடிய ஆற்றலுக்குச் சமனுகும். அணு வாற்றல் மூலம் தொழில் நிலையங்கள் இயக்கப்படுமானுல், உற்பத்திச் செலவு குறையும்; பொருளுற்பத்தி பெருகும்; அதனுல் மக்கட் தேவையைப் பூர்த்திசெய்யு மளவுக்குப் பொருள்கள் மலிவாகக் கிடைக்கும்.

அணுக்கள் பிளக்கப்பட்டு, சத்தி வெளிப்படும்போது, அணுவுலையிலே, கதிரியக்கச் சாம்பல் உண்டாகிறது. அதனெளி கட்புலனுக்ககப்படாத 'எக்ஸ்' கதிர், 'காமா' கதிர் போன்றது; பொருள்களையும் மனிதவுடலையும் ஊடுருவிச் செல்லும் ஆற்றல் வாய்ந்தது; சாதாரண நிலையில், மனிதனுக்குப் பெருந் துன்பஞ் செய்வது. இக் கதிரியக்கத்தைக் கட்டுப்படுத்திக் கையாண்டால் அணுச்

சத்தி மூலம் எத்துணைப் பயன்பெறலாமோ, அத்துணைப் பயன்பெறலாம். சாதாரண தனிமங்கள் அணுவுலையில் வைக்கப்படும்போது அவை கதிரியக்கம் பெற்று விடுகின்றன. கதிரியக்கம் பெற்ற அப்பொருள்கள் 'ஐசடோப்புக்கள்' எனப்படும். அறிவியலார் இதுவரை நூற்றைம்பது வகை ஐசடோப்புக்களைக் கண்டுபிடித்துள்ளனர். இக்கதிரியக்கப் பொருள்கள் மருத்துவத்துறையிற் பெருமளவு பயன்படுகின்றன. மாற்று மருந்தற்ற பெரும் பிணிகள் பலவுள. அவற்றுள் அதிபயங்கரமானது புற்று நோய். இதனைக் கதிரியக்கப்பொருள்களின் கதிர் வீச்சு மூலம் குணமாக்கமுடியும்; அன்றியும், உயிரைக்குடிக்கும் நோய்களின் உண்மைக்காரணங்களை அறிதல்முடியும். இருதயம், ஈரல், சுவாசப்பை ஆகியவற்றில் இரத்தம் எத்தகைய அழுத்தத்துடன் ஓடுகிற தென்பதையும் அதனால் இரத்தோட்டஞ் சம்பந்தமான சிக்கல் வாய்ந்த நோய்களுக்கு எத்தகைப் பரிகாரஞ் செய்யமுடியும் என்பதையும் மருத்துவர்கள் இக்கதிரியக்கப் பொருள்கள் மூலம் அறிவர். இவற்றால்; கதிரியக்கப் பொருள் மருத்துவர்களுக்குச் சிறந்ததொரு துணையாக விளங்குகின்றது.

விவசாயத்துறையில், நிலத்தன்மை, பருவகாலம், பயிர்வகை என்பனவற்றுக் கேற்ப எருவிடும் முறையினாலேயே விளைவு பெருகுகின்றது. கதிரியக்கப் பொருள்களான ஐசடோப்புக்கள் மூலம் நிலத்தன்மையை ஆராய்ந்து எவ்வண்ணம் குறைந்த அளவு எருவிட்டுப் பெரும்பயன் பெறலாம் என ஆராய்ந்துள்ளனர். தாவரங்களின் இலைகள் உணவு தயாரிக்கும் முறையையும் அவ்வுணவின் தன்மையையுங் கதிரியக்கப் பொருள்கள் தெளிவாகக் காட்டுகின்றன. அவ்வறிவு ஆய்வுகூடத்தில் அவ்வித உணவுப் பொருள்களைத் தயாரித்து மனிதனுக்கு வழங்க வகைசெய்கின்றது. மிருகங்கள், பறவைகள் ஆகியவற்றின் வளர்ச்சி இயல்பையுங் கதிரியக்கப் பொருள்கள் அளவிட்டுக் காட்டுவதன்றி, அவற்றின் வளர்ச்சிக்கு எவ்வித சத்துப் பொருள்கள் வேண்டுமென்பதை இலகுவில் அறியமுடிகிறது.

உணவைப் பக்குவப்படுத்தும் முறைகளிற் கதிரியக்கப் பொருள்கள் மகத்தான சாதனைகள் பல புரிந்துள்ளன. எளிதிலே தோற்றக்கூடிய கிருமிகளினாலே கிழங்குவகை, பால், இறைச்சி என்பன விரைவிற் கெட்டுவிடுகின்றன. அணுவாற்றல் உணவுப் பொருள்களைப் பழுதடையச் செய்யுங் கிருமிகளைக் கொன்று, மக்கட்குலத்திற்குப் பெருந் தொண்டு புரிகிறது. உணவுப் பொருள்களை நன்கு குளிரச்செய்து, அவற்றின்மீது கதிர் வீச்சு விழும்படி செய்தால், அப்பொருள்களின் சுவை சிறிதுங் கெடுவ தில்லை எனவும் மிகக் குறைந்த கால அளவில் அவை அணுவாற்றல் மூலம் பாதுகாக்கப்படுகின்றன எனவும் ஆராய்ந்துள்ளனர். கப்பல்களிற் காணப்படும் குளிரறை வசதிகளின்றியே இறைச்சியைக் கதிர்வீச்சு மூலம் பக்கு வப்படுத்திப் பிற நாடுகளுக்கு அனுப்பல் முடியும். இவ் விதம் கதிர்வீச்சு மூலம் பக்குவப்படுத்தப்பட்ட உணவுகள் மனிதனுக்கு எவ்வித தீங்கும் விளையா என்பது நிரூபிக்கப் பட்டுள்ளது.

பகைமைச் சூழலில் அணுக்குண்டென்னும் உருவிற் பிறந்த அணுவாற்றல், தொழிலியல் வளர்ச்சிக்கு உறு துணை புரிகிறது; மாற்று மருந்தற்ற பெரும் பிணிகளை மாற்றும் மருத்துவனாக விளங்குகிறது; உழவுத்துறையிலும் உணவுப் பொருள்களைப் பழுதின்றிப் பாதுகாக்குந் துறை யிலும் பேருதவி புரிகின்றது. அழிவுத்துறைக்காகத் தோன்றிய அணுவாற்றலை மக்களுக்கு நலம் பயக்கும் உயர்நெறியிற் கொண்டு செலுத்திப் பலபல புதுமைகளை அறிவியலார் கண்டுபிடிக்கின்றனர். இம் முயற்சி மேன் மேலும் வளர்ச்சியடைந்து உலக மக்கள், துன்பமின்றி வாழ வழிசெய்தல் அறிவியலார் கடனாகும்.

# 24

## மூட நம்பிக்கைகள்

குறிப்புக்கள் :

1. ஆரம்பம் : நம்பிக்கை இன்னதென்பது ; அறிவுக்குப் பொருத்தமான நம்பிக்கைகளும் மூடநம்பிக்கைகளும்.
2. மூடநம்பிக்கைகள் தோன்றியவிதம் ; காரணங்கள்.
3. சமூகத்திற் காணப்படும் மூடநம்பிக்கைகள்.
4. மூடநம்பிக்கைகளைப் புறங்காணும் வழிகள் [முடிபு].

நம்பிக்கை மாபெருஞ் சத்திகளுள் ஒன்று. அஃது அணுவாற்றலின் வன்மையினும் மிக்கது. குகைகளிலே வாழ்ந்த மனிதன், கோள்களின் இயல்பைக் கண்டறிய, வான்வெளிப் பயணஞ் செய்யுமளவுக்கு வளர்ந்துள்ளானென்றால், அவ்வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தன நம்பிக்கைகளே. அவை மனிதனின் சிந்தனையிலே புடமிடப்பட்டு, உண்மையி னடிப்படையி லெழுந்த நல்ல நம்பிக்கைகள். இரண்டும் இரண்டும் நான்கு என்பது ஓருண்மை ; அஃது அன்று தொடக்கம் இன்றுவரை நம்பப் படுகிறது. எப்படி நான்காயிற்று என்ற வினாவுக் கிடமில்லை. இத்தகைய உண்மைகள் சந்தேக விபரீதங் கடந்து, அறிவியலாக மலர்ந்து, உலகோரால் நம்பப்பட்டு, உலகவளர்ச்சிக்கு உறுதுணையாயின. இவையன்றிச் சமுதாயக் கட்டுக்கோப்புக்காக, ஏற்படுத்தப்பட்ட சில நன்னெறிகளும் காலப்போக்கில் நம்பிக்கைகளாயின. சுற்றத்தினரது மரண, ஜனன ஆசௌசங் காத்தல் அறிவுக்குப் பொருத்தமற்றதாயினும், அந்நம்பிக்கை அவர்களிடையே ஒருவகைப் பாசத்தொடர்பை யுண்டாக்கி, ஒற்றுமையைப்

பேண வகை செய்கிறது. இவ்வகை நம்பிக்கைகள் அறிவுக்குப் பொருத்தமற்றனவாயினும் பயனுள்ளவை. எள்ளளவு உண்மையுமின்றி, பொய்ம்மையிலேயே பிறந்து பொய்ம்மையிலேயே வளர்ந்து, காலகதியிலே பழக்கமாகி, நம்பிக்கையென்னும் பெயர் பெறுவனவுஞ் சிலவுள. அவைகளே மூடநம்பிக்கைகள். அவை மனித வளர்ச்சிக்கு எச்சந்தர்ப்பத்திலும் உதவுவனவல்ல.

அறிவியல், மிகுந்த வளர்ச்சியடைந்த தன்மையால், எதனையுங் கூர்ந்து நோக்கிக் காரணங் காண முயலும். இன்றும் உலகெங்கும் பலவகைப்பட்ட மூடநம்பிக்கைகள் உயிர்வாழ்ந்துகொண்டிருக்கின்றன. மிகவுயர்ந்த நாகரிக வளர்ச்சியடைந்த நாடுகளில் அவற்றின் எண்ணிக்கை குறைவாக இருக்கலாமேயன்றி, இல்லையெனக் கூறல் இயலாது. இந்நிலையிலே பிற்போக்கான நாடுகளிலே அவற்றினுதிக்கம் பெருமளவிற் காணப்படுவதில் வியப்பில்லை. மனிதன் இயற்கையின் திருவிளையாடல்களுக்குக் காரணங்காண வியலாதபோதும் இயற்கைச் சத்திகளை யடக்கியாள வழிகாணுதபோதும் அவற்றினுக் கஞ்சி, அவற்றைத் தன்னினும் மேம்பட்டதொன்ருகக் கருதி, வணங்கத் தொடங்கினுன். கண்ணைப் பறிக்கும் மின்னலைக் கண்டு அவன் மருண்டான்; கர்ணக்டூரமான இடியோசையைக் கேட்டு அவன் கலங்கினுன்; பெருமழையை அனுபவித்துப் பயங்கொண்டான்; பெருவெள்ளம் பெருக்கெடுத்து வந்தபோது அச்சமடைந்தான். இவ்வாறு காரணங்கண்டு தெளிய முடியாமல் அச்சங் காரணமாக, பலபல எண்ணங்கள் அவன் மனத்திற் பதிந்து; காலப்போக்கில் மூடநம்பிக்கைகளாக வளரத் தொடங்கியன. அன்றியுஞ் சில சந்தர்ப்பங்களிலே, சிலருக் கேற்பட்ட அனுபவங்கள், அவர்களின் சிந்தனையற்ற போக்கினுலே நாளடைவில் மூட நம்பிக்கைகளாக வளர்ந்தன. எனவே, மூடநம்பிக்கைகளுக்குரிய அடிப்படைக் காரணம் அச்சமுஞ் சிந்தனைத் திறனின்மையுமேயாம்.

இன்று தமிழரிடையே காணப்படும் மூடநம்பிக்கைகள் பல. தமிழர் வாழ்க்கையில் நிகழுஞ் சம்பவங்களைக்

கூர்ந்து நோக்கி, காரணகாரிய முறைப்படி ஆராய்ந்தால், பலபல மூடநம்பிக்கைகள் அவர்களிடையே பரவிக் கிடப்பதைக் காணல் முடியும். அவற்றை வகைப்படுத்திக் காணுதல் சாலச் சிறப்புடைத்து. சகுனம் பார்த்தல், சாத்திரங் கேட்டல், போலித் துறவிகளால் ஏமாறுதல், பேய் பிசாசுகளுக்கு அஞ்சுதல், செய்வினை சூனியத்துக்கு நடுங்குதல், பலியிடல், மனிதருள் ஒரு பகுதியாரைத் தீண்டாதாரென ஒதுக்கல் முதலியனவாக அவற்றை வகைப்படுத்தலாம். பூனையுஞ் சாரையுங் குறுக்காதல், ஒற்றைப் பார்ப்பானும் இரட்டைச் சூத்திரனும் எதிர்ப்படுதல் முதலியனவாகத் தீச் சகுனங்கள் நிரைப்படுத்தப்பட்டுள்ளன. ஒரு குழந்தை பிறந்தபோது, அதன் தாய் தந்தையர், நோய் காரணமாகவோ பிறகாரணங்களாலோ இறந்துவிட்டால், அது தன் தாயைத் 'தின்று' விட்டதென்றும் தந்தையைத் 'தின்று' விட்டதென்றுஞ் சமூகந் திட்டுவதும் ஒருவகை மூட நம்பிக்கையே. இவ்வகையான மூட நம்பிக்கைகள், செவிவழியாகப் பரப்பப்பட்டு மக்கள் மனத்தில் நிரந்தரமானதோர் இடம் பெற்றுவிட்டன. சோதிடமென்னும் அறிவுத்துறையின் அரிச்சுவடிதானுந் தெரியாதவர்களும் கைரேகை நிபுணர்களும் மரத்தடிச் சோதிடர்களும் அவ்வகையினராய பிறரும் பாமரமக்களின் அறியாமையைத் தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு பிழைக்கின்றனர். மக்களுந் தங்கள் எதிர்காலம்பற்றி அவர்கள் கூறவல்லவர்கள் என்ற மூடநம்பிக்கை கொண்டு, தங்கள் பொருள் பண்டங்களை அவமே அழிக்கின்றனர். வீடுகளிலே காகங்கள் கீழேபார்த்தும் மேலே நோக்கியும் தலைவளைத்தும் கத்தும்போது, அவற்றினுக்கு ஒவ்வொரு பொருள் கற்பித்து மயங்குவது நாம் சாதாரணமாகக் காணக்கூடியதொன்று. வீட்டுச் சுவர்களிலும் உத்தரங்களிலும் உள்ள பல்லி, சத்தஞ் செய்யும்போது, சத்தம் வந்த திசையைக் கணித்துப் பலன் காணும் வழக்கம் நம் நாட்டிலுண்டு. காகமும் பல்லியும் மனிதனது எதிர்கால சுக துக்கங்களைக் கூற வல்லனவென நம்புவதைப் போன்ற அறிவீனம் நகைப்புக்கிடமானது. மனத்துள்ளே ஆசையும் மோசமும் உடையவர்களாய், வெளியே தவ

வேடம் பூண்டு திரியுஞ் சந்நியாசிகளின் அலங்கார வார்த்தைகள், பாமர மக்களை மயக்கிக் கெடுக்கின்றன. அவர்களது போலி மந்திரங்களாலும் மருந்துகளாலும் அவர்கள் ஏமாற்றப்படுகின்றனர். மக்கள் மனத்திலே ஆழப் பதிந்துள்ள பேய் பிசாசுகளைப் பற்றிய நம்பிக்கை, அவர்களை அஞ்சியஞ்சிச் சாகச்செய்கிறது; குழந்தைகளை யும் பெரியவர்களையுங் கோழைகளாக்குகிறது. பேய் பிசாசுகளுக்குப் பெயர் வைக்குமளவுக்கு நமது மூட நம்பிக்கை வளர்ந்துள்ளது. ஆலமரத்திலே முனியன்; அரசமரத்திலே மாடன்; குளக்கரையிலே மோகினி; என்று எங்கெங்கும் பேய் பிசாசுகள் உலாவுவதாக நம்பிப் பயந்து பயந்து வாழ்கின்றனர். அவர்களது அறி யாமையை—மூடநம்பிக்கையைக் கண்ட பாரதியார்,

"நெஞ்சு பொறுக்கு தில்லையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்
அஞ்சி யஞ்சிச் சாவார்—இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே."

"வஞ்சனைப் பேய்க ளென்பார்—இந்த
மரத்திலென் பார்அந்தக் குளத்திலென்பார்
துஞ்சுது முகட்டி லென்பார்—மிகத்
துயர்ப்படு வார்எண்ணிப் பயப்படுவார்."

என்று பாடி மனம் வெதும்புகிறார். மீண்டும்,

"மந்திர வாதி யென்பார்—சொன்ன
மாத்திரத்தி லேமனக் கிலிபிடிப்பார்
இயந்திர சூனி யங்கள்—இன்னும்
எத்தனை யாயிரம் இவர்துயர்கள்."

என்று மந்திரவாதிகளைப்பற்றிக் கூறுகிறார். "அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்ற பழ மொழியை ஈண்டு நினைவுகூருதல் நன்று. எல்லா வகை யான மூட நம்பிக்கைகளுக்கும் அறியாமையில் விளைந்த அச்சமே காரணம் என்பதை அது காட்டுகிறது.

இவ்வித மூடநம்பிக்கைகளைப் புறங்கண்டு, திண்ணிய மனங்கொண்டு உயர்வடைந்த மக்கள் வாழும் நாடே, சிறப்புடைய நாடாக விளங்குதல் முடியும். நம் நாட்டிலே ஆழமாக வேர்விட்டு வளர்ந்து, அறியாமை வித்துக்களைப் பரப்பி, மக்கள் மனத்தை நஞ்சாக்கிக் கெடுக்கும் மூட நம்பிக்கை யென்னும் பெருந்தருவை வெட்டிச் சாய்க்கும் போதுதான் நம் நாடு உயர்வடைய முடியும். எனவே, அதனை வெட்டிச்சாய்த்தற்கு அறிவென்னும் வலிமை மிக்க கோடரி வேண்டும். அறிவொளி மூலைமுடுக்கெங்கும் பரவுதல் வேண்டும். அதனால் மாத்திரம் மூடநம்பிக்கையென்னும் பேரிருளைப் போக்கிவிட முடியாது. காரண காரியத்தோடு எதனையுஞ் சிந்தித்துத் தெளியுந் திறங்கொண்ட பெரியோர்களும் இளைஞர்களும் இத்துறையில் ஈடுபடுதல் வேண்டும். பொதுமக்கள் மூடநம்பிக்கைகளினால் அஞ்சி யஞ்சிக் கலங்கும்போதெல்லாம் அவற்றின் வலியின்மையைக் காட்டி, அவர்கள் அச்சத்தை நீக்குதல் வேண்டும். சிந்தனைத் திறனற்ற அறிவால் மூடநம்பிக்கையை அழித்தல் முடியாதாகையால், மக்கள் மத்தியிலே அறிவோடு சிந்தனைத் திறனையும் வளர்க்க முயலுதல் வேண்டும்.

# 25

## எனது மனங்கவர்ந்த ஒரு கிராமம்

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்: கிராமம் இன்னதென்பதும், எல்லையி லுள்ள காட்சிகளும்.
2. தென்னந்தோட்டமும் வயல் நிலமும்.
3. மக்கள் வாழிடமும் மக்கள் வாழ்க்கையும்.
4. கலையழகும் பத்திப்பெருக்கும்.
5. மனங்கவர்தற்கான பிறகாரணங்கள் [முடிபு].

நாவலூர் என்பது அந்தக் கிராமத்தின் பெயர். அது யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பன்னூற்றுக்கணக் கான கிராமங்களுள் ஒன்று. அதன் தென்னெல்லையில் ஓர் உப்பாறு கிழக்கு மேற்காக நீண்டு கிடக்கிறது. அதனை உப்பங்கழி எனவும் அழைப்பர். அது ஆண்டு முழுவ தும் நீர் நிறைந்து காணப்பட்டாலும், உலோபிகளின் செல்வம் போலத் தனக்கும் பிறர்க்கும் பயனின்றிக் கிடக் கிறது. அதற்கு வடபால் ஊர்க்குப் பொதுவான மேய்ச்சல் நிலமுண்டு. ஏழைச் சிறுவர்கள் ஊரவர்களின் மாடுகளைத் திரட்டிவந்து அங்கு மேய்க்கின்றனர். அவர்களின் விளை யாட்டிடமாகவும் அது அமைகிறது. அங்கே, அங்கொன் றும் இங்கொன்றுமாகத் தாழஞ் சோலைகள் காணப் படுகின்றன. அவை செழித்து மதர்த்து நிமிர்ந்து நிற் கின்றன; இலைகளென்னுங் கூர்வாள் ஏந்திக் கூட்டங் கூட்டமாக நிற்கும் வீரர்கள்போலத் தோன்றுகின்றன. அவைதாம் ஊரைக் கண்ணிமையாது காக்கும் காவலரோ!

அவற்றினையடுத்து, தென்னந்தோட்டங்கள் காட்சியளிக்கின்றன. அவற்றினிடையிடையே, சடைவிரித்து நிற்குங் கரிய அரக்கியர்போலப் பனந்தோப்புக்கள் தோன்றுகின்றன. தென்னைமரங்கள் இளந்தென்றல் வருடிச் சென்றபோது ஆடியசைகின்றன; இளநீர்க்குலை சுமந்து நிற்கின்றன; பச்சோலை சலசலப்பதனால் இசை மீட்டுகின்றன. அதனாலே, அவை அமுதகலசமேந்தி, ஆடிப் பாடிச் சிரித்து மகிழும் நடன மங்கையரைப்போலக் காட்சியளித்து மனத்தை மயக்குகின்றன. அதனயலிலே உணவூட்டும் வள்ளல்களைப்போன்ற செந்நெற்கழனிகள், கிழக்கிலும் மேற்கிலும் வான விளிம்பை முத்தமிட்டுக்கொண்டு, பரந்து கிடக்கின்றன. மாரிகாலத்திலே அவ்வயல்வெளி, பச்சைப் பசேலெனக் கண்கொள்ளாக் காட்சியளிக்கின்றது. மாசு மறுவற்ற பிரமாண்டமான மரகதக் கம்பளமொன்றை, இயற்கைத்தேவி விரித்துவிட்டு அமர்ந்திருப்பதுபோல, அது கவினளிக்கின்றது. செழித்து வளர்ந்த செந்நெற் பயிர்கள், வாடைக்காற்றிலே அசைந்து அலையெறிவதனாற் பசுங் கடலைப்போல் மிளிர்கின்றன. சில வயல்களிலேயுள்ள நெற்பயிர்கள் சூல்கொண்ட பாம்பைப் போலக் கருக்கொண்டு காணப்படுகின்றன. சிலவற்றிலே கதிர்கள், வெளிவந்து நிமிர்ந்து நிற்கின்றன. அவை, பெருஞ்செல்வமடைந்த கீழ்மக்கள் இறுமாந்து தலைநிமிர்ந்து நிற்பதை நினைவூட்டுகின்றன. சிலவற்றிலே கதிர்கள், பால் பிடித்து முற்றி விளைந்து, தலைவணங்கிச் சாய்கின்றன. அவை, கல்வியிலே துறைபோய அறிஞர்கள், செருக்கின்றித் தாழ்ந்து நிற்பதை எடுத்துக்காட்டுகின்றன. அச் செந்நெற் கழனிகளின் இடையிடையே, நீர்நிறைந்து துளும்பும் பொய்கைகள், மரகதக் கம்பளத்திலே பதிக்கப்பட்ட நீலமணிகள்போல ஒளிர்கின்றன. அவற்றிலே செந்தாமரையுங் குமுதமுஞ் செங்கழுநீரும் மலர்ந்து சிரித்து, மனத்தைக் கொள்ளைகொள்ளுகின்றன.

அந்தச் செந்நெற் கழனிகளை யடுத்து, அக்கிராம மக்களின் வீடுகள் காணப்படுகின்றன. அவை பெரிய மாளிகைகளல்ல; சிறியனவும் பெரியனவுமான மண் குடிசைகள். அக்கிராமத்திலுள்ள ஒருவீட்டையும் அங்கு

வாழ்வாரையும் அறிந்துகொண்டால், பெரும்பாலும் அக் கிராமத்தையும் அக் கிராம மக்களின் வாழ்க்கைமுறையை யும் அறிந்துகொண்டதுபோலாகிவிடும். அதோ, தெரி யும் அந்தவீடு சிவராமனுக்குச் சொந்தமானது. அவ் வீட்டைச் சூழவரப் பரந்த நிலமுண்டு. அதன் மேற்றிசை யிலே பத்துப் பன்னிரண்டு தென்னைமரங்களும் அவற்றி னிடையே அடிபெருத்து நுனிசிறுத்து, சிறியனவும் பெரி யனவுமாகத் தோன்றும் வைக்கோற்போர்களுங் காட்சி யளிக்கின்றன. வடகிழக்கு மூலையிலுள்ள கிணற்றைச் சூழவர, வாழைத்தோட்டமுண்டு. வாழைகளிற் சில, பருவ மங்கையரைப்போல மதர்த்துப் பூரித்து மனத்தை மகிழ்விக்கின்றன சில, தாய்மையடைந்து குலை சுமந்து தலை வணங்குகின்றன. அவ்வாழைத்தோட்டத்தின் காவலர் போல, கமுகுகள் அணியணியாய் நிற்கின்றன. அவற்றின் உச்சியிலே, செய்யனவான பழங்களும் பசியனவான காய்களுங் குலைகுலையாகத் தொங்குகின்றன. அவை, கமுகென்னுங் கன்னி, தன் கழுத்திலணிந்துள்ள பவள மாலை போலவும், மரகதமணிமாலை போலவும் மிளிர்கின் றன. நாலைந்து எலுமிச்சைகளுந் தோடைகளும் வாய்க்காற் கரையிலே செழித்து நிற்கின்றன. வீட்டின் தென் புறத்திலே, மாமரங்களும் பலாமரங்களும் விண்தொட வளர்ந்து, நாற்றிசையிலுங் கிளைகளைப்போக்கி இறுமாந்து நிற்கின்றன. வரையாது வழங்கும் வள்ளல்களைப்போன்று தீங்கனிகள் பலசுமந்து, கிளைக்கரங்களை அசைத்து 'வருக, வருக' என அழைக்கின்றன. அதோ, அந்தப் பலாமர நீழலிலே இரு எருத்துமாடுகள், கண்களை மூடியுந் திறந்தும் அடிக்கடி தலையாட்டியும் அசைபோடுகின்றன. தலை யாட்டும் போதெல்லாம் கழுத்திற் கட்டப்பட்டுள்ள சதங்கைகள் கலகலக்கின்றன. பளபளக்குங் கூரிய கொம்புகளும் பருத்துயர்ந்து சற்றுப் பின்சரிந்த ஏரியும் மொழுமொழுவென்ற உடலும் அவற்றின் கம்பீரத் தோற் றத்துக்குச் சான்று பகர்கின்றன. அவற்றினயலிலே பாற் பசுக்கள் கட்டப்பட்டு நிற்கின்றன. அவற்றின் இளங் கன்றுகள் அச்சமின்றி அங்குமிங்குந் துள்ளி விளையாடு கின்றன; 'அம்மா' என்ற தாயின் குரல்கேட்டு ஓடிவந்து

மடிமுட்டிப் பால் குடிக்கின்றன. வீட்டுக்கோடியிற் கட்டப்பட்டுள்ள தாயாடு, தன் குட்டிகளைக் கூப்பிடுகின்றது. குட்டிகளிரண்டுந் தாயின் குரலைக் கேளாமல் துள்ளித் திரிகின்றன. மாமரநிழலிலே நிற்கும் வண்டியிலே நாலைந்து சிறுவர் இருக்கின்றனர். ஒருவன் ஆசனத்திலமர்ந்து, தன் கையிலுள்ள தடியால் துலாவில் அடித்து "ஏய்...சூ...ஹா" என்று பலமாகக் கத்துகிறுன். வண்டி வெகு வேகமாக ஓடுவதாக எண்ணிச் சிறுவர் கைகொட்டி மகிழ்கின்றனர். "ஐயோ ...... அம்மா, அக்கா கிள்ளுகிறுள்" என்று, ஊஞ்சலாடிக்கொண்டிருந்த தங்கை வீரிட்டுக் கத்துகிறுள்; அதிகநேரமாகத் தங்கை தமக்கையை ஊஞ்சலாட விடாமையால் ஏற்பட்ட சிறுகலகம் அது. உடனே வண்டியிலிருந்த சிறுவர்கள் வேடிக்கை பார்க்கக் கூடிவிடுகிறுர்கள். அந்தச் சிறுமி அழுதுகொண்டு வீட்டைநோக்கி ஓடுகிறுள். தன் கணவனுக்கு உணவு பரிமாறிக்கொண்டிருந்த தாய் தன் சின்ன மகளை அணைத்துக்கொள்ளுகிறுள். அந்தக் கணவன் மனைவியரிடம் எவ்வித ஆடம்பரச் சின்னமும் இல்லை; எளிமைக்கோலமே தலைதூக்கி நிற்கின்றது. அவர்கள் உழைத்து உழைத்து உரமேறிய உடலினர். அவர்களது உழைப்பு, பலபல உருவங்களில் வீடெங்கும் நிறைந்து கிடக்கிறது. மாரிகாலத்திலே கழனிகளில் விளைந்த நெல் இரு கூடைகளில் நிரம்பிவழிகிறது. முற்றத்தில் இரத்தினக்கம்பளம் விரித்தாற்போல, மிளகாய்ப்பழம் காய்கிறது. புகையிலை பதப்படுத்தப்பட்டுத் தலைவாயிலில் அடுக்கப்பட்டிருக்கிறது. தோட்ட நிலத்திலிருந்து வந்தவை அவை. சிறுகுன்றுபோலக் குவிக்கப்பட்டுள்ள குரக்கன் கதிரும் பயற்றின் நெற்றும் உருட்டிவிடப்பட்ட பூசினிக் காய்களுங் கோடையிலே வயல் தந்த செல்வங்கள். அவர்கள் தாமுமுண்டு பிறர்க்கும் அளித்து இன்பங் காணுகிறுர்கள். இத்தகைய காட்சிகளை அக்கிராமத்திலுள்ள ஒவ்வொரு வீட்டிலுங் காணலாம்.

அன்று திருக்கார்த்திகை. அதுவே அக்கிராமத்திலுள்ள முருகன் கோவிலில் நடக்கும் பெருவிழா; ஊரவர்கள் அதி ஆவலோடு காத்திருக்குந் திருவிழா. அன்று மாலையிலேயே அவ்வூர் மக்களனைவருங் கூடிவிடுகின்றனர்.

அயலூரவர்களும் பெயர்பெற்ற அத்திருவிழாவைக் கண்டு களிக்க, சாரிசாரியாக மாட்டுவண்டிகளில் வந்து சேர் கிறார்கள். ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மக்களைக் கொண்ட சனசமுத்திரம் அலைமோதுகிறது. உள்வீதியிலே பக்திப் பெருக்குடையோர் கூடிய சபையிலே, அறிஞர் ஒருவர், “முருகன் பெருமை” என்னும் பொருள்பற்றிக் கதாப் பிரசங்கம் நிகழ்த்துகிறார். அதில் மனஞ்செல்லாதவர்கள், மேற்புறத்து வெளிவீதியை நோக்கிச் செல்லுகின்றார்கள். அங்குள்ள கொட்டகையிலே பல கலைநிகழ்ச்சிகள் அரங் கேறுகின்றன. முதலில் கிராமத்துச் சிறுவர் சிறுமியரின் கிராமிய நடனங்கள் அரங்கேற்றப்படுகின்றன. அதனைத் தொடர்ந்து கிராமத்துக் கட்டிளங் காளையரின் சிலம்ப வித்தையும் மற்போரும் இடம்பெறுகின்றன. அவை நிறை வெய்தியதும் நாட்டுக்கூத்து ஆரம்பமாகிறது. அது “காத்த வராயன்” கூத்து. அத்தினத்துக்கென்றே கிராமத்து வாலிபர்கள், முறைப்படி அண்ணாவியின் சொற்கேட்டுப் பழகிய கூத்து அது. அது முடிவடையுந்தருணத்திலே கிழக்குவீதியிலே மேளக்கச்சேரி ஆரம்பிக்கிறது. வெளி யூர்களிலிருந்து வந்த புகழ்பெற்ற மேளக்காரரின் இன்னிசை வெள்ளம் அச்சூழலெங்கும் பரக்கிறது. நேரம்போனதை எவரும் உணரவில்லை. கோவில்மணி “டாண், டாண் ...... டாண், டாண்” என்று ஒலித்த போதுதான் எல்லோரும் உட்கோவிலைநோக்கி விரை கின்றனர். முருகப்பெருமானுக்கு முறைப்படி பூசை நிகழ்கிறது. பின்னர் முத்துப்பல்லக்கிலே சுவாமி வீதி வலம் வருகிறார். கர்ப்பூரச்சட்டியைத் தலையிலே தாங்கிக் கொண்டு பெண்கள் பலர் செல்கின்றனர். ஆவேசங் கொண்டு ஆண்களும் பெண்களும் ஆடுகின்றனர். “முருகனுக்கு அரோகரா, கந்தனுக்கு அரோகரா” என்ற ஒலி விண்ணை முட்டுகிறது. மேளவாத்தியம் ஒருபுறம் முழங்குகிறது. ஒருபுறம் கரகங்களுங் காவடிகளுந் தாளக் கட்டோடு ஆடுகின்றன. பொய்க்காற்குதிரை நடனம் ஒருபுறம் நிகழ்கின்றது. இத்தனை வரிசைகளோடு முருகப் பெருமான் பவனிவருகிறார். அங்கு கலையழகும் பக்திப் பெருக்கும் இணைந்து பிணைந்து மனத்தை மயக்குகின்றன.

அக்கிராமத்தில் விவசாயிகளோடு கொல்லவேலை, தச்சுவேலை, நெசவுவேலை முதலிய பல தொழில் செய்வோருங் கூடிவாழ்கின்றனர். ஒவ்வொருவனுந் தத்தம் தொழில்களைச் செவ்வனே செய்வதன்மூலம் தானும் வாழ்கின்றான்; பிறர்க்கு உதவிபுரிந்து மற்றவர்களையும் வாழவைக்கிறான். அங்குள்ள கிராமமுன்னேற்றச் சங்கங்கள் விவசாய முயற்சிகளையும் பிறதொழிற்றுறைகளையும் நவயுக வியல்புக்கேற்ப மெல்ல மெல்ல மாற்றுவதிலே பெரும்பணிபுரிகின்றன. சமய அறிவை வளர்ப்பதிலும் மூடநம்பிக்கைகளை அகற்றுவதிலுந் தொண்டுபுரிகின்றன. அங்குள்ள மருத்துவநிலையம் மக்களின் நோயற்றவாழ்வுக்கு உறுதுணையாக விளங்குகின்றது. கிராமத்துச் சிரேஷ்ட பாடசாலையில் ஏட்டுக்கல்வியோடு, விவசாயக் கல்வியுந் தொழிற்கல்வியும் போதிக்கப்படுகின்றன. அது செவ்வனே நடைபெறுதற்குக் கிராமமக்கள் ஒத்துழைக்கிறார்கள். அறிவுத்துறையிலும் பண்பாட்டுத்துறையிலும் அங்குள்ள சனசமூகநிலையம் செய்யுஞ் சேவை அளவிடற்கரியது. இத்தகையதொரு கிராமம் என் மனத்தைக் கவர்ந்து, கொள்ளைகொண்டதில் ஆச்சரியமில்லையல்லவா?

# 26

## ஈழத்துத் தமிழ்ப் புலவர் ஒருவர்

### [சோமசுந்தரப் புலவர்]

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்: ஈழத்துப் புலவர் பரம்பரை.
2. புலவரின் வாழ்க்கை வரலாறு.
3. புலவரின் தோற்றப் பொலிவு.
4. அவரது கவிதைச் சிறப்புக்கள்.
5. அவர் உயரிய குழந்தைக் கவிஞர் என்பது.
6. முடிபு.

ஈழத்துப் புலமை வெளிப்பாடு இன்று நேற்றுத் தோன்றியதொன்றன்று. அஃது ஓர் அணையா விளக்கு. ஈழத்துப் பூதந்தேவனார் என்ற புலவர் பெருமான், கடைச்சங்கத்தில் ஏற்றிவைத்த அச் சுடரொளி, அணையாமல் இன்றுவரை புலவர் பலராலே, காலத்துக்குக் காலம் இடையீடின்றிக் காக்கப்பட்டு வந்துளது. அன்று தொடக்கம் ஈழத்திருநாட்டிலே தமிழை உயிரெனப் போற்றிக் காத்த புலவர்கள் பலராவர். அவர்கள் ஓரூரரல்லர்; ஒருகுடிப்பிறந்தாரல்லர்; ஒருகாலத்தாரல்லர். அவர்கள் வரலாற்றை 'ஈழநாட்டுப் புலவர் சரிதம்' விரிவுபடப் பேசிச்செல்கின்றது, எனினும், அவர்களுள்ளே நல்லூர் சின்னத்தம்பிப்புலவர், சுன்னுகம் முத்துக்குமார கவிராசசேகரர், இருபாலைச் சேனுதிராய முதலியார், சுன்னுகம் குமாரசுவாமிப் புலவர் என்போர் குறிப்பிடத் தக்கவர்கள். வாழையடி வாழையாக வந்த அந்தப் புலமைப் பேரியாற்றிலே, மரபுபிறழாத பழைமையும்

அதனடியாகப் பிறந்த புதுமையும் ஆகிய இருபெருங் கிளைகள் சங்கமித்தன. அந்தச் சங்கமமாய், இந்நூற்றாண்டின் ஒப்பற்ற புலவர்சிகாமணியாய் விளங்கியவர் நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவராவர்.

புலவர் அவர்கள், 1878ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்து நவாலியூரிலே, கதிர்காமருக்கும் இலக்குமிப்பிள்ளைக்கும் தவப்புதல்வராக அவதரித்தார்கள். இளமைப்பருவத்திலே, தாய்மொழியாஞ் செந்தமிழை மானிப்பாய், அருணசலப்புலவரிடமும் உலகப்பொதுமொழியாம் ஆங்கிலத்தை மானிப்பாய், மாரிமுத்து உபாத்தியாயரிடமுங் கற்றார்கள். இரு மொழிகளிலும் வல்லுநராய் விளங்கிய அவர், தம் மியல்புக்கேற்ற ஆசிரியப் பணியை மேற்கொண்டார். சித்தங்கேணியை யடுத்த கலட்டியென்னுமிடத்திலே தாபிக்கப்பட்ட ஆங்கில பாடசாலையிலே ஆங்கிலம், தமிழ், இதிகாசம் ஆதியாம் பாடங்களை மாணுக்கர் உளங்கொள்ளத் தக்கவகையிலே கற்பித்தார். அவரது கற்பிக்குமாற்றலை வியந்து பாராட்டாத மாணுக்கரும் கல்வியதிகாரிகளும் இலர், என்றே கூறலாம். இந் நிலையிலே, பெங்களூரினின்று யாழ்ப்பாணத்துக்கு எழுந்தருளிய சுப்பிரமணிய சாமியாரின் அருள்நோக்கம் புலவரை ஆட்கொண்டது. புலவர், அவரைத் தம் ஞானகுருவாக வரித்து, வழிபட்டு வரலானார். இல்லறவாழ்க்கையில் ஈடுபட விருப்பற்றவராய் அவர்கள் வாழ்ந்தார்களாயினும், ஞானகுருவின் கட்டளையைச் சிரமேற்கொண்டு, தமது தாய்மாமனாாகிய வேலுப்பிள்ளையின் மூத்த மகளாகிய சின்னம்மையை மணஞ்செய்து, மக்கட்பேறுபெற்று, இல்லறமென்னும் நல்லறத்தைச் செம்மையுற நடாத்தினார்கள்.

புலவர் அவர்கள் தங்கமயமான தோற்றமுடையவர்கள். அடுத்ததுகாட்டும் பளிங்குபோல, அவரது அகத்தினழகை முகம் தெளிவாகக் காட்டிற்று. தங்கத் தகட்டிலே மிக மெல்லிய வெள்ளி இழைகளைப் பதித்தாற்போன்று விளங்கிய அவருடைய அழகார்ந்த தாடி கார்றிலசைந்து சோபித்தது. அதனை அடிக்கடி அவரது செம்பவளவிரல்கள் உளர்ந்தன. நெற்றியிலே திருநீற்றின் முக்குறியும் சந்தன

திலகமும் அதன் நடுவிலே அளவாக அமைந்த குங்கும திலகமும் அவரைச் சிவப்பழமாகக் காட்டின. அவர் வெண்டுகில் புனைந்து மெல்லென நடைபயின்று வருவதே ஒரு தனியழகாக விளங்கியது.

தமிழ் கூறும் நல்லுலகம் இன்று அவரைப் போற்றிப் புகழ்வதற்குக் காரணம், அவரது வாழ்க்கைச் சிறப்பன்று; சீரிய தோற்றப் பொலிவுமன்று. அவரது புலமைச் செழிப்பும் அதன் வெளிப்பாடுமே அவருக்கு அழியாப் புகழ் தந்தன. கற்பனைதிமிருங் கருத்தாழங் கொண்ட கவிதைகள் மூலமே அவர் இறவாப் புகழ் பெற்றார். சிறியவர் முதல் முதியவர்வரை பாடிப் பாடிச் சுவைக்கக் கூடிய கவிதைகளிலேயே அவர் இன்றும் உயிர் வாழ்கின்றார். அவரது மனம் உணர்ச்சிகளின் விளைநிலம்; கற்பனையின் ஊற்றுக்கால். பொங்கியெழும் உணர்ச்சித் துடிப்பின் வெளிப்பாட்டுக்கு 'ஆடு கதறியது' என்ற பாடல் நல்லதோர் உதாரணம். அதிலே அவர், தன்மகனை இழந்த தாயாடாகவே மாறிப் புலம்புவதை உணர முடிகிறது. அந்தத் தாயாடு, 'வன்னப்பொற் றேரேறி, மாப்பிள்ளை போற் சென்ற' தன் மகனை மனிதர் வெட்டியமுறையைக் காண்கிறது.

"காலிலொரு பாவி கழுத்திலொரு மாபாவி
கோலி யிழுக்கக் கொடும்பாவி வெட்டினனே".

என்று புலம்புகின்றது. பின்னர்,

"உன்றன் தசையரிந்தே ஓலைக் குடலைகட்டி
சென்றுசென்று விற்றனரோ தின்றுபசி யாறினரோ."

என்று இரங்குகின்றது. இந்தப் பாடலின் ஒவ்வொரு சொல்லும் புலவரின் அருள் நிறைந்த நெஞ்சத்தை மாத்திரமன்றி, மூட வழக்கமனைத்தும் மண்மூடிப்போக வேண்டுமென்ற துடிப்பினையுங் காட்டுகிறது. வாழையடி வாழையாக நிலைபெற்றுவருந் தமிழ்ப் பண்பாட்டிலும் அதன் மரபுமுறையிலும் ஊறித் திளைத்தவர் சோமசுந்தரப் புலவர். அத்திளைப்பின் சுகத்தை 'வாழையும் புலவனும்' என்ற பாடலில் அனுபவிக்க முடிகிறது. அதனைப்

படிக்கும்போது சங்கச்செய்யுள் ஒன்றினைப் படிப்பது போன்ற உணர்வு உண்டாகிறது. அதில் வரும் "குறிப் பினிற் கொடுத்துக் கொடும்பசி களைந்தனை" என்ற தொடர் பண்பட்ட தமிழ்மரபைக் காட்டுகிறது. புலவர் பெருமானின் கற்பனைவளம் அவரது எல்லாப் பாடல்களி லும் பூவும் மணமும்போற் பிரிப்பின்றிக் கலந்திருக்கின் றது. இலங்கைவளங் காண விரும்பிய புலவர், கலைப் பட்டினமுங் கரைப்பட்டினமுந் தலைப்பட்டினமுமான கொழும்பைக் கண்டு, அப்பால், 'அதிரவரு மாணிக்க கங்கையினில் மூழ்கி, அன்போடு சிவாயவென அரு ணீறு பூசி', 'கந்தா சுகந்தா' என்று பாடி, மலைநாட்டை அடைகிறார். அங்கு மகாவலிகங்கைத் தாய் பேணி யமுதூட்டி வளர்க்கும் 'பேராதனைப் புதிய நந்தவன மகவைக்' கண்டு களிக்கின்றார். வரும்வழியில் அநுரதபுரக் காட்டைக் காண்கிறார். அங்குள்ள வானரங்களைக் கண்ட போது நகைச்சுவையோடு கற்பனையூற்றுச் சுரக்கிறது:

"வண்ணனின் மொழிகேட்டு வனம்விடுத்த சீதையினை
இந்நாளுந் தேடுதல்போல் இருங்குரங்கு நெருங்கிடுமே"

எனப் பாடுகிறார். பிரயாணத்தினால் களைப்படைந்த புலவர் கன்னியாயிலுள்ள வெந்நீரூற்றில் முழுகிக் களைப்பு நீங்கிக் களிக்கிறார்; அருமையான உவமைநயம் மிளிரப் பாடுகிறார்:

"காதலனைப் பிரிந்தவளின் மனம்போல ஒன்று
கவிபாடிப் பரிசுபெறான் மனம்போல ஒன்று
தீதுபழி கேட்டவன்தன் மனம்போல ஒன்று
செய்தபிழைக் கழுங்குபவன் மனம்போல ஒன்று
நீதிபெறு வேழைதுயர் மனம்போல ஒன்று
நிறைபழித்த கற்புடையாள் மனம்போல ஒன்று
காதுமழுக் காறுடையான் மனம்போல ஒன்று
கனலேறு மெழுநீர்கள் உண்டுகன்னி யாயில்."

இவையெல்லாம் அவரது கவிதா சமுத்திரத்தினின்றுஞ் சிதறிய சில துளிகள்.

இவையெல்லாவற்றினும் மேலாக, சோமசுந்தரப் புலவர், குழந்தைக்கவிஞர் அனைவரிலுந் தலைசிறந்தவர். நமது தமிழ்க்குழந்தைகள் குதலைமொழியிற் புலவர் அவர்களின் "பருத்தித்துறை யூராம் பவளக்கொடி பேராம், பாலெடுத்து விற்பாள் பாவைதனை யொப்பாள்" என்று பாடி மகிழ்வர்; "ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே", "கத்தரித் தோட்டத்து மத்தியிலே நின்று காவல் புரிகின்ற சேவகா", "வீமா வீமா ஓடிவா" போன்ற பாடல்கள் சிறுவர் சிறுமியர் மத்தியிலே வெகு பிரசித்தமானவை. 'சிறுவர் செந்தமிழ்' என்ற கவிதைத் தொகுப்பு சிறுவர்க்கானதொரு செந்தமிழ்ச்சோலை. அங்கே கண்ணுக்கினிய காட்சிகள் காணப்படுகின்றன. செவிக்கினியனவுஞ் சிறுவர் சிந்தைக்கேற்றனவுமான ஓசைநயம் நிறைந்த பாடல்கள் ஒலிக்கின்றன; 'செல்வமாமி கொழுக்கட்டை'யும் 'ஆடிப்பிறப்புக் கூழு'ம் இனிக்கின்றன. குழந்தைகளின் அறிவுக்கு விருந்திடத் தக்கனவும் வளர்க்கத்தக்கனவும் 'சிறுவர் செந்தமிழி'ல் உண்டு. அதனால், குழந்தைகள் அவரைச் செல்வமாக 'தங்கத் தாத்தா' என அழைத்து மகிழ்வர்.

புலவர் அவர்கள் பதினாயிரத்துக்கு மேற்பட்ட செஞ்சொற் கவிதைகள் பாடியுள்ளார்கள். அவை பல பல நூல்களாகக் காட்சியளிக்கின்றன. அச்சுவாகனமேறிய நூல்களிலே 'கதிரைச் சிலேடை வெண்பா', 'சிறுவர் செந்தமிழ்', 'தாலவிலாசம்', 'இலங்கை வளம்' என்பன ஒவ்வொரு வகையிற் சிறப்புடையன. நூல்வடிவு பெருதனவற்றை நூல்களாக்கித் தமிழ்வழங்கும் நிலமெல்லாம் பரவச் செய்தலும் அந்நூல்களிலே தேங்கிக் கிடக்குங் கவிதைத்தேனை உண்டு. திளைத்து உய்திபெறுதலுந் தமிழ் மக்கள், புலவர் அவர்களுக்குச் செய்யும் கைம்மாருகும்.

# 27

## நூல்களின் பெரும் பயன்கள்

குறிப்புக்கள் :

1. ஆரம்பம் : கல்வியின் சிறப்பு.
2. நூல்; அறிவைப் பரப்பும் உயரிய கருவி.
3. நூல்கள் பூரணவாழ்வுக்கு வழிகாட்டுவன.
4. நூல்கள் அறிவுக் களஞ்சியங்கள்.
5. நூல்கள் நல்ல நண்பர்களிலுஞ் சிறந்தன.
6. நூல்கள் நன்முறையிற் பொழுதைக் கழிப்பதற்குரிய கருவிகள்.
7. முடிபு [தொகுப்புரை].

"கண்ணுடையர் என்போர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்."

என்ற வள்ளுவர் வாய்மொழிப் பொருளை உலகம் ஒருமுகமாக ஒப்புக்கொள்ளும் நிலை மலர்ந்துவிட்டது. அவ்வாய்மொழி, ஊனக்கண்ணினும் ஞானக்கண்ணே சிறந்தது என்ற கருத்தினைத் தெளிவுறக் காட்டுகிறது. ஊனக் கண்ணின் காட்சிக்கு ஓரெல்லையுண்டு. அவ்வெல்லைக்கு அப்பாற்பட்ட எதனையும் அது காணல் அரிது. அன்றியும் அது நோயாலும் மூப்பாலுங் கூர்மைகுன்றிக் காட்சிப் பண்பை யிழத்தல் கூடும். ஆயின், அறிவுக்கண்ணோ எதனாலும் தடைப்படாது, கண்காணுத் தேயங்களில் நிகழ்வனவற்றையுங் காணுந்தகையது; நிகழ்கால நிகழ்ச்சிகளை மாத்திரமன்றி, இறந்தகாலத்தில் நிகழ்ந்தனவற்றையும் எதிர்காலத்தில் நிகழ்வனவற்றையுங் காணும் ஆற்றல் பெற்றது. அது நோயாலோ மூப்பாலோ ஒளியிழப்ப

தில்லை. அதனாலேயே கல்விகற்று அறிவுபடைத்தோர் "கண்ணுடையர்" எனச் சிறப்பிக்கப்படுகின்றனர்; கல்லார் அறிவிலராய், ஊனக்கண்ணாலும் பயன் கொள்ள முடியாமையால், "முகத்திரண்டு புண்ணுடையர்" என இழிக்கப்படுகின்றனர். இக்குறளொன்றே அறிவு வளர்ச்சிக்கு உபகாரப்படுங் கல்வியின் சிறப்பையும் பயனையும் எடுத்துக்காட்டப் போதியதாகும்.

இத்தகைய கல்வியைப் பெற்றுப் பயன் கொள்வதற்கு இன்றுள்ள உலகிற் பலபல சாதனங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் நூல்கள், வானொலி, பேசும்படக் காட்சி, தொலைக்காட்சி, சித்திரம், பிரயாணம் என்பன குறிப்பிடத்தக்கன. எனினும், கல்வியென்னுந் தீபம் உலகில் ஏற்பட்ட அன்றுதொட்டு இன்றுவரை, அதனை யணையவிடாது நெய்யிட்டு ஒளிகாலச்செய்த பெருமை நூல்களுக்கேயுண்டு. மற்றைய சாதனங்கள் கல்வியறிவு வளர்ந்தபோது கண்டுபிடிக்கப்பட்டவை. எனவே, கல்வியைப் பரப்பற்கமைந்த கருவிகளனைத்தினுக்கும் தாயாக விளங்குவது நூலாம். அன்றியும் வானொலி, பேசும் படக்காட்சி போன்றன ஓரளவு வாழ்க்கைவசதி படைத்தவர்களாலேயே பயன்படுத்தப்படுவன; பாமரர்களின் கைக்கெட்டாத விலையுயர்வுடையன. அவை கல்வித் துறைகளனைத்தையும் அறிவிக்கக் கூடியனவல்ல; கரையில்லாக் கல்வியின் ஒவ்வொரு சிறுபகுதியையே அறிவிக்கக்கூடியன. ஆனால், நூல்கள் பாமரமக்களாலும் பயன் கொள்ளத்தக்க வகையில் உள்ளன; கல்வித்துறைகளனைத்தையுந் திறம்பட அறிவிக்க வல்லவை. எனவே, கல்விப் பெருஞ்செல்வத்தை உலகுக்கு வரையாது வழங்கும் வள்ளன்மை நூல்களுக்கன்றிப் பிறிதெதற்கு மில்லை.

இன்றுள்ள நிலையில் உலகிலுள்ள நூல்களனைத்தையும் ஒன்றுவிடாது எரியூட்டியோ, கடலிலிட்டோ அழித்து விட்டால் என்ன நிகழும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். நூல்களில்லாமையைக் கற்பனைக்கண் கொண்டு கூடக் காணவிரும்பாத அளவுக்கு, அவ்வ

மக்கள் வாழ்வோடு இணைந்துவிட்டன. நூல்களால் மக்கள் காலங்காலமாக அளப்பரிய நற்பயன்கள் பெற்று வந்தமையே அப்பிணைப்புக்குக் காரணமாகும். அந் நற்பயன்களை மனிதனலே தேடற்பாலனவாய பெரும் பொருள்கள் என ஆன்றேர் கூறுவர். அவை அறம், பொருள், இன்பம், வீடு என நால்வகைப்படும். அவற்றையே புருடார்த்தங்கள் எனவும் அழைப்பர். மனிதன் முழுமையான வாழ்வு வாழ்வதற்கு அவை இன்றியமையாதன வாகையால், அவ்வாறு புகழ்ந்துரைக்கப்பட்டன. தனி மனித வாழ்வுக்குஞ் சமூக வாழ்வுக்குமாகத் தீயன நீக்கி, நல்லன கொள்ளும் அறங்கள் பலவும் மனிதனுள்ளத்தில் வளர்தல் வேண்டும்; இந்த அறவுணர்வே, உலக நல்வாழ்வு முளைகொள்ளுமிடம். அறவுணர்வு மிக்கவன், அறவழிநடந்து, தீவினைவிட்டுப் பொருளீட்ட விழைவான். அவ்வித பொருளை நுகர்தலே மேலான இன்பம். இன்பத்தின் நிலையாமையையுணர்ந்து, உலகப்பற்றை நீக்கி, தவஞ் செய்து விடுதலையடைய முயலுதலே வீடு எனப்படும். இத்தகைய நெறிமுறை, நல்வாழ்வினைப் பருப்பொருளாகக் கண்டுணர்தற்கேற்ற வாழ்க்கைச் சட்டகம் எனவும் கருதப்படும். நாற்பொருள்களில் ஒவ்வொன்றினையும் விரிவாகவும் மனங் கொள்ளத்தக்கவகையிலும் பலபல முறைகளினல் நூல்கள் அறிவுறுத்துகின்றன. "அறம் பொருள் இன்பம்வீ டடைதல்நூற் பயனே" என்ற சூத்திரம் நூல்களின் பயன்களைக் கூறுவதிலிருந்து இவ்வுண்மை புலனுகும். எனவே, இகவாழ்வுக்கும பரவாழ்வுக்குந் துணைபுரியும் வகையில், மனிதனின் பூரணவாழ்வுக்கு வழிகாட்டியாயமைவதே நூல்களின் முதற்பயனும் பெரும்பயனுமாம்.

வேதங்களும் வேதகாலத்து மகரிஷிகள் கண்ட ஆழ்ந்தகன்ற தத்துவ தரிசனங்களுஞ் செவிவழியாகக் கேட்கப்பட்டும் மனத்திற் பதிக்கப்பட்டும் பின்னர் ஏடுகளிற் பொறிக்கப்பட்டும் பிற்காலத்தில் நூல்களாக்கப்பட்டும் காக்கப்பட்டு வந்துள்ளன. காலத்துக்குக்காலம் உலகிலே தோன்றிய அறிஞர்களின் சிந்தனைகள், தத்துவக் கோட்

பாடுகள், அறிவியல்முடிபுகள், ஆய்வுகள் என்பனவற்றை இன்றும் நாம் நூல்கள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. உலகப் பேரிலக்கியங்கள் யாவும் நூல்வடிவி லமைந்து, காலவெள்ளத்தைக் கடந்து மக்களின் மனவுணர்வை வளர்க்கக் காரணமாகின்றன. இதனுல், அவை காலத்துக்குக் காலம் மலர்ந்த அறிவுத்திரளை சிதைவும் அழிவும் ஏற்படாவண்ணம் பாதுகாத்து வைக்குங் களஞ்சியங்கள்; வேண்டியவர்கள் வேண்டியபோது வேண்டியவற்றைப் பெற்றுத் துய்ப்பதற் கேற்றவகையில், பூட்டுந் திறவுகோலுமின்றி, அடையாத நெடுங்கதவோடு விளங்குங் களஞ்சியங்கள்.

நூல்கள் நல்ல நண்பர்களிலும் பார்க்க, ஒருவனுக்கு உறுதுணையாக அமைய வல்லன. ஒருவன் நெறியல்லா நெறிச் சென்றவழி, இடித்துரைத்து நன்னெறி காட்டவல்ல நண்பர்கள் கிடைக்கப்பெறுதல் அரிது. அவர்கள் பல நற்பண்புகள் உடையோராய் அமைதல் அதனினும் அரிது. அந் நற்பண்புகளோடு, பலதுறைகள் பற்றிய தன் எண்ணங்களையுங் கருத்துக்களையும் பரிமாறி, வளர்ச்சிக்குத் துணைபுரியக்கூடிய நண்பர்களைப் பெறுதல் அரிதினுமரிது. அத்தகைய நண்பர்கள் வாய்க்கப்பெற்றுலும், அவர்கள் இடத்தாலுங் காலத்தாலுந் தடைப்பட்டுக் கிடைத்தற்கரியராவர். அத்தகைய நண்பர்களின் உதவிகளனைத்தையும் நல்ல நூல்கள் செய்கின்றன. அவை அறநெறி இது வெனக் காட்டி இடித்துரைக்குந் தகையன; அவை பண்பாடுள்ள சான்றேர்களால் ஆக்கப்பட்டமையால், 'குன்றக்கூறல், மிகைபடக்கூறல்' முதலிய பத்துக் குற்றங்களுமின்றி, 'சுருங்கக்கூறல், விளங்கவைத்தல்' முதலிய பத்தழகும் பெற்றுப் பொலிவன; ஒருவனது பலதுறைகள் பற்றிய கருத்துக்களுக்குஞ் சிந்தனைகளுக்கும் உரமளித்து, அவனை வளர்த்துவிடுஞ் சிறப்புடையன. அன்றியும் அவை காலத்தாலோ இடத்தாலோ தடைப்படுதலில்லை. பலபல காலத்திலே பலபல இடங்களிலே எழுந்த நூல்களாயினும் அவை ஒருவன் விரும்பியபோது அவனிடம் வந்து பழகும் இயல்பின.

"நவில்தொறும் நூனயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு"

என்ற வள்ளுவர் வாய்மொழியை ஊன்றியுணரும்போது இவ்வுண்மை புலனாகும்.

ஓய்வுநேரத்தை இன்பமாகவும் பயன்படத்தக்க முறையிலும் கழிப்பதற்கு நூல்கள்போற் சிறந்தன பிறிதில்லை. ஓய்வுநேர உபயோகத்துக்காகப் படக்காட்சி போன்ற பல்புல அறிவியற் சாதனங்களுஞ் சூதாட்டம் போன்ற பல்பல தீய வழிகளுங் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. முன்னையன குற்றமற்றனவாயினும் பொருட்செலவின்பாற் படுவன. பின்னையன தீமை நிறைந்தனவாய் பண்பையும் பணத்தையும் அழித்துவிடுவன. ஆயின், நூல்களோ தீங்கற்றனவாய்ச் சுகஞ் செய்கின்றன. பொழுது போக்கிற்காக நூல்களை வாசித்தலால், நாளடைவில் வாசிக்கும் பழக்கமுங் கற்கும் ஆர்வமும் பிறக்கின்றன. இப்பழக்கமும் ஆர்வமும் முதிர்ச்சியடையும்போது, பொழுதுபோக்குக்குரிய நூல்களையன்றி, அறிவுபயத்தற் கேற்ற நூல்களையும் படிக்கும் பண்பு பிறக்கிறது. இப்பண்பு அவனிற் பதிந்து வாழ்வினைச் செம்மைப்படுத்துகின்றது.

மனிதவாழ்வுக்கு மிக இன்றியமையாத கல்வியென்னுஞ் செழுஞ்சுடரை உலகின் மூலைமுடுக்கெல்லாம் பரவச் செய்யும் ஒப்பற்ற கருவிகளாக நூல்கள் மதிக்கப்படுகின்றன. அவை மனிதன் பூரணவாழ்வு வாழ்வதற்கு வழிகாட்டிகளாய் அமைகின்றன; அறிவென்னும் பெருநிதியத்தை விரும்பியவர்கள் விரும்பியவேளையில் விரும்பிய அளவு பெற்று அனுபவித்து இன்புறுதற்கமைந்த களஞ்சியங்களாய் அவை விளங்குகின்றன; நல்ல நண்பர்களிலும் பார்க்கப் பேருதவிபுரிகின்றன; அவப்பொழுதையும் தவப்பொழுதாய்க் கழித்தற்கேற்ற அருமருந்தன்ன கருவிகளாய் மிளிர்கின்றன. சுருங்கக்கூறின், இன்றுள்ள நிலையில் நூல்கள் ஆருயிர் போன்று மிக அருமையாகப் போற்றிப் பயன்கொள்ளப்பட வேண்டியனவாம்.

25/40 30/60 → 55-0

# 28

## வேலை நிறுத்தங்களும் அவற்றின் விளைவுகளும்

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்.
2. வேலைநிறுத்தக் காரணங்கள்.
3. வேலை நிறுத்தத்தால் தொழிலாளர் அடையும் நன்மைகள்.
4. வேலை நிறுத்தத்தால் விளையும் தீமைகள்.
5. முடிபு: தொழிலாளர், தொழிலதிபர் ஒற்றுமை.

**ப**த்தொன்பதாம் நூற்றுண்டின் ஆரம்பத்திலே, அறிவுத்துறையில் ஏற்பட்ட மலர்ச்சி காரணமாக, பலபல புதிய சத்திகள் கண்டறியப்பட்டன. அவை கைத்தொழிற்றுறையிலே வியக்கத்தக்க புரட்சியை உருவாக்கின. அக் கைத்தொழிற்புரட்சி, நீண்டகாலமாய் நிலவிவந்த சமுதாய அமைப்பை மாற்றியமைத்தது; வரலாற்றிலே புதியதொரு திருப்பத்தை யுண்டாக்கியது. கைத்தொழிற் புரட்சியால் தொழிலாளர் இனம் என்னும் ஒரு புதிய சமுதாய அமைப்பு அரும்பத் தொடங்கியது. தொழிற்றுறைகள் பெருக்கமடையத் தொடங்கிய காலத்திலே, தொழிலாளர் தொழிலதிபர்களின் வன்பிடியுட் சிக்கி, சுகாதாரமற்ற சூழலிலே, இரப்பகலாக உழைத்தபோதிலும், உண்டியும் உடையும் உறையுளும் பெறமுடியாத நிலையிலே அடிமைகளாய் உழன்றனர். தொழிலாளர்களின் தனிப்பட்ட துன்பக்குரல் தொழிலதிபர்களின் செவிக்கு எட்டவில்லை. அவர்களும் பணம் குவிப்பதையே இலட்சியமாக்க்

கொண்டு மனிதாபிமானம் மறந்து கண்மூடி மௌனிகளாய் விளங்கினர். இந்நிலை நெடுநாளாக நீடிக்கவில்லை. தொழிலாளர் ஒன்றுபட்டுத் தொழிற்சங்கங்கள் அமைத்து, தமது நியாயபூர்வமான கோரிக்கைகளுக்காக வாதாடத் தொடங்கினர். ஒன்றுதிரண்ட அவர்களது உரிமைக்குரலின் சத்தியை உணர்ந்த தொழிலதிபர்கள் சிலர், நல்லெண்ணமும் சமரச மனப்பான்மையும் கொண்டு, சில சலுகைகளை வழங்கினர். சிலர் எதற்கும் இணங்கவில்லை. அதனால், அவர்களுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே பெரும் பிணக்கு ஏற்பட்டது. அதனைத் தீர்ப்பதற்குத் தொழிலாளர் தமது கடைசி ஆயுதமாக வேலைநிறுத்தத்தைக் கையாண்டனர். தமது கோரிக்கைகளின் நியாயப்பண்பை ஆட்சியாளருக்கும் பொதுமக்களுக்கும் உணர்த்தி, நீதிபெற முயற்சிக்குங் கடைசிச் செயலே அது.

வேலைநிறுத்தங்கள், தொழிலாளர் தமது நலவுரிமைகளைப் பெறுவது காரணமாக நிகழ்கின்றன. அவர்கள் ஓரளவாவது வளமானவாழ்வு வாழ்வதற்கேற்ற சம்பளம் பெறுதவிடத்து, கூடிய சம்பளங்கோரி வேலைநிறுத்தஞ் செய்கின்றனர். மனிதனின் உடற் கூற்றையும் மனப்பாங்கையும் உணர்ந்த அறிஞர், அவன் ஒருநாளில் எட்டு மணி நேரமே உற்சாகமாக வேலைசெய்தல் இயலும் எனக் கூறுகின்றனர். தொழிலதிபர்களிற் சிலர் இவ்வுண்மையைப் புறக்கணித்துத் தொழிலாளரைக் கூடிய நேரம் வேலைசெய்யும்படி வற்புறுத்தினர். இத் துன்பத்தைத் தாங்கமாட்டாத தொழிலாளர், குறிப்பிட்ட வேலைநேரங் கோரி, வேலைநிறுத்தஞ் செய்வர். சிலசமயம் மேலதிக நேரம் வேலைசெய்ய நேரிட்டால், அவர்கள் அதற்குரிய மேலதிகச் சம்பளம் கேட்பது நீதியின்பாற்படும். இவ்வுலக நீதி புறக்கணிக்கப்படும்போதும் வேலை நிறுத்தங்கள் நிகழும். எந்த வல்லவனும் ஆண்டு முழுவதும் தொழில்புரிதல் கனவிலுங் கருதமுடியாததொன்று. நோய் காரணமாகவுங் குடும்பநலனைக் கருத்திற் கொண்டுஞ் சிலநாட்களிலே வேலைசெய்ய முடியாதநிலை எவர்க்கும் ஏற்படும். இதனைக் கருத்திற்கொண்ட ஆட்சியாளர்,

சட்டப்படி சம்பளத்தோடு கூடிய விடுமுறை நாட்களாகச் சிலநாட்களைக் கருதுகின்றனர். இவ்விதம் உரிமையோ டொட்டிய விடுமுறை நாட்கள் கிடையாதபோதும் வேலை நிறுத்தங்கள் நிகழும். ஆட்சியாளரின் வன்முறை அதிகாரங் களைத் தளரச்செய்து, தமது அரசியல் உரிமைகளைப் பெறுதற்காகவும் வேலை நிறுத்தங்கள் நிகழ்வதுண்டு. அன்றியும் வேறுதொழிற்சங்க ஊழியர்கள், தமது உரிமை களுக்காகப் போராடி வேலைநிறுத்தஞ் செய்த வேளை யிலே, அவர்கள் போராட்டத்துக்கு அனுதாபங் காட்டும் முகமாக, வேலைநிறுத்தஞ் செய்தல், தொழிற்சங்கப் பண்பு களில் ஒன்றாக மதிக்கப்படுகிறது.

இவ்வித காரணங்களால் நிகழும் வேலைநிறுத்தங்க ளாலே தொழிலாளர் பலர் நன்மைகளை அடைகின்றனர். தொழிலாளர் போராட்டம் நடத்தும்போது சமுதாயமுந் தொழிற்றுறைகளும் பெருமளவு பாதிக்கப்படுதல் தடுக்க முடியாததொன்று. எனினுந் தொழிலாளர் கோரிக்கைகள் நியாயமானவையாயின், அவர்களது போராட்டம் பொது சன ஆதரவு பெற்று வெற்றி பெறும். வேலைநிறுத்த மென்னுந் தமது கடைசி ஆயுதத்தைப் பயன்படுத்துவ தனுலே, தொழிலாளரினம் ஒன்றுபடுகிறது; அவர்க ளிடையே பிரிக்க முடியாததோர் ஐக்கியம் உருவாகிறது. விடுமுறை நாட்கள், பொழுதுபோக்கு வசதிகள், வேலை நேர அளவு போன்ற பல சலுகைகளை வேலைநிறுத்தங்கள் அவர்களுக்கு வழங்குகின்றன. தொழிலாளர் ஓரளவில் வசதியான வாழ்வு வாழ்வதற்கேற்ற இல்லங்களையும் பிற சுகாதார வசதிகளையும் பெறுதற்கு வழிவகுப்பது வேலைநிறுத்தங்களெனின் அது மிகையாகாது. அன்றியும் நோயுற்ற காலங்களிலே இலவச மருத்துவ வசதி பெறு தலும் உழைத்துழைத்து வலிமை குன்றிய வயோதிப காலத்திலே அனுதைகளாகாது உபகாரச்சம்பளம் பெற்று அமைதியோடு வாழுதலும் வேலைநிறுத்தங்கள் தொழி லாளர்க்களித்த பெரும் பரிசுகளாம். தொழிலாளி ஒருவன் அகாலமரண மெய்திவிட்டால், அவன் கையை நம்பி வாழ்ந்த மனைவியும் மக்களும் விதவை, அனுதைகள்

உதவிநிதி பெறுதற்குங் காப்புறுதிப்பணம் பெறுதற்கும் வேலைநிறுத்தங்கள் வழி செய்கின்றன.

இவ் வேலைநிறுத்தங்களாற் சமுதாயத்திற்குச் சிலசில தீமைகளும் விளைகின்றன. வேலைநிறுத்தங்களாலே தொழில் நிலையங்களிலே, நாளாந்த வேலைகள் நடைபெறு தொழிகின்றன. அதனாலே பொருளுற்பத்தி தடைப்படு கின்றது; தொழில் நிலையத்தைச் சார்ந்து இயங்கும் பிற பல துறைகள் இயக்கமின்றி அழிந்து விடுகின்றன. அன்றியும், நாட்டு நலனுக் காதாரமான ஏற்றுமதி, இறக்குமதி ஆகிய துறைகள் செயலொழிகின்றன. நாட்டின் சீரான பொருளாதார வாழ்வு சீர்குலைந்து குழப்பமடைகின்றது. இந்நிலை உதயமாகவே, அத்தி யாவசிய தேவைப்பொருள்கள் கள்ள வியாபாரிகளின் இருட்டறையிற் பதுக்கப்பட்டு விடுகின்றன. அதனால் நாட்டிற் பஞ்சமேற்படுகின்றது; விலைவாசிகள் மலைபோல உயர்ந்துவிடுகின்றன. வேலைநிறுத்தங்கள் விரைவிலே தீர்க்கப்படாதபோது, இந்நிலை பூதாகாரமாக வளர்ந்து பயங்கரப் பேருருக் கொள்கிறது. இந்நிலையில் ஆட்சி யாளர் அடக்குமுறைச் சட்டங்களைக் கட்டவிழ்த்துவிடுவர்; வேலைநிறுத்தத்தில் அநியாயமாகத் தலையிட்டு, அதனை முறியடிக்க முயல்வர். ஒன்றுபட்ட தொழிலாளர் இயக் கங்களை முறியடிப்பதற்காக, ஐந்தாம்படையினர் தோன் றுவர்; அதனால், சீரானமுறையில் நடைபெற்ற போராட் டம், சிலசமயம் பிளவடைந்து சிதைவுறும்; அடிபிடி, கலகம், கொலை முதலிய வன்முறைச் செயல்கள் தலை காட்டும்; அதனால், விசனிக்கத்தக்க, அருவருக்கத்தக்க விளைவுகள் தோன்றுதலுமுண்டு.

வேலைநிறுத்தங்கள் நாட்டில் உருவாகாத முறையில் ஆட்சியாளருந் தொழிலதிபர்களும் வெகு நிதானமாகவுஞ் சாமர்த்தியமாகவும் மனிதப் பண்போடும் நடந்துகொள் ளுதல் வேண்டும். தொழிலாளர்களுந் தவிர்க்க முடியாத காரணங்களுக்கன்றி, சிறுச்சிறு விஷயங்களுக்காகப் போராட்டங்களை ஆரம்பித்துத் தமது ஆற்றலை வீணாக் குதல் கூடாது. தொழிலாளர்களுந் தொழிலதிபர்களும்

வேற்றுமைகளை மறந்துஞ் சகித்தும் ஒன்றுபடுதல் இன்றி யமையாதது. தொழிலதிபர்கள் மனிதாபிமானத்துடன் தொழிலாளர் நலம்பேணி நடத்தலாலுந் தொழிலாளர் நாட்டு நலனையுந் தொழில் முன்னேற்றத்தையுங் கருதி, அறவழியில் நடத்தலாலும் இருபகுதியாரிடை யேயும் சமரசநிலை உண்டாகும். ஒரு நாட்டின் பொரு ளாதாரச் செழிப்புக்குத் தொழிலதிபர்களுந் தொழிலா ளர்களும் அச்சாணி போன்றவர்கள். அவர்களின் ஒத்துழைப்பு மூலமே நாட்டின் பொருளாதாரம் என்னும் நெடுந்தேர் நன்னெறியிற் செல்லல் இயலும்.

## 29

# கூட்டுறவு இயக்கம்

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்.
2. கூட்டுறவு இயக்க வரலாறு.
3. பொதுவமைப்பு.
4. கூட்டுறவு இயக்கத்தின்பயன்கள் : விவசாயிகளுக்கு உதவி புரிதல்; மக்களிடஞ் சேமிக்கும் பழக்கத்தை யுண்டாக்கல்; சனநாயகவுணர்ச்சியை வளர்த்தல்; பலவகைத் தொழிலாளரிடையே ஒற்றுமையை யுண்டாக்கல்; பட்டினம், கிராமம் என்பனவற்றைத் தன்னிறைவுடையனவாக்கல்.
5. முடிபு.

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்குந் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்"

என, ஒற்றுமையின் உயர்வுபற்றியும் ஒற்றுமையீனத்தின் இழிவு பற்றியும் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பாடியுள்ளார். ஒற்றுமையென்னும் உயர்குணத்தின் பேராற்றலை விளக்க, தமிழ்நாட்டிலே பல கதைகளும் பழமொழிகளும் வழங்கிவருகின்றன. வேடனிட்ட வலையிற் சிக்கிய புறுக்கள், ஒற்றுமையுடன் வலையைத் தூக்கிக் கொண்டு பறந்து சென்றன என்ற பஞ்சதந்திரக் கதை யாவரும் அறிந்ததொன்று. விறகு கட்டைகள் கட்டாக்கப் பட்டபோது அவை வன்மைபெற்று முறிக்க முடியாதனவாயின; அவை தனித்தனியாக்கப்பட்டபோது இலகுவில்

முறிக்க முடிந்தனவாயின. இவ்விரு உண்மைகளையுந் தன் மக்களுக்கு நிதரிசனமாகக் காட்டி ஒற்றுமையின் உயர்வை விளக்கிய தந்தையின் கதை வெகு பிரசித்தமானது. 'அடம்பன் கொடியுந் திரண்டால் மிடுக்கு' என்பது ஒற்றுமை பற்றிப் பேசப்படும்போதெல்லாம் பெருவழக்காய் வழங்கிவரும் பழமொழி. சமுதாய நலனுக்காகவும், குடும்ப நலனுக்காகவும் அதனதன் அங்கத்தவர்கள் தனிப்பட்ட வேற்றுமைகளை மறந்து, மனம் ஒன்றுபட்டுச் செயலாற்றும்போது ஒற்றுமை உதயமாகிறது. ஒற்றுமை, ஐக்கியம், கூட்டுறவு என்பன ஒருபொருட் சொற்கள். ஒற்றுமைப் பண்பே கூட்டுறவு இயக்கத்தின் உயிர்நாடி. ஒற்றுமை, சனநாயகமுறையில் நெறிப்படுத்தப்பட்டுச் செயற்படும்போது கூட்டுறவு இயக்கந் தோன்றுகிறது.

ஒற்றுமையென்னும் உயர்குணம், உலகிலே மக்கள் சமுதாயமாக வாழத்தொடங்கியபோதே தோன்றியதெனினும், அதனை நெறிப்படுத்திக் கட்டுக்கோப்புள்ள கூட்டுறவு இயக்கமாகச் செயற்படுத்தத் தொடங்கியது பத்தொன்பதாம் நூற்றுண்டிலேயே எனலாம். அந்த நூற்றுண்டிலே, ஜேர்மனியிலே கூட்டுறவு இயக்கமென்னும் மக்கள் சக்தி மலர்ந்தது. அதன் பேராற்றலையும் நற்பயன்களையுங் கண்டுணர்ந்த உலகநாடுகள், அவ்வியக்கத்தைத் தத்தம் நாடுகளிற் பரப்பத் தொடங்கின. இலங்கையிலும் அது முளைகொண்டு வளரத் தொடங்கியது. எனினும் அவ் வளர்ச்சியில் வேகமிருக்கவில்லை. இரண்டாவது உலகப் பெரும்போர் முடிந்த பின்னரே, அது இலங்கையின் மூலைமுடுக்கெங்கும் ஆழமாக வேர்விட்டு, வேகமாக வளரத் தொடங்கியது. அந்தப் பெரும்போர் நிகழ்ந்த காலத்திலே, இலங்கையிலே உணவு, உடை போன்ற அத்தியாவசிய தேவைப் பொருள்கள் கிடைத்தற்கரியனவாயின. அவ்வகைப் பொருள்களின் விலை விஷவேகத்தில் ஏறத்தொடங்கியது. பணம் படைத்தபலர் பெருவிலை கொடுத்துப் பொருள்கொள்ள, ஏழைகள் பொருள்பெற முடியாதவர்களாய்த் தவித்தனர். இந்நிலையில், நாட்டுமக்களனைவருக்கும் அத்தியாவசிய தேவைப்பொருள்களைச் சமமாகக் கிடைக்கும்படி செய்தல்,

ஆட்சியாளரின் பெரும்பணியாயிற்று. அதனால் நாட்டிலுள்ள கிராமங்களெங்கணும் கூட்டுறவுப் பண்டசாலைகள் தாபிக்கப்பட்டுத் தேவைப் பொருள்கள் மக்களுக்கு வழங்கப்பட்டன. அதனாலே, கிராம மக்கள் கூட்டுறவின் சக்தியை யுணரத் தலைப்பட்டனர். பலவகைப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் தாபிக்கப்பட்டன. மெல்ல மெல்லக் கூட்டுறவு இயக்கம் நாட்டில் நிலைபெற்று வளரத் தொடங்கியது. இன்றுள்ள நிலையிலே, இலங்கையிலே, கூட்டுறவு இயக்கம் பெரியதொரு ஆலமரம்போல விளங்குகிறது. அது நூற்றுக்கணக்கான கூட்டுறவுச் சங்கங்கள் என்னும் விழுதுகளாலே தாங்கப்பட்டுப் படர்ந்து செழுமையுடன் காணப்படுகிறது.

கூட்டுறவு இயக்கம், தன்னுள்ளே பன்னூற்றுக் கணக்கான கூட்டுறவுச் சங்கங்களைக் கொண்டுள்ளது. அச் சங்கங்களுள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமே தலையாயது; தரத்தினாலே பெரியது. அது உணவுப் பொருள்களையும் மற்றைய தேவைப் பொருள்களையும் நியாய விலைக்கு வழங்குகிறது; விவசாயிகளுக்குப் பல வகை உதவிகள் அளித்து, விளைபொருள்களை நியாய விலைக்கு வாங்குகிறது. அடுத்தபடியாக, ஐக்கியநாணய சங்கமே மக்கள் மனத்தைப் பெரிதுங் கவர்ந்துள்ளது. அது குறைந்த வட்டிக்குக் கடன் கொடுத்து பாமர மக்களுக்கு உதவிபுரிகிறது. இவையிரண்டும் பெரும்பாலும் ஒவ்வோர் ஊரிலுங் காணப்படுகின்றன. இவையன்றி, பலவகைப்பட்ட தொழிலாளர்கள் தத்தம் உற்பத்திப் பொருள்களை விற்கவுங் கடனுதவி பெறவுங் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துள்ளனர். இவை யொவ்வொன்றுஞ் சனநாயக அடிப்படையில் உருவாக்கப்பட்டு இயங்குகின்றன; மக்களின் நல்லெண்ணத்தையும் ஒற்றுமையையும் ஒருமுகப்படுத்திச் செயற்படுகின்றன. சங்க உறுப்பினர் திறமை மிக்க தலைவரையும், செயலாளரையும், பொருளாளரையும், செயற்குழு உறுப்பினரையுந் தெரிந்தெடுப்பர். அவர்கள் மக்களின் பிரதிநிதிகளாய் விளங்குவர். அவர்களே அவ்வச் சங்கங்களின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் காரணர்களாய் அமைவர். செயற்குழு

உறுப்பினரைத் தெரிந்தெடுக்கும் முறையிலும் அவர்கள் செயலாற்றும் முறையிலும் சனநாயக தருமம் பெரிதும் போற்றப்படுகின்றது. திறமையற்ற நிருவாகமும் ஊழலும் நிலவும்போது, மக்கள் பழைய செயற்குழு உறுப்பினரை விலக்கி, புதியவர்களைத் தெரிவுசெய்வர். இவ்வாறு ஒவ்வொரு சங்கமுந் தனித்தன்மை வாய்ந்த பூரணமானதோர் அமைப்பாக விளங்கும். அப்படிப்பட்ட பல சங்கங்களின் பிரதிநிதிகள் ஒன்றுசேர்ந்த அமைப்பு கூட்டுறவுச் சமாசம் என அழைக்கப்படும். அப்படிப்பட்ட பல சமாசங்களின் ஒருமைப்பாடு, கூட்டுறவு இயக்கமென்னும் வன்மைபெற்ற, பெரியதொரு அமைப்பாக விளங்குகிறது.

கூட்டுறவு இயக்கத்தினால் அளப்பரிய நற்பயன்கள் உண்டாகின்றன. கிராமங்களிலே வாழும் விவசாயப் பெருமக்கள் உழைப்பினை உயிர்மூச்சாகக்கொண்டு, உணவுப் பொருள்களை உற்பத்தி செய்கின்றனர். அவர்கள் நெற்றி வியர்வை நிலத்திலே சிந்த உழைத்த உழைப்பின் பூரண பயனை அனுபவிக்கவிடாமற் சில சக்திகள் தடைசெய்கின்றன. விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் நேரடித் தொடர்பு ஏற்படாவண்ணம் அவர்களுக்கிடையே தரகர்கள் தோன்றுகின்றனர்; அன்றியும் விவசாயிகளுக்குக் கடன் கொடுத்தோர், விளைவினைக் குறைந்த விலைக்குப் பெற்றுக்கொள்கின்றனர். இவ்விதீய சக்திகளை முறியடித்து, விவசாயிகளுக்குக் கடனைப் பொருளுதவியீந்து, விளைவை நியாயவிலை கொடுத்து வாங்கி உதவியளிப்பது கூட்டுறவு இயக்கம். நாட்டு மக்களிடையே சேமிக்கும் பழக்கத்தையும் தேவைக்கேற்ற வகையிலே கடன் பெறும் பழக்கத்தையும் ஐக்கியநாணய சங்கங்கள் வாயிலாகக் கூட்டுறவு இயக்கம் வளர்த்துளது என்ருல் மிகையாகாது. சனநாயகமென்னுஞ் சொல், இன்று ஆட்சிமுறையைக் குறிப்பிடுவதாயினும், அதை ஒரு நன்னெறிச் சார்புள்ள வாழ்க்கைமுறை என்றே கொள்ளல் வேண்டும். பாமர மக்களிடையே சனநாயக வுணர்வைப் பரப்புவதிலே கூட்டுறவு இயக்கம் பெரும்பணியாற்றியுள்ளது. தொழிலாளரிடையே தாபன ரீதியான ஒற்றுமை ஏற்படும்போது அவர்களது தொழி

லும் விருத்தியடைகிறது ; உற்பத்திப் பெருக்கத்தோடு, இடையீடெதுவுமின்றிப் பொருள்களை விற்றலும் இலாபம் பெறலும் ஆகிய நற்பயன்கள் விளைகின்றன ; அதனால், தொழிலாளரின் வாழ்க்கை நிலையை உயர்த்துதற்குக் கூட்டுறவு இயக்கம் பெரும்பணி யாற்றுகிறது. நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமமும் தனது தேவைப் பொருள்களிலே தன்னிறைவு பெற்று விளங்குமானால், அந்நாட்டிலே, காந்தியண்ணல் கனவுகண்ட இராம இராச்சியம் மலரும். அதற்கு வழிகாட்டியா யமையத்தக்க பெருந் தகுதியுடையதாய்க் கூட்டுறவு இயக்கம் விளங்குகிறது.

கூட்டுறவு இயக்கம், சமுதாய மக்களது மனவொருமைப்பாட்டிலே முளைவிட்டு, சனநாயக தருமம் என்னும் நீருண்டு, செழித்து வளர்வது. அது நாட்டுக்குச் செய்யும் நற்பயன்கள் பல. ஆனால், சுயநல மனப்பாங்கும் சுரண்டும் எண்ணமுங் கொண்ட தீயவர்கள் நிருவாகப் பொறுப்பைக் கைப்பற்றிக்கொண்டால், கூட்டுறவு இயக்கம் நிச்சயமாக இழிநிலை யடைந்துவிடும். அவ்வித முறையால், நாட்டுமக்கள் அடையும் இன்பத்துக்கும் நியாயமான நயத்துக்கும் பதிலாக, சொல்லொணுத் துன்பமும் நட்டமும் விளையும். மக்களே கூட்டுறவு இயக்கத்தின் அமைப்பாளராக விளங்குவதால், நிருவாகிகளைத் தெரிவதற்கும் அவர்கள் நெறிதவறி நடந்தபோது நீக்குதற்கும் வல்லமை யுடையவர்களாகிருர்கள். மக்களிடமுள்ள இந்தச் சக்தி, தக்கமுறையிலே வழி நடத்தப்படுமானால், கூட்டுறவு இயக்கத்திலே ஊழல், இலஞ்சம், சுரண்டல் முதலிய தீவினைகள் தலைகாட்டா.

# 30

## ஒரு திருமண ஊர்வலம்

குறிப்புக்கள் :

1. முன்னுரை.
2. ஊர்வல ஆயத்தம்.
3. ஊர்வலக் காட்சிகள்.
4. ஊர்வலம் ஒரு வீட்டுவாயிலில் நிற்கின்றது.
5. ஊர்வலத்தில் நிகழ்ந்த சில சம்பவங்கள்.
6. முடிபு.

கொட்டுமேளம் முழங்கியது; இரட்டை நாதசுரம் காற்றுடன் கலந்து இசைத்தது. அந்தணர்கள் "மாங்கல்ய தந்துனனேன" என்ற மந்திரத்தை ஒரே குரலிற் கூறினர். மணமகன் அக்கினி சாட்சியாகவுஞ் சபையோர் சாட்சியாகவுந் திருமங்கல நாணைக் குறிப்பிட்ட சுபமுகூர்த்த வேளையிலே, மிகுந்த அவதானத்தோடு மணமகள் கழுத்திற் கட்டினன். சபையோர் அந்த ஒருகணத்திலே களிப்பினுல் மெய்சிலிர்த்து, மனத்தளவில் வாழ்த்துரை வழங்கினர். அந்த ஒருகணத்தி லெழுந்த ஆரவாரமெல்லாம் படிப்படியாகச் சாதாரண நிலையை யடைந்தன. மணமக்கள் அக்கினியை வலம்வந்து, அருந்ததி கண்டு, பாலும் பழமும் உண்டு, இல்லத்துட் புகுந்தனர். அதன்பின்னர், சமுதாயமுறைப்படி, மணமகனது சுற்றத்தினரும் மணமகளது சுற்றத்தினரும் ஒரே பந்தியிலமர்ந்து விருந்துண்டனர். ஆண்களது பந்தி முடிந்து, பெண்கள்

பந்தி நடைபெறும்போதே, பெரியவர்கள் ஊர்வலத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை அவதானிக்கத் தொடங்கினர்.

இத் தருணங்களிலே, பழைய 'செவலெட்' இன மோட்டார் வண்டிகளுக்கு ஏற்படும் மதிப்பை அளவிட முடியாது. அவைதாம் கூடாரம் மடிக்கவும் விரும்பிய விரும்பியவாறு அலங்காரஞ் செய்யவும் இடங்கொடுக்கும் இயல்பின. புதுப்புதுவகை மோட்டார் வண்டிகள் எல்லாம் வெட்கித் தலைகுனியும் வண்ணம், பழைய மோட்டார் வண்டியொன்று மயிலின் கவினுருப்பெற்று வாயிலில் நிற்கின்றது. மயிலின் நளினமான கழுத்தழகும் அகன்று விரிந்த மார்பும் மேலெழுந்து நிற்கும் தோகையும் நிலத்தைத் தொடத் துடிக்கும் இறகும் பார்ப்போர் கண்ணையுங் கருத்தையுங் கொள்ளைகொள்ளுகின்றன. கலைஞன் கைப்பட்டவெல்லாம் புத்தழகுடன் திகழும் என்பதற்கு அக்காட்சியே சாட்சியாகும். பந்தி போசனம் நிறைவெய்தியதும் மணமக்கள் அழைத்து வரப்படுகின்றனர். அவர்களுக்கு முன்னால் ஆண்களின் கூட்டம் செல்கின்றது; பின்னால் பெண்களின் கூட்டம் அன்னக் குழாம்போன்று அணிநடை பயில்கின்றது. மணமக்கள் கைகோத்தபடி மெல்ல நடந்துவந்து மயிலாகி நிற்கும் மோட்டாரில் ஏறி அமர்கின்றனர். அவர்களை நடுநாயகமாகக் கொண்டு மணமகனின் இப்பால் அவனது தோழனும் மணமகளின் அப்பால் மணமகளின் தோழியும் இருக்கின்றனர். பத்துப் பன்னிரண்டு 'பெற்றோல் மாக்ஸ்' விளக்குகள், வரிசையாகக் காணப்பட்டு, இருளைத் துரத்தி, இரவைப் பகலாக்குகின்றன. அந்த ஒளி வெள்ளத்திலே கவினுற அலங்கரிக்கப்பட்ட அந்தச் சூழல் முழுவதும் இந்திர லோகம்போலப் பொலிகிறது. அந்த மயில்வாகனத்தின் பின்னால் வண்ண வண்ணப் பட்டுடுத்தி, பொன்னணி பல பூண்டு, மலர் சூடி, களிப்பினாலே பொலிவுபெற்ற முகத்தினராய் வரும் பெண்கள் தேவ மகளிர்போலத் தோன்றுகின்றனர். முன்னே செல்லும் ஆண்கள் மகிழ்ச்சிப் பெருமிதமும் கம்பீர தோற்றமுங் கொண்டு தேவர்கள்போல விளங்குகின்றனர். அவர்கள் மத்தியிலே விமானமூர்ந்து செல்லும்

இந்திரனும் இந்திராணியும்போல மணமக்கள் காட்சி யளிக்கின்றனர்.

ஊர்வலம் நகரத் தொடங்குகிறது. அப்போது ஊர் வலத்தின் முன்னணியிலே ஒலித்த அதிர்வேட்டு காதைச் செவிடுபடுத்துகிறது. மத்தாப்புக்கள் வெடித்து, வான் வெளியிலே பச்சை, மஞ்சல், நீலம், சிவப்பு என்னும் நிறப் பூக்களைத் தூவிவிடுகின்றன. அவை திசையெல் லாம் பரந்து சிரிக்கின்றன. புகழ் பெற்ற நாதஸ்வர வித்து வான்கள் இருவர், சந்தர்ப்பத்துக்கேற்ப, நடைமல்லாரி இராகத்துக்குரிய கீர்த்தனத்தின் பல்லவியை இசைக்கின் றனர். அவர்களைப்போலவே மற்ற வித்துவான்களும் அந்தப் பல்லவியைத் திரும்பத் திரும்ப அழகாக அசை போடுகின்றனர். அவர்களது இசைக்கேற்ப மேளகாரர் கள் கைவிரலசைவாலே தாளத்தை மேளத்திலெழுப்பி வாசிக்கின்றனர். அவர்களுக்கு முன்னாலே சிறிது தூரத் திலே கரக ஆட்டம் நடைபெறுகிறது. சல்லரியின் தாள வொலிக்கேற்ப ஒருவன் பாடுகிறான். அந்தத் தாளக் கட்டுக்கும் பாட்டுக்குமேற்ப, கரக நாட்டியக்காரன் தன் காற் சதங்கை 'சல் சல்' என ஒலியெழுப்ப, அழகாக ஆடுகிறான்; இருந்தும் எழும்பியும் நெளிந்தும் வளைந்தும் நீண்ட மரக்கட்டையிலே கரகத்தை நிறுத்தியும் பல் சாகச வேலைப்பாடுகளோடு ஆடுகிறான். அதனை வைத்தகண் வாங்காமற் பலர் பார்த்துக்கொண்டு நிற்கின்றனர். இத் தனை விமரிசையோடு ஊர்வலம் முன்னேறிச் செல்கிறது.

தம்பதிகள் இவர்ந்து வந்த மயிலூர்தி, அங்குலம் அங்குலமாக முன்னேறிச் செல்கிறது. எதிரேவந்த வீட்டு வாயிலிலே, பூரண கும்பம் பொலிவுற வைத்து, குத்து விளக்கேற்றி, ஆராத்தித் தட்டேந்தி, சுமங்கலிகள் இருவர் நின்று மணமக்களை வரவேற்கின்றனர். அந்த இடத் திலே மணமக்கள் ஏறிவந்த ஊர்தி நிற்கின்றது. அந்தச் சுமங்கலிப் பெண்கள் ஆராத்தி சுற்றி, செஞ்சாந்தாலே திலகமிடுகின்றனர். பின்னர், சிறுவன் ஒருவனும் சிறுமி ஒருத்தியும் மணமகனுக்கும் மணமகளுக்கும் மணங் கமழும் முல்லை மலர்மாலை அணிகின்றனர்.

மணமக்கள் ஏறியமர்ந்ததும் அந்த மயிலூர்தி அசைகிறது. அதனைத் தொடர்ந்து ஊர்வலமும் முன்னேறுகிறது. மணமகன் கடைக்கண்ணால் மணமகளை நோக்குகிறான்; அவளும் தன் கணவனை ஒருமுறையாவது ஆசைதீரப் பார்த்துவிட வேண்டுமென்ற எண்ணத்தாலே கள்ளப் பார்வை பார்க்கின்றாள். கம்பன் கூறியதுபோல, 'அண்ணலும் நோக்க அவளும் நோக்கினாள்'; ஒருகணம் இருவர் நோக்கும் ஒன்றையொன்று விழுங்குகின்றன. இருவரும் புன்முறுவல் பூக்கின்றனர். மணமகளின் செந்தாமரை வதனம் மேலும் சிவக்கின்றது. அவள் நாணமடைந்து தலை தாழ்த்திக்கொள்ளுகிறாள். இந் நிகழ்ச்சியை அவதானித்த பெண்கள் கலகலவெனச் சிரிக்கின்றனர். அவர்களுள் ஒருத்தி துணிவுடன், "இனி வெட்கப்பட்டு என்ன பயன்? தாலி கழுத்திலேறிவிட்டால் பெண்கள் ஆண்களுக்குரியவர்கள்தானே" என்று மணமகளை நோக்கிச் சொல்லுகிறாள். அதனைக்கேட்ட அவள் நாணிக் கோணித் தலைகவிழ்ந்துவிடுகிறாள். அப்போது மணமகளின் தமக்கை ஒருத்தி "பெண்களென்றால் அடிமைகளா?. தாலி கட்டி முடிந்து மூன்றுமணிநேரம் ஆகவில்லை. அவளையே பார்த்துக்கொண்டு இவர் இருந்தால், அவள் என்னசெய்வாள், பாவம்!" என்று, தன் தங்கைக்குப் பரிந்து பேசுபவள்போல, மணமகனுக்குக் கேட்கும்படியாகக் கூறுகிறாள். அதனைக்கேட்ட மணமகனும் வெட்கத்தினாலே தலை கவிழ்ந்துகொள்ளுகிறான். அந்தக் காட்சியை அனுபவித்த பெண்கள் பெருங் குரலெடுத்துச் சிரிக்கின்றனர். இந்தக் கூட்டத்திலே கலந்துகொள்ளாத பெண்களில் ஒருத்தி, தன் சிநேகிதியின் புதுமாதிரிப் புடைவை பற்றியும் அட்டிகைபற்றியும் விசாரிக்கிறாள்; இன்னொருத்தி, தன்னயலாளின் தற்பெருமையையும் கணவன் சொற்கேளாத் தன்மையையும் பற்றிப் பேசுகிறாள்; இன்னொருத்தி, தன் கணவனைத் தன் கைப்பொம்மையாக்கிய விதம்பற்றியும் தனது சாகசச் செயல்பற்றியும் வானளாவப் புகழுகிறாள். இவைகளில் ஒன்றையும் உணராத ஆண்களில், நடுத்தர வயதினையுடையவர்கள், தத்தம் கவலைகளையுந் துன்பங்களையும் ஒருவருக்கொருவர் பரிமாறுகின்றனர். ஒருவர் தம் மகனின் கல்வியைப்பற்றி,

மற்றவருக்குக் கூறிக் கவலைப்படுகிறார்; இன்னொருவர், கணவனைப் பிரிந்து வந்திருக்கும் தம் மகளின் எதிர்காலம் எப்படியாகுமோ என்றெண்ணி, அதனை வேறொருவருக்குக் கூறி ஆலோசனை கேட்கின்றார்; இன்னொருவர் கிளிநொச்சிப் பகுதியிலே, கமஞ்செய்தமையால் விளைந்த நன்மை தீமைகளை விளக்குகிறார். இவ்வகைப் பேச்சுக்களெல்லாம் நாதஸ்வர இசையிலே மூழ்கிவிடுகின்றன. அதனால், அவை யார் யாருக்குச் சொல்லப்படுகின்றனவோ, அவரவர்களால் மாத்திரம் கேட்கப்படுகின்றன.

இப்பொழுது ஊர்வலம் இன்னொரு வீட்டு வாயிலில் நிற்கின்றது. வழமைப்படி மணமக்களுக்கு ஆராத்தியெடுத்துத் திலகமிட்டு மாலை யணிகின்றனர். மணமக்களிருவரும் ஓரூரவர்களானமையால், ஊர்வலம் மணமகன் வீடடையும் வரையும் ஒவ்வொரு வீட்டு வாயிலிலும் இந் நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன. ஈற்றில் ஊர்வலம் மணமகன் வீட்டு வாயிலை யடைகிறது; இதுவரைநேரமும் நிகழ்ந்த வேடிக்கை விநோதங்கள் ஒவ்வொன்றாகக் குறைகின்றன; ஆண்கள் மத்தியிலும் பெண்கள் மத்தியிலும் நிகழ்ந்த சம்பாஷணைகள் தொடர்பற்றுப்போகின்றன. நாதஸ்வர வித்துவான்களும் மேளகாரரும் மாத்திரம் இப்பொழுதும் தம் கைவரிசையைக் காட்டிக்கொள்கின்றனர். மணமகனது வீட்டு வாயிலிலே, பூரண கும்பம் பொலிவுற வைக்கப்பட்டிருக்கிறது. இரு குத்துவிளக்குகள் ஏழு முகங்களிலும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றன. சுமங்கலிப் பெண்கள் பலர் பல மங்கலப் பொருள்கள் ஏந்தி நிற்கின்றனர். அவர்களிலிருவர் ஆராத்தி எடுத்து மணமக்களை வரவேற்று, வீட்டினுள் அழைத்துச் செல்லுகின்றனர். அதன் பின்னர் ஆண்களும் பெண்களும் தாம்பூலம் பெற்றுக்கொண்டு தத்தம் இல்லங்களை நோக்கி ஏகத் தொடங்குகின்றனர். இவ்வாறு அத் திருமண ஊர்வலம் சுபமாக ஒரு முடிபை யடைகிறது.

# 31

## நோபல் பரிசு

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்.
2. அல்பிறட் நோபலின் வரலாறு.
3. 'டைனமைட்' வெடிமருந்தின் உபயோகம்; நோபலின் மன எண்ணம்.
4. நோபல் பரிசு வகைகள்; கொடுக்கப்படும் விதம்.
5. பரிசு பெற்ருேர் சிலர் [முடிபு].

"செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார்"

என்பது திருக்குறள். இது பெரியார், சிறியார் இலக்கணங்களைச் சுருங்கிய சொல்லால் தெளிவுற விளக்குகிறது. சிந்தனைத் திறனும் தளராத மனவுறுதியுங் கொண்ட பெரியார்கள் பலரது செயற்கருஞ் செயல்களின் விளைவாகவே உலக நாகரிகம் வளர்ந்துள்ளது. அன்றியும், அவர்களது செயற்கரிய செயல்களின் தாக்கம், வாழ்க்கைத் துறைகளாகிய அறிவியல், அரசியல், மருத்துவம், பொறியியல், கலை ஆகியவற்றில் ஆழமாக நிலைபேறுகொண்டு, அவற்றை வளர்த்துள்ளது. அத்தகைய பெரியார்கள், இறந்தும் இறவாப் புகழ்கொண்டோராய் மக்கள் மனதிலே என்றென்றும் வாழ்கின்றனர். பண்டுதொட்டு இன்றுவரை, அவர்களை உலகத்து அறிஞர்சங்கங்கள் பாராட்டிவந்துள்ளன; ஆட்சியாளர்களும் வள்ளல்களும் அவர்களுக்கு எல்லாவகை வசதிகளும் அளித்தும் புகழ்ந்தும் பெரும் பரிசுகள் வழங்கி

யும் அவர்கள் முயற்சிக்கு ஊக்கம் அளித்துள்ளனர்; புகழ்பெற்ற பல்கலைக்கழகங்கள், அவர்களது செயலை வியந்து, பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளன. நாம் வாழும் இந்த நூற்றுண்டிலே, உலகனைத்துக்கும் உதவக் கூடிய செயற்கருஞ் செயல் செய்த பெரியார்களைக் கௌரவிக்கும் முகமாக, அளிக்கப்படும் பாராட்டுக்களிலும் பரிசுகளிலும் மிகச் சிறந்ததாக விளங்குவது நோபல் பரிசு. இது சுவீடின் தேசத்தவரான அல்பிறெட் நோபல் என்னும் வள்ளலால் உண்டாக்கப்பட்டது. சாதி, மத, இன, தேச பேதங் கடந்து முழு உலகையுந் தழுவி வழங்கப்படும் பரிசு இஃது ஒன்றே; இதனைப் பெற்ற பெரியார் உலகப் புகழ் பெறுகிறுர்; அவரைப் பெற்றெடுத்த பொன்ஞடு அவரால் பெரு மதிப்பைப் பெறுகிறது.

சுவீடன் நாடு, ஐரோப்பாவின் வடபாலுள்ளது. அங்கு 19ஆம் நூற்றுண்டின் ஆரம்ப காலத்திலே, எமானுவல் நோபல் என்னும் பெயருடைய ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் வெடிமருந்து உற்பத்தியாளர். அக்காலத்திலே பாதுகாப்பு நிறைந்த சிறந்த வெடிமருந்து கண்டுபிடிக்கப் படவில்லை. எமானுவல் உற்பத்தி செய்த வெடிமருந்தினுல், பல விபத்துக்கள் நிகழ்ந்து, பலர் அகால மரணமடைந்தனர். அதனுல் ஊரார் அவரை மகா பயங்கரமானவர் எனக் கருதி வெறுத்தொதுக்கினர். சொல்லொணுத் துயருற்று மனமுடைந்துபோன அவர், தன்னருமைத் தாய் நாட்டை விட்டு, ரூஷிய நாட்டை யடைந்தார். அவருக்கு மகனுகப் பிறந்தவரே, வள்ளலான அல்பிறெட் நோபல் என்னும் பெரியார். அல்பிறெட் நோபல் 1833ஆம் ஆண்டு, சுவீடின் தலைநகரான 'ஸ்டொக்ஹோமி'ல் பிறந்தார். 'விளையும் பயிரை முளையிலே தெரியும்' என்பதற்கிணங்க, அவரது எதிர்கால உயர்வுக்குக் காரணமான மதிநலம், இளமையிலேயே சுடர்விடத் தொடங்கியது. அவர் இரசாயனம், பௌதிகம் ஆகிய அறிவியற் கலைகளில் இயற்கையாகவே பெருவிருப்புடையவரா யிருந்தார். அவர் ரூஷிய நாட்டிற் கல்வி கற்று முடித்தபின்னர், அமெரிக்க நாட்டை யடைந்து, அங்கு எந்திரவியலைத் துறை போகக் கற்றுர். பின்னர், தன் தாய்த்திருநாட்டையடைந்த

அல்பிறெட் நோபல் 'ஸ்டொக்ஹோம்' நகரில் தன் தந்தை நடத்திய வெடிமருந்துத் தொழில் நிலையத்திற் பணியாற்றத் தொடங்கினர். தன் தந்தைக் கேற்பட்ட இழிநிலை அவர் மனத்தைப் பெரிதும் துன்புறுத்தியது. எவ்வகையிலும் பாதுகாப்புடைய வெடிமருந்தைக் கண்டு பிடித்து, தன் தந்தையைச் சூழ்ந்துள்ள பழியைப் போக்கி விட வேண்டுமென்று அல்லும் பகலும் அயராதுழைத்தார்; பல பல ஆய்வுகள் நடத்தித் தோல்வியடைந்தார். மலை மலையாகத் தோல்விகள் சூழ்ந்தபோதிலும் அவர் மனங் கலங்கவில்லை. தமது தொழில் நிலையத்தில் மீண்டும் மீண்டும் வெடிமருந்து தயாரிப்பதற்கான 'நைட்ரோ கிளிசரின்' போன்ற மருந்துகளைப்பற்றிப் பலவகை ஆய்வுகள் நடத்தினர். ஈற்றிலே 'நைட்ரோகிளிசரின்' என்ற பொருளை 'கீசல் குர்' என்னும் களிமண்ணுடன் கலந்தால், அந்தக் கலவையை எவ்வித விபத்துமின்றிக் கையாளலாம் என்று கண்டறிந்தார். அதற்கு அவர் 'டைனமைட்' எனப் பெயரிட்டார். அதனேடு அவர் திருப்தியடையாது, இடையருத பரிசோதனைகள்மூலம், அதனினும் ஆற்றல் மிக்க வெடிமருந்துகளையும் கண்டறிந்தார்.

பாதுகாப்புடையதும் பயங்கரமற்றதுமான இந்த 'டைனமைட்' பல பல ஆக்க முயற்சிகளுக்குப் பயன் படுத்தப்பட்டது. மலைகளைப் பிளந்தும் ஊடறுத்தும் பெரு வீதிகள் சமைத்தற்கு இவ் வெடிமருந்து பேருதவி புரிந்தது. ஆழ நெடுங் கிணறுகளும் சுரங்கங்களும் தோண்டு தற்கு இவ் வெடிமருந்துபோற் சிறந்த துணை பிறிதில்லை எனலாம். பெரிய பெரிய கால்வாய்கள் அமைத்தற்கும், நாட்டிற் பாயும் இரு நதிகளை இணைத்துப் பலவகைப் பயன் கொள்வதற்கும் மிகச் சிறந்த கருவியாக இது விளங்கியது. ஆக்கத்துறைக்கு மாத்திரமன்றி அழிவுத் துறைக்கும் இதனை அறிவியலார் பயன்படுத்தத் தொடங் கினர், பீரங்கி, கடற்கண்ணி முதலிய அழிவுச் சாதனங் களுக்கு இவ் வெடிமருந்து உபயோகிக்கப்பட்டு, போர் முறையிலே பயங்கரமான புதுத் திருப்பத்தை உண்டாக் கியது. இவ்வாறு 'டைனமைட்'டின் இயல்புகளனைத்தும்

உலகெங்குங் காட்டுத் தீபோலப் பரவலாயிற்று. பாது காப்புடைய அந்த வெடிமருந்தின் தேவை உலகெங்கும் பெருகலாயிற்று. அதனல், அவருக்குப் பெரும் பொருள் குவிந்தது. அளவின்றிப் பெருகிய பெருநிதியின் பெரும் பகுதியை உலக நன்மைக்காக வழங்க எண்ணினர். அவ்வாறு அவர் தீர்மானித்தமைக்கு, அவரது உயர்ந்த உள்ளத் தியற்கையே காரணமாகும். அவர் கலையுள்ளம் படைத்தவர்; இலக்கிய ஆர்வங் கொண்டவர்; கதைகள், நாடகங்கள் எழுதும் ஆற்றல் நிறைந்தவர். இத்தகைய அவரது மென்மையான மனதிலே அச்சவுணர்வு குடிகொண்டிருந்தது. முற்று முழுதாக ஆக்க முயற்சிகளுக்கே பயன்படவேண்டுமென்று எண்ணிக் கண்டுபிடித்த வெடிமருந்து, உலகை அழித்துப் பயங்கர விருள் சூழவுஞ் செய்யும் என்று கண்டபோது அவர் உள்ளம் அஞ்சியது. அதனல், எதிர்காலத்திலே உலகுக்கு நன்மை விளைக்கக்கூடிய அரிய செயல்களைச் செய்வோரை ஊக்குவித்தல்வேண்டும் என நினைத்தார். அதன்பயனக, தன்னிடம் குவிந்த பெருநிதியின் ஒருபகுதியை, ஆண்டுதோறும் உலக நன்மைக்காக, பௌதிகம், இரசாயனம், மருத்துவம், இலக்கியம், சமாதானம் என்னும் ஐந்து துறைகளிலும் அருஞ்செயல் புரிந்தவர்களுக்கு வழங்கத் தீர்மானித்தார். அல்பிறெட் நோபல் என்பவரால் ஏற்படுத்தப்பட்டமையால் அப்பரிசு 'நோபல் பரிசு' என்னும் பெயர்பெற்றது.

உலகம் முழுவதிலும் ஒவ்வோராண்டுக் காலத்திலும் பல பல துறைகளிலே பலபல புதுமைகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. அவற்றுட் சில, உலகுக்கு ஆக்கம் அளிப்பவை; சில உலகினை அழிக்கும் தகையவை. ஆக்கம் அளிக்குஞ்செயல்களை, பௌதிகம், இரசாயனம், மருத்துவமும் உடலியலும், இலக்கியம், சமாதானம் என ஐவகைப் படுத்துகின்றனர். அவ்வத் துறைகளில் நிகழும் அரிய செயல்கள் வெகு அவதானத்துடன் ஆராயப்படுகின்றன. பௌதிகத்துறையிலும் இரசாயனத்துறையிலும் நிகழுஞ் செயல்களை ஆய்ந்து பரிசுபெறத் தக்கோரை, சுவீடின் நாட்டு விஞ்ஞானக் கழகம் தீர்மானிக்கிறது. மருத்துவத் துறையிலே பரிசுபெறத் தகுந்தவர்களை, சுவீடின் தேசத்து

கரோலின் மருந்துவக் கழகம் தெரிந்தெடுக்கிறது. இலக்கியப் பரிசை அந்நாட்டு இலக்கியக் கழகமும் சமாதானப் பரிசை, அந்நாட்டுப் பாராளுமன்றக் குழுவொன்றும் நிச்சயிக்கிறது. இவ்விதம் தெரிந்தெடுக்கப்படும் மேதைகளுக்கு ஒவ்வோராண்டும் டிசம்பர் மாதம் பத்தாந்திகதி இப் பரிசு வழங்கப்படுகிறது. அப் பரிசுகள் ஒவ்வொன்றும் ஓர் இலட்சத்து இருபதினாயிரம் ரூபா பெறுமதியான பொற்குவையும் அந்தந்தக் கழகங்களினது நற்சாட்சிப் பத்திரமும் விலைமதிப்பரிய பதக்கமும் கொண்டு விளங்குகின்றன. இத்தகையதொரு பரிசு, வாழ்க்கையிலே எவருக்கும் கிடைத்தற்கரியதொரு பெரும்பேறெனவே கொள்ளல்வேண்டும்.

இப்பரிசு 1901ஆம் ஆண்டு தொடக்கம் பலநாட்டுப் பெரியார்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. செருமானியர் மாத்திரம் இப்போது இதனைப் பெற விழைவதில்லை. ஏனெனில், ஒருமுறை நாடுகடத்தப்பட்ட செருமானியர் ஒருவருக்கு இப்பரிசு கிடைத்துவிட்டது. ஏனைய உலக நாடுகள் இப் பரிசினைப் பெரும் பேருகவும் தம் நாட்டுக்குக் கிடைக்கும் பெரும் புகழாகவும் கருதுகின்றன. நமது அயல்நாடான பாரதத்திலே தோன்றிய மேதைகள் இருவர் இதுவரை இப் பரிசிலைப் பெற்றுள்ளனர். 1913ஆம் ஆண்டிலே மாபெருங் கவிஞரும் 'சாந்திநிகேதனி'ன் தந்தையுமான வங்கத்து ரவீந்திரநாத் தாகூர் அவர்களுக்கு இலக்கியத்துறைக்கான நோபல் பரிசு கிடைத்துள்ளது. 1930ஆம் ஆண்டு, ஸி. வி. இராமன் என்பவருக்கு பௌதிகத்துறைக்கான பரிசு கிடைத்துள்ளது. ஒன்றுக்கு மேற்பட்ட பல பரிசுகளைப் பெற்ற பெருமைக்குரியவர் மேரி கியூறி அம்மையார் அவர்கள். இன்றுவரை நம்நாடு இவ்வரும் பரிசினைப் பெறும்பேறு பெறவில்லை. எதிர் காலத்தில் நம் நாட்டிலும் மேதைகள் தோன்றுவார்கள்; செயற்கருஞ் செயல் செய்வார்கள்; நோபல் பரிசு பெற்று நம் நாட்டிற்கு வான்புகழ் தேடித் தருவார்கள்.

# 32

## தொழில் நுட்பக் கல்வி

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்.
2. தொழில் நுட்பக் கல்வி இன்னதென்பது.
3. தொழில் நுட்பக் கல்வியால் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும்.
4. மாணவரிடையே தொழிற்சமத்துவம் பற்றிய உணர்வும் தன்னம்பிக்கையும் பிறக்கும்.
5. தொழில் நுட்பக் கல்வி பயின்றோர் வேலைதேடுதல் இலகு.
6. நமது கல்வி நிலையங்களும் தொழில் நுட்பக் கல்வியும் [முடிபு].

ஆதிகால மனிதன் நவநாகரிக மனிதனாக வளர்ந்த கதை மிகச் சுவையுடையது. குகைகளை உறையுளாகக் கொண்டு, கற்களை ஆயுதமாக உபயோகித்து வாழ்ந்த ஆரம்பகால மனிதன், மந்தை மேய்த்துத் திரியும் இடையனாக மாறி, பகுத்துணரும் திறத்தால், ஆற்றோரங்களிற் பயிர் விளைவித்து விவசாயியாக மாறினான். அதுவே உலக நாகரிக ஆரம்பநிலை. நாகரிக ஆரம்பகாலத்து வாழ்ந்த அந்த மனிதனுக்கும் விண்வெளியைக் கடந்து செல்ல விழையும் இன்றைய மனிதனுக்கும் இடையேயுள்ள வளர்ச்சி பெரிது. இதனை ஊன்றி உணரும்போது, மனிதன் தனது சிந்தனைத் திறத்தால் தனக்கும் பிறருக்கும் சமூகத்துக்கும் பல பல துறைகளிலே பல பல தேவைப் பொருள்களைப் பெருக்கிக்கொண்ட தன்மையைக் காணமுடிகிறது. பஞ்ச பூதச் செயல்களின் நுட்பங்கள்

காணும் அறிவியலே, இப் பெருக்கத்தை விரைவு படுத்தியது எனத் துணிந்து கூறலாம். தேவைப் பொருள் களின் பெருக்கமும் அறிவியல் வளர்ச்சியும் இணைந்த போது, பல்லாயிரக்கணக்கான தொழில்கள் பிறந்தன. அந்தப் பெருந்தொழில்களுக்கு உபகாரப்படுவனவாக, எத்தனை யெத்தனையோ கிளைத்தொழில்கள், உபகிளைத் தொழில்கள் முளைத்தெழுந்தன. பெருந்தொழில்கள் கன ரகத் தொழில்களெனவும் கிளைத்தொழில்கள் நடுத்தரத் தொழில்களெனவும், மற்றையன சிறு தொழில்களென வும் அழைக்கப்படுகின்றன. இவ்வாறு தொழில்கள் பல பலவாகப் பெருக்கமடைந்த நிலையில், இன்றைய மனிதன் செம்மையுற வாழ விரும்பினுல், அவன் தனது ஆற்றலுக் கேற்றதொரு தொழிலைச் செய்யவேண்டியவனுகிருன்.

மனிதன் மேற்கொள்ளும் ஒவ்வொரு தொழிலுக்கும் தவிர்க்கமுடியாத வகையில், அததற்குரிய தொழில் நுணுக்கங்களும் செயல்முறைகளும் அமைந்திருக்கின்றன. அத்தொழிலை மேற்கொள்ளும் ஒருவன், அதன் நுணுக் கங்களையும் செயல்முறைகளையும் பற்றிய பூரண அறிவு பெற்றிருத்தல் அவசியம். அப்பொழுதுதான் அத்தொழி லிற் பூரணத்துவமான பயனைப் பெறுதல் முடியும். இன் றைய உலகிலே, அறிவியலின் ஆதிக்கத்துக்குட்பட்டே, தொழிற்றுறைகள் பலவும் இயங்குகின்றன; புதியன புதியனவாகக் கிளைத்து வளருகின்றன. இந்நிலையிலே, தொழிற்றுறைகளிலே, விஞ்ஞானப்பண்புகள் பதிந்திருத் தலைக் காணல் முடியும். திட்பம், நுணுக்கம், தெளிவு, முழுமையான விளைவு என்பனவே பிரதான விஞ்ஞானப் பண்புகளாகக் கருதப்படுகின்றன. இவைகளே தொழிற் பண்புகளெனவும், தொழில் நுட்பமெனவும் அழைக்கப் படுகின்றன. எனவே, ஒரு தொழிலில் பூரணமான பயன் பெறுதற்காக, அத்தொழிலின் சிறுச்சிறு நுணுக்கங்களை யும் வரையறை வாய்ந்த திட்பத்துடன் தெளிவுபெற வுணர்ந்து செயலாற்றுதலே தொழில்நுட்பம் எனப்படும்.

இலங்கை, இயல்பாகவே ஒரு விவசாய நாடாகும் எனப் பொருளாதாரப் புலவர்களும் பூவியல் வல்லுனரும்

கூறுவர். அதனுல், ஆட்சியாளரும் நாட்டில் நாளுக்கு நாள் பெருகிவரும் மக்கட் பெருக்கம், அதனடியாகப் பிறந்த வேலையில்லாத் திண்டாட்டம், உணவுத் தட்டுப் பாடு என்னுங் குறைகளை நீக்க, விவசாய விருத்தியே தக்கதொரு வழியாகும் எனக் கருதுகின்றனர்; குடி யேற்றத் திட்டங்கள்மூலம் விவசாய விருத்தியைத் துரிதப் படுத்த முனைகின்றனர்; காடுமண்டிப் பாழடைந்துகிடக்கும் பிரதேசங்களில், மக்களைக் குடியேறச் செய்து, அவர் களுக்கு நீர் வசதியும் பிறவுதவிகளு மளித்து, அத் திட்டங்களைச் செயற்படுத்துகின்றனர். ஆயின், இத்தகைய விவசாய முயற்சிகளுக்கு நிச்சயமாக ஓர் எல்லையுண்டு. ஆண்டாண்டுதோறும் மக்கள் தொகை பெருகமுடியுமே யன்றி, நிலப்பரப்புப் பெருக முடியாது. அதனுல், பயிர்ச் செய்கைக்குத் தகுதி வாய்ந்த நிலமனைத்தும் தக்கமுறையிற் பயன்படுத்தப்பட்டபின்னர், அத் திட்டங்கள் முற்றுப் பெற்றுவிடும். 'இலங்கையின் விவசாயத் திட்டங்கள் ஏறத்தாழ நாற்பத்தைந்து வருடகாலத்துக்குத்தான் நடை பெறல் முடியும்' என உலகவங்கி அறிக்கை கூறுகிறது. எனவே, நாடு நலமடைதற்கு விவசாயத்தோடு கைத் தொழில்களும் இணைந்து முன்னேறும் நிலை உருவாதல் வேண்டும். அதன்மூலம் வேலை வாய்ப்புக்கள் பெருகு வதனுல் வேலையில்லாத் திண்டாட்டம் ஓரளவிற்குச் சமாளிக்கப்படும். தொழில் வளர்ச்சிக்கு, தொழில் நுட்ப அறிவே உயிரோட்டமாக விளங்குகிறது. மக்க ளிடையே தொழில் நுட்ப அறிவு பரவாதவரை, நாட்டில் தொழிற் பெருக்கத்தை எதிர்பார்ப்பது பகற் கனவாகும். எனவே, நாட்டினைப் பயமுறுத்தும் வேலையில்லாத் திண் டாட்டம் என்னும் வல்லரக்கனை வீழ்த்த, நம் நாட்டு இளை ஞர்களுக்கு, கல்லூரிகளிலே தொழில் நுட்ப அறிவு புகட் டுதல் அவசியமும் அவசரமுமான கருமமாக அமைகிறது.

தொழில்கள் யாவும் சமமே என்ற எண்ணப்பாங்கு நம் நாட்டு மக்களிடையே உதயமாகவில்லை. சம்மான ஊதியந் தரக்கூடிய இரண்டு தொழில்களில், ஒன்று உயர்ந்ததென்றும் மற்றது தாழ்ந்ததென்றும் கருதும் நிலை மறையவில்லை. தொழிற் சமத்துவவுணர்வை

வளர்ப்பதற்கேற்ற இடம் கல்விச்சாலைகளே. அங்கு கல்வி பயிலும் மாணவர்களின் இளம் உள்ளங்களிலே தொழில் மகத்துவம், தொழிற் சமத்துவம் பற்றிய எண்ணங்கள் ஆழமாகப் பதிக்கப்படல் வேண்டும். இதற்குத் தொழில் நுட்பக் கல்வி பயிற்றுதல் அவசியமாகிறது. அன்றியும், அந்த மாணவர்கள் கல்வி நிலையங்களிலே தங்கள் தகுதிக்கும் ஆற்றலுக்கும் இயைந்ததொரு தொழிலைக் கற்றல் வேண்டும். முற்றக்கற்றல் முடியாதாயின், அத் தொழில்கள் பற்றிய நுட்பங்களையும் ஆரம்ப பயிற்சிகளையும் பெறுதல் நன்று. அப்படிக் கற்றுத் தேறிய மாணவர்கள் எதிர்கால உலகைத் தன்னம்பிக்கையோடு நோக்கு வார்கள். அவர்கள் வேலைதேடி வெய்துயிர்த்து அலையாமல், தாங் கற்ற தொழிலறிவை மூலதனமாகக் கொண்டு வாழ முயல்வார்கள்.

ஆண்டு தோறும் நாட்டின் சனத்தொகை 2,25,000 ஆகப் பெருகிவருகிறது. அதற் கேற்றவண்ணம் நாட்டிலே வேலை வாய்ப்புக்கள் பெருகவில்லை. எந்த ஒரு தொழிலுக்கும் விண்ணப்பங்கள் கோரப்படும்போதும், அவை ஆயிரம் ஆயிரமாக வந்து குவிகின்றன. ஒரு தொழிலைப் பெறுவதற்குப் பல்லாயிரவர் போட்டியிடுகின்றனர். இப் போட்டியிலே, தொழிலதிபர்கள் தத்தம் தொழில்களுக்குத் தக்கவர்களைத் தெரிந்தெடுக்க விழைதல் இயல்பே. அதற்காக அவர்கள் விண்ணப்பித்தோரின் கல்வித்தகைமையை மாத்திரம் கருதாது, அவர்களது தொழிலறிவு, பயிற்சியனுபவம் ஆகியவற்றையும் கருது கின்றனர். தொழில் நுட்ப அறிவு பெற்றவன் கல்வித் தகைமை குறைந்தோனுயினும் தேர்ந்தெடுக்கப்படுகிருன். தொழில் நுட்பந் தெரிந்த சிலர் அத்தேர்வில் வெற்றி பெற, கல்வியில் உயர்தகைமை பெற்ற பலர் தோல்வியடைந்து, தாங்கற்ற கல்வியையே இழித்துரைக்கும் நிலை ஏற்படுகிறது. தொழிலதிபர்கள் இவ்வாறு தேர்ந்தெடுத் தற்குக் காரணம் உண்டு. அவர்கள் குறைந்த நேரத்திலே, குறைந்த செலவிலே, தரவுயர்வுடைய பொருள்களை நிறைய் வுற்பத்தி செய்து இலாபமடைய விழைகின்றனர். தொழில் நுட்ப அறிவுடையோரே, திறமையாக சிக்கன

மான முறையில் நல்ல பொருள்களை உற்பத்தி செய்ய அறிவர். 'மந்திரமறியாதவன் பூசை விடியு விடிய' அல்லவா? எனவே, தொழில் வளம் பெருகிவரும் இந் நாளில், ஏட்டுக்கல்வி பயின்றோரிலும் பார்க்க, தொழில் நுட்பக் கல்வி பயின்றோரே வளமான வாழ்வு வாழ முடிகிறது. இதனால், தொழில் நுட்பக் கல்வியின் முக்கியத்துவத்தை ஓரளவில் உணர்ந்துகொள்ளலாம்.

இன்றுள்ள நிலையில், 'நாட்டு முன்னேற்றம்' என்னுஞ் சொற்றொடர், 'நாட்டின் பொருளாதார நிறைவு' என்னும் பொருளைக் கொடுக்கிறது. நாட்டு முன்னேற்றத்துக்கு வேண்டியன யாவற்றினுக்கும் பயிற்சி யளிக்கும் நிலையங்களாக, அவ்வந்நாட்டுக் கல்வி நிலை யங்கள் அமைகின்றன. நல்லதொரு கல்விநிலையமே நல்ல தொரு எதிர்கால சமுதாயம் தோன்றுதற்குரிய வித் தாகும். முன்னேற்றமடைந்த உலக நாடுகளிலேயுள்ள கல்வி நிலையங்களிலே, தொழில் நுட்பக் கல்விக்கு உயர்ந்த மதிப்பு அளிக்கப்படுகிறது. அங்கு ஏட்டுப்படிப்பினை விரும் பும் மாணவர் தொகையிலும் பார்க்க, தொழில் நுட்பக் கல்வி பயிலும் மாணவர்களே மிகுதியாகக் காணப்படு கின்றனர். இந்நிலையினை நம்நாட்டு மக்கள் பூரணமாக உணர்ந்துகொள்ளவில்லை. அதனால் நம் நாட்டுக் கல்வி நிலையங்களிலே தொழில் நுட்பக் கல்விக்கு உயர்ந்த இடம் வழங்கப்படவில்லை. அன்றியும், மேலைத்தேசக் கல்லூரி களிலே, திறமையாகச் செயற்படும் 'தொழில் வழிகாட்டுச் சேவை'யும் உண்டு. அங்கு மாணவர்க்குத் தொழில்கள் பற்றிய பல விபரங்கள் கற்பிக்கப்படுகின்றன. அவற்றுள் ஒவ்வொரு மாணவனும் தன் தனித்திறமைக்குந் தன்மைக் கும் விருப்பத்துக்குமேற்ற தொழிலை மேற்கொள்ளுமாறு தூண்டப்படுகிறான். இச்சேவை, நம் நாட்டில் அண்மைக் காலத்திலே செயற்படுத்தப்பட்டாலும் முழுமையான பயனளிக்கும் நிலையிலில்லை. எனவே, நம்நாட்டுக் கல்வி நிலையங்களிலே, தொழில் நுட்பக் கல்வி பயிற்றுவதன் மூலமும் தொழில் வழிகாட்டுச் சேவையை நன்முறையில் அமைப்பதன் மூலமும் தொழிலறிவைப் பரப்பலாம். அதனால் தொழில் வளம் பெருகி, நாடு நலமுறும்.

# 33

## "உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்.
2. மனித தேவைப் பொருள்களனைத்தையும் தருவன உழவுந் தொழிலுமே.
3. உழவுந் தொழிலும் நாடுகளை முன்னேற்றியமை.
4. நமது நாட்டில் உழவு, தொழில்களின் நிலை.
5. முடிபு.

"உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்—வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்"

எனப் பொருளாதாரப் பேருண்மையொன்றினை விளக்கும் முகமாகப் பாடியுள்ளார் அமரகவி பாரதியார். ஒரு நாட்டின் சிறப்புக்கும் செழுமைக்கும் காரணமாக அமைவது அந்நாட்டின் பொருளாதார உயர்ச்சியாகும். முன்னேற்றமடைந்த எல்லா நாடுகளிலும் உழவுந் தொழிலுமே பொருளாதார எழுச்சியின் இரு கண் மணிகள்போல விளங்குகின்றன. விவசாயம் உணவுப் பொருள்களை உற்பத்திசெய்து, நாட்டு மக்களின் பசிப் பிணியைப் போக்குகின்றது. நாட்டு மக்களின் மற்றைய தேவைகளைப் பூர்த்திசெய்யும் விளைநில மாகத் தொழில்கள் அமைகின்றன. எனவே, மனிதனை வளமான வாழ்வு வாழச் செய்வன உழவுந் தொழில் களுமேயாம்; அதனால், அவையிரண்டும் எல்லா நாடு

களிலும் வந்தனை செய்யப்படுகின்றன. இவையிரண்டும் தவிர்ந்த ஏனைய உயர்பதவிகளும் உத்தியோகங்களுந் தேவைப்பொருள்களை உற்பத்திசெய்யும் ஆற்றலுடையன வல்ல; அவை பணத்தை மாத்திரம் பெருக்கும் வழி துறைகளா யமைகின்றன. பணம், உழவாலும் தொழி லாலும் உற்பத்திசெய்யப்படும். பொருட்பெருக்கமில்லாத விடத்து மதிப்பிழந்து விடுகின்றது. இக்காரணத்தினாலும் உழவுந் தொழிலும் பெரிதும் வந்தனை செய்யப்படு கின்றன.

மனிதவாழ்வு ஒரு முக்கோணம் போன்றது. அதன் ஒருகோணம் தனி மனிதவாழ்வு; இன்னொருகோணம் சமூகவாழ்வு; மூன்றுவதாகவுள்ளது சமுதாயங்கள் பல கொண்ட நாட்டின் வாழ்வு. உழவுந் தொழிலும் இவை மூன்றிலும் உயிரோட்டமாக இழைந்து காணப் படுகின்றன. "பசிவந்திடப் பத்தும் பறந்துபோம்" என்னும் முதுமொழி பசியின் பேராற்றலை விள்க்குவ தோடு, உணவின் இன்றியமையாத் தன்மையையும் விளக்குகிறது. அதனாலேயே பசிப்பிணி மருத்துவனான உழவன் "உலகத்தார்க்கு ஆணி" எனப் புகழப்படு கிறான்; "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" எனச் சிறப்பிக்கப்படுகிறான். மனிதனது பசிப்பிணிக்கு உழவுத் தொழில் மருந்தாயமைந்து, அவனுயிரை உடலிலே நிலை பெறச் செய்துவிட்டால் மாத்திரம் வாழ்க்கை முழுமை பெற்றுவிட்டதாகாது. வாழ்க்கையின் முழுமைக்கு ஏனைய தேவைகளின் நிறைவும் அவசியமாகிறது. உழவுக் கருவி களை யாக்கவும் உடை, உறையுள் என்னும் மற்றிரு பிரதான தேவைகளைப் பூர்த்திசெய்யவும் பலவகைத் தொழில்கள் இன்றியமையாதனவாகின்றன. இயற்கையோடொட்டி, தேவைகளைப் பெருக்கிக்கொள்ளாது வாழ்ந்த அன்றைய மனிதனைப் போன்றவனல்லன், இன்றைய மனிதன். இன்று அவன், அநந்தமாகப் பெருகிவிட்ட தேவைப் பொருள்களின் துணைகொண்டே வாழ முடிகிறது. இத் தேவைப் பொருள்களின் உற்பத்தி முற்றுமுழுதாகப் பல வகைப்பட்ட தொழில்களையே ஆதாரமாகக்கொண்டது. அன்றுள்ள மனிதன் உழவைமாத்திரம்பேணித் தொழிலைப்

பெரும்பாலும் மறந்து வாழினும் வாழ்ந்திருக்கலாம்; இன்றைய மனிதனுல் அவ்விரண்டையும் மறந்து கணப்பொழுதேனும் வாழுதல் முடியாது. ஒரு நாட்டின் வாழ்வு ஒரு பெருமரத்தைப் போன்றது. அதன் வேர்போல விளங்குவது விவசாயம். பல தொழில்களா லுண்டாகும் உற்பத்தியும் அதன் விளைவான வியாபாரமும் அம் மரத்தின் கிளைகளும் இலைகளும் போன்றன. மரத்தின் வேர் தாக்கப்படுமாயின் கிளைகள் பட்டுப்போம்; இலைகள் விழுந்துவிடும்; ஈற்றில் மரமே அழிந்துவிடும். இதிலிருந்து விவசாயத்தின் பெருஞ்சிறப்பையும் தொழிற்றுறைகளின் இன்றியமையாமையையும் உணர்ந்துகொள்ளலாம்.

உழவாலும் தொழிலாலுமே நாடுகள் சீருஞ்சிறப்பும் பெறமுடியும் என்பதற்கு உலகநாடுகளிற் பல, உதாரணங்களாக விளங்குகின்றன. உலகத்திலே குபேரநாடாக விளங்கும் அமெரிக்காவிலே, உழவுந் தொழிலும் நாட்டின் செல்வச் செழுமைக்குக் காரணமாய் அமைகின்றன. அந் நாட்டின் பிரதான விளைபொருள்களாகிய கோதுமையும் சோளமும் நெல்லும் கரும்பும் பருத்தியும் நாட்டுத் தேவையை நிறைவுறச்செய்து, பிறநாடுகளுக்கு அனுப்பப் படுகின்றன. அவ்விதமே இரும்பு உருக்குத் தொழில் களும் பிறதொழில்களும் வளர்ச்சிபெற்று உற்பத்தியைப் பெருக்குகின்றன. அந்த உற்பத்திப்பொருள்கள் அந் நாட்டின் சுயதேவையைப் பூர்த்திசெய்வதோடு, பிறநாடு களுக்கும் அனுப்பப்படுகின்றன. இவ்விருவகையாலும் அந்நாட்டிற் செல்வம் குவிகின்றது. அமெரிக்காவோடு எல்லாத்துறைகளிலும் போட்டியிட்டுக்கொண்டு நிற்கும் ருஷியாவும் உழவாலுந் தொழிலாலுமே உலக அரங்கின் முன்னணியில் நிற்கின்றது. மக்கள் சீனுவும் இந்தியாவும் உழவுத்தொழிலை அபிவிருத்திசெய்தும் கைத்தொழில் களைப் பெருக்கியும் முன்னேற முயல்கின்றன. ஒரு காலத்திலே, பெரும் புகழோடு விளங்கிய இங்கிலாந்து பரந்த விவசாய வசதிகளற்றதாயினும், தன்னுட்டு நிலக் கரி, இரும்பு ஆகியனவற்றைப் பயன்படுத்தி, கைத்தொழி லில் முன்னேற்றமடைந்து மூவல்லரசுகளுள் ஒன்ருய் விளங்குகின்றது. ஆயின், நம் நாட்டிலே, விவசாயத்துக்

கேற்ற நிலப்பரப்பின் அரைப்பங்குதானும் நிறைந்த அளவிலே பயன் கொள்ளப்படவில்லை. பெரிய கைத் தொழில் நிலையங்களோ, நடுத்தரக் கைத்தொழில் நிலையங்களோ தகுந்த அளவில் இல்லை. அவைகளால், நமது நாடு பொருளாதார வளம் குறைந்து, தென்கிழக் காசியாவிலுள்ள பிற்போக்கு நாடுகளுள் ஒன்ருகக் கணிக்கப்படுகிறது.

விஞ்ஞானம் விண்வெளியைக் கட்க்குமளவுக்கு விருத்தியடைந்துள்ள இன்றைய நிலையில், பெருங் கற் பாறைகளாலான மலைப் பிரதேசங்கள் மாத்திரமன்றி, பாலை வனங்கள் கூடப் பயிர் செய்யக்கூடிய நிலையை யடைந்துவிட்டன. விஞ்ஞானப் புதுமைகளை மேற் கொண்டு, தூர்ந்து பாழாய்ப்போன குளங்களுக்குப் புனர்வாழ்வளித்து, நீர்ப்பாசன வசதிகளைச் சீர்செய்வத ஞலும் காடுகளை யழித்துக் கழனிக ளாக்குவதனுலும் நம் நாட்டில் உழவுத் தொழிலை விருத்திசெய்தல் முடியும். சனத்தொகை மிக வேகமாக வளர்ந்துவரும் இலங்கை போன்ற ஒரு நாட்டிலே, பயிர் விளைவிக்கத் தகுந்த ஒவ்வோரங்குல நிலத்திலும் உணவுப் பொருளை உற்பத்தி செய்தல் வேண்டும். அன்றேல் அது உணவுப் பொருள் களுக்காகப் பிறநாடுகளைக் கையேந்தி இரந்து நிற்கும். இரண்டாவது உலகப் போர்க்காலத்தில் இந்நிலை நம் நாட்டிற்கும் ஏற்பட்டது; அதன் சின்னமான 'பங்கீட் டரிசிமுறை' இன்றும் காணப்படுகிறது. நமது ஈழத் திருநாட்டிலே உழவுத் தொழில் தக்கமுறையிலே விருத்தி யடையாததுபோலவே கைத்தொழில்களும் நன்கு திட்ட மிடப்பட்டு விருத்தி செய்யப்படவில்லை. கைத்தொழில் வளர்ச்சிக்கு மூலப்பொருள்கள் மிக முக்கியமானவை. அம் மூலப்பொருள்களைத் தேவைப் பொருள்களாக மாற்று தற்குத் தொழில் நுட்ப அறிவு படைத்த நிபுணர்கள் வேண்டப்படுவர். உற்பத்திப்பொருள்களை ஆக்கித்தரும் தொழில் நிலையங்களிலுள்ள எந்திரங்களை இயக்க மின் சக்தி வேண்டும். இவையனைத்தும் ஒருநாட்டிலே குவிந்து கிடக்குமென எதிர்பார்த்தல் முடியாது. அநேகமாக எல்லா நாடுகளிலும் ஒன்று இருந்தால் ஒன்று இருப்ப

தில்லை. இவற்றுள் இல்லாததொன்றைப் பிறநாட்டு உதவியாகப் பெறுவதில் அவமானமில்லை. நமது நாட்டிலே பல மூலப்பொருள்களுண்டு; நீர்வீழ்ச்சியாற் பெறப்படும் மின்சக்தியுண்டு; ஆனால், திறமைவாய்ந்த தொழில் நுட்ப மேதைகள் இல்லை. அவர்களைப் பிறநாடுகளிலிருந்து தருவித்து, நம்நாட்டுக் கைத்தொழிற்றுறையினை வளர்த்தல் வேண்டும். அப்பொழுதுதான் பல பல கைத்தொழில்கள் பெருக்கமடையமுடியும். பாரதியார் 'பாரத தேசம்' என்னும் கவிதையில்,

"பட்டினில் ஆடையும் பஞ்சில் உடையும்
பண்ணி மலைகளென வீதி குவிப்போம்
கட்டித் திரவியங்கள் கொண்டு வருவார்
காசினி வணிகருக்கு அவை கொடுப்போம்"

"குடைகள்செய் வோம்உழு படைகள் செய்வோம்
கோணிகள் செய்வோம் இரும் பாணிகள்செய்வோம்
நடையும் பறப்புமுணர் வண்டிகள் செய்வோம்
ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம்"

எனப் பாடுகிறார். பாரதநாட்டின் எதிர்காலத் தொழிற் பெருக்கம் பற்றி அவர் கண்ட கனவுகள் அவை. நம் நாட்டிற்கும் அவை பொருந்தும். பாரதத்திலே பாரதி கண்ட கனவுகள் நனவாகின்றன. நம் நாட்டிலும் தொழில்கள் வளர்ச்சியடைந்து அத்தகைய பலபல கனவுகள் நனவாதல் வேண்டும்

எனவே. நாட்டின் செல்வச்செழிப்புக்குக் காரணமான உழவையுந் தொழிலையும் விருத்திசெய்தல் ஒவ்வொரு நாட்டு ஆட்சியாளரதும் மாபெரும் கடனாகும். இலங்கையில் உழவையுந் தொழிலையும் பெருக்கக்கூடிய பல வாய்ப்புக்கள் உள்ளன. அவற்றைத் தக்கமுறையிற் பயன்படுத்தி நாட்டிலே புதுவிழிப்பை உண்டாக்கல் வேண்டும். அப்பொழுதுதான் நாம் உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனை செய்தவர்களாவோம்.

# 34

## சரித்திரக் கல்வியும் அதன் பயன்களும்

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்.
2. உண்மைச் சரித்திரம் இன்னதென்பது.
3. சரித்திரத்தின் பயன்கள்.
   (அ) சரித்திரக்கல்வி முக்கால நிகழ்ச்சிகளையும் அறியத் துணைபுரிகிறது.
   (ஆ) சமுதாய, அரசியல் பிரச்சினைகளைத் தீர்க்க உதவிபுரிகிறது.
   (இ) சிந்தனையைத் தூண்டுகிறது.
   (ஈ) கல்வியின் நோக்கத்தை அடையச்செய்கிறது.
4. முடிபு (தொகுத்துக் கூறல்).

முதியோர் பலர் தம் வாழ்நாளில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் இன்ப துன்ப அனுபவங்களையுஞ் சந்தர்ப்பங் கிடைத்தபோதெல்லாம் பிறர்க்குச் சொல்லி மகிழ்வது வழக்கம். அவர்கள் தம்மிடம் கதை கேட்க வரும் சிறுவர் சிறுமியர்க்கு, உலகில் வாழ்ந்த பெரியார்களின் வரலாற்றைச் சுவைபடக் கூறி, அவர்களைப் பின்பற்றி ஒழுகும்படி தூண்டுவர். மக்களி லநேகர் தம் குடும்பத்துப் பழம் பெருமைகளைப் பலரறியப் பலதரங் கூறுவதில் ஆர்வங் காட்டுவர். இவ்வாறு இறந்தகாலச் சம்பவங்களை நினைவு கூரும் குணம் மக்களிடம் இயல்பாக அமைந்துள்ளது. இந்த இயற்கைக் குணம் நிகழ்கால வாழ்க்கையைச் செம்மையுற அமைத்துக்கொள்வதற்கும் எதிர்கால வாழ்க்கை எப்படி அமைதல் வேண்டும் எனச் சிந்தனை

செய்வதற்குந் துணை புரிகிறது. இறந்தகால நிகழ்ச்சிகளை ஞாபகஞ் செய்யும் பண்பு விரிவுபட்டு, உலகத் தோற்றம், நாகரிக வளர்ச்சி, மக்களின் வாழ்க்கைநெறி முதலியனவற்றை அறிய வகை செய்யும்போது சரித்திரம் என்னும் கலை மலர்கின்றது. சரித்திரக் கல்வி பண்டு தொட்டே மக்கள் மனதைக் கவர்ந்து வந்துள்ளது. அது ஆதியிலே சமயக் கல்வியின் ஒரு கூறுகவே கருதப் பட்டது. அன்று, மக்கள் தம் வாழ்விலும் பிறர் வாழ்விலும் தோன்றும் தடைகளைத் தீர்ப்பதற்குச் சரித்திரக் கல்வி துணைபுரியும் என எண்ணினர். அதனால், அவர்கள் வீர தீர பராக்கிரமம் நிறைந்த வீரர்களைப்பற்றியும் நற் பண்புகள் நிறைந்த பெரியார்களைப்பற்றியும் அறிவதில் ஆர்வங் கொண்டனர்.

ஆனால், சரித்திரம்பற்றிய பண்டைக்காலக் கொள்கைகளுக்கும் இன்றுள்ள கொள்கைகளுக்கும் பெரிய வேறுபாடுண்டு. அன்று, அரசர்களையும் அரசிகளையும் சேனதிபதிகளையும் மையப் பொருளாகக் கொண்டே சரித்திரங் கற்பிக்கப்பட்டது. ஆண்டுதோறும் அவர்கள் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை அட்டவணைப்படுத்தி நெட்டுருச் செய்வதும் அவர்களுக்கிடையில் நடைபெற்ற போர்களை விபரிப்பதும் வரலாற்றுக் கல்வியாகக் கருதப் பட்டது. அவ்வித கொள்கைகள் உண்மையான வரலாற்றின் பாற்படா. உண்மைச் சரித்திரம் மிகப் பரந்த பொருளுடையது. அது மக்களை மையப் பொருளாகக் கொண்டு விளங்குவது ; உலகிலே மனித குலம் தோன்றி, காலத்துக்குக் காலம் முன்னேறிய வகையை அறிவிப்பது ; அவ்வறிவைக்கொண்டு மனிதன் சூழ்நிலையை அவதானித்து, வருங்கால மாற்றங்களை உணர வழிசெய்வது ; மனிதனின் வாழ்க்கையையும் அவன் சிந்தையில் வளர்ந்த எண்ணப்போக்கையும் கண்டறிய உதவுவது ; அவனுக்கு ஏற்பட்ட சுக துக்கங்கள், குறுக்கிட்ட பலவகைப் பிரச்சினைகள், அவற்றை அவன் வெற்றிகொண்டவகை என்பனவற்றை அறியத் தூண்டுவது. இவ்வகைத் தன்மைகள் கொண்ட உண்மைச் சரித்திரத்தைக் கற்பதன்மூலமே பயன்பெறுதல் முடியும். சுருங்கக் கூறினல், சரித்திரம்

என்பது, மனிதன் தான் வாழும் நிகழ்கால நிலைக்கு வந்த வகையை, காரண காரியத்தோடு, படிமுறையாக, சுவை படச் சொல்லுவது.

சரித்திரக் கல்வியாற் பல நற்பயன்கள் விளைகின்றன. சரித்திர மாணவன், கடந்த கால மக்களின் வாழ்க்கை முறையினையும் அவர்களிடையே நிகழ்ந்த சம்பவங்களினையும் கற்றுணருகிறான். அந்த அனுபவமென்னும் பேரொளியைக் கொண்டு, நிகழ்காலச் சம்பவங்களின் தன்மையை விளங்கிக்கொள்ளுகிறான். அவைகளின் இயற்கையான பெறுபேறுகளின் பண்புகளை ஆராய முயல்கின்றான். அதன்மூலம் சமுதாயம் நிகழ்காலநிலையை எவ்வாறு அடைந்ததென்பதைக் காண்கின்றான். வருங்காலத்தில் எத்தகைய நிலையை அடையும் என ஊகித்துணருகிறான். இவ்வாறு முற்காலத்து நிகழ்ச்சிகளையும் ஒருசேர அறிவதற்குச் சரித்திரக் கல்வி பெருந் துணைபுரிகிறது.

சரித்திரக்கல்வி, சமுதாய, அரசியற் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழிகாட்டியாய் அமைகிறது. உலகிலே மனிதர் பல பல சமுதாயங்களாக வாழத் தொடங்கிய கதையைச் சரித்திரத்திற் காண்கிறோம். அவையெல்லாம் காலப்போக்கோடொட்டி வளர்ச்சியடைந்தன. வளர்ச்சியின்போது, அவை பல பல மாற்றங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. அம் மாற்றங்களுட் சில நல்லன; சில தீயன. தீயனவற்றுட் சில சமுதாயத்தினுள்ளே தோன்றியவை. சமுதாயத்திலுள்ள பழைமைவாதிகள் நன்மை பயக்கும் புதியனவற்றை எதிர்த்தலை இதற்கு உதாரணமாகக் கூறலாம். சில, பிறிதொரு சமுதாயத்தாலோ, சமுதாயங்களாலோ ஏற்பட்ட தாக்கத்தால் உண்டாயவை. ஒரு சமுதாயத்துப் பிறப்புரிமைகளைப் பிறிதொரு சமுதாயம் மறுத்தலும் படைவலி கொண்டு அடக்கலும் இதிலடங்கும். இவ்வித தடைகளை அந்தந்தச் சமுதாய மக்கள், பலபல வழிகளைக் கையாண்டு, வெற்றிகொண்டு முன்னேறவேண்டியிருந்தது. ஒரு நாட்டின் வளர்ச்சியில், காலத்துக்குக்காலம் பொருளாதார, அரசியற் பிரச்சினைகள் எவ்வாறு தலைகாட்டின. அவற்றினை

அந்தந்த நாடுகள் எவ்வாறு நீக்கிக்கொண்டன, என்பது பற்றிச் சரித்திரம் கூறுகிறது. கடந்த காலத்திலே சமுதாயமும் நாடும் தத்தம் பிரச்சினைகளை நீக்கிக்கொண்ட முறை பற்றிய அறிவு, நிகழ்காலச் சமுதாயமும் நாடும் தத்தம் தடைகளை நீக்கிக்கொள்வதற்குத் துணைபுரிகிறது. அமெரிக்க சுதந்திரப் போர், பிரான்சிய அரசியற் புரட்சிக்கு ஓரளவிற் காரணமாயிற்று. அந்தச் சுதந்திர உணர்வு, காலத்துக்குக் காலம் அடிமை நாடுகளெங்கணும் பரவி, சுதந்திரக்கனலை மூட்டியது. அன்றியும் இத்தகைய சரித்திர அறிவு, குடியாட்சி மலர்ந்துள்ள இக்காலத்தில் பொது மக்களுக்கு இன்றியமையாததாகிறது. மக்களுக்கு அரசியலறிவூட்ட முனையும் தலைவர்கள், உணர்ச்சிவசத்தாலும் சுயநலத்தாலும் அவர்களறிவை மயக்குகின்றனர்; பத்திரிகைகள் கட்சிச்சார்புடையனவாய், ஒருசார்புடைய கருத்தைத் தெரிவிக்கின்றன. இந்நிலையிலே செம்மையான வரலாற்றுணர்வு மக்களுக்கு மிக அவசியமாகிறது.

சரித்திரக் கல்வி சிந்தனையைத் தூண்டுந் திறமுடையது. ஏ. எவ். பலாட் என்னுஞ் சரித்திராசிரியர், "மனிதனின் சிந்தனையுடனுஞ் செயல்களுடனும் தொடர்புகொண்டது வரலாறு. புவியியல், இரசாயனம், பௌதிகம், தாவரவியல் என்பன உயிரற்ற, சிந்தனையற்ற பொருள்கள் சம்பந்தமானவை. அதனால் புலனுணர்வாற் கண்டறியக்கூடியன; திட்டமான விதிகளோடு கூடியன; விஞ்ஞானத்தின்பாற்படுவன; ஆனால், மனிதனது சிந்தனுசக்தி யாதொரு வரையறையுமற்றது; நிதானவிதிகளற்றது; அதனால் வரலாறும் அத்தகையதாய் அமைவதில் வியப்பில்லை" எனக் கூறினர். எனவே, சரித்திரம் சிந்தனையைத் தூண்ட வல்லதாய் அமைவதோடு, கற்போருக்கு மகிழ்வும் உற்சாகமும் ஊட்டக்கூடியதாயும் அமைகிறது. அதனால் அது கலை எனக் கருதப்படுகிறது. சரித்திரம் 'என்ன நடந்தது? ஏன் நடந்தது?' என, நிகழ்ச்சிகளைக் காரண காரியத் தொடர்புகொண்டு காண முயல்கிறது. அதனால் அது விஞ்ஞானப் பண்புடையதாய் விளங்குகிறது. எனவே, சரித்திரம், கலையம்சமும் விஞ்ஞானப்பண்பும் பொருந்தி, சிந்தனையை வளர்க்கிறது.

உண்மைக் கல்வியின் நோக்கத்தை அடைவதற்குச் சரித்திரம் உதவுகிறது. "தான் வாழும் சமுதாயத்தை விளங்கிக்கொண்டு, அதன் தேவைகளையும் தன் தேவை களையும் முடிந்தவரையில் ஒன்றுபடுத்தி, சமுதாயத்துக்குப் பயன்விளையும்வண்ணம் வாழ வகைசெய்வது கல்வியின் பிரதான நோக்கமாகும்" எனப் பிரபல கல்விமான்கள் கருதுகின்றனர். இந்நோக்கம் நிறைவுறுதற்கு, ஒவ்வொரு வனும் தன் இனம் தோன்றி வளர்ந்த கதையை அறிந் திருத்தல் அவசியமாகிறது. அக்கதையே சரித்திரம் எனப்படும்.

ஆகவே, மனிதன் தன்னைச் சூழ்ந்திருக்கும் பொருள்கள், சீவராசிகள் முதலியவைபற்றி அறிந்திருக்க வேண்டிய அவசியத்திலும் பார்க்க, அவன் அரசியல், சமுதாயம், பொருளாதாரம், மதம் ஆகியவற்றின் வளர்ச்சியையும் வளர்ச்சிக்குரிய காரணங்களையும் உணர்ந்திருத்தல் அவ சியமாகிறது. கல்வித்திட்டத்தில் மொழியறிவும் ஐம்பூத அறிவும் இடம் பெறுவதைப்போலவே சரித்திரமும் முக்கிய இடம் பெறல் வேண்டும். சரித்திரக் கல்வியினால் மனிதனின் மதிப்பிடுஞ் சத்தி வளர்கிறது; அதனால், சமுதாய பிரச்சினைகளைச் சுருக்கமாகத் தீர்க்க முடிகிறது. சரித்திர அறிவு, நிகழ்காலச் சம்பவங்களைத் தெளிவு படுத்தும் விளக்கு; உறுதியான தீர்மானத்தோடு செயலாற்ற வாய்ந்த ஓர் அருந்துணை.

# 35

## கடதாசியின் வரலாறு

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்.
2. நாகரிக ஆரம்ப காலத்துக் 'கடதாசிகள்'.
3. இன்றுள்ள கடதாசியின் தோற்றம்; பரம்பியமுறை.
4. கடதாசி உருவாகும் முறைகள்.
5. கடதாசியின் உபயோகங்கள் [முடிபு].

செஞ்ஞாயிற்றின் செழுஞ்சோதி, உலகினை ஒளிமய மாக்கி, அதனை மலர்ச்சி யடையச் செய்கின்றது; உலகத்துச் சீவராசிகளுக்கு உயிர்த்துடிப்பை யளித்து, அவைகளை இயங்கச் செய்கிறது. அவ்வாறே, அறிவென்னும் பேரொளி உலகின் மூலை முடுக்கெங்கும் பரவி நாகரிக வளர்ச்சிக்குக் காரணமாயமைகிறது; மக்களின் சிந்தனைத் திறனை வளர்த்து, அவர்களைச் செயலாற்றத் தூண்டுகிறது. அதனால், அறிவினை ஆதவனோடு ஒப்பிட்டுக் காணல் பொருத்தமுடைத்து. அறிவொளியை உலகனைத்தும் பரப்புதற்குக் கருவிகளாய் அமைவன நூல்களும் செய்தியிதழ்களுமாகும். இன்றுள்ளநிலையில் அறிவுக்களஞ்சியங்களான அவை தோன்றுதற்குக் கடதாசியே அத்தியாவசிய தேவைப்பொருளாய் விளங்குகிறது. கடதாசியின்றேல் நூல்களும் நூல்கள் கருவியாக அஞ்ஞானவிருளை யோட்டும் அறிவொளியும் இல்லையாகிவிடும்; அந்நிலையில் அறியாமைப்பேரிருள் சூழ்ந்ததோர் உலகினையே காணல் முடியும். அதனாலேயே, உணவு, உடை, உறையுள் என்னும் அத்தியாவசிய தேவைப்பொருள்களினோடு, கடதாசியினையும் வைத்தெண்ணும்நிலை வந்துவிட்டது.

கடதாசியின் வரலாறு சுவைமிக்கது; பழைமை வாய்ந்தது. மனித அறிவு பிரகாசிக்கத்தொடங்கிய நாகரிக ஆரம்பகாலத்திலேயே, மன எண்ணங்களின் குறியீடான எழுத்தும் அதனைப் பொறித்து வைத்தற்கேற்ற பொருள்களும் தோன்றிவிட்டன. முதன்முதல் நாகரிகமடைந்த நாடுகளுள் ஒன்ருன பாபிலோனியாவில், களிமண் தகடுகளின்மீது ஆப்புவடிவிலமைந்த எழுத்துக்களைப் பொறித்து, தம் மனக்கருத்துக்களை அந்நாட்டினர் வெளிப்படுத்தினர். எகிப்தியர் 'பைப்பிரஸ்' என்ற புல்லினை மென்மையான தகடாக்கி, நாணற்புல்லினை எழுதுகோலாக்கி, பொருள்களின் உருவங்களை எழுத்துக்களாக்கித் தம் மனக்கருத்தினை வெளியிட்டனர். 'பைப்பிரஸ்' என்ற சொல்லே ஆங்கிலத்திலே 'பேப்பர்' என மருவியதென அறிஞர் கருதுவர். பாரத நாட்டிலும் ஈழவளநாட்டிலும் பனையோலையை ஏடுகளாக்கி, அவற்றின் மீது எழுத்தாணியால் எழுதி, அறிவுச்செல்வத்தினை அழியாமற் காத்துவந்தனர். ஐரோப்பிய நாட்டினர் பண்டைநாளில், தோல்களிலும் மெழுகு பூசப்பட்ட மரப்பலகைகளிலும் அவைபோன்ற பிறவற்றிலும் எழுதினர். கடதாசியெனுஞ் சொல், பிரதானமாக எழுத்துக்களைப் பொறித்து வைத்தற்கேற்ற பொருளெனக் கருதப்படுவதனுல், முற்கூறப்பட்டனவெல்லாம் நாகரிக ஆரம்ப காலத்துக் 'கடதாசிகள்' ஆகின்றன.

முதன்முதல் நாகரிகமடைந்த தேசங்களுளொன்ருகச் சீனுவும் கருதப்படுகிறது. சீனமக்கள் உலக முன்னேற்றத்துக்குக் காரணமான பலபல சாதனங்களை உலகினுக்கு அளித்துள்ளனர். அவர்களே, மிகப் பெருமைவாய்ந்த கடதாசியினையும் செய்வதற்கு அறிந்திருந்தனர்; கி. மு. இரண்டாம் நூற்ருண்டிலேயே நன்ருக அரைக்கப்பட்ட தாவரக்கூழைப் பதப்படுத்தி, அதனைத் தகடாக்கிக் கடதாசி செய்ய அறிந்திருந்தனர். இன்றும் அம்முறையே கடதாசி செய்வதற்குரிய அடிப்படைமுறையாக அமைந்துளது. கி. பி. எட்டாம் நூற்ருண்டளவில், சீனர், 'சாமர்க்கன்ட்' என்னும் பகுதியிலுள்ள அராபியர்மீது வெம்போர் தொடுத்தனர். அப்போரிலே சீனர் தோற்கடிக்கப்பட்டனர்.

அவர்களிற் பலரை அராபியர் சிறைசெய்து அடிமைகளாக்கிக்கொண்டனர். அவ்வடிமைகளிலே, கடதாசி செய்யத் தெரிந்தோர், தமது புதிய எசமானர்களுக்குக் கடதாசி செய்யும் முறையைக் கற்பித்தனர். அதனுல் அராபிய நாடுகளெங்கணும் கடதாசி செய்யும் முறையும் கடதாசியின் உபயோகமும் பரவின. கி. பி. 866ஆம் ஆண்டளவில், அராபியராற் கடதாசியில் எழுதப்பட்டதொரு நூல், மிகப்பழைய நூல்களுள் ஒன்ருகக் கருதப்படுகிறது. அக்காலத்து அராபியர், திரைகடலோடி, கிரேக்கரோடு வியாபாரஞ்செய்தனர். அதனுல் கிரேக்கநாட்டிலும் கடதாசி செய்யும்முறை பரவியது. 12ஆம் நூற்ருண்டின் நடுப்பகுதியிலே, துருக்கியரின் ஆதிக்கம் மேற்கைரோப்பிய நாடான ஸ்பானியாவரை பரவியிருந்தது. அக்காலத்திலேதான் மேற்கைரோப்பிய நாடுகள் கடதாசியின் உபயோகத்தையும் அதுசெய்யும் முறையையும் அறிந்தன. கடதாசியைப் பெருமளவில் உற்பத்தி செய்வதற்காகத் தொழிற்சாலையினை நிறுவிய பெருமை இங்கிலாந்தையே சாரும். அங்கு, பதினைந்தாம் நூற்ருண்டின் பிற்பகுதியிலே, கடதாசித் தொழிற்சாலை உருவாக்கப்பட்டது. என்ருலும், அவ்விததொழிற்சாலைகளிலே, பத்தொன்பதாம் நூற்ருண்டுவரையிலே, சீனமுறையைப் பின்பற்றிக் கையினுலேயே கடதாசி செய்யப்பட்டது. அதன் பின்னரே கடதாசி செய்வதற்கமைந்த எந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, உபயோகப்படுத்தப்பட்டன.

இன்றைய நவநாகரிக உலகிலே, புத்தகங்களுக்கும் பலவகைப் பத்திரிகைகளுக்கும் பிற பத்திரங்களுக்குமாக, நாள்தோறும் பல்லாயிரந்தொன் நிறையுள்ள கடதாசி பயன்படுத்தப்படுகிறது. அதற்காக எத்தனையோ ஏக்கர் பரப்புள்ள காடுகள் அழிக்கப்படுகின்றன. கனடா, ஸ்காந்திநேவியா, ரூஷியாவின் வடபகுதி ஆகிய குளிர்ப் பிரதேசங்களிலே, சோற்றித்தன்மைவாய்ந்த பெருமரங்கள் காடாக வளர்ந்துள்ளன. அவ்வகைக் காடுகளை ஊசியிலைக்காடுகள் என்பர். அங்கு 'ஸ்புரூஸ்,' 'பேர்,' 'பைன்' போன்ற மரங்கள் மிகச் செழித்துவளர்கின்றன. அவற்றினைத் தொழிலாளர் வெட்டிப் பட்டையுரித்து,

சிறுச்சிறு துண்டுகளாக்கித் தொழிற்சாலைகளுக்கு அனுப்பு கின்றனர். அவை, அங்குள்ள பெரிய அரைகல்லின் உதவியால் நீர் சேர்த்து அரைக்கப்பட்டுக் கூழாக்கப்படு கின்றன. இது கடதாசி செய்தற்கேற்ற மரக்கூழ் தயாரிக்கும் ஒருமுறையாகும். இரசாயன முறைப்படியும் மரக்கூழ் தயாரிக்கப்படுகிறது. அளவாக வெட்டப்பட்ட மரத் துண்டுகளை மிகப் பெரிய மிடாக்களிலிட்டு வேகச் செய்து, சில இரசாயனப் பொருள்களையும் கூட்டி, மரக் கூழ் செய்கின்றனர். மரத்துண்டுகள் மாத்திரமன்றி, வைக் கோல், கழிவுத்துணிகள், புல், பருத்தி போன்ற தாவர வகைகளும் பயன்படுத்தப்படுகின்றன. அவையெல்லாம் வேகவைக்கப்படும் நேர அளவுக்கு ஏற்ற அளவில் அவற் றின் தராதரம் அமைகிறது. அவ்விதம் தயாரிக்கப்பட்ட கூழை இறுகச்செய்து துண்டு துண்டுகளாக வெட்டி எடுக்கின்றனர். இத்தகைய தொழிற்சாலைகள் காட்டுப் பிரதேசங்களையடுத்துக் காணப்படுகின்றன. வெட்டியெடுக் கப்பட்ட அத்துண்டுகள், நகரங்களிலுள்ள கடதாசித் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படுகின்றன. அவற்றினைக் 'ஹைற்றோ பல்பர்' என்ற எந்திரத்திலிட்டு, நீர் கலந்து மீண்டுங் கூழாக்குவர். அங்கிருந்து அக்கூழ், கடதாசி செய்யும் எந்திரத்துட் செல்லும். அவ்வெந்திரம் மூன்று பகுதிகளைக் கொண்டது. முதலாவது பகுதியில் நீர்த் தன்மை வாய்ந்த கூழ், அரிதட்டையொத்ததோர் உருளை வழியாகச் செல்கிறது. அங்கிலையில் நீர் சிறிதுசிறிதாக இழுக்கப்படும். இரண்டாவதான அழுத்தும் பகுதியி லுள்ள உருளைகள் அதனை நன்கு அழுத்தி நீரைப் பிழிவ தோடு, அழுத்தமுஞ் செய்கிறது. அது, மூன்றாவது பகுதி யிலே சென்று, நீராவியாற் சூடாக்கப்பட்ட உருளைகளின் உதவியால் உலர்த்தப்படுகின்றது. எந்திரத்தினின்றும் வெளியேறிய அக்கடதாசி மிக நீளமுடையது; சிலசமயம் அது பன்னிரண்டுமைல் நீளமுடையதாயும் இருக்கும்; அது சுருள்சுருளாகச் சுற்றப்பட்டுப் பிரமாண்டமான மரக் குற்றிபோலத் தோற்றமளிக்கும். பின்னர், அது தேவைக்

கேற்ற அளவுப்படி வெட்டப்பட்டு, 'றீம்' என்னும் எண்ணிக்கை அளவினதாகக் கட்டப்பட்டு, பிறநாடுகளுக்கு ஏற்றுமதியாகும். மரக்கூழுள் சுண்ணும்பு கலந்து வெளிறச் செய்து வெண்மையான கடதாசியையும், நிறக்கலவை யிட்டு வண்ண வண்ணக் கடதாசிகளையும் உற்பத்தி செய்வர்; சில இரசாயனக் கலவைகளைக் கலந்து மிக அழுத்த முடையதும் மிகமெல்லியதுமான கடதாசிகளையுஞ் செய்வர்.

இந்நாளிலே கடதாசியின் உபயோகம் பல துறைகளிலே அதிகரித்துவிட்டது. புத்தகங்கள், பத்திரிகைகள் என்பனவற்றிற்குக் கடதாசிகள் பயன்படும்வகை யாவரும் அறிந்ததே. ஆனல், தடித்தனவும் மிக இறுக்கமுடையனவுமான கடதாசிகள் வடிகாற் குழாய்களாகவும் கட்டிடத் தேவைக்குரிய பொருள்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன. சில தொழில் நிலையங்களிலே, சமையற்பாத்திரங்களும் உடைகளும் செய்வதற்குக் கடதாசி உபயோகப்படுகிறது.

# 36

## நான் விரும்பிக் கொண்டாடும் சில விழாக்கள்

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்.
2. விழாக்களின் பெயர்கள்.
3. தைப்பொங்கல்.
4. வருடப்பிறப்பு.
5. ஆடிப்பிறப்பு.
6. தீபாவலி.
7. முடிபு.

இந்துமதத்தைச் சேர்ந்த தமிழர் ஆண்டுதோறும் விரும்பிக் கொண்டாடும் விழாக்கள் பலவுள. அவை வாழையடி வாழையாக வழக்கிலிருந்து வருபவை; தமிழர் பண்பாட்டோடு இரண்டறக் கலந்து விளங்குபவை. தமிழர் எங்கிருந்தாலும் அங்கெல்லாம் இவ்விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. அதனுல், இவ்விழாக்கள் உலகிலுள்ள தமிழினம் முழுவதையும் ஒன்றுபடுத்துந் தகையனவாய் விளங்குகின்றன. அவற்றுட் சில, சமய அடிப்படையிலே கொண்டாடப்படுவன. திருக்கோவில் களில் நடைபெறுந் திருவிழாக்களையும் பிற சிறப்புக்களை யும் அவ்வகையிற் சேர்க்கலாம். சில, சமுதாய ஒற் றுமையையும் பண்பாட்டையும் வளர்ப்பதை நோக்க மாகக் கொண்டு நிகழ்வன. பொங்கல் விழாவை இதற்கு

உதாரணமாகக் கூறலாம். சில, குடும்பங்களுக்கிடையே நடப்பன; திருமண விழாக்கள் போல்வன இவ்வகையின. இவ் விழாக்கள் அனைத்திலும் அருளுணர்வும் பத்தியும் உயிரோட்டமாகத் துடிப்பதைக் காணல் முடியும்.

இத்தகைய விழாக்கள் பலவாகக் காணப்படினும் நான்கு விழாக்களே என் மனத்தைப் பெரிதும் கவர்ந் துள்ளன. அவை: தைப்பொங்கல், வருடப்பிறப்பு, ஆடிப் பிறப்பு, தீபாவலி என்பன. இவற்றினை நானும் என் குடும்பத்தினரும் ஆண்டுதோறும் பத்தி பூர்வமாகச் சிரத்தையோடு கொண்டாடி வருகிறோம்.

தைத்திங்களின் முதனாளே பொங்கற் புதுநாளாகும். அது தமிழர் திருநாள்; உழவர் திருநாள்; அவர்கள் ஆண்டுதோறும் உழைத்த உழைப்பின் பயனைக் கண்டு அகமகிழும் நன்னாள். கழனிகளிலே செந்நெற் பயிர்கள் விளைந்து, குலைப்பாரந் தாங்காமற் சரிந்து, பூமித்தாயை முத்தமிட்டுக்கொண்டு அலையலையாகக் கிடக்கும். நெடி துயர்ந்த கரும்புகள், தீஞ்சுவைச் சாற்றைச் சுமந்து கொண்டு, விருந்தளிக்க விழையும். இஞ்சியும் மஞ்சளும் விளைந்து காணப்படும். பலவகைக் கொடிகள் கிழங்கீன்று, அவற்றினைப் பூமியின் மடியிற் புதைத்துக்கொண்டு, உரியவர்களுக்குக் கொடுக்கத் துடிக்கும். இவற்றினைக் கண்ட உழவன் களிபேருவகை கொள்ளுவான். அவன் மனத்திலே நன்றியுணர்ச்சி பெருக்கெடுக்கும். அவன் மழைவளந் தந்து, பயிர்களை வளரச்செய்த கதிரவனை எண்ணுவான்; பால் சொரிந்து தாயைப்போல் வளர்த்த பசுக்களை நினைப்பான்; தன்னுடன் தோளோடுதோள் நின்றுழைத்த எருத்துமாடுகளின் சேவையைச் சிந்திப் பான். தான் பட்ட நன்றிக்கடனை நிறைவேற்றத் தைத் திங்கள் முதனாளைத் தேர்ந்தெடுத்துப் பொங்கலிட்டு மகிழ் வான். இதுவே தைப்பொங்கல் நாளின் சிறப்பு. நானும் உழவன் புதல்வனாகையால் இவ் வுண்மைகளை நன்றாக உணர்கிறேன்; அதனால், இவ்விழா என் மனத்தகத்து

இனிமை கூட்டுகிறது. பொங்கல் நாளுக்கு முன்னரே, என் தாய், வீட்டுச் சுற்றுப்புறமனைத்தையுங் கூட்டித் துப்புரவு செய்வாள்; தந்தை வீட்டுச் சுவர்களுக்கு வெண்சுதை தீற்றி விளக்கஞ் செய்வார். அன்று அதிகாலையில் எழுந்து விடுவோம். என் தாய் வீட்டினைக் கழுவி, முற்றத்தை மெழுகிக் கோலமிடுவாள். நாங்கள் வெடி கொளுத்தியும் மத்தாப்பு விட்டும் மகிழ்வோம். அதே அதிகாலையிலே நாங்களெல்லாரும் ஸ்நானஞ் செய்தபின்னர், பொங்கலுக்கு வேண்டிய ஏற்பாடுகளை என் தாயும் தந்தையும் செய்வர். மாவிலை, இஞ்சி, உள்ளி இலைகள் கட்டப்பட்டு, திருநீற்றுக் குறியிடப்பட்ட பானையிலே பாலை நிறைத்து அடுப்பிலேற்றும்போதும் அது பொங்கி வழியும்போதும் எங்கள் மகிழ்ச்சியாரவாம் வானை முட்டும். பொங்கல் முடிந்ததும் முதலிலே சூரிய பகவானுக்குப் படைத்து, அதன் பின்னர் எல்லோரும் கூடி விருந்துண்டு மகிழ்வோம். மறுநாள் மாட்டுத் தொழுவத்தினைத் துப்புரவு செய்து, மாடுகளைக் குளிப்பாட்டி, குங்குமம் சந்தனம் பூசி, மாலைசூட்டி அவற்றினைக் கௌரவிப்போம். தொழுவத்திலே அடுப்பு மூட்டிப் பெரிய பானையேற்றிப் பட்டிப் பொங்கல் பொங்கி அவற்றினுக்கும் அளித்து மகிழ்வோம்.

சித்திரைத் திங்களின் முதனாள் புதுவருடப்பிறப்புக் கொண்டாடப்படும். கார்காலத்திலே மழைக்குளிராலும் கூதிர் காலத்திலே குளிர் வாடையாலும் மக்கள் வருந்துவர். முன்பனிக்காலத்திலும் பின்பனிக்காலத்திலும் பனியினாலே கொடுகுவர். நோய்த் துன்பத்தால் வருந்துவர். எனினும் உழைப்பின் பயனை வீடுசேர்த்து மகிழ்வர்; இதனால் இன்பதுன்பங்களை மாறிமாறி யனுபவிக்கின்றனர். பங்குனியின் முடிவோடு பனிக்கொடுமையும் முடிந்துவிட வசந்தம் பிறக்கும். அக்காலத்தில் மரஞ்செடி கொடிகள் இளந்தளி ரீன்று சோபை யளிக்கும். மலர் சுமந்துநிற்கும் வேங்கை மரத்தினூடாக இளந்தென்றல் மெல்ல வந்து தடவிச் சுகஞ் செய்யும். மாமரச் சோலையிலே இணையிணையாகக் குயில்கள் இருந்து களிப்பு

விஞ்சுதலாலே கூவும். எங்கெங்கும் இன்பவெள்ளம் பெருக்கெடுத்தோடும். அதனுல், இன்பக் கடவுளான மன்மதன் வசந்தகாலத்தில் உலகை ஆட்சிபுரிவான். இத்தகை மகிழ்வுக்குரிய வசந்தத்தை வரவேற்கும் முக மாகவே, அந்தப் பருவ காலத்தில் வருடப்பிறப்புக் கொண் டாட்டத்தை அமைத்துள்ளனர் பண்டைத் தமிழர். அன்று மக்களிடையே வஞ்சனே, பொருமை, கோபம் முதலிய தீக் குணங்கள் மறைந்து எங்கும் அன்பின் ஒளி சுடர்விடும்; சகோதர பாவம் பொலியும். அன்று உரிய சுபநேரத்திலே பெற்ருேர்களோடு சேர்ந்து மருத்துநீர் தேய்த்து ஸ்நா னஞ் செய்வோம். பின்னர் புத்தாடை தரித்து, அருச் சனைப் பொருள்கள்கொண்டு திருக்கோவிலுக்குச் சென்று இறைவனை வணங்கி "இறைவா, புத்தாண்டிலே சகல மங்களங்களும் பொலிய அருள்புரிவாய்" என வேண் டிக் கொள்வோம். கைவிசேடம் பரிமாறிய பின்னர், சுற்றத்தவர்கள், நண்பர்கள் வீடுகளுக்குச் சென்று பேசி யும் விருந்துண்டும் விளையாடியும் மகிழ்வோம். செய் யுந் தொழில்களைச் சுபவேளையிலே நாள் வேலையாகத் தொடங்குவோம்.

ஆடிப்பிறப்பை எண்ணும்போதே, ஆடிக்கூழும் கொழுக்கட்டையும், "ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே" என்ற தங்கத் தாத்தா பாடலுஞ் சேர்ந்து இனிக்கின்றன. முதுவேனி லின் வெம்மையால் வாடிய மக்கள் மழையின் வரவை எதிர்பார்ப்பது இயல்பே. மழைக்காலத்துக்குரிய அறி குறிகள் ஆடிமாதத்திலேயே தோன்றத் தொடங்கிவிடும். அன்றியும் நம் நாட்டுக் கற்பக தருவான பனையின் கருப்ப நீரிலே தயாரித்த பனங்கட்டியும் மிகுதியாக அக்காலத் திலே கிடைக்கும். ஆடிப்பிறப்பன்று அம்மா ஆடிக்கூழ் காய்ச்சுவாள்; பல்லுக்கொழுக்கட்டை அவிப்பாள். கூழ்ப் பானையுங் கொழுக்கட்டையும் முற்றத்துக்கு வரும்போது, சிறுவர்களான நாமெல்லோருஞ் சுற்றிவரக் கூடிவிடு வோம். பலாவிலையைக் கோலியெடுத்து, அதில் அம்மா

வார்த்த கூழை இனிக்க இனிக்கக் குடிப்போம்; பல்லுக் கொழுக்கட்டையைச் சுவைத்துச் சுவைத்துக் கடிப்போம்.

தீபாவலிப் பண்டிகை ஆண்டுதோறும் கூதிர்காலமாய ஐப்பசி மாதத்தில் வரும். அது பற்றிய புராணக் கதைகள் பலவுண்டு. மக்களேயுந் தேவர்களேயும் வருத்திய நரகாசுரன் வதைக்கப்பட்ட தினம் அதுவெனவும், அவன் வேண்டுகோட்படி அவனே நினேவுகூரும் முகமாக மக்கள் தீபங்களே வரிசையாக ஏற்றுவர் எனவும் அவை கூறும். அக்கதைகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உட்பொருளுண்டு. அன்று நம்மைப்போன்ற சிறுவர்களின் எண்ணமெல்லாம் பெட்டியிலுள்ள புத்தாடைகளேச் சுற்றிச் சுற்றி உலாவும். தீபாவலியன்று அதிகாலேயிலே, அந்தக் குளிரிலே எண்ணெய் தேய்ப்பதும் ஸ்நானஞ் செய்வதும்தாம் கொஞ்சம் கசப்பான காரியங்கள். அந்த வைபவம் முடிந்த பிறகு ஒரே மகிழ்ச்சிதான். நாங்கள் எங்களுக்குரிய புத்தாடையை அணிந்துகொண்டு மற்றவர்களுக்குக் காட்டி மகிழ்வதில் உற்சாகங் கொள்வோம். சிலசமயம் சிற்றுண்டிகளே அளவுக்குமீறி உண்டுவிட்டு வயிற்றுவலியால் வருந்துவதுமுண்டு! அதற்காக மருந்துண்பதுமுண்டு!

நான் விரும்பிக் கொண்டாடும் இந் நான்கு விழாக்களும் தத்துவக் கருத்து நிறைந்தவை; அறிவுக்குப் பொருத்தமானவை. அன்றியும் இவற்றினல் குடும்பத்தினரிடையேயும் சுற்றத்தினரிடையேயும் ஒற்றுமையும் அன்பும் வளர்ச்சிபெறுகின்றன. உள்ளம் மகிழ்வெய்துகின்றது. அந்த நாட்களிலாவது மனிதனிடத்துள்ள தீயவியல்புகள் அடக்கிக்கொள்ளப்படுகின்றன!

# 37

## உண்மையான பெரியார் யார்?

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்.
2. பெரியார் யார் என்பது.
3. ஆத்ம ஞானிகள்.
4. காந்தியண்ணல்.
5. அரசியற் பெரியார்.
6. அறிவியலுண்மைகள் கண்டோர்.
7. இலக்கிய கர்த்தாக்கள்.
8. முடிபு.

உண்மையான பெரியார் யார்? இக் கேள்விக்கு முழுமையான விடை காண்பது எளிதன்று. இவ்வினவுக்குரிய விடை, எல்லையறியாப் பெருங்கடலினைப்போல, ஆழமும் அகலமும் வாய்ந்தது. நுண்மதியினைத் துணைக்கொண்டு, சரித்திரத்துறையை மாத்திரமன்றி, சமயம், விஞ்ஞானம், இலக்கியம், அரசியலென்னும் எல்லாத் துறைகளிலும் நுழைந்து, அலசி ஆராயும்போதே, உண்மையான பெரியார் யார்? என்பதனை ஓரளவு உணர்ந்துகொள்ளல் முடியும். ஓரளவு உணர்ந்து கொள்ளலாமேயன்றி, அவர்களின் பரிபூரணத் தன்மையை வரம்பிட்டு அளந்தறிதல் இயலாது.

> "செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
> செயற்கரிய செய்கலா தார்"

என் வள்ளுவப்பெருந்தகை, பெரியார் யார்? சிறியார் யார்? என்ற வினக்களுக்கு விடைகாண முயன்றுள்ளார்.

அதனையே இலக்கணமாக அமைத்துக்கொண்டு, அதற்கு இலக்கியமாக அமைந்த பெரியார்களை அறிதல் சாலச் சிறப்புடைத்து. இக் குறளுக்கு உரைகண்ட பரிமேலழகர், "செயற்கரியவாவன: இயமம், நியமம் முதலாய எண் வகை யோகவுறுப்புக்கள்" எனக் கூறிச் சென்றார். அவரது உரையிலே கண்ட பொருள், முழுமை நிறைந்ததும் முடிந்த முடிபுமானது. நாகரிகம் பெருகி உலோகாயதக் கொள்கை தலைப்பட்டு, விண்வெளியையும் வெற்றிகொள்ளும் வெறியுணர்வு தோன்றியுள்ள இந் நாளில், அது வெறும் மாயம்போலத் தோன்றலாம். உலகம் உண்மையானது என்று எண்ணுபவர்கள் கூட, ஒருநிலையில், தங் கொள்கைகள் பொய்யென உணர்ந்து ஆத்ம ஞானத்தின் உயர்வினை மதிக்கின்றனர். எனவே எல்லா ஞானங்களிலும் மேலான ஆத்ம ஞானம் கைகூடப் பெற்றவர்களே, உண்மையான பெரியார்கள் என்பதனைப் பரிமேலழகரது உரைக்குறிப்பு விளக்குகிறது. இத்தன்மையோடு, இன்றைய கால தேச வர்த்தமானங்களையும் அனுசரித்து, உண்மையான பெரியார் யார் என்பதற்கு வரைவிலக்கணம் கூறலாம். மக்களது வளர்ச்சிப் பாதையிலே காலத்துக்குக்காலம் ஆன்மீகத் துறையிலும் புறத்துறைகளிலும் பலபல புரட்சிகளும் மலர்ச்சிகளும் திருப்பங்களும் தோன்றியுள்ளன. அவையெல்லாந் தத்துவ அடிப்படையில், நிலைபெறுள்ள கொள்கைகளால் ஏற்பட்டவை. எனவே, மன்பதையின் ஆக்கத்துக்கான வாழ்க்கை நெறிகளையுந் தத்துவக் கோட்பாடுகளையும் பலபல துறைகளிலே படைத்துத்தந்தவர்கள் எவர்களோ, அவர்களெல்லோரும் உண்மையான பெரியார்களே.

எந்த நாட்டிலுங் காணமுடியாத அருஞானமாகிய ஆத்ம ஞானமே, பாரதப் பண்பாடாக மலர்ந்து, அதனுயிரோட்டமாக மிளிர்ந்து, கீழைத்தேசங்களிலெல்லாம் பரவிற்று. மேலைத்தேசப் பண்பாடு உலோகாயதக் கொள்கையினின்று தோன்ற, கீழைத்தேசப் பண்பாடு ஆத்ம ஞானத்தினின்று தோன்றியது. இத்தகைய பண்பாட்டு வளர்ச்சிக்கு, வேதகால முனிவர்கள் தொடக்கம்

சமீபகாலத்தில் வாழ்ந்த இராமலிங்கவள்ளலா ரீருகப் பலர் துணைபுரிந்துள்ளனர். அவர்களெல்லாரும் கீழைத் தேசப் பண்பாட்டினைக் கட்டிக் காத்து வளர்த்தவர்கள். ஆகையால் அவர்கள் உண்மையான பெரியார்கள். அஹிம்சை நெறிக்கு முக்கியத்துவமளித்த புத்தர் பெருமான் புதியதொரு கோட்பாட்டினை நிலைநாட்டினர்; யேசுக்கிறிஸ்துநாதர், மேலைத்தேச வாழ்க்கைநெறியோ டொட்டிப் புதியதொரு தத்துவம் கண்டார். முகமதுநபி, மனிதனது அக,புற வாழ்வுக்கேற்றநெறியினை அமைத்தார். இவர்களனைவரும் உண்மையான பெரியவர்களேயாவர்.

இருபதாம் நூற்ருண்டிலே, ஆத்ம ஞானம் வேறு; அரசியல் வேறு; வாழ்க்கைநெறி வேறு எனச் சிந்தனை செய்யும் மனப்போக்கு வளரலாயிற்று. ஆனால், அண்மையில் வாழ்ந்த் காந்தியண்ணல், ஆத்மீகவுணர்வு அரசியலோடும் வாழ்க்கையோடும் இணைவது; ஒன்றிலிருந் தொன்றைப் பிரித்துக்காணல் இயலாது என உலகம் ஒப்புக்கொள்ளும்வண்ணம் காட்டினுர். அதனல் அரசியலையும் வாழ்க்கையையும் தூய்மையுறச் செய்து, உலகெங்கும் புத்தொளியையும் புதிய சிந்தனைப் போக்கையும் பரவச் செய்தார். அதனல் அவர் உண்மையான பெரியவராகப் போற்றப்படுகிருர்.

அரசியல் வரலாற்றிலே, மனித சமுதாய மலர்ச்சிக்கு வித்திட்ட பல புரட்சிகள் காணப்படுகின்றன; அவற்றைப் பல சரித்திர புருஷர்கள் முன்னின்று நடத்தியுள்ளனர். காலத்துக்குக்காலம் புதிய பல அரசியற்றத்துவங்கள் தோன்றியுள்ளன; அவை அரசியல் ஞானிகளின் சிந்தனையினின்றும் பிறந்தன. இவ்வாறு அரசியல் நிகழ்ச்சிகள் மாற்றமடைந்து வந்த கதையைச் சரித்திரம் கூறுகிறது. சரித்திரத்திலே மன்னனுட்சி மறைந்து மக்களாட்சி தோன்றியமையும் அது உலகெங்கும் பரவியமையும் மிகப் பிரதானமானவை. மக்களாட்சியின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் தலைவர்களாய் விளங்கியவர்களெல்லாரும் உண்மையான பெரியார் வரிசையில் இடம்பெறத் தக்கவர்கள். யூலியஸ் ஸீசர் உரோமர் பேரரசுக்காலத்தில், மக்க

ளாட்சியின் சின்னமாய் விளங்கினன். ஜோர்ஜ் வாசிங்டன் அமெரிக்க சுதந்திரப் போரினை வெற்றிகரமாக நடத்தி அமெரிக்க குடியரசுக்கு வித்திட்டான். பதினெட்டாம் நூற்ருண்டின் இறுதிக்காலத்திலே, பிரான்சிய மக்களாட்சியின் எடுத்துக்காட்டாக விளங்கிய நெப்போலியனை உலகம் என்றுமே மறப்பதில்லை. மக்கள் மாக்களைப்போலக் கருதி நடத்தப்பட்ட அடிமை வியாபாரமுறையை நீக்கி, மக்கள் யாவரும் சமமே என்ற உயர்நெறி கண்ட ஆபிரகாம் லிங்கனை மறத்தல் முடியாது. கம்யூனிஸ தத்துவத்தின் அடிநாதமாய் அமைவது 'முதற்பணம்' என்னும் நூல். அதனை ஆக்கி, புதியதொரு அரசியற் றத்துவத்தைத் தோற்றுவித்த கார்ல் மாக்சும், அதனைச் செயற்படுத்திய லெனினும் என்றென்றும் நினைக்கப்படத்தக்கவர்கள். இவர்களனைவரும் உண்மையான பெரியார்கள் வரிசையில் வைத்தெண்ணப்படத்தக்கவர்கள்.

மனிதகுலம் நாகரிகமென்னும் நெடுவழியிலே பீடு நடையுடன் முன்னேறியதென்ருல் அதற்குக் காரணம் அறிவியல் வளர்ச்சியாகும். விஞ்ஞானிகள் பலர் அறிவியற் றுறையிலே பல பல தத்துவங்களைக் கண்டு, அத்துறையினை வளர்த்தனர். விஞ்ஞானத்துறையின் தந்தையெனப் போற்றப்படுபவர் சேர் ஐசாக் நியூட்டன் ஆவார். அவர் பூக்கவர்ச்சி பற்றி யறிந்த உண்மையே அறிவியல் வளர்ச்சிக்கு வித்தா யமைந்துள்ளது. அவருக்குப் பின்னுல், பல பல புதியன கண்டு, மனிதவாழ்வின் ஆக்கத்திற்குத் துணைபுரிந்தவர்கள் பலர். அவர்களுள், யூரேனியம் என்னும் மூலக்கூறினைக் கண்டறிந்த மடம் கியூறி அம்மையாரையும், மின்சாரத்தினைக் கண்டறிந்த பாரடே என்பவரையுங் குறிப்பிடல் வேண்டும். இந் நூற்ருண்டிலே, பிளக்க முடியாதெனக் கருதப்பட்டு வந்த அணுவினைப் பிளந்து, அளவற்ற ஆற்றலை வெளிப்படுத்தல் முடியுமெனக் கண்ட ஈன்ஸ்டின் உலகமேதைகளுள் ஒருவராவர்.

மனித மனத்தகத்துள்ள நல்லுணர்ச்சிகளை மிருதுவாக மீட்டி, அவ்வுணர்ச்சிகளை வளர்த்து உயர்நெறி

காட்டுமாற்றல் நல்லிலக்கியங்களுக்கு உண்டு. அத்தகைய உலக இலக்கிய கருத்தாக்கள் இறந்தும் இறவாமற் புகழ் பெற்று மக்கள் மனங்களில் வாழ்கிருர்கள். சேக்ஸ்பியர், ஹோமர், திருவள்ளுவர், கம்பன், காளிதாசன், விக்டர் ஹியூகோ, டால்ஸ்டாய், தாகூர் போன்றவர்கள் ஆக்கித் தந்த நல்லிலக்கியங்கள் மக்கள் வாழ்வைப் படம்பிடித்துக் காட்டுவதோடு, மக்கள் எப்படி வாழவேண்டும் என்ற நெறியையும் உணர்த்துகின்றன. அதனல் அவர்கள் அனைவரும் உலகப்பெரியார்களாக விளங்குகின்றனர்.

ஒவ்வொரு துறையிலுஞ் செயற்கரிய செய்த பெரியார் களை மிக நுணுக்கமாக ஆராய்ந்து கூறல் இயலாது. ஏனெனில், கூறப்பட்டவர்கள் சிலராகவும் விடுபட்ட வர்கள் பலராகவுமே காணப்படுவர். எனவே, பொதுப் படையாக, மன்பதையின் ஆக்கத்துக்கான வாழ்க்கை நெறிகளையுந் தத்துவக் கோட்பாடுகளையும் பல பல துறை களிலே படைத்துத் தந்தவர்களை உண்மையான பெரியா ரெனக் கூறலாம்.

# 38

## பாடசாலைகளிலே தேசிய சேவை

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்.
2. பாடசாலைகள் மனிதனின் முழுவளர்ச்சிக்குக் காரணமாவன ; தேசிய சேவை இன்னதென்பது.
3. தேசிய சேவை, தேசிய வுணர்வையும் சேவை மனப்பான்மையையும் வளர்ப்பது.
4. உழைப்புத்திறனையும் தொழில் மகத்துவத்தையும் உணர்த்துவது.
5. தன்னம்பிக்கையை வளர்ப்பது.
6. முடிபு (தொகுப்புரை).

பாடசாலைகள் ஒரு நாட்டின் உயிர்நிலையங்கள். அவைதாம் மக்களின் மனவிருளை மாய்த்து அறிவொளி பரப்பும் அறநிலையங்கள் ; நாட்டின் எதிர்காலச் சிற்பிகளை உருவாக்கித் தரும் கலைக்கூடங்கள். பழைமையிற் புதுமையையும் புதுமையிற் பழைமையையும் இணைத்து, ஒரு நாட்டின் பண்பாடு, கலாச்சாரம், சீரிய வாழ்க்கைநெறி என்பவற்றைப் போற்றிக் காக்கும் திருக்கோவில்கள். இவை யெல்லாவற்றினும் மேலாக, வளர்ந்துவரும் உலக மாற்றங்களுக்கேற்ப, மக்கள் மனிதப் பண்போடு வாழ்வாங்கு வாழ்வதற்காக, ஆரம்ப பயிற்சியளிக்கும் பயிற்சிக் கூடங்கள்.

இத்தகைய பாடசாலைகள் மாணாக்கன் முழுவளர்ச்சி பெறுவதற்குத் துணைபுரிகின்றன. முழுவளர்ச்சி என்னுஞ்

சொற்பொருளிலே பொதுவாக நான்கு தன்மைகள் அடங்கியுள்ளன. அவை: மூளைவளர்ச்சி, மனவளர்ச்சி, உடல்வளர்ச்சி, செயற்றிறன் விருத்தி என்பன. இவற்றுள் ஒன்றை வளர்த்து, ஒன்றைப் புறக்கணிப்பதால் நற்பயன் விளையாது. இதற்காகவே பாடசாலைகளில் அறிவுவளர்ச்சிக்கான விஞ்ஞானம் கணிதம் போன்ற பாடங்களும் மனவளர்ச்சிக்கான இலக்கியம், ஓவியம், சங்கீதம் போன்றனவும் உடல் வளர்ச்சிக்கான பலவகைப் பயிற்சிகளும் போதிக்கப்படுகின்றன. இவற்றோடு செயற்றிறன் அல்லது உழைக்குஞ் சக்தி வளர்ச்சிபெறுதல் வேண்டும். அப்போதுதான் மாணுக்கன் நெஞ்சுரனேடும் மனக்களிப்போடும் வாழ்வை எதிர்நோக்கல் கூடும். அதற்குப் பயிற்சியளிக்காத கல்விக்கூடங்கள் வெறுங்கல்லும் மண்ணும் சாந்துங் கொண்டு எழுப்பப்பட்ட உயிரற்ற கட்டிடங்களேயாம். உழைக்குந் திறனை மாணுக்கரிடையே வளர்த்தற்காயதொரு செயற்றிட்டமே பாடசாலைகளில் நடைபெறும் தேசிய சேவை. தேசிய சேவை என்னுஞ் சொற்றொடர் விரிந்த பொருளினை யுடையது. எனினும், மாணுக்கனைப் பொறுத்தவரையிலே, அவன் பாடசாலையை ஓர் உலகமாகக் கருதி, பிரதிபலன் கருதாது, முழுமனத்தோடு, தன்னாலியன்றளவு, அதன் வளர்ச்சிக்காகத் தொண்டு செய்வதையே அச் சொற்றொடர் கருதுகிறது.

பாடசாலைகளிலே நடைபெறும் தேசிய சேவைகளில் ஈடுபடுவதால் மாணுக்கன் பல நற்பயன்களைப் பெறுகிறுன். முதலில், 'இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன' என்ற வேண்டா வெறுப்பு மனநிலையும் 'நாம் வாழ்ந்தாற் போதும்' என்ற சுயநல மனப்பாங்கும் ஒழிகின்றன. நமது நாடு பல்லாண்டுகளாக அந்நியரின் அடிமைத்தளையிற் சிக்குண்டு அல்லற்பட்டது. அன்று ஆட்சிப்பீட மேறியிருந்த அவர்கள், தம் நலனிலும் தம் நாட்டு நலனிலுங் கருத்துடையவர்களாயிருந்தனர். அதற்காகத் தமக்கு அமைவான முறையில் நம் நாட்டை விருத்திசெய்தனர். நம் நாட்டு மக்களும் நாட்டுப்

*Manufacturers*

**MIK INDUSTRIES**

26, Thirunelvely (sivan) New

Jaffna.